புரட்சி வீரர்

சாக்கோ வான்ஸெட்டி

எஸ். சண்முகம்

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை :: திருச்சிறுப்பள்ளி

3-304

வெ. 219

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

3304

பாகனேரி

031,N,7
10.2.281
29.5.86(5)4
10.8.86(8)4

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

Star Publications

71, BIG STREET

புரட்சி வீரர்

சாக்கோ—வான்செட்டி

3304

ஆசிரியர் :
அப்டன் சிங்கிளேர்

தமிழாக்கியது :
S. ஷண்முகம்

ஸ்டார் பிரசுரம்
பாலக்கரை : : திருச்சி

No. 31. "SACCO - VANZETTI" (HEROES)

(An adaptation in Tamil of Upton Sinclair's "BOSTON")

COPYRIGHT

FIRST EDITION - SEPT. 1946

விற்பனை உரிமை:

EXCELSIOR PUBLICATIONS

EAST MAIN STREET

PUDUKKOTTAI

விலை ரூ 3/-

STAR PUBLICATIONS

PALAKARAI :: TRICHINOPOLY

PRINTED AT THE PAPA PRESS, RAYAVARAM

FOR STAR PUBLICATIONS, P. I. C. TY. 9. A.

வெளி. ௨௩௩.

3304

சமர்ப்பணம்

எனது சகோதரி

வள்ளியம்மாளுக்கு

★

முன்னுரை

வாசகர்களுக்கு:

வணக்கம். சாக்கோ, வான்ஸெட்டி இருவரும் இத்தாலியர். வயிற்றுப்பிழைப்புக்காக அமெரிக்கா சென்றார்கள். அங்கு தொழிலாளி வர்க்கத்தின் நலனுக்காக உழைத்தார்கள். முதலாளி வர்க்கத்தின் கோபத்துக்கு ஆளாயினர். அமெரிக்க அதிகார வர்க்கம் அவர்கள் மீது கொள்ளை, கொலைக் குற்றங்களை அபாண்டமாகச் சுமத்தி அவர்களின் உயிரைக் கவர்ந்தது. அவர்கள் கொள்கை 'அனார்க்கிஸம்'. நான் ஒரு 'மார்க்ஸிஸ்ட்'. 'அனார்க்கிஸம்' எனக்கு உடன் பாடல்ல. ஆனால் தொழிலாளி வர்க்கத்தினிடம் உண்மையான அன்பு கொண்ட இருதியாகிகள், தமிழ் மக்களின் இருதயத்தில் இடம் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன், அவ்விரு புரட்சி வீரரின் சரித்திரத்தை எழுதினேன்.

அமெரிக்க எழுத்தாளர் "அப்டன் சிங்கிளேர்" எழுதிய 'பாஸ்டன்' (Boston) என்ற நாவலிலிருந்து சாக்கோ—வான்ஸெட்டி ஆகிய இரு வீரரின் வாழ்க்கைச் சரித்திரம் எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அன்புடன் அனுமதி தந்த பெரியார் அப்டன் சிங்கிளேர் அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

இதை எழுதும்படி என்னைத் தூண்டியது எனது நண்பர் தூத்துக்குடி மு. சி. வீரபாகு. அன்னாருக்கும் எனது நன்றி உரியதாகுக!

சிந்து பூந்துறை
1–9–46

எஸ். ஷண்முகம்

3304

நீதியின் பெயரால் கொலை

சாக்கோ வான்செட்டிக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் கேட்டு, ரோமேன் ரோலந்து, தமது அமெரிக்க நண்பருக்கு எழுதிய கடிதம்.

அமெரிக்க அரசாங்கம் சாக்கோவையும் வான் செட்டியையும் சட்டத்தின் பெயரால் கொலை செய்து விட்டது. இந்தச் செய்தி என் மனதில் பெரும் பாரமாக அழுத்துகிறது. இந்த நிலையில் உங்களுக்கு நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். உங்கள் மனோபாவமும் இதுவே, என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. உங்களுக்கு என் கருத்தை எழுதுவதற்குக் காரணம் இதுதான். அதை உங்கள் தேசத்தினருக்குத் தெரியப்படுத்துவதால் ஏதேனும் சற்றுப் பயன் உண்டு, என்று நினைக்கிறேன். நான் வெகு காலமாக அரசியல் சுழலில் சிக்காது விலகி நிற்கிறேன். மேலும் சூழ்நிலையின் உணர்ச்சி வெள்ளப் போக்கில் அகப்படாமல் தனியாக நின்று சிந்தனை செய்யும் பழக்கத்தை நான் நன்றாக விருத்தி செய்திருக் கிறேன். இதனால், எனது வார்த்தைகளுக்கு ஒரு தனி மதிப்பு இருக்கும் என்று நம்புகிறேன்.

சொட்டுச் சொட்டாக இரத்தத்தை உறிஞ்சும் நெடிய சித்திரவதையிலிருந்து நீதியின் பெயர் தாங்கும் கொலைகாரர்கள் மூலம், மரணம் விடுதலை தந்து விட்ட, இவ்விருதுரதிர்ஷ்ட சாலிகளின் இந்தக் கதிதான் இவ்

வியவகாரத்தின் பயங்கரமான அம்சம் என்று எனக்குப் படவில்லை. இந்தக் குற்றமானது, அமெரிக்காவுக்கும் உலக மக்களுக்கும் இடையில் ஒரு பெரிய ஆழங்காண முடியாத பாதாளத்தை உண்டு பண்ணி விட்டது. இதுவே இதில் கவனிக்க வேண்டிய காரியம்.

சாக்கோவும் வான்செட்டியும் குற்றவாளிகளா அல்லவா என்பது இப்போது முக்கியமான விஷயமல்ல. இவர்கள் நிரபராதிகள் என்று எப்போதாவது, நிரூபிக்கப் படுமாகில், அதனால் அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கு கவுரவ பங்கம் ஏற்படும் என்பது தவிர வேறில்லை. இவர்கள் குற்றவாளிகளோ, அல்லவோ, ஆனால், இன்று இச்செயலை, படுமிலேச்சர்கள் கூட கோழைத்தனமானது, மனிதத்தன்மைக்குக் கீழ்பட்டது என்று பாவிப்பார்கள். எனவே, குரூரத் தன்மை வாய்ந்த சித்திரவதைக்கு ஆளான இரு துரதிர்ஷ்ட சாலிகள் என்று தான் அவ்விருவர்களையும் நாம் கருத முடியும். அவர்களுக்குக் கருணை காட்ட வேண்டுமென்றுதான் உலக மக்கள் கோரிக்கை விடுத்தார்கள். அவர்கள் ஒரு வேளை குற்றவாளிகளாக இருந்தாலுங்கூட, மனிதனால் சகிக்கக் கூடிய துன்பம் அத்தனையும் அனுபவித்து, தம் குற்றத்திற்குப் பிராயச் சித்தம் செய்து கொண்டார்கள். இத்தனை சித்திரவதைக்கு ஆளான பிறகும் அவர்களது உயிரைப் பறித்த பின்பே திருப்தி கண்டவர்கள் ராட்சஸ மனம் படைத்தவர்களாகத் தான் இருக்கவேண்டும்.

ஆனால், இத்தகைய அரக்க மனம் படைத்தவர்களும் உண்டு. இதில் ஆச்சரியம் ஒன்று மில்லை. நீதிபதிகள் எல்லோரும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. தமது தீர்ப்புக்குப் பிறகு உலகமே நொறுங்கிப் போவதாக

இருந்தாலுங் கூட, தாங்கள் தவறு செய்து விட்டதாக ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அகந்தையினல், தங்களுடைய தவருன செயலில் பிடிவாதம் காட்டுவார்கள். நரகம் என்று ஒன்று இருக்குமானல், அதில் இந்த அகந்தைக்குத்தான் முதல் இடம் என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்டவர்களின் குற்றம் அவர்களை மட்டுமே பாதிக்கிறது. அவர்களுடைய தேசத்தையும் அவர்களுடைய வகுப்பையும் பாதிப்பதில்லை. அவர்களுடைய குற்றங்களுடன் தனக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று அறிவித்து விலகிக்கொள்வது தான் தேசத்தின் கடமை. அதுவே வகுப்பின் கடமை யாகும். சாக்கோவுக்கும் வான்செட்டிக்கும் வழக்காடிய கமிட்டி சமூக அபிப்பிராயத்தைச் சட்ட இயந்திரத்திற்கு எதிராகத் திரட்ட முயன்றது. ஆனல், அம்முயற்சி பயன்படாது போயிற்று.

அமெரிக்க சர்க்காரில் பெரிய உத்தியோகம் வகிக்கும் எவரும் இவர்கள் விஷயத்தில் கருணை காட்ட வேண்டுமென்று கோரவில்லை. ‘கூலிட்ஜ்’ ஒருவார விடுமுறையில் ஓய்வு கொள்ளச் சென்றுவிட்டார். ‘டாப்ட்’ கானடாவிலிருந்து திரும்பிவர எண்ணவில்லை. சுதந்திர புருஷரென்று சொல்லப்படும் ‘போரா’, இவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று எழுந்த தொழிலாளி வர்க்கத்தின் குரலை, அயலாரின் கூச்சல் என்று இலேசாக மதித்து விட்டார்.

இதனல் தேசீய வெறி வெற்றிபெற்று விட்டது. அன்னியர் வந்து உபதேசம் செய்து கொண்டிருப்பது எந்தத் தேசத்துக்கும் பிடிக்காத காரியந்தான்.

ஆயினும், சாக்கோ வான்ஸெட்டியின் தண்டனையைக் குறித்து வருந்துபவர்கள் யார்

என்பதை அமெரிக்க நண்பர்கள் உணர வேண்டும். அவர்கள் பெரும்பாலும் அஹிம்ஸா வாதிகள், பெருந் தன்மையும் அறிவும் படைத்தவர்கள். இச் செயலுக்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்துக்கொண்ட பலர் அமெரிக்காவின் உண்மையான நண்பர்கள். அமெரிக் காவின் கௌரவத்திற்கு ஹானி விளைகிறதே என்ற ஒரே நோக்கத்தினால் மனம் நொந்தவர்கள்.

ஒரு வல்லரசு தனக்கு எதிராக நடக்கும் சூழ்ச்சிகளை யும் பயமுறுத்தல்களையும் எதிர்த்து நிற்க வேண்டியது தான். ஆனால் தனது நண்பர்களது வேண்டுகோள் களையும் புத்திமதிகளையும் புறக்கணித்தல் ஆகாது. எல் லோரும் சேர்ந்து வேண்டும்போது கருணை காட்டாம விருப்பது மூர்க்கத்தனமாகவே எனக்குப் படுகிறது. அது தேசீய கௌரவத்திற்கு இழுக்கை உண்டாக்குகிறது. அமெரிக்க அதிகாரிகளின் கடின சித்தத்தைக் கண்டு உலக மெங்கும் கொதிப்பு உண்டாகி இருக்கிறது. உலக மக்களின் கோரிக்கை நீதியல்ல, கருணைதான். அமெரிக் கர்கள் கருணை மிகுந்தவர்கள் என்பதே இதுவரை உலக அபிப்பிராயமாக இருந்தது.

இன்று உலகம் முழுவதையும் பாதிக்கும் ஒரு துன்ப கரமான நிகழ்ச்சி நடந்துவிட்டது. இது, அமெரிக்காவுக்கு உலக அபிப்பிராயத்தைப் பற்றி அக்கரையில்லை என்பதை யும், அமெரிக்கர்கள் கல் நெஞ்சர்கள் என்பதையும் தெளிவாக்கி விட்டது. அவர்கள் எல்லாவற்றிலும் பெரி தெனக் கருதுவது சட்டம் ஒன்றைத்தான்.

இப்பொழுது செய்வதற்கு என்ன இருக்கிறது? பிளவு உண்டானது உண்டானதுதான். ஐரோப்பா வுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு தார்மீகப்

போர் வெகு நாட்களுக்கு மறைமுகமாக நடக்கும். ஏனெனில் உலகத்தின் மனச்சாட்சியை அமெரிக்கா புண்படுத்தி விட்டது. அது உலகச் சரித்திரத்தி லிருந்து மறைந்துபோக அமெரிக்கா பிராயச் சித்தம் செய்து கொள்ளவேண்டி யிருக்கும்.

கொலை செய்யப்பட்ட இத்தாலியர்கள் கொள்கைக் காக உயிரைவிட்ட தியாகிகளின் வரிசையிலே சேர்ந்து விட்டார்கள். அவர்களுடைய புகழ் என்றும் அழியாது.

நான் அமெரிக்கன் அல்ல. ஆனல், அமெரிக்காவின் நண்பன். இந்தக் கொலைக் குற்றத்திற்குக் காரணமாக இருந்தவர்களை, அமெரிக்காவுக்குத் துரோகம் செய்தவர்க ளென்றே நான் குற்றம் சாட்டுகிறேன். நியாயம் வழங்கு வது போல இவர்கள் நடித்த கபட நாடகம் மனித வர்க் கத்தின் பவித்திரமான உரிமைகளையே பறித்துவிட்டது.

*　　*　　*

அத்தியாயம் 1

வான்செட்டியின் வரலாறு

நாள் முழுதும் பாடுபட்ட களைப்பு முகத்தில் தோன்ற அந்தத் தொழிலாளி வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். இருபத்தேழு இருபத்தெட்டு வயது இருக்கலாம். நல்ல நெடிது விட்டு வளர்ந்த உருவம். ஆனல், சற்றே வளைந்த முதுகு. முகத்தில் பதிந்திருந்த இளமைச் சித்திரத்தில் கவலைச் சுருக்கங்கள் படர்ந்தி ருந்தன. தாறுமாருய் வளர்ந்து தொங்கிய மீசை அவன்

முகத்திற்கே ஒரு அமைதியையும் கம்பீரத் தோற்றத்தையும் கொடுத்தது. கையில் ஏந்திய போஜன பாத்திரத்தோடு தான் வேலை செய்கின்ற அந்த வட பிளிமத் கயிறு ஆலையிலிருந்துதான் அவன் வியர்த்து விறுவிறுத்து வந்து கொண்டிருந்தான்.

1918-ம் வருஷம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒன்றாகிய 'மஸாசுசெட்ஸ்' மாகாணத்தைச் சேர்ந்த பாஸ்டன் நகரத்தில் வடபிளிமத் ஒரு பகுதி. அங்கேதான் வான்செட்டி வேலை பார்த்து வந்த கயிறு ஆலை இருந்தது. பிரம்மாண்டமான குழாய்களைப் பூமியினடியில் பதிப்பதற்காக மும்முரமான வேலை நடந்துகொண்டிருந்தது. எங்கெல்லாமோ வேலைக்காகத் திண்டாடிய வான்செட்டிக்கு இங்கே குழி தோண்டும் வேலை கிடைத்தது.

வான்செட்டி வட இத்தாலியன். 'மாக்ரா' நதிக்கரையிலுள்ள 'வில்லா வலட்டா' அவனுடைய சொந்த கிராமம். சமுசாரித்தனம் செய்து வந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவன். சிறு வயதில் படிப்பு என்றால் அவனுக்கு ரொம்ப ஆசை. ஆனால், அந்த பாக்கியம் அவனுக்குக் கிட்டவில்லை. ஒரு நாள் அவனுடைய தந்தை, மாதம் ஏழு டாலர் சம்பளமுள்ள வேலை ஒன்றிற்கு நாற்பத்திரண்டு வக்கீல்கள் மனுச் செய்து கொண்டதான செய்தியைப் பத்திரிகையில் படித்தார். அத்தகைய கல்வி தமது மகனுக்கு வேண்டியதில்லை என்று முடிவு செய்தார். பதின்மூன்றாவது வயதில் வான்செட்டி சமையல் வேலைக்குச் சிற்றாளாகச் சென்றான். காலை ஏழு மணிமுதல் இரவு பத்துமணி வரை வேலை. ஆறு வருஷங்கள் கடுமையான உழைப்பு. எனவே, நோய்வாய்ப்பட்டான். எலும்புந் தோலுமாய் வீடு வந்து சேர்ந்தான் வான்செட்டி. "நான் கஷ்டப்பட வேண்டுமென்பது பரம பிதாவின் விருப்பம்

போலும்,'' என்று தனக்குத்தானே சமாதானம் தேடிக் கொண்டான்.

பரம பிதாவின் திருவுள்ளம் மேற்கொண்டும் இவனுக்கு அதிக துயரத்தையே விளைவித்தது. இவன் மீது அளவிலா அன்பு கொண்டிருந்த தாயும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டாள். ஓயாத துன்பம்; ஓயாத புலம்பல்; தூக்கமே கிடையாது. தன் ஒரே மகனைத் தவிர, உதவிக்கு வருபவர் யாருமில்லை. நோயுற்ற தாயின் நித்திரைக்கு இடையூறு இல்லாதிருக்கும் பொருட்டுத் தெருக்களிலே போகிறவர்களை சப்தமிட வேண்டாமென்று கெஞ்சுவான். தாயைக் கைகளிலே தாங்கிப் பணிவிடை செய்வான். சரியான உணவும் உறக்கமுமின்றி இரண்டு மாத காலம் அவள் துன்பக் கேணியிலே உழன்றாள். ஒரு நாள் அவனுடைய மடியிலேயே உயிர் துறந்தாள். என்றாலும், அவள் அவனது உள்ளத்தை விட்டகலவில்லை வயது முதிர்ந்த எந்தப் பெண்ணைக் கண்டாலும் உடனே வான்செட்டிக்குத் தன் அன்னையின் ஞாபகந்தான் வரும். அன்னையைப் பறிகொடுத்த அவ் வீட்டிலே இனி எப்படி அவனால் வாழ முடியும்? சின்னஞ் சிறு பிராயத்திலேயே சிரிப்பு அவனை விட்டு நீங்கிவிட்டது. தந்தையோ மிகவும் வயது முதிர்ந்தவர். வான்செட்டியின் மனம் எந்த வேலையிலும் ஈடுபடவில்லை. பித்துப் பிடித்தவன் போல் காடுகளிலும் மேடுகளிலும் அலைந்து திரிந்தான். ஆற்றுப்பாலத்தின் மீது நின்று ஓடுகிற பிரவாகத்தை உற்று நோக்குவான். "வெள்ளத்திலே வீழ்ந்து இத்துன்ப வாழ்வை முடித்துக்கொண்டால் என்ன?" என்று சிந்திப்பான்.

இவ்விதம் கவலைப்பட்டு நிதானமிழந்து நிற்கும் சமயம் வான்செட்டி அமெரிக்க வாழ்வைப்பற்றிக் கனவு கண்டான்: "அமெரிக்கா பெரிய தேசம். சுதந்திர பூமி.

உயர்ந்த நாகரிகமுடையது. கண்ணியமான வாழ்க்கை நிரம்பியது,'' என்றெல்லாம் எண்ணினன். கஷ்டமின்றி வேலை செய்து ஜீவனம் நடத்துவதோடு, கல்வி அறிவு பெறவும் சந்தர்ப்பங் கிடைக்குமென்று கருதினன். இருபதாவது வயதில் புதிய வாழ்வை விரும்பிப் பூலோக சுவர்க்கமென்று கருதப்பட்ட அமெரிக்காவுக்குச் சென்றான். அங்கு அவன் கண்டதென்ன? எங்கே பார்த்தாலும் பயம், குரோதம், கொடுமை! தெருக்களில் மோட்டார்களும் ரயில்களும் போட்டியிட்டு வெகு வேகமாய் ஓடுவதை ஆச்சரியத்துடனும் பயத்துடனும் பார்த்து நின்றான். வானளாவிய மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் அவனைத் திகைக்கச் செய்தன. ஆனால், தங்குவதற்கோ அவனுக்கு ஒரு சிறிய இடங்கூடக் கிடைக்கவில்லை. குப்பை கூளங்கள் சூழ்ந்த ஒரு அறையிலே இருபது அல்லது முப்பது நபர்கள் நித்திரை செய்ய வேண்டியிருந்தது. வேலை கிடைப்பது மிகவும் அரிதாய்ப்போகவே, வயிறு வளர்ப்பதற்காகப் பாத்திரங்கழுவ வேண்டியதான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தினம் 12-அல்லது 14-மணி நேரம் வேலை. சுருங்கச் சொன்னால், எச்சில் உணவும் இழிந்த வாழ்வுமே வான்செட்டிக்குக் கிட்டின.

"முதலாளிகளுக்குத்தான் அமெரிக்கா சுவர்க்க பூமி, ஏழைகளுக்கு அது நரகந்தான்'' என்ற உண்மையை வான்செட்டி அனுபவ பூர்வமாகக் கண்டு கொண்டான். தொழிலாளருக்கு அது சுதந்திர பூமியல்லவென்பதும் தெளிவாயிற்று. அவன் பல நாட்கள் பட்டினியாக இருந்தான். வேலையோ மிகக் கஷ்டம். அதுவும் எப்பொழுதும் கிடைப்பதில்லை. செங்கல் சூளையில் வேலை செய்தான். நிலக்கரி வாரினன். கல் உடைத்தான். இவ்வாறு பற்பல கஷ்டமான வேலைகளைச் செய்தான்.

கடைசியாக பிளிமத் நகரத்திலே கயிறுலையில் அகழி வெட்டும், கூலி வேலை அவனுக்குக் கிடைத்தது.

தன்னைப் போன்று அமெரிக்காவில் குடியேறிய இத்தாலியன் வின்ஸென் ஸோபிரினியின் குடும்பத்தாருடன் வான்செட்டி வசித்து வந்தான். உடல் மெலியப் பாடு படுவதும் ஒய்வு நேரங்களில் படிப் பதுந்தான் அவன் சுபாவம். ஆங்கிலம் கற்பதில் அவனுக்கு மிகுந்த சிரத்தை. தனது வருமானத்தின் ஒரு பகுதியை மட்டும் தனக்காகச் செலவு செய்வான். மீதியைக் குழந்தைகளுக்குச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பதிலும், பொதுக் காரியங் களுக்காகவும் பயன் படுத்துவான். இரவில் உணவு அருந்திய பிறகு எப்பொழுதும் உலாவச் செல்வான். மந்தாரமான தினங்களில் வீட்டிற்குள்ளேயே நடந்து கொண்டிருப்பான். சிறிய இடத்தில் அவனுடைய நீண்ட கால்களை அடுத்தடுத்து வைக்கும் பொழுது அவன் நடனம் ஆடுவது போல் தோன்றும். பல கருத்துக்களைத் தனக்குள்ளே சிந்திப்பதற்குத் தனிமை அவனுக்குத் தருந்த சந்தர்ப்பத்தை அளித்தது. அகழி வெட்டுபவனின் ஆழ்ந்த கருத்துக்கள்தான் என்னவோ!

பணம்! பணம்! அதைத் திரட்டும் பேராசை வெறியர்களாலேதான் அழகிய நகரங்களும் பெரிய தேசங்களும் அழிந்து பாழாகின்றன. கொள்ளைக் கூட்டத்தார்களிடந்தான் செல்வம் மலை போல் குவிகிறது. நல்லவர்களிடத்திலோ தரித்திரம் தாண்டவம் ஆடுகிறது. ஏனென்றால், நல்லவர்கள் எப்பொழுதும் பிறர் நன்மையையே கருதுகிறார்கள். அவர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். இத்தகையோர் பிறர் உழைப்பால் உயிர்வாழும் பணப் பித்தர்களை வெறுக்கிறார்கள். "கொடியவர்கள்

நரகத்தில் தள்ளப்படுகிறார்கள்" என்று மத போதகர்கள் உபதேசம் செய்கிறார்கள். நரகம் வேறு எங்கோ இருப்பதாக நம்புகிறீர்களா? இந்த முதலாளித்துவ உலகந்தான் நரகம். அமோகமான தொழில் அபிவிருத்தியால் வியாபாரத்தைப் பெருக்கிப் பணத்தைக் குவிக்கும் செல்வந்தர் தங்கள் சுயநலத்தின் பொருட்டு நாடு பிடிக்கும் வெறியராய் சிறிய நாடுகளுடன் போர் தொடுக்கின்றனர். குற்றமற்ற ஏழை மக்கள் லட்சக்கணக்கில் யுத்தகளத்தில் பலியிடப் படுகிறார்கள். ஐயோ! என்ன கொடுமை! இதுதானா நாகரீக உலகம்? மத போதகரைப் புறக்கணிப்பவர்கள் நரகத்திலிடப்படுவதில்லை. ஆனால், திக்கற்ற ஏழை மக்கள் யுத்தகளங்களில் நிச்சயமாகச் சுட்டு வீழ்த்தப்படுகிறார்கள். பிறர் உழைப்பைச் சுரண்டி வாழும் ஒரு சிறிய கும்பலின் பொருட்டு கோடிக்கணக்கான ஏழை மக்களின் பிணங்கள் குவிந்து கிடக்கும் போர்க்களங்கள் தான் நரகம்! நரகம் வேறெங்கோ இருப்பதாய்க் கூறிப் பாமர மக்களை ஏமாற்றுவது வெறும் பித்தலாட்டம்" இவ்வாறு தனக்குள்ளேயே எண்ணுவான்.

ஒரு சிறு கூட்டத்தினர் மட்டுமேயல்லாமல், மக்கள் அனைவரும் சுதந்திரம் பெறுவதெப்படி? மதத்தின் பெயரால் கையாளப் படும் மூடப்பழக்க வழக்கங்களையும், பெண் இனத்தைக் கொடுமைப் படுத்து வதையும் ஒழிப்பது எவ்வாறு? மக்களின் சுதந்திரம் துளி கூடக் கட்டுப்படுத்தப் படாமல் யாதொரு சட்டமும் சர்க்காரும் இன்றித்தானாகவே ஓங்கி வளரும் தனிச் சுதந்திரம் சித்திப்பது எங்ஙனம்? இவைகளே அவனது இடையறாச் சிந்தனை.

"வான்செட்டி ஒரு புரட்சிக்காரன், வெடி குண்டு எறியும் கொலை பாதகன், அநாகரிகன், கொடியன்,

நாஸ்திகன்" என்ற பழி பாதகங்களைச் சுமத்தி அமெரிக்க, பூர்ஷாவாக்கள் பிரசாரம் செய்தார்கள். ஆனால், அவனை நன்றாகத் தெரிந்து கொண்டவர்கள் ஒரு போதும் அவ்விதம் நினைக்க மாட்டார்கள். அவன் சாந்த சொரூபி. தர்ம சிந்தனையும் நியாய உணர்ச்சியும் பரிசுத்த உள்ளமும் படைத்தவன். மரியாதையும் தன்னடக்கமும் உள்ளவன். சிறு குழந்தைகளுடன் விளையாடுவதில் அவனுக்கு அதிக விருப்பம். ஒரு நாள் நான்கு சிறுவர்கள் பூ விற்றுக்கொண்டிருந்தார்கள். வான் செட்டி ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பூச்செண்டு வாங்கினான். இரண்டு செண்டுகளைத் தன்னுடன் வந்த இரு நண்பர்களுக்குக் கொடுத்தான். மீதமுள்ள இரண்டு செண்டுகளையும் தோட்டத்தில் எறிந்துவிட்டான். ஒருவனிடம் மட்டிலும் பூ வாங்கினால் மற்றவர்கள் மனம் நோகுமே என்று கருதித் தேவையில்லாதிருந்தும் எல்லோரையும் திருப்தி செய்யும் பொருட்டு, மலர் வாங்கிய பரிவுடையானைக் கொடியோன் என்று எப்படிக் கூறுவது? அவன் புலால் உண்பதில்லை. ஒயின் குடிப்பதில்லை. பூனைக்குட்டிகூட வருந்த அவன் சகிக்கமாட்டான். எவருக்கும் எவ்வித தீங்கும் செய்தறியான். இவனை வெடி குண்டெறியும் கொலைபாதகன் என்று சொல்வது எங்ஙனம்?

ஒரு சமயம் வான்செட்டியின் காசுப்பை தவறிவிட்டது. விளம்பரம் செய்தபின், போலீஸார் பணப்பையைக் கண்டுபிடித்து அவனிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவனுடைய கணக்குப் பிரகாரம் பதின்மூன்று டாலர்களே அதில் இருக்க வேண்டும். ஆனால், அதில் பதினெட்டு டாலர்கள் இருந்தன. எனவே, அவன் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். அவனுடனிருந்த தோழர்கள், "உனக்கோ மறதி

அதிகம்; பணத்தில் சிரத்தையே கிடையாது; எவ்வளவு பணம் இருந்ததென்ற கணக்கை நீ எப்படிச் சரியாக வைத்திருக்க முடியும்?'' என்று வாதாடியும், அவன் ஒரே பிடிவாதமாகப் பணப் பையைப் பெற்றுக்கொள்ள வில்லை. நாகரிக உலகிலுள்ள கனவான்களில் எத்தனை பேர் இவ்விதம் நேர்மையாக நடந்து கொள்வர்?

மற்ருெரு சந்தர்ப்பத்தில் வான்செட்டி பனிக்கட்டிகளை உடைத்து வண்டியில் ஏற்றும் வேலையைச் செய்யும் போது போட்டுக் கொள்வதற்காக ஒரு ஜதை ரப்பர் ஜோடு வாங்கினுன்—கஷ்டப்பட்டு சேமித்த பணத்திலிருந்து வாங்கினுன். ஆனுல், மூன்று தினங்களுக்குப் பிறகு வெறுங் கால்களுடன் காணப்பட்டான். காரணம்? தனது எளிய தோழன் ஒருவன் ஜோடு வாங்க வகையின்றிச் சங்கடப்பட்டதால் அவனுக்குக் கொடுத்துவிட்டான். என்ன உதார குணம்! அவன் வாழ்க்கையில் இத்தகைய உதாரணங்கள் எத்தனை வேண்டும்? அவனைக் கொடியோன் என்று கூறுவது மகா பாவம்.

இயற்கைக் கடவுள், அருட் கடவுள், நீதிக் கடவுள் இவற்றின் பேரில் வான்செட்டி நம்பிக்கை கொண்டிருந்தான். அவனை எப்படி நாஸ்திகன் என்று சொல்வது? மதக்குருக்கள் போதனையில் அவனுக்கு நம்பிக்கை கிடையாது. "ஏசுநாதர் ஒரு தொழிலாளி. அவர் பெரிய புரட்சிக்காரர். அவர் ஏழைகளுக்காகப் பாடுபட்டார். ஆனுல், மதக் குருக்களோ ஏழைகளை வதைக்கின்றனர்'' என்று அவன் கருதினுன்.

இத்தகைய குணசீலனைக் கொலைஞன், கொடியன், நாஸ்திகன் என்று அமெரிக்கர் கூறுவானேன்? அவனை ஏன் கொடிய விஷம் போன்று வெறுக்க வேண்டும்?

மனிதனை மனிதன் சுரண்டி வாழும் அரசாங்க அமைப்பை அவன் எதிர்த்தான். மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழும் சமூக அமைப்பை நிலைநாட்ட விரும்பினான். அதன் பொருட்டு மெய் வருந்திப் பாடுபட்டான். முதலாளி வர்க்கம் வான்செட்டி மீது வீண்பழி சுமத்திய தற்கு இவையே காரணம்.

சாதாரண வாழ்க்கையில் எவ்வளவு சாந்தமும் அமைதியும் இருந்தனவோ, அவ்வளவு பிடிவாதமும் உணர்ச்சியும் கொள்கையில் இருந்தன. கொள்கைக்கு மாறான எதையும் தகர்த்தெறிய அவன் பின் வாங்கமாட்டான். முதலாளித்துவத்தை உடைத்தெறிவதில் அவனது சாந்தம் அக்கினிச் சுவாலையாகவும், பொறுமை புயல் காற்றாகவும் மாறிவிடும். (சிப்பாய்களை நோக்கி "முதலாளி களுக்காக யுத்தங்களில் பலி யாகாதீர்கள்" என்று கர்ஜிப்பான். "ஏமாற்றும் குருக்களுக்கு அஞ்ச வேண் டாம். யுத்த களத்தில் பலி கொடுப்பதற்கு நாங்கள் குழந்தைகளைப் பெற மாட்டோமென்று நிமிர்ந்து சொல் லுங்கள்" என்று தாய்மார்களை வேண்டிக் கொள்வான்.) கள்ளங் கபடமற்ற குழந்தை உள்ளம் படைத்தவனும் சொப்பன உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவனு மான வான்செட்டி, தனக்கு எத்தகைய பெருங்கொடுமை நேரிடப் போகிற தென்பதை உணர்ந்துகொள்ளவில்லை. கடுமையான சுழற்காற்றில் அகப்பட்ட துரும்பு நிர்மூல மாவது போல, முதலாளிகளின் கொடூர சக்தியால் தனக்கு அழிவு நேரிடும் என்பதை உத்தமன் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?

ஆகவே, எவ்வித பயமுமின்றிப் பாடுபடுவதும், படிப்பதும் பிறருக்கு உதவுவதும், அவகாசம் கிடைத்த

போதெல்லாம், தானிருந்த இடத்திலாயினும் சரி, அல்லது வெளி ஊரிலாயினும் சரி பிரசாரம் செய்வதும்தான், வான்செட்டியின் சாதாரண வாழ்க்கையின் அம்சங்கள்.

அத்தியாயம் 2

வேலை நிறுத்தம்

வான் செட்டி வேலை செய்து வந்த கயிறுலையைக் காவல்செய்வதற்காக ஒரு நாள் திடீரென 250 போலீசார் தோன்றினர். இவர்கள் எங்கிருந்து வந்தனர்? இவர்கள் தொழிலாளர் கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்கத் தேச சஞ்சாரம் செய்தார்களா? ஒழுங்கு படுத்தப்பட்ட தொழிலாளரின் கட்டுப்பாடான கிளர்ச்சிகளை முதலாளிகள் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எல்லா இடங்களிலும் இருந்ததா? தொழிலாளர் எழுச்சியை நசுக்கும் பொருட்டு, அவர்களுக்கு முதலாளிகள் நிரந்தரமாக வேலை கொடுத்து வந்தார்களா? என்னமோ! ஒன்றும் புரியவில்லை! திடீரென அங்கு தோன்றி கயிறுலை உடைமைகளைக் காவல் செய்து நின்றனர். போலீஸ் உடையில் கைகளில் குண்டாந் தடி தாங்கி, அறைக் கச்சைகளில் ரிவால்வர் விளங்க அவர்கள் ஆலைவாசல்களிலும் கதவுகளின் பக்கங்களிலும் உலாவிக் கொண்டிருந்தார்கள். ஏன் இந்தப் பயங்கரக் காட்சி? இப்படாடோபம் எதற்கு? முதலாளி வர்க்கக் கையாட்கள் வெறி பிடித்து நிற்பதேன்?

தொழிலாளர் காற்ரேட்ட மில்லாத சிறு குடிசைகளில் வசித்து வந்தனர். யுத்தத்தின் காரணமாகப் பொருள்களின் விலை அதிகரித்தது. குளிர் காலத்தில் போர்த்திக் கொள்ளக் கம்பளம் இல்லை. தோட்டங்களில் காய் கறிகள் கிடையாது. வீட்டு வாடகை அதிகமாகி விட்டது. மிகச் சாதாரண வாழ்வு கூட நடத்த இயலாத நிலைமை ஏற்பட்டது. வாயில்லாப் பூச்சிகளால் என்ன செய்ய முடியும்? சிலர் முணு முணுத்துக் கொண்டிருந்தனர். சிலர் முதலாளிகளிடம் முறையிட்டார்கள். யாதும் பயனில்லை. மலையில் மோதினல் மண்டை தானே உடையும்! விருப்பமில்லையேல் விலகிக் கொள்ளுங்கள் என்ற இறக்கமற்ற பதில்தான் கிடைத்தது. ஏழைகளுக்கு இரங்காத கொடிய வஞ்சகரிடமிருந்து வேறு என்ன தான் எதிர் பார்க்க முடியும்? தொழிலாளரிடம் அன்பு பூண்ட வான்செட்டி அவர்களின் கஷ்டத்தைக்கண்டு கலங்கினன். தொழிலாளர்கள் கூட்டங் கூட்டமாகக் கூடித் தங்களுடைய கோரிக்கைகளைத் தயாரிக்கும்படி அவன் ஏற்பாடு செய்தான். தேசீய வாதிகளும் ஸோஷலிஸ்டுகளும் பொதுக் கூட்டம் கூட்டித் தொழிலாளர் பிரச்சினைகளைக் குறித்துப் பேசினர்கள். சிலர் தொழிற் சங்கம் ஸ்தாபிக்க வேண்டும் என்று கூறினர். வான்செட்டி இதைக் கடுமையாக எதிர்த்தான். ஏனெனில், பொதுவாகத் தொழிற் சங்கத் தலைவர்கள், தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளவும் பொருள் திரட்டவும், தொழிற் சங்கங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றர்களேயன்றி, உண்மையாகத் தொழிலாளர் நன்மையைக் கவனிக்கிற தில்லையென்பது அவன் அபிப்பிராயம்.

ஆதலால், வான்செட்டியும் அராஜகத் தோழர்களும், தங்கள் தலைவன் காலியானியை வரவழைத்து, பொதுக்

கூட்டங்கள் கூட்டி, ஸ்தாபனங்கள் எங்ஙனம் தொழிலாளருக்குக் கெடுதலாக இருக்கின்றன என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டி முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்தும் தொழிற் சங்கங்களின் ஆதிக்கத்திலிருந்தும் தொழிலாளரை விடுவிக்க முற்பட்டனர். தொழிலாளரின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டம் நடந்தது. வாரம் ஒன்றுக்குப் பெண்களுக்கு 8 டாலர்களும் ஆண்களுக்கு 12 டாலர்களும் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தொழிலாளர் கூட்டங்களனைத்தும் ஏற்றுக்கொண்டன. தங்கள் கோரிக்கையைக் கம்பெனிக்குச் சமர்ப்பிக்க ஒரு கமிட்டியைத் தொழிலாளர் நியமித்தனர். அக் கமிட்டி கம்பெனி நிர்வாகத் தினரிடம் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது.

இருபத்தைந்து சதவிகிதம் சம்பள உயர்வு சாத்தியமில்லையென்றும், அவ்விதக் கோரிக்கை கம்பெனியைப் பாதிக்கும் என்றும் நிர்வாகிகள் பதில் கூறி கமிட்டியின் கோரிக்கையை நிராகரித்து விட்டனர். ஆனால், ஐந்து சதவிகிதம் கூடுதலுக்குக் கம்பெனி இசைந்தது. இச் சலுகையைக் கமிட்டி ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. முன்னைக் காட்டிலும் அதிகமான கூட்டங்கள் நடந்தன. ஒருநாள் ஜனங்கள் ஆங்காங்கு கூட்டங் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். கலைந்து போகும்படி காவலாளிகள் ஜனங்களுக்குக் கட்டளையிட்டனர். ஜனங்கள் கீழ்ப்படிந்தார்களா? இல்லை. "தண்டப் போலீசாருக்கு செலவு செய்யும் அமோகமான பணத்தைத் தொழிலாளருக்குக் கொடுத்தால் அவர்கள் கஷ்டம் ஓரளவாவது நீங்குமே" என்று மிகத் துடுக்காகச் சிலர் பதில் கூறினர். "கம்பெனி முதலாளிகள் தர்மத்திற்காகக் கொடுக்கும்

பணத்தைத் தொழிலாளரின் சாப்பாட்டிற்காவது கொடுக்கலாமே'' என்று வேறு சிலர் பேசிக் கொண்டார்கள். உள்ளூரக் குமுறிக் கொண்டிருந்த இந்நிலைமை திடீரென்று வேலை நிறுத்தத்திற்குக் கொண்டுபோய் விடும் என்பதை எதிர் பார்த்தே முதலாளிகள் பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் போலும்!

வியாழக்கிழமை காலை. சம்பளப்பட்டுவாடா தினம். மூன்றாவது 'ஸ்பின்னிங்' அறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு தொழிலாளிக்கும் 'போர்மேனு'க்கும் தகராறு ஏற்பட்டது. தொழிலாளியை வெளியே போகும்படி பெரிய மேஸ்திரி உத்தரவு கொடுத்தான். தொழிலாளி அவ்வுத்தரவை மீறினான். அங்கு வேலை பார்த்துக்கொண்டிருந்த சக தொழிலாளிகளை நோக்கி அவன் உரக்கக் கத்தினான். மேஸ்திரி அவனைக் கல்தாக் கொடுத்து வெளியே தள்ளி விட்டான். அவ்வளவுதான், தொழிலாளர்கள் அல்லோல கல்லோலமாக வெளியே ஓடினார்கள். ஒரே குழப்பம். "வேலைகளை நிறுத்துங்கள்'' என்ற சப்தம் மேலோங்கி எழுந்தது. இக் கூச்சல் காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. தொழிற்சாலை இமைப் பொழுதில் பொதுக்கூட்ட மண்டபமாகக் காட்சி அளித்தது. மின்சார இஞ்சினும் இதர யந்திரங்களும் திடீரென்று நின்று விட்டன. பல வருடங்களாக அடங்கியிருந்த மனக்கசப்பு ஆவேசத்துடன் பொங்கிக் கிளம்பியது. ஆயுதங்களை எறிந்துவிட்டு இரண்டாயிரம் தொழிலாளரும் வெளியேறினர். அதன்பின் தொடர்ச்சியாகப் பல விடங்களில் கூட்டங்களுக்கு ஏற்பாடாயிற்று.

ஒரு நாள் புயல் காற்றின் வேகம் சகிக்க முடியாதிருந்தது. பனியோ கடுமை. பனிக் கட்டிகள் கற்பாறைகள் போன்று காணப்பட்டன. காவலாளிகளும்

2

போலீசாரும் அங்கு மிங்கும் உலாவிக்கொண்டு கயிரு ஆலையைக் காவல் செய்து நின்றனர். ரஸ்தாவின் மற்ெருரு புறத்தில் தொழிலாளர் கூட்டங் கூட்டமாய் நின்று கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். வீடுகளுக்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய அந்திநேர மாகியும் தொழிலாளர் அங்கேயே நின்று கொண்டிருந் தனர். ஆனல், ஆலேயின் முன்னல் கூட்டங் கூடிவிடாமல் அடித்துத் துரத்துவதற்காக நாள் ஒன்றுக்கு ஐந்து டாலர் களும் நல்ல ஆகாரமும் காவலாளிகளுக்குக் கொடுக்க இசைந்த பிரபுக்களோ 'பாஸ்டன்' கிளப்பில் உல்லாச மாக குடித்துக் கூத்தாடிக் கொண்டிருந்தனர். ஆலேயின் முன்னல் நின்று, பயமுறுத்தினல் சம்பளத்தில் ஒரு டால ராவது அதிகமாகப் பெறலாமே என்று திரளான தொழி லாளர்கூட்டம் நம்பிக்கை யோடு நின்று கொண்டிருந் தது. அவ்விடத்திலிருந்து அகன்று விட்டால், அதிகப் பசியுள்ள கருங்காலிகள் தங்கள் வேலேக்கு ஆபத்தாக வந்துவிடுவார்கள் என்ற பயமும் அவர்களுக்கு இருந்தது. எனவே, தொளிலாளர் தங்கள் வீடுகளுக்குப் போகாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தனர்.

தலேமைப் பதவியை விரும்புகிறவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. ஸ்தாபன ரீதியான கட்டுப் பாட்டின் அவசியத்தைத் தொழிலாளர் உணர்ந்தார்கள். ஸோஷலிஸ்டுகள் வடக்கு பிளிமத்தில் 'ரிஷ்பிக்கி' ஹாலில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர். யாதொரு முன் யோசனேயுமின்றி சிலர் கூட்டங்கள் கூட்டிக் கமிட்டிகளே வகுத்தனர். ஸோஷலிஸ்ட் தலேவர்களும் சொல்வன்மை யுள்ள பிரசாரகர்களும் பாஸ்டனிலிருந்து வந்தார்கள். 'ஹம்பெர்ட்டோ பொராரி' ஹாலில் ஒரு பிரம்மாண்ட மான பொதுக்கூட்டம் நடந்தது. ஜனங்கள் வாசல்களி லும் குழுமி யிருந்தனர். "வேலே நிறுத்தம் வெற்றி

பெறுவதற்கு தொழிலாளர் ஒற்றுமையும் கட்டுப்பாடும் அவசியம்" என்று வற்புறுத்திக் கூறப்பட்டது.

தொழிலாளரின் சேமிப்பு நிதி மிகக் குறைவாக யிருந்தது. எனவே நபர் ஒன்றுக்கு ஐந்து டாலர்வீதம் கொடுக்கச் சம்மதித்து நூறு தொழிலாளர் கையொப்பம் செய்தனர். ஆனால் வான்செட்டி, குடும்ப பாரமில்லாத தனிமனிதன் ஆகையால் பத்து டாலர் கொடுத்தான். கட்டிட வாடகை, தந்தி, தபால், டைப் முதலான செலவு களை அந்தப் பணத்திலிருந்து ஈடுசெய்ய முடிந்தது. அராஜகர்களும் உதவித் தொகை வசூலிக்க ஜாபிதாக்கள் தயாரித்தார்கள். தொழிலாளி வர்க்கப் பிரசார இயந்திரம் தனது எளிய முறையில் வேலை செய்ய ஆரம்பித்தது.

மறு தினம் பெரிய ஊர்வலம். 1800 தொழிலாளர் கலந்து கொண்டார்கள். கயிறுலைக் கம்பெனியைக் கடந்து பிளிமத் பிரதான வீதிகளில் ஊர்வலம் சென்றது. மூன்று நாட்களுக்குப் பிறகு மற்றொரு பிரம்மாண்டமான ஊர்வலம் நடைபெற்றது. "கேவலமான வாழ்க்கையை வெறுக்கிறோம்" என்பது போன்ற பல சுலோகங்கள் தீட்டிய விருதுகள் தாங்கிப் பெண்களும் சிறுவர் சிறுமி களும்கூட ஊர்வலத்தில் சென்றார்கள். இச் சந்தர்ப்பம் பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு நல் விருந்து. வேலை நிறுத்தம் நன்றாக விளம்பரம் செய்யப்பட்டது.

பல ஸ்தாபனங்கள் வேலை நிறுத்தத்திற்கு உதவி செய்ய முன் வந்தன. கன்செர்வெடிவ் யூனியனாகிய அமெரிக்கலேபர் பெடரேஷன், "குறைந்த வேலை, அதிக சம்பளம்" என்ற திட்டத்துடன் அணுகியது. இண்டஸ் டிரியல்—ஆப்—தி—ஓர்ல்டு என்ற மற்றொரு சங்கம், கயிறுலை நிர்வாகத்தைத் தனது ஸ்தாபன ஆதிக்கத்தின் கீழ்

கொண்டு வரலாம் என்ற அபிப்ராயத்தைத் தொழிளாரிடம் சமர்ப்பித்தது. இவ்விரு திட்டங்களையும் தொழிலாளர் கேட்டார்கள். அவர்களால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. அராஜகர்களின் உபதேசங்கள் மனக்குழப்பத்தை அதிகரித்தது. ஸ்தாபனங்கள் தொழிலாளரைப் பிணிக்கும் மோச வலை. உழைக்காமல் உயிர் வாழும் வஞ்சகரின் சூழ்ச்சி. தொழிலாளரே வேலை நிறுத்தத்தை நடத்த வேண்டும். இவ் வனுதாபிகள் எல்லாம் நிதி வசூலித்துத் தங்கள் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவார்களேயன்றி மற்றவர்களுக்கு உதவ மாட்டார்கள்," என்று அராஜகர் வாதாடினர்.

இத் தருணத்தில் சோம்பியிருப்பது சரியல்லவென்று வான்செட்டி எண்ணினன். இயற்கைக் குணங்களான அடக்கமும் கூச்சமும் எங்கே போயிற்றோ! அவன் பெரிய பிரசங்கியாக விளங்கினன். எங்காவது ஒருவருடன் விவாதம் ஆரம்பித்தால், அங்கு சில நிமிஷங்களில் கூட்டங்கூடி விடும். விவாதம் பிரசங்கமாக மாறிவிடும். மறியலை எவ்வாறு நடத்துவது என்பதைப்பற்றி ஒருவன் மற்றவர்களுக்குப் போதித்தான். "மறியல் நடக்கும் இடத்திலிருந்து போலீஸார் துரத்தினல், வேறு இடத்திற்குச் சென்று வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பேச வேண்டும். அங்கிருந்தும் துரத்தப்பட்டால் மற்ருெரு வீதியின் ஒரு மூலையில் நின்று ஜனங்களுக்குச் சொல்ல வேண்டும். கேட்பதற்கு ஜனங்கள் எப்பொழுதும் தயாராக யிருப்பார்கள்," என ஒருவன் மற்றவனுக்குச் சொன்னன். தனி நபர் பிரசாரமும் தகுந்த பலன் அளித்தது. தொழிலாளர் கட்டுப்பாட்டின் அவசியத்தை நன்கு அறிந்து கொண்டார்கள். ஒரு மாத காலம் தொழில் செய்வதில் எவ்வளவு தெரிந்து கொள்ள முடியுமோ அதைக்

காட்டிலும் அதிகமாக வேலையில்லாத ஒரே தினத்தில் தெரிந்துகொள்ள, வேலை நிறுத்தம் சாதகமாயிருந்தது. ஒவ்வொரு நாளும் தொழிலாளர் தங்களுக்குள் விவாதிக்க விவாதிக்க முதலாளிகளின் மோசடியும் பித்தலாட்டமும் வெட்ட வெளிச்சமாயிற்று.

தொழிலாளரின் குறைபாடுகளைச் சரிக்கட்டுவதாக, அரசாங்க 'போர்டு' முன் வந்தது. அதை ஏற்றுக் கொள்ளும்படி கன்செர்வெடிவ் கட்சித் தலைவர்கள் தொழிலாளரை வற்புறுத்தினர். அதை வான்செட்டி கடுமையாக எதிர்த்தான். ஆனால், மத்தியஸ்த போர்டின் தலையீடு அங்கீகரிக்கப்படும் போலிருந்தது. இதை யுணர்ந்த வான்செட்டி வெறிபிடித்தவன் போல் அங்கு மிங்கும் ஓடினான். ஒரு கூட்டத்தில் கேம்பக்னோ கல்லா என்பவன் இத்தாலியத் தொழிலாளரின் அபிப்பிராயத்தை ஆங்கிலம் பேசும் தொழிலாளருக்கு சொல்லிக் கொண் டிருந்தான். திடீரென்று வான்செட்டி அப்பிரசங்க மேடைமீது குதித்து கேம்பக்னோவைக் கீழே தள்ளி விட்டுத் தானே பேச ஆரம்பித்தான். "தொழிலாளருக்கும் அரசாங்கப் போர்டுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடை யாது. அது ஒரு மாய வேலை. வேலை நிறுத்தத்தைப் பாழ் படுத்தும் மோசடி. தொழிலாளர்களையும் அவர்களது பெண்டு பிள்ளைகளையும் கம்பெனிக்கு நிரந்தர அடிமைகளாக்கும் சூழ்ச்சி. அரசியல் வாதிகள் எதற்காக வேலை நிறுத்தத்தில் தலையிட வேண்டும்? சர்க்காருக்கு இதில் சிரத்தை ஏன்? தொழிலாளர் காரியத்தை அவர் களே கவனித்துக் கொள்ளட்டுமே; (கேம்பக்னோவைச் சுட்டிக் காட்டி) அவன் தொழிலாளர் துரோகி. முதலாளி களைப் போன்று அவனுங் கொடியவன்," என்று இவ் வாறாக வார்த்தைகளைக் கொட்டினான். இங்கிலையில் கூட்

டத்தில் பெரிய குழப்பம் ஏற்பட்டது. சிலர் வான் செட்டியை ஆதரித்தார்கள். சிலர் கேம்பக்னேவை ஆதரித் தார்கள். பெரும்பான்மையோர் அராஜக பிரசாரத்தைக் கேட்க விரும்பவில்லை. எனவே, மீண்டும் கேம்பக் னேவைப் பேசும்படி வேண்டினர்.

பிளிமத் கயிறுலைக் கம்பெனி பங்குதாரர்கள் பெரும் பணமும் சக்தியும் படைத்தவர்கள். முதலாவது உலக யுத்தம் ஆரம்பமான இரண்டாவது வருஷத்தில் தொழில் அயோகமாய் பெருகியதால், எக்காலத்திலும் இல்லாத அளவு லாபங் கிடைத்தது. பெண்களுக்கு ஆறு டாலர் களும் ஆண்களுக்கு ஒன்பது டாலர்களும் நியாயமான சம்பள மென்று எடுத்துக் கூறும் பொருட்டு கம்பெனி, தனது உத்தியோகஸ்தர்களை அரசாங்க போர்டிடம் அனுப்பியது. வேலை செய்யும் தாய் தந்தை குழந்தைக ளடங்கிய ஒரு குடும்பம், வாரத்தில் சராசரி இருபத் தைந்து டாலர் சம்பளம் பெறுகிறது, என்று போர்டா ருக்கு எடுத்துக் காட்டப் பட்டது. தொழிலாளர், 'ஜான் கார்ஸினி' குடும்பத்தை உதாரணமாக எடுத்துக் காட்டி எதிர் விவாதம் செய்தார்கள். கார்ஸினிக்கு ஒரு மனைவி யும் ஒன்பது குழந்தைகளும் உண்டு. மூத்த குழந்தைக்கு ஒன்பது வயது. கார்ஸினிக்கு ஒன்பது டாலர்கள் தான் சம்பளம். அவன் குடும்பத்தார் உண்ணும் உணவு நாய் கூடத் தீண்டாது. கடனாளியாகி விட்டான். நண்பர்கள் அவனுக்கு உணவும் உடையுங் கொடுத்து உதவி செய்யா திருந்தால், அவனுடைய குழந்தைகளின் கதி அதோகதி தான்.

கடந்த பத்தொன்பது வருஷங்களில் கம்பெனி மூன்று முறை சம்பள உயர்வு செய்தது. அதுவும் ஒவ்வொரு

தடவையும் ஐந்து சதவிகிதந்தான். எனினும், கடந்த பத்து வருஷங்களில் வாழ்க்கைக்கு அவசியமான பொருள் களின் விலை வாசி ஐம்பது சத விகிதம் கூடிவிட்டபடியால் தற்சமயம் ஐந்து சத விகிதம் உயர்வு கொடுக்கக் கம்பெனி சம்மதிப்பதாயும், அதற்கு அதிகம் கொடுத்தால் கம்பெனி தானுகவே தன் அழிவைத் தேடிக் கொள்வதாகுமென்றும் வக்கீல்கள் கம்பெனிக்காகப் பரிந்து பேசினர். வக்கீல் களின் தர்க்க ரீதியான பேச்சுகளை, பத்திரிகைகள் அப் படியே பிரசுரித்தன. நய வஞ்சகரான முதலாளிகளின் ஏஜண்டுகள் கம்பெனிக்குச் சாதகமான விவாதங்களை வெகு தந்திரமாகத் தொழிலாளருக்குக் கூறி வசப்படுத்த முயன்ருர்கள்—தொழிலாளரின் தலைவரிடம் பல பசப்பு வார்த்தைகள் சொல்லி அவர்களைத் தங்கள் பக்கம் இழுக்க ஏஜண்டுகள் முயற்சித்தார்கள். ரகசிய ஏஜன்ஸி வேலை செய்ய ஆரம்பித்தது. தர்க்கம், சந்தேகம், பயம் இவை யாவும் ஏழைத் தொழிலாளரிடையே பரவிற்று.

கம்பெனியின் நிபந்தனைகளை உடனே ஒப்புக் கொள்ளா விட்டால், கருங்காலிகளைக் கொண்டு வருவதா கக் கம்பெனி பயமுறுத்தியது. மறியல் செய்து நின்ற கூட்டத்தின் மத்தியில் போலீஸ் படை தோன்றியது. ஆலையின் பக்கம் யாராவது கூடி நின்ருல் போலீஸார் சீறிப் பாய்ந்து "போ இங்கே நிற்காதே" என்று விரட் டினர். "வீதி பொது மக்கள் உபயோகத்திற்காகத் தானே," என்ற நியாயத்தை எவராவது கூறினுல், அவ் வளவுதான் போலீஸாரின் குண்டாந்தடி அவர்களுக்குத் தகுந்த பாடங் கற்பிக்கும். வேகமாய்ச் செல்லாமல் மெது வாகப் போனுலோ கலகத்திற்கு எத்தனித்தான் என்ற குற்றம் சாட்டப்பட்டு நீதிபதியின் தண்டனைக் குள்ளாக வேண்டும். வேலை நிறுத்தக் காரர்கள் கலகம் செய்தார்கள் என்று பத்திரிகைகள் கயிறு திரிக்க ஆரம்பித்து விடும்.

அம்மட்டோ, ஒரு பட்டாளத்தின் அவசியத்தைக் குறித்துக் கவர்னர் பிரபுவுக்கு கம்பெனி ஒரு மனுவைச் சமர்ப்பிக்கும்; உடனே பட்டாளமும் வந்து விடும்.

பல சங்கடங்களுக்கு மத்தியிலும் தொழிலாளர் நிலை குலையவில்லை. ஐந்து சத விகிதசம்பள உயர்வை நிராகரித்தார்கள். அரசாங்க போர்டு மத்தியஸ்தம் செய்வதினின்றும் விலகிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்படி தீவிரவாதிகள் தொழிலாளரைத் தூண்டினர். கம்பெனி மிகச் சங்கடமான நிலையிலிருந்தது. ஏனெனில் சிறந்த தொழிலாளரை வேலைக்கு அமர்த்திக் கொள்வதற்காக இதர கயிறுலைக் கம்பெனிகளின் ஏஜண்டுகள் பிளிமத்தில் தங்கியிருந்தார்கள். எனவே, ஏதாவது செய்தாகவேண்டிய நிர்ப்பந்தம் கம்பெனிக்கு இருந்தது. கடற்கரைப் பக்கமாக நூறு அல்லது இருநூறு கருங்காலிகளை, உள்ளே கொண்டு போய் ஒரு பகுதியாவது வேலை செய்யும்படி கம்பெனி முயற்சி செய்தது. போராட்டம் மிகக் கடுமையாயிற்று. மறியல் செய்து நின்ற தொழிலாளர் ஆலைக்குச் சமீபமாக வந்தார்கள். நிராயுதபாணியாக மறியல் செய்து நின்ற ஒரு தொழிலாளியைப் போலீஸ்காரன் தனது கையிலிருந்த குண்டாந்தடியால் அடித்தான். மற்றொரு தொழிலாளிப் பெண்ணின் அடிவயிற்றில் தடி கொண்டு தாக்கியதின் காரணமாக அவ்வனுதைப் பெண் கட கடவென்று உருண்டு உறைந்து கிடந்த பனிக் கட்டியில் போய் விழுந்தாள்.

அராஜகக் கொள்கையைச் சதா கனவு கண்டுகொண்டிருந்த வான்செட்டி தனது கஷ்டங்களைப் பார்க்கிலும் பிறர் துன்பத்தைக்கண்டு மிக வருந்தினுன். வேலை நிறுத்தத்திலும் மறியலிலும் அவன் அடைந்த மன வேதனை சொல்லில் அடங்காது. மறியல் வரிசையில் போலீஸாரால் தாக்கப்பட்டு மூர்ச்சையாகிக் கீழே விழுந்தவர்களைத்

தூக்கிக்கொண்டு போய் ரத்தம் பீறிடும் காயங்களைத் தண்ணீரினால் சுத்தம் செய்து சிகிச்சை செய்வான். அப்பொழுது அவன் கைகள் நடுங்கும். கண்ணீர் ஆறாய்ப் பெருகும். எனினும் கடமையைச் செய்வதில் அவன் சிறிதும் பின் வாங்கவில்லை. சகோதரத்வத்தை உலகிற்குப் போதிக்க வந்த உத்தமன். ஐந்து குழல் ரிவால்வர் ஒன்று அவனிடமிருந்தது. அது துருப்பிடித்தது. ரொம்பப்பழசு. அவன் ரிவால்வர் வைத்திருந்த தன்மையிலிருந்தே அவன் அதை உபயோகிக்கத் தெரிந்துகொள்ள வில்லை என்பதை யாரும் அறிந்து கொள்ளலாம். மேலும், அவன் எவரையும் சுட்டுக்கொல்வதை விரும்ப மாட்டான், என்பதற்கு ஒரு தகுந்த சான்று காட்டமுடியும். ஒரு சமயம் தனது வாலிபத்தோழனுடன் வேட்டைக்குச் சென்றான். துப்பாக்கியினால் சுட்டு வீழ்த்தப்பட்டு உயிர் நீங்கிக் கொண்டிருந்த ஒரு ஜந்துவின் பரிதாபக் காட்சியைக் கண்ட பார்த்தலோமியா வான்செட்டி பல தினங்கள் துக்கத்தில் மூழ்கினான். அச் சம்பவத்திற்குப் பிறகு அவன் வேட்டைக்குச் சென்றதேயில்லை. அப்படிப்பட்டவன் எப்படி மக்களைச் சுட்டுக்கொல்லத் துணிவான்? ரிவால்வருடன் பிடிபட்டால் சிறை செல்ல நேரிடுமல்லவா? என்று கேட்டவர்களிடம் "அப்படி நான் சிறை சென்றால், அதுவே நமது மகத்தான கொள்கைக்குப் பெரும் உதவியாகும்" என்று வான்செட்டி பதிலுரைத்தான். ஆனால், அவனுடைய நண்பர்களுக்கு அவனுடைய கருத்து அப்போது நன்கு புரியவில்லை. "எவரும் கேள்விப்பட்டிராத ஒரு இத்தாலியத் தொழிலாளி சிறை செல்வது, எப்படித் தொழிலாளருக்கும் கொள்கைக்கும் உதவி செய்வதாகும்?" என்று தங்களுக்குள் நினைத்துக் கொண்டார்கள்.

வான்செட்டி ஏன் ரிவால்வரை வைத்துக் கொண்டிருந்தான்? தலைவன் காலினி வருகைக்காகத்தான். தொழி

லாளரைத் தவறுதலான பாதையில் கொண்டு செல்லும் சீர் திருத்த வாதிகளின் பொய்ப் பிரசாரத்திற்கு ஆணித்தர மான பதில் கொடுக்க அராஜகர்கள் துடித்தார்கள். தங்கள் தலைவன் காலினியை வரவழைத்தார்கள். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட இதர தலைவர்கள், காலினிக்காக ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தைத் தங்களுடைய பொது மண்டபத்தில் நடத்தக்கூடாதென்று தடுத்தார்கள். அராஜகர்கள் முற்போக்குள்ளவர்களென்று பத்திரி கைகள் விளம்பரப் படுத்துவதை அவர்கள் விரும்பவில்லை. பலாத்காரத்திற்குத் தூண்டும் முறையில் பேசாமல், சிறிது மட்டுப்படுத்திப் பேசுவதாகக் காலினி இணங்கிய பிறகே மண்டபத்திற்கு அனுமதி கிடைத்தது.

காலினி கைது செய்யப்படுவானென்று பலமான வதந்தி உலாவியது. போலீஸார் பொதுக் கூட்டத்தைத் தடை செய்ய விரும்பினர். சட்டைப் பைகளில் ரிவால் வருடன் பல வாலிபர்கள் குழுமினர். தலைவன் கைது செய் யப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைவிடக் கலகம் செய்வதே மேல், என்ற நோக்கத்துடன் வாலிபர்கள் துடித்துக்கொண்டு நின்றூர்கள். ஏதாவது குழப்பம் உண்டாகி, காலினி உயிர் துறந்திருந்தால் "புரோலட் டேரியட்!" நண்பனை சாதாரண காலினி ஒரு சிறந்த புரட்சி வீரனுகக் கருதப்பட்டு அமெரிக்க சரித்திரத்தில் அவன் இடம் பெற்றிருப்பான். ஆனுல், யாதொரு குழப்ப மின்றிக் கூட்டம் முறையாக நடந்தது. காலினி பேசிய தாவது! "போலீஸார் கையாளும் மிருகத்தனமான அடக்கு முறையின் மத்தியில் நீங்கள் நிலைத்து நிற்க வேண்டுமானுல், இரும்புப் பிடிபோன்ற ஒற்றுமையை நிலை நாட்டுங்கள். உறுதியுள்ள போராட்ட சக்திகளை ஒன்று திரட்டுங்கள். செல்வம் அனைத்தையும் உற்பத்தி

செய்யும் கர்த்தாக்கள் நீங்கள்தான். உங்களுடைய உடைமைகளை நீங்கள் கைப்பற்றிக் கொள்ளும் காலம் வெகு சீக்கிரம் வரும். போலித் தலைவர்களை நம்பாதீர்கள். மூடக் கொள்கைகளிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். கடவுள், பாதிரி, போலீஸ் ஆகியோருக்கு அடிமையாகாதீர்கள். உங்களுக்கு நீங்களே கடவுள். நீதிபதியும் நீங்களே. நீங்கள்தான் சட்டத்தை இயற்ற வேண்டியவர்கள். நிறைவேற்ற வேண்டியவர்களும் நீங்களே. எது மனச்சாட்சிக்கு சரி என்று தோன்று கிறதோ, அதன்படியே உறுதியுடன் செல்லுங்கள். தலைவர்களின் கொள்கைகள் மிகக் கவுரவமானவைதான். அவற்றைப் பின் பற்றி நடப்பது மிகக் கஷ்டம்"

எல்லோரும் ஒற்றுமை கட்டுப்பாடு இவற்றை வற்புறுத்தினர். ஆனால், தலைவர்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லாததால் அவர்களைப் பின் பற்றும் தொழிலாளரும் பிளவுபட்டு நின்றார்கள். அவர்களின் சக்தியும் வீண் போயிற்று.

வேலை நிறுத்தம் ஆரம்பித்து ஒரு மாத காலமாயிற்று. தொழிலாளர் சேமித்து வைத்திருந்த நிதி தீர்ந்து விட்டது. சிலர் திரும்ப வேலைக்குப் போக வேண்டுமென்று ஆத்திரப்பட்டார்கள். மற்றும் சிலர் பயத்தின் காரணமாகக் கஷ்டங்களை வெளியே சொல்ல முடியாமல் சகித்துக் கொண்டிருந்தனர். போலீஸார் கூட்டங்களைக் கலைத்தார்கள். பொதுக் கூட்ட மண்டபம் மூடப்பட்டது. பத்து சத விகிதம் சம்பள உயர்வு செய்யலாமென்று அரசாங்க போர்டு அறிக்கை விடுத்தது. சிலர் அதற்கு உடன் பட்டனர். வேறு சிலர் மறுத்தனர். மற்றும் சிலர் அது மோசடி, கம்பெனி ஏற்றுக் கொள்ளாதவரை போர்டின் அறிக்கையை நம்பக் கூடாதென்று கூறினர். வேலை நிறுத்தம் சிதைவுறும் அறிகுறி காணப்பட்டது.

வான்செட்டி நிலை கலங்கினான். பித்துப்பிடித்தவன் போல் அங்குமிங்கும் ஓடினான். சில போலித் தலைவர்களைக் கம்பெனியின் கையாளென்று தூற்றினான். ஸோஷலிஸ்டுகள்லா கம்பெனியின் ஒற்றன் எனப் பிதற்றினான். யாது பயன்? அரசாங்க போர்டு ஆரம்பித்த சமரச வேலை இரண்டு மாதங்களில் பூர்த்தியாயிற்று. சம்பள உயர்வு செய்ய சாத்தியமான மார்க்கத்தைக் கண்டு பிடித்தது. வேலை நிறுத்தமும் முடிவடைந்தது. வேலை நிறுத்த இயக்கத்தின் முன்னணியில் நின்றவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். உத்தமன் வான்செட்டியும் வேலையை இழந்தான்.

வான்செட்டியின் செய்கையால் கயிறுலைக்கு இரண்டு லட்சம் டாலர்கள் நஷ்டம். எப்படி அவன் அந்தப் பக்கத்திலே நாட முடியும்? கயிறுலையிலாவது அதன் பக்கத்திலாவது வேலை பார்க்க முடியாது போயிற்று. அவன் எங்கு சென்றாலும் ஒற்றரும் பின்னே சென்றனர். எந்த ஆலையிலும் வேலை பெறுவதென்பது முடியாத காரியம். கடைசியாக ஒரு குளத்தில் பனிக்கட்டி உடைக்கும் வேலையிலமர்ந்தான். தினம் பத்து மணி நேரம் வேலை செய்து, தனது ஜீவனத்தை நடத்தினான்.

அத்தியாயம் 3

வான் செட்டியின் தோழன் சாக்கோ

ஐரோப்பாவில் மனித வர்க்கமே அழிந்து விடும் என்று நினைக்கும் வண்ணம் முதலாவது உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்தது. இத்தாலியும் யுத்தத்தில் கலந்து

கொண்டது. இத்தாலியப் பிரசாரர்கள் அமெரிக்காவுக்கு வந்து இத்தாலிய வாலிபர்களைக் கொலைக் களத்திற்கு இழுத்துச் செல்ல முயன்றார்கள். இந்த அடாதசெயல் வான்செட்டியின் உள்ளத்தில் சங்க நாதம் செய்தது. எப்படி அவன் வீட்டிலிருந்து புராதன இலக்கிய கர்த்தர் களான டான்டியையும் மான்ஜோனியையும் வாசித்துக் கொண்டு சும்மா யிருக்கமுடியும்? பல இடங்களில் பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தான். வீடு வீடாய்ச் சென்று துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து, ஜனங்களைக் கூட்டத்திற்கு வரும்படி கெஞ்சிக் கேட் டான். மதத்தின் பேராலும் தேசபக்தியின் பேராலும் நடைபெறும் மோசடியை பத்திரிகைகளின் மூலம் வெளிப் படுத்துவதற்காகப் பணம் வசூலித்துத் தலைவன் காலினிக்கும் அனுப்பினான்.

"தோழர் ஏசுவை" பின்பற்றும் மார்க்கம் இவைதான் என்று வான்செட்டி எண்ணினான்.

இவ்வாறு பிரசாரத்திற்காகப் பல ஊர்களுக்குச் சென்ற போது வான்செட்டி கிழக்கு பாஸ்டனில் நிக் கோலா சாக்கோ என்ற புதியதோழனைச் சம்பாதித்தான். சாக்கோ வான்செட்டி ஆகிய இருவரையும் 'புரட்சி இரட்டையர்' என்று சொல்லலாம். இருவரும் முதலாளி வர்க்கத்தின் இரட்டைப்பலி—வாழ்விலும் சாவிலும் சேர்ந்திருந்த வீரஜோடி.

சாக்கோவும் வான்செட்டியைப் போல ஓர் இத்தா லியன்தான். இருவரும் ஒரே வருஷத்தில் அமெரிக்கா விற்கு வந்தவர்கள். சாக்கோ பதினேழு வயதிலேயே அமெரிக்கா வந்துசேர்ந்தான். அவன் வான்செட்டியுடன் சிநேகம் செய்யும்போது அவனுக்கு வயதுஇருபத்தைந்து.

அவனது ஒழுங்கான முகமும் கரிய முடியும் ஒளி வீசும் கண்களும் எவரையும் வசீகரப் படுத்தக் கூடியவை. அவன் மனைவி ரோசினா அழகும் குணமும் படைத்தவள். மூன்று வயதுள்ள டான்டி என்ற பெயருள்ள ஒரு புதல்வன் அவனுக்கு உண்டு. சாக்கோ செருப்பாலையில் வேலை பார்த்து வந்ததுடன் இரவில் காவல் வேலையும் பார்த்து வந்தான். வேலையில் நுட்பமும் வேகமும் உள்ளவன். சதா உழைத்துவந்ததால், வாரம் ஒன்றுக்கு 50 முதல் 60 டாலர்கள் வரை சம்பாதித்தான். ஓய்வு நேரங்களில் தன் வீட்டைச் சுற்றி அமைந்திருந்த தோட்டத்தில் வேலை செய்தான். முதலாளிகளுக்கும் அவன் பேரில் திருப்தி. ஆனால், அதற்காகத் தொழிலாளர் விஷயங்களைக் கொஞ்சம் கூட விட்டுக் கொடுத்ததில்லை.

சாக்கோ மிகவும் தைரியமுள்ள புரட்சிக்காரன். பேச்சுத் திறமையில்லையாயினும் நிர்வாகத்தில் சமர்த்தன். ஒரு செம்பாலை வேலை நிறுத்தத்தில் கூட்டம் கூட்டியதற்காகச் சிறை சென்றவன். நாள் முழுதும் தண்ணீர் சுமக்கும் வேலை செய்து வந்த சமயம் வேலை நிறுத்தத்தில் மறியல் செய்து போலீஸார் குண்டாந்தடியின் அனுபவம் பெற்றவன். சிறந்த நடிகன். சாக்கோவும் அவன் மனைவியும் சிற்சில சமயங்களில் தோழர்கள் மத்தியில் சிறு நாடகங்கள் நடத்துவார்கள். என்ன நாடகங்கள்? முதலாளித்வ நாடுகளில் நடிக்கும் காமக் களியாட்டமா? வேலையில்லாக் கொடுமையால் வயிற்றுப் பிழைப்பிற்காக மானத்தை விற்கும் இளமங்கையரின் அரை நிர்வாண நடனக் காட்சியா? இல்லை. வர்க்கப் போராட்டத்தின் எதிரொலி! முதலாளிகளின் படு மோசம், தொழிலாளர் துயரம், ராணுவ அட்டூழியம் இவற்றைச் சித்திரித்துக் காட்டி, தோழர்களை உற்சாகப் படுத்தும் உணர்ச்சி

பொருந்திய நாடகங்களை, சாக்கோ திறமையோடு நடத்திக் காட்டுவான்.

வான்செட்டி சாக்கோ ஆகிய இருவருக்குமிடையே நாளடைவில் நட்பு அதிகரித்தது. அத்துடன் இருவர் வாழ்க்கையையும் ஒன்ருகப் பிணைக்கும் சம்பவமும் விரைவில் நிகழ்ந்தது. ஐரோப்பிய யுத்தத்தில் நெருக்கடியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆகையால், கோடிக்கணக்கான டாலர்களும் லட்சக்கணக்கான மக்களும் யுத்தத்திற்குத் தேவையாயிற்று. இருபத்தொன்றுமுதல் முப்பது வயது வரையுள்ள ஆண்கள் போர் வீரராகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று, அமெரிக்க காங்கிரஸ் கட்டாய ராணுவச் சட்டம் செய்தது. வான்செட்டியும் சாக்கோவும் யுத்தத்தை வெறுப்பவர்களானதால், பாஸ்டன் பிரதேசத்தை விட்டு மெக்ஸிகோவிற்குப் போய்விட்டார்கள். அவ்விருவரும் இத்தாலியர்களானதால் பதிவு செய்து கொள்ளாமலே அமெரிக்காவிலிருந்திருக்கலாம். சாதாரண தொழிலாளர்தானே! சட்ட நுட்பம் அவர்களுக்குத் தெரியாதல்லவா?

இருவரும் மெக்ஸிகோவிலிருக்கும்போது 1917ம் வருஷத்தில் ரஷ்யா யுத்தத்திலிருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. ஜார் மன்னனின் கொடிய ஆட்சி! பஞ்சம்! யுத்தத்தினுல் அழிவு! போர் வீரர் உணவின்றி உடையின்றி வருந்தினர். எனவே அவர்களும் போரை வெறுத்தனர் — சமாதானத்தை விரும்பினர். ஆதலால், ரஷ்யா ஜெர்மனியோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது. பத்து தினங்களில் யுத்தத்தின் போக்கு மாறியது. கிழக்குப் போர் முனையிலுள்ள சைன்யம் மேற்குப் போர் முனைக்குச் சென்றது. ரஷ்யா யுத்தத்திலிருந்து விலகியது. அதன் பிறகு தொழிலாளர்

புரட்சி ஆரம்பமாகவே, வான்செட்டி கனவு கண்ட தொழிலாளர் உலகத்தின் சாயல் முதல் முதலாக ரஷ்யா வில் தோன்றியது.

"நான் தீர்க்க தரிசனமாகக் கண்ட புரட்சி, நம் கண் முன் இதோ ரஷ்யாவில் உண்டாகியிருக்கிறது. உலக சரித்திரத்தில் இது ஒரு மகத்தான சம்பவம். இது ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பம். தொழிலாளர், விவசாயிகள் ஆகியோரின் விடுதலையின் முதல் அறிகுறி. ஜெர்மனி, ஆஸ்டிரியா, இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய தேசங்களிலும் புரட்சி ஏற்படும். சுயநலமிகளான முதலாளிகள், தொழிலாளரை வஞ்சிக்கும் சுரண்டல் முறை அடியோடு நிர்மூலமாகி, தொழிலாளர் ஒரு புதிய சமூக அமைப்பை ஸ்தாபிக்க முடியும்," என்று வான்செட்டி எண்ணி எண்ணி மனம் பூரித்தான்.

சாக்கோ வான்செட்டி ஆகிய இருவரைப் போல இன்னும் அநேக இத்தாலியர்கள் மெக்ஸிகோவுக்கு வந்திருந்தார்கள். எல்லோரும் சேர்ந்து பொதுவுடைமை வாழ்வு நடத்தி வந்தார்கள். வான்செட்டி வயிற்றுப் பசிக்கு ரொட்டி தயாரிப்பதுடன் ஆத்மீகப் பசிக்கும் அராஜக உணவு தயாரித்து வந்தான். இவ்வாறாக ஒரு வருஷம் கழிந்தது. வான்செட்டி, சாக்கோ இருவரும் அங்கேயே சும்மா இருப்பதை விரும்பவில்லை. எப்படியாவது திரும்ப பாஸ்டன் வந்து தொழிலாளரிடை வேலை செய்ய விரும்பினார்கள். ரஷ்யாவில் புரட்சி வெற்றி பெற்றாலுங்கூட வான்செட்டிக்குத் திருப்தியளிக்கவில்லை. ரஷ்ய அரசாங்க அமைப்பும், அதன் சட்ட திட்டக்கட்டுப்பாடுகளும், ராணுவ அமுலும் அராஜக வான்செட்டிக்கு எப்படி ஒத்துக் கொள்ளும்? ஆகையால் அராஜகக் கொள்கைக்குப் பொருத்தமான உன்னதப் புரட்சி

வேறெங்காவது நடைபெற வேண்டுமென்று விரும்பினன். தனது சொந்த தேசமாகிய இத்தாலிதான் அதற்குத் தகுந்தது; இத்தாலிய மக்கள்தான் உறுதியாகவும் புத்தி சாலித்தனமாகவும் இருப்பார்கள்; எனவே இத்தாலியில் அராஜகக் கொள்கையை வளர்க்க வேண்டு மென்று வான்செட்டி நினைத்தான். குடியேறிய இத்தாலியர்களிட மிருந்து பணம் வசூலித்து இத்தாலிக்கு அனுப்ப வேண்டு மென்ற நோக்கத்துடன் வான்செட்டி தனது தோழன் சாக்கோவுடன் திரும்பவும் பாஸ்டன் வந்து சேர்ந்தான்.

அராஜகக் கொள்கையைப் பரப்புவதில் எவ்வளவு சங்கடங்களிருக்கின்றன? வீணுக ஏன் துன்பம் அனுபவிக்க வேண்டும்? சற்று சாவதானமாகப் போகக் கூடாதா? என்று சொன்னல் போதும், உடனே வான்செட்டி கிளம்பி விடுவான். "முதலாளித்துவம் கொடிய அநீதி. அக் கொடுமையை நான் ஒரு விநாடிகூட சகித்துக் கொண்டிருக்க முடியாது. அதை எதிர்த்தே தீருவேன். அதைத் தகர்த்தெறியும் வரை எனக்கு ஓய்வு என்பதே கிடையாது'' என்று ஆவேசத்துடன் கூறுவான். "நான் சத்தியத்தைப் போல் கண்டிப்பாகவும் நீதியைப் போல் உறுதியாகவும் இருப்பேன். இவ்விஷயத்தில் எனது எண்ணம், பேச்சு, எழுத்து—இவை சாந்தமாக இருப்பதை நான் விரும்பவில்லை. வீடு தீப்பற்றி எரியும் போது, அபாய அறிவிப்பு சாவதானமாகச் செய், என்று ஒருவனிடம் உபதேசிக்கலாம். கற்பழிக்க முயற்சிக்கும் கொடியவனிடமிருந்து மனைவியை மெதுவாக விடுவி, என்று கணவனிடம் கூறலாம். நெருப்பில் விழுந்து துடிக்கும் குழந்தையை அவசரப் படாமல் எடு, என்று தாயிடம் சொல்லலாம். ஆனல் இவ்விஷயத்தில் மட்டும் சாவதானம் என்ற பேச்சையே என்னிடம் சொல்லாதீர்கள். நான் அதிதீவிர சிரத்தையுடனிருக்கிறேன். நான்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டேன். போலிச் சமாதானம் கூறமாட்டேன். ஓர் அங்குலம் கூடப்பின் வாங்க மாட்டேன். நான் பேசுவதைப் பிறர் கேட்கும்படி செய்தே தீருவேன்'' என்று கர்ஜிப்பான்.

அத்தியாயம் 4

யுத்த முடிவும் குழப்பங்களும்

சமாதானப் பேச்சுக்காக யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. அமெரிக்கா தேசமெங்கும் ஒரே அமளி. திடசரீரிகள் தங்கள் வீடுகளிலிருந்து துள்ளிக் குதித்துத் தெருக்களில் போகிறவர்களைக் கட்டிக்கொண்டு கூத்தாடினார்கள். ஒரு புறம் ஆனந்தக் கூத்து; மற்றொரு புறம் பெருங் கூச்சல்; இன்னொரு புறம் இன்னிசைக் கருவிகளுடன் சங்கீதம். மோட்டார்கள் அங்குமிங்கும் ஓடின வண்ணமாயிருந்தன. அவற்றின் பின் புறம் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த தகர டப்பாக்கள் 'டபடப' என்ற ஓசையைக் கிளப்பின. தொப்பிகள் ஆகாயத்தில் பறந்தன. மூன்று தினங்களுக்குப் பிறகு, மீண்டும் கோலாகலமான கொண்டாட்டம். முதலாவது நடந்த வைபவம் பத்திரிகையின் தவறான செய்தியை ஆதாரமாகக் கொண்டது போலும். உலகமகா யுத்தம் அல்லவா? எத்தனை முறை கொண்டாடினாலும் தகும். அரசாங்க வீதியிலுள்ள பிரபுக்களும் கூத்தாடினார்களென்றால், அதன் மகிமையை விவரிக்கவா வேண்டும்?

யுத்த நிறுத்த உடன் படிக்கை கையெழுத்தாகி விட்டது என்றாலும், அமெரிக்காவில் அமைதி ஏற்பட வில்லை. அமெரிக்க சைன்யம் ஜெர்மனியிலிருந்தது. ஜனாதிபதி வில்ஸன் ரஷ்யாவைத் தாக்குவதற்காக சைபீரியாவிலும் ஆர்ச்சேங்கலிலும் துருப்புகளை வைத்திருந்தார். அதுவுமின்றி முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்கப் பட்டாளமும், கடற்படையும் உலக முழுவதிலும் வைக்கப்பட்டிருந்தன. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இருந்த அமெரிக்க சைன்யம் பிரிட்டன் அமெரிக்கா ஆகிய தேசங்களின் பாதுகாப்புக்காக ஏற்பட்டவை; இதைப் பிறநாடுகளுக்கு அனுப்புவதை எதிர்த்த அமெரிக்கப் பிரஜைகள் விரோதிகளின் ஒற்றர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப் பட்டனர்.

யாதொரு யுத்தப் பிரகடனமுமின்றி நேச தேசத்தின் மீது போர் தொடுப்பது யுத்த தர்மம் அல்ல வென்று ஆட்சேபித்த அமெரிக்கப் பிரஜைகள் சிறையிலிடப்பட்டார்கள். விரோதி நாடுகளின் ஒற்றர்களுக்காகச் செய்யப்பட்ட சட்டம் அமெரிக்க மக்கள் பேரிலேயே பிரயோகிக்கப் பட்டது. சட்டத்தை எதிர்ப்பதென்று மக்கள் முடிவு கட்டினர். அமெரிக்க ஜனங்களின் ரத்தமும் பொக்கிஷமும் வீணாக விரயமாவதை ஜனங்கள் உணர்ந்து கொண்டார்கள். சர்க்கார் ஏஜண்டுகளும் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் மக்கள் கிளர்ச்சியை நசுக்க முற்பட்டனர். அரசாங்கத்தின் பெயரால் செய்யப்பட்ட அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. சட்டப்பாதுகாப்பாளரே, சட்டத்தை உதாசீனஞ் செய்வதானால், தவறி நடக்கும் பிரஜைகளைத் தண்டித்து நல்வழிப் படுத்துவது எங்ஙனம்?

ரஷ்யாவை அமெரிக்கா, தாக்கக்கூடாதென்ற துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த ரஷ்யச் சிறுவர்

சிறுமியர் நால்வரைப் போலீஸார் தூக்கிச் சென்று சித்திரவதை செய்தார்கள். ஒருவன் மாண்டான்; மற்ற மூவருக்கும் பெடரல் கோர்ட் இருபது வருஷ தண்டனை விதித்தது.

ஜியார்ஜியாவிலுள்ள அரசாங்க சபை அங்கத்தினர் ஒருவர் தொழிலாளருக்குத் தீங்கு செய்து வந்தார். 'மே' தினத்திற்கு முந்திய தினம் அவருக்கு ஒரு பார்சல் வந்தது. நீக்ரோ வகுப்பைச் சார்ந்த பணிப் பெண் ஒருத்தி பார்சலை உடைத்தாள். உள்ளேயிருந்த வெடி குண்டு வெடித்தது. நீக்ரோ பணிப் பெண் உயிர் துறந்தாள். இக் கொடிய சம்பவத்தின் காரணமாகப் பல இடங்களில் சோதனைகள் நடந்தன. நியூயார்க் தபாலாபீசிலிருந்த இருபது பார்ஸல்களில் வெடி குண்டுகளிருந்தன. அனுப்பியவர்களின் பெயர் பார்சலில் துலங்கவில்லை. அவசியமான தபால் கட்டணம் செலுத்தப்படாததால் அவை பட்டுவாடாச் செய்யப் படாமல் தபாலாபீசில் இருந்தன. போலீஸ் தடபுடல் மிதமிஞ்சிப் போயிற்று. வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்குச் சிறிது அவல் கிடைத்தால் கேட்கவா வேண்டும்?

'மே' தினம். உலகின் முன்னேற்ற சக்திகளான தொழிலாளர்களும், விவசாயிகளும் இந்த நன்னாளைக் கொண்டாடுகிறார்கள். இந்த 'மே' தினத்தில் உலகத் தொழிலாளர் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுத் தங்கள் உரிமையை நிலை நிறுத்துகிறார்கள். வீதிதான் அவர்களுடைய போர்க்களம், வீதிதான் அவர்களுடைய அரசியல் அரங்கம். வீதிதான் அவர்களுடைய சமூகப் போராட்டங்களின் குருக்ஷேத்திரம். வீதிகளில் ஆர்ப்பாட்டஞ் செய்யத் தங்களுக்குள்ள உரிமையை நிலை நாட்டும் முறையில் அவர்கள் கொடிகள், சுலோகங்கள்,

பாடல்களுடன் நிமிர்ந்த நடையோடு நேர் கொண்ட பார்வை துலங்க வீதிகளில் ஊர்வலம் வருகின்றனர். இன்றுதான், உலகத் தொழிலாளர் லாப நஷ்டக் கணக்குப் பார்க்கும் நாள்; நம்பிக்கையோடும் ஆராய்ச்சியோடும் எதிர் காலத்தை உற்று நோக்கும் நாள், சென்ற காலத்தில் அடைந்த வெற்றிகளை நினைத்து மகிழும் நாள்! நிகழ் காலத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் நாள்! எதிரிகளுடன் கணக்குத் தீர்க்கும் நாள்; நாட்டில் அமைதி, உண்ண உணவு, வாழ்வில் சுதந்திரம்—இவைகளுக்காகக் கிளர்ச்சி செய்யும் நாள் இந்நாளே! விவசாயிகள், அபிவிருத்தியடைந்த சக்திகள் ஆகியவைகளின் கூட்டுறவுடன் உலகத் தொழிலாளர் சமாதானத்திற்காகக் கிளர்ச்சி செய்யும் தினமும் இதுதான். மே தினம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிறந்தது. தங்கள் உரிமைகளுக்காகத் தொழிலாளர் ஆளும் வர்க்கத்துடன் நடத்திய உக்கிரமான போராட்டத்தில் தொழிலாள வர்க்கம் தனது இரத்தத்தைச் சிந்தியது. உலகத் தொழிலாளர் தங்கள் ஒற்றுமையையும் தியாகத்தையும் ஞாபகப்படுத்திக்கொள்ளும் பொருட்டு அத்தினத்தை மே மாதம் முதல் தேதி கொண்டாடுவதென்று முடிவு செய்தனர். அந்தப் புனித இரத்த வெள்ளத்தில் தோய்ந்து எழுந்தது தான் தொழிலாளி வர்க்கத்தின் செங்கொடி.

மே தினத்தன்று ஸோஷலிஸ்டுகள் பல கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரு கூட்டம் முடிந்ததும் மற்ரொரு கூட்டத்திற்கு ஜனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள். நூற்றுக்கணக்கான போலீஸார் அவர்களை இடைமறித்துத் தடி கொண்டு தாக்கினர். மூர்ச்சையாகி விழுந்த மக்களைப் போலீஸார் லாரிகளில் எடுத்தெறிந்தார்கள். லைசென்ஸ் பெறாத நாய்களைக் கொன்று குவிப்பது போன்றிருந்தது நிரபராதிகளான ஏழை

மக்களை அடித்து வீழ்த்திய அக்காட்சி! போலீஸார் வேறு கூட்டங்களுக்கும் சென்று அங்குக் குழுமியிருந்த மக்களையும் நையப் புடைத்தார்கள். போலீஸாரும் ஜனங்களும் கை கலந்தனர். பெரிய குழப்பத்தின் முடிவில் 116 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

விசாரணை நடந்தது. நீதிபதி ஹேடன் போலீஸாரின் அக்கிரமத்தைக் கண்டிப்பதற்குப் பதில் மக்களைத் தண்டித்ததால், அவர் வீட்டுக்கும் வெடிகுண்டு பார்சல் சென்றது. குண்டு வெடித்து அவருடைய வீட்டின் முன் பாகம் தகர்ந்து போயிற்று. காலினிதான் இதற்குக் காரணம் என்று சர்க்கார் அபிப்பிராயப் பட்டதால், காலினி தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு இத்தாலிக்கு அனுப்பப்பட்டான். சர்க்கார் ஏராளமான ஒற்றர்களை நியமித்தது.

யுத்த காலத்தில் பொருள்களின் விலை ஏறிக் கொண்டே போயிற்று. ஆனால், சமாதானத்திற்குப் பிறகும் கேட்டிராத அளவிற்கு விலைவாசி அதிகரித்தது. எப்பொருளும் தேவைக்கு அவசியமான அளவு கிடைக்கவில்லை. ஒருவன் தனது சம்பளத்தைக் கொண்டு காலங் கழிப்பது சாத்திய மில்லை யென்ற நிலைமை ஏற்பட்டது. தாங்க முடியாத துயரத்திற்குள்ளான தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஸீட்டில் நகரப் பொது வேலை நிறுத்தந்தான் மிகப் புரட்சிகரமானது. மற்றொன்று 'லாரென்ஸ்' ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம். முன்னணியில் நின்ற தலைவர்களை, வேலை நிறுத்தத்தை ஒடிக்க முயன்றவர்கள் பலாத்காரமாகத் தூக்கிச்சென்றனர். அவர்கள் மூர்ச்சையாகும்வரை குண்டாந்தடிகளால் தாக்கினர்.

செருப்பாலைக் கம்பெனி வேலைக்காரர்களுக்குச் சம்பளப் பட்டுவாடாச் செய்வதற்காகப் பாங்கியிலிருந்து பணம் எடுத்துச் சென்ற லாரியை 1919 டிசம்பர் 24ம், தேதியன்று, இரு கொள்ளைக்காரர்கள் திடீரென்று துப்பாக்கியால் தாக்கிவிட்டு மோட்டாரில் தாவி மறைந்தனர். இச் சம்பவம் ஜனங்களின் பீதியை அதிகரிக்கச் செய்தது. பிரிஜ்வாட்டர், பிளிமத்திலிருந்து 20 மைல் தூரம். எனவே, பிளிமத்தில் பிரிஜ்வாட்டர் சம்பவம் பற்றிய பேச்சுத்தான். வழிப்பறிக் கொள்ளைக்காரர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் டாலர் வெகுமதி கொடுப்பதாகக் கம்பெனி அறிவித்தது.

ஆயிரம் டாலர் சன்மானமா? போலீஸார் பாடு கொண்டாட்டம்தான். சாட்சிகளுக்கோ பஞ்சமில்லை. நிரபராதிகள் பேரில் குற்றம் சுமத்திச் சிறையில் தள்ளுவதற்குப் போலீஸார் ஒரு போதும் பின்வாங்குவதில்லை. முதலாளித்வ சர்க்கார் இயந்திரம் அவர்கள் பக்கம்தானே. ஆதலால், எந்த ஏழையின் பேரிலாவது பழியைச் சுமத்தும்படி ஆயிரம் டாலர் சன்மானம் அவர்களை நிச்சயம் தூண்டுமென, வான்செட்டி தனது தோழர்களிடம் கூறினான். பாவம்! பழி தன் மீது விழப் போவதை, ஏழை வான்செட்டி அப்போது தெரிந்து கொண்டானில்லை.

ஒன்றன் பின் ஒன்ருகப் பல திடுக்கிடும் சம்பவங்களும் குழப்பங்களும் அதிகரிக்கவே, 1920 ஜனவரி 2ம் தேதி யன்று புரட்சி ஸ்தாபனங்கள் அனைத்தையும் யாதொரு முன்னறிவிப்புமின்றி சோதனை செய்ய வேண்டுமெனவும், அந்நிய நாட்டுப் புரட்சிக்காரர்களைப் பொறுக்கி எடுத்துக் கைது செய்ய வேண்டுமெனவும் அட்டார்ணி ஜெனரல் ரகசிய உத்தரவு பிறப்பித்தார்.

போலீஸார் திடீரென்று நுழைந்து பொதுக்கூட்ட மண்ட பங்களின் கதவுகளை மூடிக்கொண்டு அந்நியர்களைக் கைது செய்தார்கள். ஒரே இரவில் எல்லாக் கூட்டங்களையும் கூட்ட, சர்க்காரே எப்படி ஏற்பாடு செய்ய முடியும்? அது சாத்தியமா? என்று வாசகர்கள் ஆச்சரியப்படலாம். சர்க்கார் ஒற்றர்கள் தேர்தல்களில் கலந்துகொண்டு பல ஸ்தாபனங்களிலும் ஸ்தானம் பெற்றிருந்தார்கள். இது முன்னேற்பாடாக நடந்த காரியம். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. முதலாளித்துவ சர்க்கார் நினைத்தால் என்ன தான் முடியாது? பணம் அல்லவா பேசுகிறது! கைது செய்யப்பட்ட நாலாயிரம் நபர்களும் போலீஸ் ஸ்டேஷன் களுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். குற்றவாளிக ளல்லவென நிரூபிப்பதற்குக் கூட கைதிகளுக்குச் சந்தர்ப் பங் கொடுக்கப்படவில்லை. மொழிபெயர்ப்பாளர்களோ, வக்கீல்களோ அனுமதிக்கப்படவில்லை. குற்றவாளிக ளெனத் தீர்ப்புக் கூறப்பட்ட புரட்சிக்காரர்கள், விலங்கி டப்பட்டு அரசாங்க வீதிகளில் நடத்திச் செல்லப்பட் டார்கள். காலினியின் தோழர் பலர் நாடு கடத்தப் பட்டனர்.

மே தின வெடி குண்டு சம்பவம் நடந்து ஒரு வருஷமாகியும், பார்சல் அனுப்பியவர்களைக்கண்டு பிடிக்கவில்லை. போலீஸார்மீது அதிருப்தி ஏற்பட்டது. ஏராளமான பணத்தை விழுங்கிக் கொண்டிருக்கும் இரக சியப் போலீஸ் எதற்காக? அதனால் யாது பயன்? என்ற கேள்விகள் எழுந்தன. அரசாங்கப் பத்திரிகைகளும் பொறுமை யிழந்தன. ஆதலால், எப்படியாவது துரித மாகக் காரியங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் போலீசாருக்கு இருந்தது. காலினி கூட்டத்தினர்தான் வெடி குண்டுகளுக்குக் காரணம் என்று சர்க்கார் ஒற் றர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ரவாரினி என்ற ஒற்றன்

காலினி கூட்டத்தார் மீது பழி சுமத்தச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அச்சமயம் அட்டார்ணி குவேக்கர் ஜாகையின் முன்பக்கம் ஒரு குண்டு விழுந்தது. அதை எறிந்தவன் குண்டுக்கு இறையாகி சின்னாபின்னமாகி உருக்குலைந்து கிடந்தான். அவன் இத்தாலிய அராஜகன் வால்டிஞேனி என்பதாக அதிகாரிகள் முடிவு செய்தனர். அவனது சட்டைப்பையில் அராஜகத்துண்டுப் பிரசுரங்கள் இருந் தன. அவற்றை அச்சிட்ட அச்சுக் கூடத்தைக் கண்டு பிடிக்கும் பொறுப்பு அரசாங்க ஒற்றன் ரவாரினிக்குக் கொடுக்கப்பட்டது. பல அச்சுக் கூடங்களிலுள்ள எழுத் துக்களைச் சோதித்த பிறகு கடைசியாக 'நாளை' என்ற அராஜகப் பத்திரிகையைப் பிரசுரித்து வந்த அச்சாபீஸில் தான் அப்பிரசுரங்கள் அச்சிடப் பட்டதாக ரவாரினி முடிவு செய்தான். அப்பத்திரிகையை நடத்திவந்த சால் ஸெடோ, எலியா என்ற இரு இத்தாலியர்களும் கைது செய்யப் பட்டார்கள். இருவரும் யாதொரு " வாரண்டு ", மின்றி மூன்று வாரங்களுக்கு " ரிமாண்டில் " வைக்கப் பட்டிருந்தனர். சால்ஸெடோ ரகஸியமாக வான்செட்டி க்கு ஒரு கடிதம் அனுப்பினான். வான்செட்டி அக் கடிதத்தை பாஸ்டனிலிருந்த அராஜகக் கோஷ்டியினரிடம் கொடுத்தான். மற்ற அராஜகர்களையும் வெடி குண்டு வழக்கில் சேர்ப்பதற்காக நடந்து கொண்டிருக்கும் சதி யையும், அதற்காக சால்ஸெடோவும் எலியாவும் சித்திர வதை செய்யப் படுவதையும் ஏற்கனவே அவர்கள் தெரிந் திருந்தார்கள். பாஸ்டன் அராஜகக் கோஷ்டியார் ஒன்று கூடி நியூயார்க்கிலுள்ள தம் சகாக்களுடன் கலந்து பேச வேண்டுமென்று முடிவு செய்தனர். வான்செட்டிக்கு இப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. வான்செட்டியும்

நியூயார்க் சென்று வக்கீல்களைக் கண்டு பேசி அவ்விரு வர்களுக்கும் உதவி செய்ய விரும்பினான். ஆனால் எதுவும் சாத்தியமில்லாது போயிற்று. 'பார்க்ரோ' கட்டிடத் தில் பதினான்காவது மாடியிலிருந்த அவ்விருவர்களும் கொடுமைப் படுத்தப்பட்டார்கள். இரத்தம் தோய்ந்த செருப்புகளினால் அடிபட்டார்கள். எவரால் சகிக்க முடியும்? மே மாதம் 3-ம் தேதி சால்ஸெடோ மாடியிலி ருந்து கீழே விழுந்து இறந்தான். இது தற்கொலையா? அல்லது படுகொலையா?

இரண்டு தினங்கள்தான் கழிந்தன. சாக்கோ வும் வான் செட்டியும் கைது செய்யப்பட்டார்கள். ஏன்? தெற்கு பிரெயின்டிரீ நகரில் 'சிலேட்டா மாரில்' செருப் பாலைக் கம்பெனி உத்தியோகஸ்தரையும் காவலாளியை யும் கொலை செய்துவிட்டுப் பதினாயிரம் டாலர்களை அபக ரித்துக் கொண்டார்கள் என்ற குற்றத்திற்காக, ஏழை களின் பொருட்டு அல்லும் பகலும் உழைத்த இவ்விரு தியாகிகளின் பேரிலா இக் கொடிய குற்றச் சாட்டு!

அத்தியாயம் 5

பிரிட்ஜ்வாட்டர் கொள்ளை.

பல குழப்பங்களின் மத்தியில் தோழன் வான்செட்டி என்ன செய்துகொண்டிருந்தான் என்பதைக் கவனிப் போம். அவன் பார்த்துவந்த வேலை மிகவும் கஷ்டமான தால் தோழர்கள் விருப்பப்படி அதை விட்டு விட்டான்.

இத்தாலிய வியாபாரி ஒருவன் தனது சொந்த தேசத்திற்குப் போக நேர்ந்ததால், அவ்வியாபாரி நடத்திவந்த மீன் வியாபாரத்தை வான்செட்டி செய்துவந்தான். அவன் சேமித்து வைத்திருந்த சிறிய தொகையை அதில் முடக்கினன். மீன் வியாபாரத்தில் வான்செட்டிக்குப் பரம திருப்தி. ஒரு கைவண்டியும் தராசும் தயாரித்துக்கொண்டான். பாஸ்டனிலிருந்து இரண்டு கூடை மீன் வாங்கிக் கொண்டு வந்து தெருத் தெருவாகச் சென்று விலை கூறுவான். ஒரு கையால் வண்டியைத் தள்ளுவான். மற்றொரு கையால் மணியடித்துக்கொண்டு 'மீன்' 'மீன்' எனக் கூவி விற்பான். முன்னொரு முறை மீன் வியாபாரம் செய்ததில் கடன் கொடுத்து நஷ்டமடைந்தான். அதனல், இந்தத் தடவை அவன் அந்த அனுபவத்தை மறக்கவில்லை. மீன் வியாபாரத்தில் அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்குக் காரணம் என்ன? இப்பொழுது அவன் எந்த முதலாளிக்கும் அடங்கியொடுங்கிக் கட்டுப்பட்டு அடிமையாக வாழவேண்டிய அவசியமில்லை. அத்துடன் பிளிமத் நகரிலுள்ள பெண்களிடத்திலும் குழந்தைகளிடத்திலும் நீதியைக் குறித்து அடிக்கடி தர்க்கம் செய்து, அவர்களுக்குத் தன் கருத்துக்களைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆதலால், எல்லோரும் அவனை நன்கு தெரிந்துகொள்ள முடிந்தது. எங்காவது கூட்டம் என்றால் போதும், உடனே நோட்டீஸ்களைப் பட்டுவாடாச் செய்யவும், டிக்கட்டுகளை விற்பனை செய்யவும் கிளம்பிவிடுவான். அவனுக்கு இவைகளே உற்சாகமான பொழுது போக்கு.

வான்செட்டி தனது தோழர்களிடையே ஒருவித 'வெடி குண்டுகளை'ப் பரப்பிவந்தான். மூட நம்பிக்கைகளையும், குருட்டுப் பழக்க வழக்கங்களையும் உடைத்துத் தகர்க்க வல்ல புஸ்தகங்களே அவ் வெடிகுண்டுகள்!

அவைகளைப் பிரசுரம் செய்வதற்கு வான்செட்டி தனது சொந்தப் பணத்திலிருந்தும் செலவு செய்தான். ஆதலால், அப்புஸ்தகங்களைத் தனது தோழர்களிடையே பரப்பு வதில் அவனுக்குப் பெருமை. அராஜகக் கொள்கைக் காக, தியாகப் பெரு நெருப்பில் குதித்த வீரர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களையும் உருவப் படங்களையும் கொண்டவையே அப்புஸ்தகங்கள். ஆளும் வர்க்கத்தினு டைய ஈவிரக்கமற்ற சித்திரவதைக்கும், பயங்கர அடக்கு முறைக்கும் பலியான வீரத் தியாகிகளின் செயல்களை எடுத்துக்காட்டி வீர உணர்ச்சியை எழுப்பும் நூல்களே அவை. அக்கிரமத்தை எதிர்க்க அணிவகுத்துக் கிளம்பிய மக்களின் ஊக்கத்திற்குக் காரணம் இப்புஸ்தகங்களே யாகும்.

மீன் வியாபாரம் முடிந்த பிறகு வான்செட்டி, பனிக் கட்டி உடைப்பது போன்ற வேலையைச் செய்தான். அப்பணத்தையே பிரசாரத்திற்காக ஒதுக்கி வைத்திருந் தான். அவனது உணர்ச்சியை அடக்குமுறையால் அழிக்க முடியவில்லை. அராஜகர்களுக்கென தனிப் பத் திரிகை ஒன்று வேண்டுமென்ற அவசியத்தை அவன் உணர்ந்தான். எழுநூற்றைம்பது டாலர் வசூலித்து, லினோடைப் அச்சு யந்திரம் ஒன்று வாங்கினான். பத்திரி கையும் வெளிவந்துவிட்டது! அதில் அவனது இரு கட்டு ரைகள் காணப்பட்டன. முதலாளித்துவ ஆதிக்கத்தின் கீழ், ஒரு சாதாரணத் தொழிலாளி ஒரு பத்திரிகையை —அதுவும் அராஜகப் பத்திரிகையை நடத்துவதென் பது சாமானியமா? ஒரு மகத்தான காரியம் நடந்துவிட் டது. அது வான்செட்டியின் முயற்சியினால்தான் என் பதை எவரும் மறுக்க முடியாது.

1919-ம் வருஷம் டிசம்பர் மாதம் 24-ந்தேதி காலை 6 மணி. பால்போனி என்னும் ஆலைத் தொழிலாளி இரவு

வேலை முடித்துவிட்டுத் தனது வீட்டுக்குப்போய்க்கொண்டிருந்தான். வான்செட்டியின் வாடிக்கைக்காரன்தான் இந்த பால்போனி. போகும்போதே கிரிஸ்துமஸ் பண்டிகைக்கு மீன் வாங்குவதற்காக வான்செட்டியின் வீட்டிற்குச் சென்றான். அச்சமயம் வான்செட்டி தூங்கிக்கொண்டிருந்தான். வீட்டின் சொந்தக்காரியான மிஸர்ஸ் போர்டினு அவனை எழுப்பினாள். பால்போனி வான்செட்டியிடம் மீன் வாங்கச் சென்றான். பிறகு வான்செட்டி மீன் விற்பனைக்காக வெளியேறினான். பாஸ்டன் நகரில் விற்கும் விலையைவிட இவன் மலிவாக விற்றான். ஆதலால், 40 ஆர்டர்களுக்கு அதிகமாகவே வந்திருந்தன. சௌகரியத்தை முன்னிட்டு எடை போட்டுத் தனித்தனியாகக் கட்டித் தயாராக வைத்திருந்த மீன் பொட்டணங்களை எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்து வெளியேறினான்.

காலை ஏழு மணி. வான்செட்டி குடியிருந்த வீட்டுக்காரனாகிய பிரினியின் மகன் அவசரமாகக் காலைச் சாப்பாட்டை முடித்துவிட்டு ஒரு குதிரை வண்டியை வாடகைக்குப் பேசுவதற்காக ரொட்டிக்காரன் பாஸ்தோனியிடம் போய்க்கொண்டிருந்தான். வீதியில் வான்செட்டியைச் சந்தித்தான். தன்னோடு வருமாறு வான்செட்டியைக் கேட்டான். தரை மிகக் குளிர்ந்திருந்ததால் வான்செட்டி அச்சிறுவனை வீட்டிற்குச் சென்று அவனது ரப்பர் ஜோடுகளைப் போட்டுக்கொண்டு வரும்படியாகக் கூறினான். சிறுவன் வீடு சென்று திரும்பி வருவதற்குப் பதினைந்து அல்லது இருபது நிமிஷம் ஆகிஇருக்கலாம். அச்சமயம் சிறுவனுடைய தந்தை தொழிற்சாலையில் இரவு வேலையை முடித்துவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தான். வான்செட்டி அவனைச் சந்தித்தான். இதற்குள் சிறுவனும் திரும்பி வந்துவிட்டான். இருவரும்

பாஸ்தோனியைச் சந்திக்கச் சென்றார்கள். வான்செட்டியும் சிறுவனும் ரொட்டிக்காரன் வீட்டிற்குள் நுழைந்த பொழுது கயிற்றுக் கம்பெனியின் சங்கு ஒலி கேட்டது. அப்பொழுது காலை 7-45. "இந்தச் சங்கு ஊத்தமே நமக்கு ரொட்டியும் வெண்ணெயும்" என்று அப்பொழுது பாஸ்தோனி கூறியதை வான்செட்டியாவது சிறுவன் பிரினியாவது மறக்கவேயில்லை.

அன்று காலை நடவடிக்கைகளை இவ்வளவு விஸ்தாரமாக ஏன் சொல்லுகிறேன் என்றால், அன்று காலை 7½ மணிக்கும் 7¾ மணிக்குமிடையில்தான் சரித்திரப் பிரசித்தி பெற்ற "பிரிட்ஜ் வாட்டர் கொள்ளை" நடந்தது. பிளிமத் நகரத்திலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள பிரிட்ஜ் வாட்டர் நகரத்தின் 'பிராட் ஸ்ட்ரீட்' வழியாக செருப்புக் கம்பெனி லாரி ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அதில் வாரச் சம்பளப் பட்டுவாடாச் செய்வதற்காகப் பணம் கொண்டு போகப்பட்டது. லாரியில் ஒரு டிரைவரும் காவலாளிகளும் இருந்தனர். 'ஹேல்' தெருவைச் சமீபித்தபோது அங்கு நின்று கொண்டிருந்த மோட்டாரிலிருந்து கொள்ளைக்காரர் இருவர் வெளியில் குதித்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். லாரியின் காவலாளிகளும் துப்பாக்கிகளால் சுட்டார்கள். ஓரிரண்டு நிமிஷங்களில் அந்த ரஸ்தாவில் ஓடிக்கொண்டிருந்த ஒரு மோட்டார், கொள்ளைக்கூட்டத்தாருக்கு நடுவில் வந்து நின்றது. லாரி டிரைவர் கீழே குதித்து, லாரியின் பின் பக்கத்தில்போய் மறைந்துகொண்டான். கொள்ளைக்காரர் தங்கள் மோட்டாரில் தாவினர். மோட்டார் வாயுவேகம் மனோவேகமாகப் பறந்தது. ஒருவரும் காயமடையாததால் 'பிரிட்ஜ் வாட்டர் குற்றம்' கொள்ளையடிக்க யத்தனித்த குற்றச் சாட்டின் கீழ் எடுத்துக்கொள்ளப் பட்டது.

வழக்கை நடத்துவதற்காகச் செருப்பாலைக் கம்பெனி, துப்பறியும் பின்கெர்டன் என்ற கம்பெனியை ஏற்பாடு செய்தது. பின்கெர்டன் உத்தியோகஸ்தர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைவில் சென்றார்கள். ஸ்தலத்தில் நின்றவர்களைக் கண்டு பேசினர்கள். ரிப்போர்ட்டைத் தயாரித்துப் போலீஸாரிடம் கொடுத்தனர். அந்த ரிப்போர்ட் பிராசிகியூஷன் தரப்பிற்குத் தெரியுமே தவிர, ஆறு ஏழு வருஷங்கள் வரை பிரதிவாதிகளுக்குத் தெரியாமலேயே போயிற்று. முக்கிய விஷயங்களில் சாட்சிகளின் வாக்குமூலங்களுக்கும், பின்னல் அவர்கள் கோர்ட்டில் கூறிய வாக்குமூலங்களுக்கும் முரண்பாடுகள் மலிந்திருந்தன. அத்துடன் பிராசிகியூஷனுக்கு முரணான பல சாட்சிகளைக் கோர்ட்டில் விசாரிக்காமலேயே விட்டுவிட்டார்கள். இந்த ரிப்போர்ட்டின் விவரம் மாத்திரம் எதிரிகளுக்குத் தெரிய வந்திருக்குமானல், சாக்கோ, வான்செட்டி நிரபராதிகளென்ன நிரூபித்திருக்கலாம். இந்த ரிப்போர்ட்டைப்பற்றி பின்னல் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

பிரிட்ஜ் வாட்டர் சம்பவத்தைப்பற்றிப் பல வதந்திகள் கிளம்பின. போலீசார் தங்களுக்குக் கிடைத்த வதந்திகளை ஆதாரமாகக் கொண்டு "அது அப்படி இருக்கலாமா? அல்லது இப்படி இருக்கலாமா?" என்றெல்லாம் ஊகித்தார்கள். "மாடு பறி கொடுத்தவனுக்குச் செடியெல்லாம் கண்" என்ற பழமொழிப்படி கிடைத்த வதந்திகளிளெல்லாம் உண்மை இருக்கலாமென, போலீஸார் துருவித் துருவி ஆராய்ந்தனர். இதன் மத்தியில் ஏ. ஸி. பார் என்பவர் பிரிட்ஜ் வாட்டர் சம்பவத்தைப்பற்றி, துப்புச் சொல்ல முடியும் என்ற தகவல் பின்கெர்டன் ஏஜென்ஸிக்கு எட்டியது. அவர் ஒரு இத்தாலியர். அவர் துப்பறியும் யந்திரம் ஒன்று கண்டுபிடித்திருந்தார். அந்த

யந்திரத்திலுள்ள மாயாஜாலக் கண்ணுடியில் பார்த்தால் குற்றம் நடைபெற்ற விவரம் தெரியும். நம் நாட்டில் மைப்போட்டுப் பார்க்கிருர்களல்லவா? அதே போன்றது தான் அந்த மாயாஜாலக் கண்ணுடி! அந்தக் கண்ணுடியை உபயோகித்துவந்த, கிழக்குப் பாஸ்டனிலுள்ள ஒரு பெண், அந்த மாயக்கண்ணுடியில் பார்த்துப் பின் வருமாறு சொன்னுள்:

"நகரத்திற்கு வெளிப்புறத்தில் ஒரு சிறிய வீட்டில் குடியிருக்கும், கருநிறமுள்ள நாலேந்து இத்தாலியர்கள் தான் இக்குற்றத்தைச் செய்தவர்கள். அவர்கள் வீட்டின் பின்பக்கத்திலுள்ள ஒரு குடிசையில் ஒரு மோட்டார் நிற்கிறது." பிரிட்ஜ் வாட்டர் நகரில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பிலிருந்த போலீஸ் தலைவன் மைக்ஸ்டுவர்ட் துப்பறியும் யந்திரத்தின் அடையாளத்தைக் கொண்டு குற்றம் செய்தவர்களேக் கண்டு பிடிக்க ஆரம்பித்தான். சந்தேகப் பட்ட பல இடங்கள் சோதனே போடப்பட்டன. ஆனல், யாதொன்றும் துலங்கவில்லே. ஆகவே மஸாசுசெட்ஸ் போலீஸ் ரிக்கார்டில் துப்புத் துலங்காத குற்றங்களுடன் பிரிட்ஜ் வாட்டர் குற்றமும் சேர்க்கப் பட்டது.

பிரிட்ஜ்வாட்டர் சம்பவத்திற்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு ஏப்ரல் மீ 15-ம், தேதி தெற்கு பிரெயின்டிரி கொலே நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியும் ஒரு சரித்திர உண்மை. செருப்பாலேக் கம்பெனியின் சம்பளப் பட்டுவாடா உத்தியோகஸ்தர் (ஷராப்) 16,000 டாலர்களே இரண்டு பெட்டிகளில் எடுத்துக்கொண்டு ஆபீஸிலிருந்து தொழிற்சாலேக்குப் போய்க்கொண்டிருந்தார். பெட்டிகளேத் தூக்கிக்கொண்டு சென்றவர்களின் உதவிக்காக ஒரு காவலாளியும் பின்னுல் சென்ருன். அப்பொழுது

பிற்பகல் மூன்று மணி. அவர்கள் ரைஸ்—அண்டு—ஹட்சின்ஸ் ஆலைக்குப் பக்கமாகப் போகும்பொழுது, இரண்டுபேர் வேலி ஓரமாகப் பதுங்கி இருந்து துப்பாக்கியால் சுட்டார்கள். ஒருவன் உடனே செத்துவிழுந்தான். மற்றொருவன் மறுநாள் உயிர் துறந்தான். அதுசமயம் ரஸ்தாவில் வெகு வேகமாக ஓடிவந்த மோட்டார், கொள்ளைச் சம்பவம் நடந்த இடத்தில் வந்துநின்றது. உடனே இரு கொள்ளைக்காரர்களும் பணப்பெட்டிகளுடன் மோட்டாரில் குதித்தார்கள். மோட்டார் காற்றாய்ப் பறந்து மறைந்தது. தோற்றத்தில் அவர்கள் அன்னிய நாட்டினர் போன்று காணப்பட்டார்கள்.

பாஸ்டன் நகரத்திற்குத் தெற்கேயுள்ள நகரங்களில் பிரெயின்டிரீ சம்பவம் மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணியது. கடந்த வருஷத்தில் பல கொள்ளைகள் நடந்தபடியால் ஒவ்வொரு நகரமும் பீதியுற்றிருந்தது. குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பவர்களுக்குச் சன்மானம் கொடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. ‘பின்கெர்டன்’ துப்பறியும் ஏஜென்ஸி மீண்டும் தலை தூக்கியது. புலன் விசாரிக்கப்பட்டு ரிப்போர்ட்டும் தயாராகிவிட்டது. பிரிட்ஜ்வாட்டர் குற்றத்தில் முக்கியமான விஷயங்களில் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்ததுபோலவே, இந்தக் குற்றத்திலும் சாட்சிகள் மாறுபட்ட வாக்குமூலங்கள் கொடுத்தனர். மோட்டாரின் விவரம் சொல்லமுடியவில்லை. ஒருவன் ‘ஹட்சன்’ என்றான். மற்றவர்கள் ‘பியூக்’ என்று சொன்னார்கள். ‘பச்சை நிறம்’ என்றான் ஒருவன். மற்றொருவன் “ஊதா” என்றான். “கருப்பு நிறம்” என்றான் மூன்றாவது நபர். ஒருவன் பளபளப்பானது என்றான். மற்றவர்கள் “தூசி படிந்தது” என்றனர். இவ்வாறு, சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று முரணாயிருந்தன. எனவே

துலக்க முடியாத மற்ருெரு குற்றமும் போலீஸ் ரிக்கார்டில் சேர்க்கப்படவேண்டிய நிலையில் இருந்தது.

இம்மாதிரி ஒன்றன்பின் ஒன்ருகப் பல கொடிய சம்பவங்கள் நடந்துகொண்டுபோகவே, பொது ஜனங்களிடையே, கூக்குரல் கிளம்பியது. போலீஸ் நிர்வாகம் எதற்காக இருக்கிறது? என ஜனங்கள் கேட்க ஆரம்பித்தார்கள். ஏதாவது செய்தாகவேண்டுமே! என்ன செய்வது, என்று போலீஸ் அதிகாரிகள் யோசித்துக் கொண்டிருந்தார்கள். இதன் மத்தியில் சம்பவம் நடைபெற்ற மறுதினம், நாடுகடத்தும் உத்தியோகஸ்தர் ஒருவர், மைக்ஸ்டூவர்ட் என்ற போலீஸ் உத்தியோகஸ்தரைப் பார்க்க வந்தார். செருப்பாலையில் வேலைபார்த்த இத்தாலிய அராஜகன் கோயாக்ஸி நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று தண்டிக்கப்பட்டு, பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டான். ஜாமீன் காலம் முடிவடைந்ததும், அவன் ஆஜராகாததால் அதிகாரி அவனைக் கைது செய்வதற்காக வந்திருந்தார். சம்பிரதாயப்படி போலீஸ் அதிகாரி, மைக்கின் உதவியைக் கோரினுர். ஆதலால், மைக் தன்னுடைய மனிதனொருவனை, அந்த உத்தியோகஸ்தருடன் அனுப்பினுன். சமீபத்திலுள்ள கிராமத்தின் வெளிப்புறத்தில் கோயாக்ஸியின் சிறிய குடிசையிருந்தது. உத்தியோகஸ்தர் போனசமயம் கோயாக்ஸி பிரயாணத்திற்குத் தயாராக இருந்தான். போடா என்ற மற்ருெருவனும் கோயாக்ஸி வீட்டிலிருந்தான். ஜாமீன் ஷரத்துப்படி ஆஜராகாததற்குக் காரணம், தனது மனைவி நோய்வாய்ப்பட்டிருந்ததுதான் என்று, கோயாக்ஸி சொன்னுன். ஆனுல், அவளைப் பார்த்தாலோ நோயாளியாகத் தோன்றவில்லை. பின் தன்னுடைய சொந்தக் காரியாதிகளை ஒழுங்குபடுத்துவதற்கு அதிக நாட்கள் வேண்டியிருந்ததென்ற உண்மையை ஒப்புக்கொண்டான். இப்பொழுது

புறப்படத் தயாராக இருப்பதாகவும் கூறினான். இரவு வெகுநேரமாகிவிட்டதால் மறுநாள் புறப்பட்டுப் போகலாமென்று உத்தியோகஸ்தர் சொன்னதற்குக்கூட "இல்லை இப்பொழுதே போய்விடலாம்," என்று வற்புறுத்தினான். கோயாக்ஸியின் மனைவி அவளுடைய பந்துக்களிடம் செல்வதற்கு ஏற்பாடாயிற்று. கோயாக்ஸி மூட்டை முடிச்சுகளுடன் மறு நாள் கப்பலுக்கு நியூயார்க்கிலிருந்து புறப்பட்டுச் செல்ல விரும்பினான்.

ஆகவே, கோயாக்ஸியும் உத்தியோகஸ்தனும் புறப்பட்டுப் போய்விட்டார்கள். அப்பொழுது நடு நிசி. மைக் தன்னுடைய ஆபீஸிலிருந்து சிந்தனை செய்தான். "என்ன ஆச்சரியம்? இவ்வளவு செல்வம் பொருந்திய அமெரிக்கா தேசத்திலிருந்து உடனே புறப்பட வேண்டுமென்று எதற்காக ஒருவன் ஆத்திரப்படவேண்டும்?" கோயாக்ஸி ஒரு புரட்சிக்காரன். பிரிட்ஜ்வாட்டர் நகரத்தில் வெளியாகும் வாரப் பத்திரிகைகள், புரட்சிக்காரர் உலகம் பூராவிலும் செய்துவரும் குற்றங்களைப்பற்றி அடிக்கடி பிரசுரித்து வருவதையும் நினைத்துப்பார்த்தான். இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது, திடீரென கிழக்குப் பாஸ்டனிலுள்ள பெண் மாயா ஜாலக் கண்ணாடியில் பார்த்துச் சொல்லிய விஷயம், அவனது ஞாபகத்திற்கு வந்தது. நகரத்தின் வெளிப் பக்கத்திலுள்ள இத்தாலியர் குடியிருக்கும் சிறிய வீடு, கோயாக்ஸியின் வீடுதான் என்று அவனுக்கு உதயமாயிற்று. தெற்கு பிரெயின்டிரி குற்றத்தில் கோயாக்ஸியும் சம்பந்தப்பட்டவன்தான். அவன் உடனே போகவேண்டுமென்று குதித்துக் கொண்டிருந்த காரணம், 16,000 டாலர்கள் அவனிடம் சிக்கியிருந்ததுதான் என்று, முடிவு கட்டினான். ஆனால், நடவடிக்கை எடுப்பதற்குள் கோயாக்ஸி அமெரிக்காவை விட்டுப் போய்விட்டான்.

3304

இருந்தாலும் மைக் மற்ருெரு உத்தியோகஸ்தருடன் கோயாக்ஸி வீட்டிற்குத் திரும்பவும் போனுன். அங்கு போடா மாத்திரம் இருந்தான். 5-அடி 2-அங்குல உயரம், சற்றுக் கருப்பு நிறம், கருத்த நறுக்கு மீசை, மெல்லிய குரல், கண்ணியமான தோற்றம் உள்ளவன். அவனை விசாரித்தபோது, அவனுடைய ஓவர்லாண்ட் காரைப் பழுது பார்க்க ஒர்க் ஷாப்பிற்கு அனுப்பி யிருப்பதாக அவன் மைக்கினிடம் சொன்னுன். அவனிடம் ஒரு துப் பாக்கியும்இருந்தது. மைக் அதைப் பரிசோதித்தான். துப் பாக்கியின் அளவையும் சோதித்துப் பார்த்தான். அதில் குற்ற அடையாளங்கள் ஒன்றும் காணப்படாததால் மைக் திரும்பிப்போய்விட்டான். சிறிது நேரம் சிந்தித்த பிறகு மைக் நியூயார்க்குக்கு டெலிபோனில் பேசினுன். கோயாக்ஸி இத்தாலிக்குப் பிரயாணமான செய்தியை அறிந்தான். கோயாக்ஸி வீட்டிலிருந்து எடுத்துவந்த பெட்டியை உடைத்துப் பார்த்ததில் அதில் செருப்புத் தோல் துண்டுகளைத் தவிர வேறெதுவுமில்லை.

இருந்தாலும் போடாவைக் கைதுசெய்யவேண்டிய தென மைக் தீர்மானித்தான். அவன் வீட்டிற்குச் சென்ருன். ஆனுல், வீடு காலியாக இருந்தது. போடா மறைந்துகொண்டதால் சந்தேகம் அதிகரித்தது. போடா வின் ஓவர்லாண்ட் கார் மேற்குப் பிரிட்ஜ் வாட்டரில் ஜான்ஸன் ஒர்க்ஷாப்பில் விடப்பட்டிருந்த விவரம் அவ னுடைய ஞாபகத்திற்கு வந்தது. ஆகையால், யார் வந்து காரைக் கேட்டாலும் உடனே போலீஸுக்குத் தகவல் கொடுக்கவேண்டுமென்று ஜான்ஸனுக்கு அறிவிக்கப் பட்டது. அத்துடன், குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் கிடைக்கும் சன்மானத்தைக் குறித்தும் அவனுக்குச் சொல்லப்பட்டது. இரண்டு வாரங்கள்

கழிந்தன. ஓர்சியானி என்ற இத்தாலியன் ஒரு மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தான். பக்கத்தில் போடா உட்கார்ந் திருந்தான். அதே சமயத்தில் சாக்கோ- வான்செட்டி ஆகிய இருவரும் ஒரு மோட்டாரில் வந்தார்கள். நால் வரும் அராஜகர்கள். காலினி கோஷ்டியைச் சேர்ந்த வர்கள். ஜான்ஸன் வீட்டில் நால்வரும் சந்தித்தார்கள். சந்தித்த விஷயம் என்னவென்று ஒருவருக்கும் தெரி யாது.

நால்வரும் ஜான்ஸன் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கே மோட்டார் பழுதுபார்க்கப்பட்டு நல்ல நிலைமையி லிருந்தது. ஆனால், நடப்பு வருஷத்தின் லைசென்ஸ் தகடுகள் இல்லை. ஆதலால், மோட்டாரை ஓட்டிக் கொண்டு போகவேண்டாமென்று ஜான்ஸன் கூறினான். காலதாமதம் செய்யும் உத்தேசத்தோடு அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். ஜான்ஸன் மனைவி பக்கத்து வீட்டிற்குப்போய் டெலிபோன் மூலம் போலீஸுக்குத் தகவல் கொடுத்தாள். எப்படியோ நால்வருக்கும் சந்தேக முண்டாகி வெளியே போய்விட்டார்கள். வான் செட்டியும் சாக்கோவும் பிராக்டோ நகரத்துக்குப் போகும் டிராலியில் ஏறிச் சென்றார்கள். அவர்கள் நகரத்தின் வெளிப்புறத்தில் போய்க்கொண்டிருக்கும் போது ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் டிராலிக்குள் சென்று துப்பாக்கியை அவர்களுக்கு நேராகக்காட்டி, கைகளை உயர்த்தும்படிக்கு உத்தரவிட்டான். இருவர் களும் தங்கள் துப்பாக்கிகளை உபயோகிக்க எண்ணினார்கள். யாது பயன்? வான்செட்டி ஒருபோதும் துப்பாக் கியால் சுட்டு அறியாதவன். மற்றொரு போலீஸ் உத்தி யோகஸ்தரும் அங்குவந்து இருவரையும் போலீஸ் ஸ்டே ஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். இருவர்களும் அங்கே ஒரு சிறிய கொட்டடியில் பூட்டப்பட்டனர்.

அத்தியாயம் 6

புலன் விசாரணை

வான்செட்டி பல வருஷங்களாகவே ஏசுநாதரின் அன்பு நிறைந்த வாழ்க்கையைப் பற்றிப் படித்துவந்தான். அவரை நினைக்கும் போதெல்லாம் கண்ணீர் சிந்துவான். அவன் சிறை சென்றதும் ஒரு சம்பவம் நடந்தது. சிறையிலே அவனைப் பூட்டிய பிறகு ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் வான்செட்டியின் முகத்தில் துப்பினான். வான்செட்டியிடமிருந்த ரிக்கார்டுகளில் ஒன்று அராஜக நண்பன் எழுதியது. கிறிஸ்துமத நிந்தனை அதில் காணப்பட்டது. அந்த நிந்தனைக்குப் பரிகாரமாக அவன் முகத்தில் துப்பியதால், உண்மையான கத்தோலிக்கக் கிறிஸ்தவனாகி விட்டோமெனத் திருப்தியுடன் கான்ஸ்டபிள் திரும்பிச் சென்றான். ஏசுநாதர், தொழிலாளி வர்க்கப் புரட்சிக்காரர் என்ற உண்மையைப் போதிக்காமல், அவர் "கடவுள்" என்று மதக் குருக்கள் போதித்ததால் தான், கான்ஸ்டபிள் அவ்விதம் நடந்துகொள்ள நேரிட்டது என்று தனக்குள்ளே எண்ணி, முகத்தைத் துடைத்து விட்டுக் கட்டிலில் உட்கார்ந்தான். கான்ஸ்டபிளின் அறியாமையை நினைத்து வருந்தினான். அவன் கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் உருண்டோடின.

சிறை வாழ்க்கையின் பயங்கரமான முதலிரவு தனித் தனி அறையிலே அடைபட்டுக் கிடந்த சாக்கோவுக்கும் வான்செட்டிக்கும் ஒரேவித எண்ணங்களே தோன்றின. தோழன் சால்செடோ தற்கொலையாலோ அல்லது படு கொலையாலோ இறந்து மூன்று தினங்கள்கூட ஆகவில்லை. "தங்களுக்கும் அதே கதிதானே?'' என்ற நினைவே இருவர் உள்ளத்திலும் வேரூன்றியது. ஏனைய தோழர் களைக் காட்டிக் கொடுக்காமலிருப்பதுதான் முக்கிய கடமை என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தார்கள். ஆகவே, குறுக்கு விசாரணையின் போது போடாவோ அல்லது ஓர்சியானியோ தங்களுக்குத் தெரியாதென்றும், அவர்கள் போன இடமும் தங்களுக்குத் தெரியாதென் றும் மனச் சாட்சிக்கு விரோதமாகப் பொய் கூறி னார்கள். அதனால், தங்கள் உயிருக்கு ஆபத்து வருமென் பதை அறிந்தும் தோழர்களைக் காட்டிக் கொடுக்க அவர்கள் விரும்பவில்லை.

பல பயங்கர நிகழ்ச்சிகளின் மத்தியிலும் தொழி லாளர்களுக்காகப் பாடுபடுவதை வான்செட்டி ஒரு போதும் கைவிடவில்லை. அராஜகப் பிரசாரம் செய்து கொண்டே யிருக்கவேண்டு மென்பது, அவனது சுலோகம். மே மாதம் 9-ம் தேதி விராட்டன் நகரில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதற்காக ஒரு நோட்டீஸ் எழுதி அதைத் தனது சட்டைப் பையில் வைத்திருந்தான். நிர்மூடனைக் கூடத் தட்டி எழுப்பக் கூடிய அந்த ரிக்கார்டும் போலீஸுக்குக் கிடைத்தது. "நீங்கள் எல்லா யுத்தங்களிலும் கலந்து கொண்டீர்கள். முதலாளிகளுக் காக உழைத்தீர்கள். உங்கள் உழைப்பின் பலனைப் பெற் றீர்களா? வெற்றியின் வெகுமதி உங்களுக்குக் கிட்டி யதா? சென்ற காலத்தில் உங்களுக்குச் சௌகரியம் ஏற்பட்டதா? இல்லை. நிகழ் காலத்திலாவது நீங்கள்

அநுகூலம் பெற்றிருக்கிறீர்களா? அல்லது வருங்காலத்திலாவது தக்க பலனைப் பெறலாம் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா? மனிதனைப் போல் வாழ்ந்து, மனிதனைப்போல் மடிவதற்கு உங்களுக்குக் காணி நிலமாவது இருக்கிறதா? இக் கேள்விகளை ஆதாரமாகக் கொண்டு மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தைக் குறித்து வான் செட்டி பேசுவான்" என்பதுதான் அந்த நோட்டீஸ்.

சாக்கோ, வான்செட்டி ஆகிய இருவரும் பிரெயின்டிரி குற்றவாளிகள் என்பதை அவர்களுடைய நண்பர்களால் நம்ப முடியவில்லை. நாடு கடத்துவதற்காகவே தன் மீது குற்றம் சாட்டப்பட்டிருப்பதாக வான்செட்டி கருதினான். அதையே தன் நண்பர்களிடமும் கூறினான். ஐயோ பாவம்! அது தனது உயிருக்கே ஆபத்து என்பதை அவன் அப்போது தெரிந்து கொண்டானில்லை!

சாக்கோவும் வான்செட்டியும் கைது செய்யப்பட்ட மறுதினம், மைக் தயாரித்த பிராதை ஜில்லா அட்டார்னியிடம் தாக்கல் செய்தான். ஏப்ரல் மாதத்தில் தெற்கு பிரெயின்டிரீ குற்றத்தைச் செய்த அதே கொள்ளைக்காரர்தான் டிசம்பர் மாதத்திலும் பிரிட்ஜ்வாட்டர் குற்றத்தைச் செய்தார்கள் என்பது, பிராதின் ஒரு பகுதி. ஓர்சியானுவும் அவனது தொழிற்சாலையில் கைது செய்யப்பட்டான். எனவே, மூன்று கொள்ளைக்காரர்கள் விஷயமாகப் புலன் விசாரணை ஆரம்பமாயிற்று. புலன் விசாரணையில் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் தானா அந்தச் சம்பவத்தில் கலந்து கொண்டார்களென்பது முதலாவது தெளிவாக வேண்டும். நியாயமான முறையில் நடத்த வேண்டுமானால் சந்தேகப்பட்ட மனிதர்களைப் பல நபர்களின் மத்தியில் நிறுத்தி, சாட்சிகளைக் கூப்பிட்டுக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கச் செய்ய வேண்டும். அதுதான்

வழக்கமாக நடைபெறுவது. ஆனால் பிராக்டன் போலீஸ் ஸ்டேஷன் கையாண்ட முறை சட்டத்திற்கும் நியாயத் திற்கும் நேர்மாருனது. சந்தேகமுள்ள மூன்று நபர்களை மட்டும் ஒரு அறையில் நிறுத்தி "கொள்ளைக்காரர்கள் அவர்கள்தான் உங்களால் அவர்களைத் தெரிந்துகொள்ள முடிகிறதா?" என்று போலீஸார் சாட்சிகளிடம் கேட் டார்கள். இந்த உபாயம் எதிரிகள்தான் குற்றவாளிகள் எனக் கூறும்படி தூண்டுவது போலாகிறது. இத்தகைய நிலையில்கூட சாட்சிகளால் அவர்கள் தான் குற்றவாளிகள் என்றுதிட்டமாகக் கூற முடியவில்லை. சிலர் அவர்கள் தான் குற்றவாளிகள் என்றூர்கள். மற்றவர்கள் நிச்சய மாக அவர்கள் அல்லவென்றும் சொன்னூர்கள்.

மேலும் சாட்சிகளை ஏமாற்றி, எதிரிகள்தான் குற்ற வாளிகள் என்று சொல்லும்படியாக என்னென்ன தந்திரங்களுண்டோ அத்தனையும் கையாளப்பட்டன. உதாரணமாக, ஒரு சாட்சி, குற்றவாளியைத் தலையில் குல்லாயுடன் பார்த்ததாகக் கூறியதால், சாக்கோவுக்கு ஒரு குல்லாயைக் கொடுத்து அதைத் தரித்துக் கொள்ளும் படி உத்தரவு செய்தார்கள். குல்லா யணிந்த நபர்தானே குற்றவாளி என்று சாட்சியின் கண்ணுக்குத் தோன்றும். மற்ருெரு சாட்சி, குற்றவாளி கீழே பதுங்கி யிருந்த நிலையில் பார்த்ததாகச் சொன்னபடியால், சாக்கோவைக் கீழே பதுங்கி யிருக்கும்படிக் கட்டளை யிட்டார்கள். அந்தத் தோற்றத்தைப் பார்த்த சாட்சி சாக்கோ கொள் ளைக்காரன்தான் என்று கூறினுன். மற்ருெரு சாட்சி கொள்ளைக்காரன் துப்பாக்கி வைத்திருக்கும் நிலையில் பார்த்ததால், சாக்கோ ஒரு துப்பாக்கி தாங்கி நின்ருன். புலன் விசாரணையிலே இவ்வாறு வேளைக்கொரு வேஷம் போட்டுவித்த போலீஸார் செய்கை விபரீதமே. குற்ற வாளிகளை இனம் கண்டுபிடிக்கும் இந்த முறைகள் சட்ட

விரோதமானவை, அநீதி, அநியாயம். குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படும் வரை எதிரிகள் நிரபராதிகள். எனவே, நியாயமான முறையில் விசாரணை நடத்த வேண்டும். புலன் விசாரணையிலேயே அநீதியும் அக்கிரமமும் விதைக்கப்பட்டு விட்டன. முதற்கோணல் முற்றிலும் கோணல்; புலன் விசாரணை முதல், அப்பீல் வரை சாக்கோவான்செட்டிக்கு "அக்கிரம நியாயம்'' தான் வழங்கப் பட்டது. உண்மையைக் கண்டுபிடிக்க ஒருவரும் விரும்பவில்லை. இருவரும் குற்றவாளிகளே என்று முதலிலேயே உறுதி பண்ணிக்கொண்டு, அவர்களுக்கு விரோதமாக எப்படி சாட்சியம் தயாரிப்பது? எப்படித் தூக்கிலிடுவது என்ற விசாரம்தான் போலீஸாருக்கும் நீதிபதிக்கும்.

ஆகவே, எதிரிகளுக்கு அனுகூலமானவர்கள் சாட்சிகளின் ஜாப்தாவிலிருந்து நீக்கப்பட்டார்கள். அப்பொழுதே அத்தகையோரைக் குற்றவாளிகள் பக்கம் சாட்சி சொல்லும்படி செய்த முயற்சி முடியாது போயிற்று. பல உண்மைகள் காலந் தவறி வெளியாயிற்று. ஆனல், அவற்றை செவிகொடுத்துக் கேட்க நியாயாதிபதிகள் மறுத்துவிட்டார்கள். புலன் விசாரணையில் மேலும் வேடிக்கை! கோயாக்ஸி வீட்டிற்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள காட்டில், பழுதுபட்ட ஒரு 'பியூக்' கார் நின்றது. அது போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வரப்பட்டது. அந்தக் கார் இரண்டு குற்றங்களிலும் சம்பந்தப்பட்டதாகப் பிராதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

ஆயுதபாணிகளான போலீஸாரையும் சாக்கோவையும், ஓர்சியானுவையும் அதில் ஏற்றிக்கொண்டு செருப்பாலையைச் சுற்றி அந்த மோட்டார் ஊர்வலமாக வந்தது. "கொள்ளைக்காரர்கள் வருகிறுர்கள்'' என்பதே முன்னறிவிப்பானதால் ஜனங்கள் திரள் திரளாகக் கூடியிருந்

தார்கள். பிரெயின்டிரீ சம்பவத்தில், கொள்ளைக்காரர்களின் கார் அந்த மார்க்கமாகத்தான் பறந்து சென்றது. செருப்பாலைத் தொழிலாளிகளில் பலர் ஜன்னல் வழியாக அந்த மோட்டாரைப் பார்த்திருந்ததால், சாக்கோவும், ஓர்சியானாவும், அவர்கள் பார்த்த கொள்ளைக்காரர்கள் மாதிரி காணப்படுகிறார்களா என்பதை அறிவதற்காகத் தான் கார், ஆலைக்குச் சமீபமாக இப்போது ஓட்டிச் செல்லப்பட்டது. அங்கே கூடியிருந்தவர்கள் அவர்கள் தான் உண்மையான குற்றவாளிகளா என்பதை ஏன் விசாரிக்கப் போகிறார்கள்? தீர ஆலோசித்து முடிவுசெய்வதற்கு அவர்களுக்கு அவகாசமேது? "குற்றவாளிகள்" பிடிபட்டார்கள்; அதுவே போதாதா? உடனே அவர்கள் தான் கொள்ளைக்காரர்களெனக் கூச்சலிட்டு அவர்கள் முகங்களில் துப்பினார்கள். எதிரிகள் மீது விரோத மனப்பான்மை வளர்ந்தால் எளிதில் சாட்சிகள் கிடைக்கும் என்ற நோக்குடன் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எதிர்பார்த்தபடி அக்கூட்டத்திலே மூன்று நபர்கள் சாட்சி சொல்ல முன் வந்தார்கள். ஆனால், இரண்டு வாரங்களுக்குப் பிறகு விசாரணை நடக்கும் பொழுது அவர்களை, தாங்கள் பார்த்த கொள்ளைக்காரர்கள்தான் என்று திட்டமாய்ச் சொல்ல முடியவில்லையென்று மாறிவிட்டார்கள். ஒரு வருஷத்திற்குப் பிறகு வழக்கு மறு விசாரணைக்கு வந்த சமயத்திலே அவர்கள், மறுபடியும் தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு, சாக்கோவும் வான்செட்டியும் அந்தக் கொள்ளைக்காரர்கள்தான் என்று கூறினார்கள்.

சாக்கோவும் வான்செட்டியும் கைது செய்யப்பட்ட மறுதினம் மாஜிஸ்டிரேட்டிடம் ஆஜர் செய்யப்பட்டார்கள். ஓர்சியானோவின் மோட்டார்சைக்கிளின் பின் பக்கம் அபாய அறிவிப்பு லைட் இல்லை. சாக்கோவும்

வான்செட்டியும் லைசென்ஸ் இல்லாமல் ரிவால்வர் வைத்திருந்தார்கள் என்ற குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. யுத்தகாலச் சட்டத்தின் பெயரால் ஜாமீன் மறுக்கப்பட்டது. மூவரும் மீண்டும் ஜெயிலுக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். பிராதுக்குப்பொருத்தமாகச் சாட்சியங்களைக் கோவை செய்யும் வேலை நடந்தது.

ஒரு வாரம் கழிந்தது. ஆரம்ப விசாரணைக்கு முன்பே குற்றவாளிகளின் எண்ணிக்கை மூன்றிலிருந்து இரண்டாயிற்று. ஓர்சியானோவுக்கு விரோதமாகப் போதிய சாட்சியம் இல்லையென்பது ஜில்லா அட்டார்னியின் கருத்து. இது மிகவும் ஆச்சரியமானது. சாக்கோ, வான்செட்டி ஆகிய இருவர்களைப் பார்க்கிலும் ஓர்சியானு ஒரு கொள்ளைக்காரன் என்று எவரும் சுலபமாகச் சொல்லிவிடலாம். ஆனால் ஓர்சியானுவைக் கழிப்பதற்குப் போதுமான காரணமிருந்தது. குற்றம் நடந்த தினத்தன்று காலை முதல் மாலை வரை, அவன் தொழிற்சாலையிலிருந்தான் என்பதை, அமெரிக்க வெள்ளை முதலாளியின் சாட்சியத்தினால் நிரூபிக்க முடியும். ஆகையால் அவனை விட்டுவிட்டார்கள்.

நாட்கள் சில செல்லவே பிரிட்ஜ்வாட்டர் குற்றத்திலிருந்து சாக்கோவும் நீக்கப்பட்டான். ஏனெனில் குற்றம் நடந்த சமயம் அவன் மற்றொரு இடத்திலிருந்ததாக ஒரு அமெரிக்கரின் சாட்சியமிருந்தது. தெற்கு பிரெயின்டிரீ குற்றம் நடந்த தினத்தன்று சாக்கோ பாஸ்போர்ட்டு வாங்கும் பொருட்டு பாஸ்டனுக்குப் போயிருந்தான். அங்கு அவனுடைய நண்பரின் ஹோட்டலில் சிற்றுண்டி அருந்திவிட்டு பாஸ்போர்ட்டிற்காக ஒரு புகைப்படம் பிடிக்கச் சென்றான். அந்த ஸ்டுடியோவிலுள்ள குமாஸ்தா அவனுக்குச் சாட்சி சொல்லத் தயாராயிருந்தான்.

ஆனல் அவன் ஒரு இத்தாலியன். பூர்ஷ்வா கோர்ட்டு களில் இத்தாலிய சாட்சியங்களுக்கு மதிப்புக் கிடையாது. ஆகையால் சாக்கோ தெற்குப் பிரெயிண்டிரீ குற்றத்தில் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

பாவம்! ஏழை வான்செட்டிக்கோ இந்த இரு சம்பவங்களிலும் சம்பந்தப்படவில்லை என்பதை நிரூபிக்க இத்தாலிய சாட்சியங்கள் தானிருந்தன. கிறிஸ்துமஸ் தினத்திற்கு முந்தின நாள் அவன் ஐம்பது வீடுகளுக்கு நேரிலே சென்று மீன் விற்பனை செய்திருந்தான். தெற்கு பிரெயின்டிரீ சம்பவம் நடந்த பொழுதும் அவன் மீன் விற்பனைக்குச் சென்றிருந்ததாக நிரூபிக்க முடியும். ஆனல், போலீஸ் பிராதின் முன்னல் அவைகள் நிற்க முடியுமா? ஆதலால், வான்செட்டியை இரண்டு குற்றங் களிலும் குற்றவாளியாகச் சேர்த்துவிட்டார்கள். பிரிட்ஜ் வாட்டர் வழக்கில் அவன் பிராட்வ் பிரிட்டில் நின்று கொண்டு சம்பளப் பணம் கொண்டுபோன லாரியின்மீது சுட்டான் என்றும், தெற்குப் பிரெயின்டிரீ வழக்கில் அவன் மோட்டாரை ஓட்டிக்கொண்டு போனன் என்றும், அவன்மீது குற்றம் சாட்டப்பட்டது. வான்செட்டி தனது எளிய வாழ்க்கையில் ஒருபோதும் மோட்டார் ஓட்டியவனே யல்ல. அவனுக்கு ஓட்டவும் தெரியாது. (பூர்வாங்க) விசாரணையில் சாக்கோ, வான்செட்டி ஆகிய இருவர் பக்கமும் வாதாடுவதற்காக ஜான்வாஹீ என்ற ஐரிஷ்வக்கீலை அவர்களுடைய நண்பர்கள் ஏற்பாடு செய்தார்கள். வேறு இரண்டு வக்கீல்களும் உதவிக்கு அமர்த்தப்பட்டார்கள். பிரிட்ஜ் வாட்டர் வழக்கில் வான் செட்டி மீது குற்றம் சுமத்தி யிருப்பது பைத்தியக்காரத் தனமென்பது நண்பர்களின் கருத்து. ஏனென்றல் அவன் எட்டு வருஷங்களாக அந்த நகரத்தில் வாழ்ந்து வந்திருக் கிறன். அவனுடைய தன்மை அவர்களுக்கு நன்ருகத்

தெரியும். வடக்கு பிளிமத்தில் பலருக்கு அன்றைய தினம் முழுவதும் அவன் மீன் கொடுத்திருந்தான். கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்தினமாகையால் தேதியைக் குறித்துச் சந்தேகமோ குழப்பமோ கிடையாது. ஆகவே பிரிட்ஜ் வாட்டர் குற்றத்தை வான்செட்டி மீது சுமத்திவிட முடியாதென்பது நண்பர்கள் நினைப்பு. பிரிட்ஜ் வாட்டர் வழக்கில் போலீஸார் சாட்சிகள் தயாரித்ததில் ரஸ்தாவில் நின்று துப்பாக்கியால் சுட்டவன் ஒரு குள்ளமான மனிதன் எனவும், ஒட்ட வெட்டிய மீசை யுள்ளவனென்றும், இரு இத்தாலியர்கள் சொன்னார்கள். இவர்கள் வாக்கு மூலம் பிராதுக்குப் பொருத்தமாக இல்லாததால் போலீஸார் அவர்களை நீக்கிவிடவே, அவர்களிருவரும் பிரதிவாதிகள் பக்கம் சாட்சி சொல்லத் தயாராக இருந்தார்கள். சாக்கோ, வான்செட்டியின் நண்பர்கள் சென்று அந்த இரண்டு சாட்சிகளையும், தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டார்கள். இன்னும் அதிக சிரத்தை எடுத்திருந்தால் அதிக சாட்சிகள் கிடைத்திருக்கலாம். ஆனால், அனுபவ மில்லாத அந்த நண்பர்கள் அவசரத்தையும் அவசியத்தையும் நன்குகத் தெரிந்து கொண்டார்களில்லை. எதிரி வக்கீல்களை மிகவும் வருத்திக் கொண்டிருந்த விஷயம், வான்செட்டியைச் சாட்சியாக விசாரிப்பதா, இல்லையா என்பதே. அவனைச் சாட்சியாக விசாரித்தால் அவனது கொள்கை சம்பந்தமான கேள்வி எழும். வான்செட்டியோ பெருமையுடன் தனது அராஜகப் புரட்சி மனப்பான்மையை வெளியிடுவான். யுத்த எதிர்ப்பை வெளிக்காட்டுவான். வான்செட்டியோதான் பெட்டி ஏறி வாக்கு மூலம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருந்தான். ஆனால், போடா தன்னுடன் வந்ததாக மட்டும் ஒப்புக்கொள்ள முடியாதென்று சொன்னான். தான் இறந்தாலும் தோழனைக் காட்டிக்கொடுக்க வான்செட்டி விரும்பவேயில்லை.

அத்தியாயம் 7

கொள்ளை வழக்கு

பிளிமத் நகரின் சவுக்கத்திலே நீதி மண்டபம் அமைந்திருந்தது. அது ஒரு கம்பீரமான கட்டிடம். சிவப்புச் செங்கல்லில் அமைந்தது. பச்சைக் கொடிகள் நாலா பக்கங்களிலும் பறந்து கொண்டிருந்தன. மண்டபத்தின் உள் பக்கம் வெண்ணிறம்! மத்தியில் ஒய்யாரமான சிம்மாசனம். அதை அமெரிக்கக் கொடிகள் அலங்கரித்து நின்றன. டபேதார் விசேஷ அங்கியைத் தரித்து, தடிதாங்கி நின்று கொண்டிருந்தான். அவனது தோற்றமே அங்கு பீதியை உண்டாக்கியது.

வான் செட்டியின் மீதுள்ள வழக்கைக் கவனிப்பதற்குப் பெருந்திரளான ஜனங்கள் குழுமி யிருந்தனர். பெரிய கொள்ளைக்காரனைப் பார்ப்பதற்கென்று வந்திருந்தவர்கள் ஒரு சாரார். மற்றொருசாரார், வான்செட்டியின் பேரில் அனுதாபங் கொண்டவர்கள். வான்செட்டியின் பொது ஜன சேவையையும், அருங் குணத்தையும், பிளிமத்திலுள்ள இத்தாலிய,போர்ச்சுக்கீசிய தொழிலாளிகள் நன்கு தெரிந்திருந்தபடியால், அவன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றம் உண்மையல்ல வென்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். பத்திரிகை நிருபர்களுக்கோ குறைவில்லை. கூட்டம் எள்விழ இடமின்றி நிறைந்திருந்தது.

வான்செட்டியைக் கைவிலங்குடன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். இரும்புக் கம்பிகளாலாகிய ஒரு கூண்டில் அவனை அடைத்துப் பூட்டிவிட்டார்கள். இதுவே போதுமான தண்டனையாகத் தோன்றிற்று. இது மாத்திரமா? கூண்டிலடைபட்டுக் கிடப்பதால், கொடிய மிருகம் போன்ற தோற்றம் ஒன்றே ஒருவனைக் குற்றவாளியென்று நம்பும்படி செய்யும் அல்லவா?

சற்று நேரத்திற்கெல்லாம் சர்க்கார் வக்கீல் காட்ஜ்மான் வந்து சேர்ந்தார். அவர் ஜெர்மானிய வம்சத்தினர். நல்ல தோற்றம். விலை உயர்ந்த ஆடை அணிந்திருந்தார். உலகானுபவமுள்ளவர். அனாவசியமாகக் கவலையில் சிக்கிக் கொள்ளாதவர். எல்லோருடனும் சிரித்து விளையாடும் தமாஷ் பேர்வழி. சர்க்காரின் நோக்கம் போல் நடந்துகொள்ளும் தாசர். "புரட்சிக்காரர்கள் அமெரிக்க ஸ்தாபனங்களை அழிக்க முற்பட்டிருக்கிறார்கள். அவர்களை ஒழிப்பது சர்க்கார் விருப்பம். ஆதலால், புரட்சிக் காரரை ஒழிப்பது எனது கடமை. அதுவே எனது தேசபக்தியுமாகும்" என்று, வான்செட்டியின் வழக்கில் அவர் முடிவு செய்து கொண்டார்.

மண்டபத்தின் முன் கதவு திறக்கப்பட்டது. ஜட்ஜ் 'தாயர்' உள்ளே நுழைந்தார். மெலிந்த சரீரம். பழுத்த கிழவர். நரைத்த மீசை. பட்டு அங்கி அணிந்திருந்தார். அவர் அங்கு தோன்றவும், டபேதார் கைத்தடியால் தரையை ஓங்கித் தட்டி "கோர்ட்டார், கோர்ட்டார்" என்று கட்டியங் கூறினான். வக்கீல்களும் மற்றவர்களும் எழுந்து நின்றார்கள். டபேதார் "குறையுள்ளவர்களெல்லாம் பிரிமத் கோர்ட்டில் அமர்ந்திருக்கும் உயர்தர நீதிபதியிடம் முறையிடலாம். அவை விசாரிக்கப்படும். கடவுள் மஸாசுசெட்ஸ் அரசாங்கத்தைக் காப்பாராக!"

என்று கூறி முடிக்கவும் ஜட்ஜ் உட்கார்ந்தார். மற்றவர்களும் தங்கள் ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

வெப் தாயர் மிகவும் தற்பெருமை கொண்டவர். நீதிஸ்தலமாகிய நாடகமேடையில், தன்னைக் கதாநாயகனாக மதித்துக் கொள்வார். தன்னைப் பற்றிப் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் விருப்பமுள்ளவர். அடிக்கடி வக்கீல்களிடமும், பத்திரிகை நிருபர்களிடமும் " தாம் கேஸ் நடத்தும் முறை சரிதானா?" என்று கேட்பது வழக்கம். பத்திரிகை நிருபர்களிடம் " இந்த வழக்கைப்பற்றிச் சரியாக எழுதுங்கள் " என்று கூறுவார். பத்திரிகைகளும் நீதிபதி தாயரை வானளாவப் புகழ்ந்து விடும். நிருபர் இளமங்கையாக இருந்தால், ரயிலில் போகும்போது, நிருபர் பக்கத்திலேயே தனக்கு இடம் பிடித்துக் கொள்ளுவார். புஷ்பங்கள் கொடுப்பதும் சிரித்து விளையாடுவதுமன்றி வழக்கைப்பற்றியும், நிருபருடன் விவாதிப்பார். ஒரு வழக்கு விசாரணையிலிருக்கும் போது கோர்ட்டைத் தவிர வேறிடங்களில் அந்த வழக்கு சம்பந்தமாக நீதிபதி விவாதம் செய்யக் கூடாதென்பது சம்பிரதாயம். ஆனால் சாக்கோ, வான்செட்டி வழக்கு நடக்கும் போது நீதிபதி தாயரால் அந்த சம்பிரதாய எல்லைக்குள் நிற்க முடியவில்லை. பலர் கூடிய கிளப்பில் கடைசி மனிதன் வெளியில் போகும் வரை வழக்கைப் பற்றிப் பேசிக் கொண்டே யிருப்பார். " அராஜக வேசி மக்களை அன்றைக்கு நான் என்ன செய்தேன் தெரியுமா?" என்று பந்து விளையாடுமிடத்தில் கூடப் பெருமையாகக் கூறி உடல் பூரிப்பார். இந்த நீதிவானிடம்தான் சாக்கோ, வான்செட்டி ஆகிய இருவர்களின் கதி ஒப்புடைக்கப்பட்டிருந்தது.

விசாரணை ஆரம்பமாயிற்று. சம்பிரதாயப்படி ஒவ்வொரு ஜூரியாகத் தெரிந்தெடுத்துப் பெயர் சொல்ல வேண்டும். ஆட்சேபமிருந்தால் எதிரி வக்கீல் மறுத்து விடலாம். கீழ்க்கண்டவர்கள் ஜூரிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஆர்தர்பர்ஜஸ், ஹென்ரிபர்ஜஸ், விருலி, கேல். இவர்களனைவரும் அமெரிக்கர்களே. அமெரிக்கர்களல்லாதார் எவரும் ஜூரியாக வராதபடி ஜட்ஜ் கவனத்துடனிருந்தார். லிச்வீல்ட், பூல், ஷா, உல்பர் என்ற சாதாரணத் தொழிலாளிகளும் தெரிந் தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் தொழிலாளிகளாயினும், தங்கள் வர்க்க ஒற்றுமைக்காகப் பாடுபடாமல் தங்கள் பிள்ளைகளாவது பிரபுக்களாகலாம் என்று கனவு கண்டுகொண்டிருந்தவர்கள். மேலும், அவர்களுக்கு இத்தாலியர் மீது வெறுப்பு. இத்தாலியர் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்து தங்கள் பிழைப்பிற்கு இடையூறு செய்கிறார்கள் என்பது அவர்கள் கருத்து. மற்றொரு ஜூரி ஆர்தர் நிக்கர்சன் என்ற போர்மென். இவருடன் சேர்ந்த மற்றொரு போர்மென்தான், வேலை நிறுத்தத்திற்குப் பிறகு வான் செட்டிக்கு வேலை கொடுக்க மறுத்தவன். மேலும் வான் செட்டியினுல் அந்தக் கயிறுலேக்கு இரண்டு லக்ஷம் டாலர்கள் நஷ்டமாய் விட்ட விவரம் தெரிந்திருந்த நிலைமையில், எவ்வளவு தூரம் இவன் அவனுக்கு அனுகூலமாயிருப்பான் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

சாட்சிகளை விசாரிப்பதற்கு முன், சர்க்கார் உதவி வக்கீல் எழுந்து வழக்கைச் சுருக்கமாகக் கூறினர்.

விசாரணை ஆரம்பமாயிற்று. முக்கிய சாட்சிகளைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிடுவோம். அவர்களில் ஒருவர், பெஞ்சமின் பவுல்ஸ், செருப்பாலைக் கம்பெனியாரால் அமர்த்தப்பட்ட ஸ்பெஷல் உத்தியோகஸ்தர். அத்துடன்

மைக் ஸ்டூவர்ட்டைச் சேர்ந்த போலீஸ் உத்தியோகஸ் தராகவும் இருந்தார். அவருடைய வாக்கு மூலம்: "நான் பணம் கொண்டு வந்த மோட்டாரில் டிரைவர் பக்கம் உட்கார்ந்திருந்தேன். மோட்டார் போய்க் கொண்டிருக் கும் போது இரு கொள்ளைக்காரர்கள் எங்களைத் தாக்கிச் சுட்டார்கள். ஒருவன் கட்டைத் துப்பாக்கியும், மற்றொரு வன் ரிவால்வரும் வைத்திருந்தனர். டிரைவர் மூர்ச்சை யாகி விட்டான். நான் இடது கையால் ஸ்டீயரிங்கைப் பிடித்துக் கொண்டு வலது கையால் ரிவால்வர் வைத்திருந் தவரை நோக்கி என்னுடைய ரிவால்வரால் சுட்டேன். கொள்ளைக்காரர்கள் ஓடிவிட்டார்கள்.'' இவன், பூர் வாங்க விசாரணையில் கொடுத்த வாக்கு மூலத்திற்கு இந்த வாக்குமூலம் முரண்பட்டிருந்தது. கட்டைத் துப்பாக்கி வைத்திருந்தவனை நோக்கிச் சுட்டேன் என்று சொன் னதை மாற்றி ரிவால்வர் வைத்திருந்தவனை நோக்கிச் சுட்டேன் என்முன். மேலும், கட்டைத் துப்பாக்கி வைத் திருந்தவன் ஒட்டவெட்டிய குறுகிய மீசை யுள்ளவன் என்ற முந்திய வாக்குமூலத்தை மாற்றி அடர்ந்த மீசைக் காரன் என்று கூறினன். அடர்ந்த மீசை என்று சொல்லா விட்டால், எப்படி வான்செட்டியை அது குறிக்க முடியும்?

இரண்டாவது சாட்சி செருப்பாலைக் கம்பெனி இன்ஸ்பெக்டர் ஹார்டிங்: குற்றம் நடந்த ஒன்றிரண்டு மணி நேரத்திற்குப் பிறகு பாஸ்டன் 'குளோப்' என்ற பத்திரிகை நிருபருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது "கொள்ளைக்காரன் மழுங்கச் சிரைத்த முகத்தை யுடைய வன்'' என்முன். ஆனல் பூர்வாங்க விசாரணையின் போது, அதிகமாக வளர்ந்த 'சாப்ளின்' மீசையுடையவன் என்று சொன்னன். மேலும், மற்றொரு குற்றவாளி ஓர்சியானே

தான், என்று உறுதியாகக் கூறினன். ஆனல், ஓர்சியானே பேரில் கேஸே கிடையாது. மேலும் செருப்பாலேக் கம்பெனி நியமித்த பிங்கெர்டன் ஏஜென்ஸியிடம் கொள்ளேக்காரர்களின் மோட்டார் 'ஹட்சன்' என்று சொன்ஞன். ஆனல், விசாரணையின் போது 'பியூக்' என்றுசத்தியம் செய்தான். இவ்வாக்கு மூலத்தின் மாறுபாடுகளேக் காட்டக்கூடிய தகவல்கள் சில வருஷங்கள் கழித்தே கிடைத்தன.

மூன்ருவது சாட்சி, சம்பளப் பட்டுவாடா உத்தியோகஸ்தர், காக்ஸ். துப்பாக்கி வைத்திருந்தவன் குள்ளமாயும் மெலிந்தவனுயும் இருந்தான் என்பது பூர்வாங்க விசாரணையின் போது அவர் கொடுத்த வாக்குமூலம். ஆனல், நீதிபதி முன்பாக 5அடி 8அங்குலம் உயரம் உள்ள நெடியமனிதன் என்று கூறினன். ஆனல், வான்செட்டி தான் அந்த மனிதன் என்று உறுதியாகக் கூறும்படி ஜில்லா அட்டார்னி எவ்வளவோ முயற்சி செய்தும் பலிக்கவில்லே.

நான்காவது சாட்சி மிஸிஸ் புரூக்ஸ். அவள் டிப்போவுக்குப் போகும் வழியில், கொள்ளேக் காரர்களேயும் மோட்டாரையும் பார்த்ததாகச் சொன்னள். குற்றம் நடப்பதற்குச் சற்று முன் வான்செட்டியை அவள் இரு தடவை பார்த்ததாயும் அவன் தன்னேக் கூர்மையாகக் கவனித்ததாயும் கூறினள். ஏன் அவள் இரண்டாவது தடவை மோட்டாருக்குள் பார்க்க நேரிட்டதென்ற கேள்விக்கும் மோட்டாரில் உட்கார்ந்திருந்த மனிதனுடைய தோற்றத்தைப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் என்ன என்ற கேள்விக்கும் மிஸர்ஸ்புரூக் பதில்கூற முடியவில்லே. ஆனல், அவளுடைய ஒரு கண்ணுக்கு வைத்தியம் செய்து கொண்டிருப்பதாயும் மற்ருெரு கண்ணினல்

தெளிவாக விஷயங்களைப் பார்க்க முடியவில்லை என்பதையும் அவள் ஒப்புக் கொண்டாள்.

ஐந்தாவது சாட்சி ஷா என்ற மாணவன். அவன் வாக்குமூலம்: "துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஒரு மரத்தின் பக்கம் பதுங்கினேன். துப்பாக்கி வைத்திருந்த கொள்ளைக்காரன் நூற்றைம்பது அடி தூரத்தில் ஓடினன். அவன் ஓடின தன்மையிலிருந்து அவனை ஒரு அன்னியன் என்று சொல்லலாம்." வக்கீல் "எத்தகைய அன்னியன்?" சாட்சி 'இத்தாலியன் அல்லது ரஷ்யன்' என்ருன். வக்கீல்: "இத்தாலியனே அல்லது ரஷ்யனே, ஒரு நார்வீஜியன் ஓடுவதைப் போன்று ஓடாமல் வேறு விதமாக ஓடுகிருனு?" சாட்சி "ஆம்". வக்கீல் "என்ன வித்தியாசம்?" சாட்சி "பதட்டமிருந்தது."

ஆருவது சாட்சி ரொட்டிக்காரன் பாஸ்டோனி. வாக்குமூலம்: "குதிரையையும் வண்டியையும் வாடகைக்குக்கேட்பதற்காக வான்செட்டி என் வீட்டிற்குள் நுழைந்தபோது சரியாக 7-45 மணி. அப்பொழுதுதான் கயிருலைக் கம்பெனியின் காலை 7-45 மணி சங்கு ஊதியது. வண்டிகொடுக்க முடியவில்லை."

ஏழாவது சாட்சி $12\frac{1}{2}$ வயதுச் சிறுவன், பெல்டரண்டோபிரினி: "காலை $7\frac{1}{2}$ மணிக்கு வான்செட்டியைச் சந்தித்தேன். நான் வீட்டிற்குப் போய் ஜோடு எடுத்து வருவதற்கு முன் வான்செட்டி பாஸ்டோனி வீட்டிற்குப் போய் விட்டுத் திரும்பி வந்தான்." மேலும், அவன் சொன்னதாவது: "அன்று பிற்பகல் இரண்டேமுக்கால் மணிவரை வான்செட்டி தெருத் தெருவாக வீடுவீடாகச் சென்று மீன் விற்பனை செய்தான். நானும் அவனேடு சென்றேன். நாங்கள் சென்ற தெருக்களின் பெயரையும்

சந்தித்த ஜனங்களின் பெயரையும் நாங்கள் பேசிக் கொண்ட விஷயங்களையும் விவரமாகச் சொல்லுகிறேன்."

அட்டார்னி காட்ஸ்மேன் இரண்டு மணிநேரம் பையனைக் குறுக்கு விசாரணை செய்தார். அவன் வாக்கு மூலத்தில் முரண்பாடு காண முயன்றார். முடியவில்லை.

கேள்வி "மீன் கூடை எவ்வளவு கனம்? பளுவான கூடையை நீ எப்படி நெடுந்தூரம் சுமந்து செல்ல முடிந்தது?"

பதில் "விற்பனை ஆக ஆகக் கூடையின் பளுவும் குறையும். இது சர்வ சாதாரண மானதுதானே!" என்றான். சாட்சியம் மிகப் பொருத்தமாக இருந்தது. என் செய்வது? அதை வேறு விதமாகத் திரித்துக் காரணம் கற்பிக்க வேண்டுமல்லமா? ஆகையால் "இந்தப் பையனைப் பெற்றவர்கள் மிகவும் பெருமைப்பட வேண்டியதுதான். ஆஹா, கிளிப் பிள்ளையைப் போல் படித்த பாடத்தை அப்படியே ஒப்புவித்து விட்டானே" என்று மிஸ்டர் காட்ஸ் மேன் ஜூரிகளிடம் கூறினான். பிறகு இத்தாலிய குடும்பப் பெண்கள் பதின்மர் விசாரிக்கப்பட்டார்கள். வான்செட்டி குற்றம் நடந்ததாகக் கூறப்படும் தினத்தில் தம்மிடம் மீன் விற்றதாக அவர்கள் சொன்னார்கள். எனவே, குற்றஞ் சாட்டப்பட்ட வான்செட்டி குற்றம் நடந்த சமயத்தில் வேறு இடத்தில் இருந்ததாக நிரூபிக்கப் பட்டதென்பதை வக்கீல் வற்புறுத்திக் கூறினார். ஆனால், வான்செட்டி திருப்தியடையவில்லை. குற்றவாளி ஒட்டவெட்டிய மீசையுள்ளவன் என வாதிதரப்பில் வற்புறுத்தியதற்கு மாறாகத் தான் நீண்ட மீசையுள்ளவன் என்பதைச் சாட்சியத்தில் கொண்டுவர, தன் வக்கீல் ஒரு பிரயத்தனமும் செய்யவில்லையேயென்று கோபங்கொண்டான். அவன் மீசையை

ஒரு போதும் ஒட்ட வெட்டியதில்லை. அடர்ந்து தொங்கும் மீசையுடன் அவன் பினிமத் நகரத்தில் எட்டு வருஷங்களாகத் திரிந்து கொண்டிருந்ததால் அவனை யாவரும் அறிவர். அது சம்பந்தமாக ஒரு கேள்வி கூடச் சாட்சிகளிடம் கேட்கவில்லை. வக்கீல் அதைச் செய்யத் தவறியதால் அவர் கட்சிக்காரனுக்குத் துரோகம் செய்து விட்டதாக வான்செட்டி கோர்ட்டில் அலறினான். பின்னால் விசாரிக்கப்பட்ட இரண்டு போலீஸார்கள் வான்செட்டி நீண்ட மீசையுள்ளவனென்று வாக்குமூலம் கொடுத்தார்கள்.

மற்றொருசாட்சி 'ஸெமென்ட்' கண்டிராக்டர் கிரிஸ்தோபர். வான்செட்டி கிரிஸ்தோபரிடம் வேலைபார்த்தவன். எனவே, வான்செட்டியின் மீசையைப்பற்றி அவனுக்கு நன்றாகத்தெரியும். வான் செட்டியின் மீசை அடர்ந்து தொங்கும் மீசை என்று அந்த சாட்சி சொன்னான். சர்க்கார் வக்கீல் ஒரு சூழ்ச்சி செய்தார். பினிமத்திலுள்ள பெரிய ஹோட்டல் மானேஜர் ஒருவரது மீசையைக் குறித்து சாட்சியிடம் கேட்டார். இப்போது தான் வளர்ந்து கொண்டிருக்கும் சிறு மீசையென்று சாட்சி கூறினான். மறுநாள், அந்த மானேஜரை மழுங்கச் சிரைத்து கோர்ட்டில் ஆஜர் படுத்தினார்கள். மீசையில்லாதவனுக்கு மீசையை ஒட்டிவைத்து வாக்குமூலம் கொடுக்கிறார்கள் என்று அட்டார்னி கூறினார். மீசை சம்பந்தமான சாட்சிய மெல்லாம் இவ்வளவுதான் என்று அவர் ஆர்ப்பாட்டம் செய்தார்.

வாதி பக்கம் சாட்சிகளும் பிரதிவாதி பக்கம் சாட்சிகளும் விசாரணை முடிந்தவுடன், வழக்கைக் குறித்து இருதரத்து வக்கீல்களும் விஸ்தாரமாகப் பேசினார்கள். பின்பு ஜூரிகள் ஆலோசனைக்காகத் தங்கள் அறைக்குள்

சென்றார்கள். வான்செட்டி யிடமிருந்து கவர்ந்ததாகச் சொல்லப்படும் தோட்டாக்களையும் எடுத்துக் கொண்டார்கள். அவை பறவைகளைச் சுடும் ரவைத் தோட்டாக்கள் நன்குபரிசோதிக்கத்தீர்மானித்துதுப்பாக்கியைத் திறந்து பார்த்த பொழுது மனிதர்களைக் கொல்லக் கூடிய குண்டுகள் உள்ளே காணப்பட்டன. கிரிமினல் வழக்கில் பிராசிக்யூஷன் சாட்சியங்களனைத்தும் பிரதிவாதி முன்னிலையில் தான் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற விஷயம் ஆங்கில அமெரிக்கச் சட்டங்களில் கடுமையாக வற்புறுத்தப் பட்டிருக்கிறது. ஆனல், துப்பாக்கியிலிருந்த ரவைத் தோட்டாக்களை எடுத்து விட்டு குண்டுத் தோட்டாக்கள் சொருகப்பட்டன. கொள்ளை கொலை ஆகிய இரண்டு குற்றங்களில், கொலைக் குற்றத்தைத் தள்ளிவிட வேண்டும் என்று நீதிபதியும் ஜூரிகளும் அபிப்பிராயப் பட்டார்கள்.ஏனெனில் கொள்ளைக்காரன் காவலாளியைப் பயமுறுத்தும் நோக்கத்துடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத்தான் சாட்சியம் இருந்தது. கொள்ளைக்காரன் கொலை செய்ய விரும்பினல் அவ்வளவு சமீபத்திலிருந்து அவர்களைச் சுட்டு வீழ்த்தி யிருக்க முடியும். ஆனல், துப்பாக்கியைத் திறந்து பார்த்தபொழுது ஜூரிகள் இரண்டு குற்றச் சாட்டுகளையும் வற்புறுத்தினர்கள். ஜட்ஜ் கொள்ளைக் குற்றம் மட்டிலும் ருஜுவானதாக எடுத்துக் கொண்டு வான்செட்டிக்குப் பதினைந்து வருட சிறைத்தண்டனை விதித்தார்.

மறு நாள் ஜூரிகளில் ஒருவர் ஜட்ஜ் தாயரைக் கிளப்பில் சந்தித்துக் குண்டைக் காட்டினர். இந்த விவரம் வெளியானல் வெகு நாட்களாக எவ்வளவோ பணத்தைச் செலவிட்டு நடத்திய விசாரணை வீணுகப் போய்விடும் என்பது தாயருக்கு நன்ருகத் தெரியும். உடனே சர்க்கார் வக்கீல் காட்ஜ்மானிடம் தாயர் தகவல் தெரிவித்தார்.

அவர் ஜூரியிடமிருந்து குண்டைப் பெற்றுக் கொண்டார். எல்லா ஜூரிகளையும் டெலிபோன் மூலம் தனது ஆபீஸுக்கு வரவழைத்தார். விஷயம் வெளியே தெரியக் கூடாதென்று எச்சரித்தார். ஆறுமாதங்கள் கழிந்த பின்பு தான் இந்த விவரம் வெளியாயிற்று. அநேக ஜூரிகள் உண்மையைக் கண்டு உறுதி மொழிப் பத்திரங்களில் கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள். அவற்றை ஆதார மாகக் கொண்டு மறு விசாரணைக்கு முயற்சி யெடுக்கப் பட்டது. எனினும் ஒரு பயனுமில்லை.

பதினைந்து வருஷம் சிறைவாசத் தண்டனை, கோர்ட்டில் கூடியிருந்தவர்களைத் திடுக்கிடச் செய்தது. வான் செட்டியின் நண்பர்கள் அடக்க முடியாத வருத்தத்தால் கண்ணீர் சிந்தினார்கள். இத்தாலியப் பெண்களும் அழுது புலம்பினார்கள். வான்செட்டியோ "தைரியமாக இருங்கள்! தைரியமாக இருங்கள்!!" என்று ஆறுதல் கூறினான். உடனே காவலாளிகள் அவனை சிறைச்சாலைக்குக் கொண்டு போய் விட்டார்கள்.

சிறையில் என்ன செய்வது? யாருக்குச் சிறை வாசம்? இக்கேள்விக்குப் பதில் வான்செட்டி சிறையிலிருந்து ஒரு நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் காணலாம். கடிதத்தின் விவரம்:

> "நீண்ட கால சிறை வாசத்தைக் கழிப்பதற்கு ஏதாவது வேலை செய்ய வேண்டுமென்று எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். ஆனல் என்ன வேலை செய்வது? எழுத்துவேலை. இந்த எழுத்து வேலைதான் பிரயோஜனமாக இருக்கும். ஆகவே, அதில் ஈடுபட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

“நான் குற்றமற்றவன் என்று நீங்கள் கொண்ட நம்பிக்கைக்காக எனது மனப்பூர்வ மான வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் நிரபராதிதான். என் வாழ்நாளில் நான் ஒரு துளி இரத்தத்தைக் கூடச் சிந்தியதில்லை. ஒரு டாலர் கூடத் திருடியதில்லை. மற்ற ஜனங்களினின்றும் மாறுபட்ட சில கருத்துக்களை மட்டும் நான் கொண்டிருக்கிறேன். அதற்குக் காரணம் எனது வாழ்க்கையின் துயர் நிறைந்த அநுபவமும் உண்மையும் ஒழுக்கமுந்தான். இந்த உலக வாழ்க்கை சந்தோஷத்தைக் கொடுக்கமுடியுமா? முடியும் என்ற நியாயத்தை மனித வர்க்கத் திற்குத் தெளிவுபடுத்த நான் ஆசைப்படுகிறேன். அதற்காகவே பாடுபட்டேன். எல்லோருடைய உழைப்பாலும் உற்பத்தியாகும் சமூகச் சொத்து ஒவ்வொருவருக்கும் பயன்பட வேண்டு மென்பது எனது விருப்பம். இந்தப் புரட்சிக்காக எவரும் கொள்ளையடிக்க வேண்டும் என்ப தல்ல.

“புரட்சியும் பெரிய இயக்கங்களும் ஆத்ம எழுச்சியினுல் ஏற்படுகின்றன. அவற்றிற்கு டாலர்கள் அவசிய மில்லை. அன்பு, அறிவு, தியாகம், கொள்கை, மனச்சாட்சி, உணர்ச்சி இவைகள்தான் வேண்டும். இத்தகைய சிறந்த குணங்கள் பல வழிகளில் மனித ஹிருதயத்தில் முளைத்து வளர்ச்சியடைய முடியும். ஆனுல், அவை வழிப்பறியாலோ கொலையினுலோ உண் டாக மாட்டா. என்னுடைய தேவைகளுக் காகவோ விருப்பத்திற்காகவோ நான் கொள்

ளைக்காரனாக மாற வேண்டிய அவசியமில்லை. டால்ஸ்டாய், ஸெயின்ட்பிரான்ஸிஸ்கோ, டாண்டி போன்ற பேரறிஞர்களின் உபதேசங்களை நான் விரும்புகிறேன். சின்சினாட்டி, கரிபால்டி ஆகியோரைப் பின்பற்ற ஆசைப்படுகிறேன். ஆடம்பர வாழ்வை வெறுக்கிறேன். சிறு குடிசை, சிறியதோர் வயல், சில புத்தகங்கள் எளிய உணவு இவைகளே எனக்கு வேண்டும். சொத்து சுகபோகங்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆட்டுக் குட்டிகளும் ஓநாய்களும் நிறைந்த இவ்வுலகத்தில் கூட இவற்றை நான் எளிதாகப் பெற முடியும். எனது தந்தை எவ்வளவோ நிலமும் வீடுகளும் தோட்டங்களும் உடையவர். அவர் ஒரு வியாபாரி. இத்தாலிக்குத் திரும்பி வந்து வியாபாரத்தைக் கவனித்துக் கொள்ளும்படி எனக்குப் பல கடிதங்கள் எழுதினார். ஆனால், எனது மனச்சாட்சி வியாபாரம் செய்ய அனுமதிக்கவில்லை. எனது உழைப்பால்தான் நான் உயிர்வாழ வேண்டும். இது மாத்திரமல்ல, உலகவாழ்வு, சக்தி, அறிவு, இவற்றிற்கு அடிப்படையான மனிதரின் மனச்சாந்தி, தெளிவு, அறிவு, ஆற்றல், உறுதி இவையெல்லாம் கொலையாலும் கொள்ளையாலும் நிர்மூலமாக்கப் படுகின்றன. இந்த உண்மை எனக்குத் தெரியும். அதை நான் கண்கூடாகக் காண்கிறேன். எல்லோருக்கும் அதை அறிவுறுத்துகிறேன். வாழ்வைப் பாழாக்காதிருக்க ஒருவன் விரும்பினால் இயற்கையின் சட்டங்களை நாசம் செய்யக் கூடாது.

"ஒரு விஷயம் இப்போது எனது ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு நடுநிசி. சந்திரிகை இல்லை. ஆனால், எண்ணிறந்த நட்சத்திரங்கள், வான மண்டல மெங்கும் மின்னிக் கொண்டிருந்தன. இருளில் தனியாக உட்கார்ந்திருந்தேன். மன மென்னும் கடலில் கவலை யென்னும் புயல் அடித்துக் கொண்டிருந்தது. முகவாய்க் கட்டையை கைகளில் தாங்கி அண்ணாந்து நட்சத்திரங்களை உற்று நோக்கினேன். எனது ஆத்மா எனது சரீரத்தைவிட்டு ஓட முயன்றது போல் தோன்றியது. ஆ! நான் இயற்கையின் குழந்தை. ஆகவே பெரிய செல்வவந்தன் நான். பணம் காசு எனக்கு எதற்கு? நானா கொலைஞன்? எனக்கா மரண தண்டனை? சாவு? அதற்காக வருந்தவில்லை. ஆனால், வஞ்சகக் குற்றச்சாட்டு! அது கொடிது! மிகக் கொடிது! என்னை இப்போது படிக்கச் சொல்லுகிறீர். வாஸ்தவம். நல்ல தொழில்தான். ஆனால், எனக்கு ஆங்கிலம் நன்ருகத் தெரியாதே. பெரிய மேதாவிகளையும் விஞ்ஞான சாஸ்திரிகளையும் நான் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? மேலும், கடினமான வேலை. சூரிய வெளிச்சமும் நல்ல காற்றும் இல்லை. எப்படிப் படிப்பது? இயற்கை வனப்போடு ஐக்கியப்படாமல் மனவளர்ச்சி எப்படி உண்டாகும்? கூடிய சீக்கிரம் உம்மைச் சந்திக்கலாம் என்று நம்புகிறேன். அப்போது அதிகமாகச் சொல்லுகிறேன். தூக்கத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். மனித நீதியில் நான் நம்பிக்கை யிழந்துவிட்டேன். தனி மனிதனின் நியாய மனப்பான்மையில்

அல்ல. பொதுவாக நீதி வழங்கப்படுவதையே நான் குறிக்கிறேன். உங்களைப் போன்ற நல்லோர் சகாயம் துன்பப்பளுவை எவ்வளவோ குறைக்கிறது.

கடிதம் நீண்டுவிட்டது. மன்னிக்கவும். ஆனால் எனது மனப்பான்மையையும் கருத்துக்களையும் வெளிப்படுத்த நூற்றுக் கணக்கான பக்கங்களும் போதாது. மன்னிக்கவும்."

தங்கள்,

வான்செட்டி.

அத்தியாயம் 8

கொலை வழக்கு

வான்செட்டி சார்லஸ் டவுன் மத்திய சிறையிலும், சாக்கோ தீதாம் சப் ஜெயிலிலும் இருந்தார்கள். 1920 ம் ஆு செப்டம்பர் மீ 11ம் தேதி இருவர் பேரிலும் தெற்குப் பிரியண்டிரி கொலைக் குற்றம் செய்ததாகப் பிராது தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குக்கும் அதே சர்க்கார் வக்கீல்தான். அதே ஜட்ஜ்தான். ஜட்ஜ் தாயர் முன்பு இருவரும் ஆஜர் செய்யப்பட்டார்கள். இருவரும் குற்றவாளிகளல்லவென்று சொன்னதால் வழக்கு விசாரணைக்காக பிப்ரவரி மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்குள் சாக்கோ, வான்செட்டி வழக்கு, பொது மக்களின் கவனத்தை இழுக்க ஆரம்பித்தது. பாஸ்டனில்

ஒரு சிறு கூட்டத்தார் சாக்கோ, வான்செட்டியின் பாது காப்புக் கமிட்டி ஒன்றை நிறுவ ஆரம்பித்தார்கள். முதலில் கமிட்டியில் சேர்ந்திருந்தவர்கள் எல்லோரும் அநேகமாக இத்தாலியரே. இதை முதன்மையாக இருந்து நடத்தியவர், வெலிகாலினி என்ற அச்சுக் கூடத்தின் சொந்தக்காரர். சுற்றறிக்கை தயாரிப்பதும் இத்தாலிய பாஷையில் மொழி பெயர்ப்பதும், கூட்டங்கள் கூட்டு வதுமே அவருடைய வேலை. அனுதாபிகளிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆபீசாவது காரியதரிசியாவது கிடையாது. பிறகு அது ஒரு பெரிய ஸ்தாபனமாக ஓங்கி வளர்ந்து விட்டது. இதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்களில் குவாதாக்னி என்ற இத்தாலிய பத்திராதிபரும் ஒருவர்.

இதில் பல தரப் பட்டவர்களும் கலந்திருந்தனர். போலீஸ் ஒற்றர்களும் நடவடிக்கைகளை நன்ருகக் கவ னித்து வந்தார்கள். ஆரம்பத்தில் இத்தாலியர் மட்டுமிருந் தாலும், பின்னல் அமெரிக்கர்களும் பங்கெடுத்துக் கொண் டார்கள். அதனல், கமிட்டியில் பல தடவை குழப்பங்கள் ஏற்பட்டன. இத்தாலிய தொழிலாளர் இதை வர்க்கப் பிரச்சினையாக்கக் கருதினர். ஆனல், அமெரிக்க அனுதாபி களோ, அது நீதியைப் பெறுவதற்கான ஒரு ஸ்தாபனமாக இருக்க வேண்டுமென்று விரும்பினர்.

இத்தாலியர் பிரசார முறையைக் கையாண்டனர். அமெரிக்கர் அதைத் தடுத்தார்கள். இம் மாதிரியான கருத்து வேற்றுமைப் போராட்டம் கமிட்டிக்குள் கடைசிவரை நடந்து கொண்டிருந்தது.

நியூயார்க்கிலுள்ள லீசுவன்சன் என்ற பிரபல வக்கீலே கமிட்டி அமர்த்தியது. அவர் ஸ்வீடன் தேசத்தவர். ஆறடி

இரண்டங்குல உயரமுள்ளவர். வெகுசாமர்த்திய சாலி புத்தி நுட்பம் வாய்ந்தவர். பல வழக்குகளில் ஆஜராகி அனுபவம் பெற்றவர். யோசனை செய்தார். அவருக்கு பீஸ் வாரம் ஒன்றிற்கு 150 டாலர்கள். ஆனால் பொதுக் கமிட்டிகளில் ஏற்படும் சங்கடங்களை நன்ருகத் தெரிந்தவர். எப்படி மாதக்கணக்கில் பீஸ் பாக்கி ஏற்படும் என்பதும் அவர் அறியாததல்ல. அவரிடமும் பணம் கிடையாது. இருந்த போதிலும் இறுதியாக ஒப்புக் கொண்டார். கிரிமினல் வழக்குகளில் நடைபெறும் சூழ்ச்சிகளை யெல்லாம் நன்ருக அறிந்தவர். போலீஸார் செய்யும் சூழ்ச்சிகளுக்குப் பதில் சூழ்ச்சி செய்யும் சாமர்த்தியமும் வாய்ந்தவர்.

உத்தியோகஸ்தர் சிலர் இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்துப்பணம் சம்பாதிக்க விரும்பினர். மிஸிஸ் டிவால்கோ என்ற கோர்ட் 'இண்டர்பிரெட்டர்' மூலம் 50000 டாலர் கொடுத்தால் வழக்கே இல்லாமல் செய்து விடலா மென்ற பேச்சு ஆரம்பமாயிற்று. அமெரிக்க உலகில் லஞ்சப்பேய் சர்வசாதாரணமாகத் தலைவிரித்தாடும். அதே மாதிரி இந்த வழக்கிலும் தட்டிப்பறிக்க வழியுண்டா வென்று சிலர் முயற்சித்தார்கள். சாக்கோவும் வான்செட்டியும் லஞ்சம் கொடுத்து வெளியேற மறுத்தார்கள். லீசுவன்சன் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர். லஞ்சம் வாங்க முயற்சித்ததாக டிவால்கோ பேரில் பிராது தாக்கல் செய்தார். ஒரு ஏழைப் பெண்ணைத் துன்புறுத்துவதை வான்செட்டியே விரும்பவில்லை. எனவே பிராது தள்ளுபடியாயிற்று. இதனுல், உத்தியோகஸ்தர்கள் சாக்கோ, வான்செட்டி வழக்கில் முன்னை விடப் பன்மடங்கு கடின சித்தம் கொண்டவர்களாகி விட்டார்கள்.

லீசுவன்சன், கேஸ் படிப்பதற்காக ஜூன் மீ வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கு மிகவும் கடின மாகத் தோன்றியது. வாதிபக்கம் 50 சாட்சிகளையும் பிரதிவாதி பக்கம் 100 சாட்சிகளையும் விசாரிக்க வேண் டியதுடன் சாட்சிகளின் பூர்வோத்திரமும் தெரிய வேண்டியதிருந்தது. லீசுவன்சன் பல இடங்களுக்குச் சென்று விசாரித்து, தஸ்தாவேஜிகளைத் தயாரித்தார். இரவு பகலாய்ச் சலியாது உழைத்தார். அவருக்கு உதவியாக யிருந்தவர் பிரட்மூர் என்ற ஐரிஷ் வக்கீல். இதுவுமன்றி அலைந்து திரிந்து துப்புத்துலக்கச் சாமர்த்தியம் வாய்ந்த இளைஞர் சிலர் உதவி புரிந்தார்கள். ஜூன் மாதத்தில் கொலைவழக்கு விசாரணை ஆரம்பமாயிற்று.

நார்போக் ஜில்லா டெடாம் கோர்ட்டில் ஏராளமான ஜனக்கூட்டம். ஒரு பக்கம் பார்வையாளர்கள். மற்றொரு பக்கம் ஜூரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய கனவான்கள். பத்திரிகை நிருபர்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பிரதிவாதிகள் பக்கம் லீசுவன்சன், பிராட்மூர் ஆகியோரும் மற்றும் பலரும் ஆஜராகியிருந் தார்கள். ஜில்லா அட்டார்னி காட்ஸ் மேனும் மூன்று உதவி அட்டார்னிகளும், நீதிபதி தாயரும் மேடைமீது அமர்ந்திருந்தார்கள். இரு இத்தாலியர்களுக்கும் சரியான நியாயம் வழங்கப் படுகிறதா வென்று கவனிக்கும் பொருட்டு இத்தாலிய சர்க்கார் மார்க்குவிஸ் பொரண் டியைக் கோர்ட்டிற்கு அனுப்பியிருந்தது. பந்தோபஸ் திற்காகச் சர்க்கார் தகுந்த முன்னேற் பாடுகளைச் செய் திருந்தது. நீதிபதிக்கும் அட்டார்னிக்கும் பக்கத்தில் எப் பொழுதும் பாது காப்பாளர்களிருந்து வந்தார்கள். நார் போக் ஜில்லா போலீஸ் இலாக்காக்களி லிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட பதினைந்து போலீஸார் ஆயுத பாணிகளாய்க்

கோர்ட்டின் உட்பக்கம் நின்று கொண்டிருந்தார்கள். மேலும், ஒவ்வொரு வாசற்பக்கமும் மூன்று சிப்பாய்கள் காவல்காத்து நின்றார்கள். பார்வையாளர்கள் நன்கு பரிசோதிக்கப்பட்டபிறகு கோர்ட்டிற்குள் அனுமதிக்கப் பட்டார்கள். சுருங்கக்கூறுமிடத்து நியாயஸ்தலம் ஒரு போர்க்களம் போன்ற காட்சியளித்தது.

விசாரணைக்கு முன்பே, இத்தாலிய சர்க்கார்களின் பிரதிநிதியாக வந்திருந்த மார்க்குவிஸ் பெரண்டி பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விட்டிருந்தார். "இத்தாலிய சர்க்கார், சாக்கோ, வான்செட்டி வழக்கில் சிரத்தை எடுப்பதால் வழக்கின் நடவடிக்கைகளை ஆழ்ந்து கவனித்துவரும். சம்பந்தப்பட்ட எதிரிகளின் அரசியல் எண்ணங்களையும் சமுதாய அபிப்பிராயங்களையும் கருதாமல் கிரிமினல் வழக்கு என்ற முறையில் நியாயமாக விசாரணை நடைபெறும் என்று இத்தாலிய சர்க்கார் பூரணமாக நம்புகிறது," என்று அவர் ஜாக்கிரதையாக விடுத்த அறிக்கை ஜட்ஜ் தாயருக்குக் கோபத்தை மூட்டியது ஜட்ஜ் தாயர், பத்திரிகை நிருபர்களிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது, "கடைசியில் நான் பேசும்வரை காத்திருங்கள். அவர்களுக்கு நல்ல பாடங் கற்பிக்கிறேன்," என்று கூறினர். இந்த மனப்பான்மை யுள்ளவர்களிடையே நிரபராதியான இருவரின் உயிர் ஊசலாடியது. வழக்கு ஆரம்பமாயிற்று.

சார்லஸ் டவுன் சிறையிலிருந்து வான்செட்டியும் சாக்கோவும் கைவிலங்குகளுடன் மோட்டாரில் கொண்டு வரப்பட்டார்கள். இருவரையும் தனித் தனியாக வேறு கைதிகளுடன் சேர்த்து விலங்கிட்டிருந்தார்கள். இருவரும் நல்ல ஆடையில் காணப்பட்டார்கள். வழக்கம்போல் ஜூரிகள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் குயின்ஸி பட்டணத்தில் பிரதம

போலீஸ் உத்யோகஸ்தராயிருந்த கிழவர் வால்டர் ரிப்லி ஒரு ஜுரி. இவர் ஜுரியாக இருக்கக் கூடாதென்று பிரதிவாதிகளின் வக்கீல் எவ்வளவோ ஆட்சேபித்தும் பயனில்லாது போயிற்று. ஜுரிகள் கொடி வணக்கம் செய்வதில்லை. ஆனால், ரிப்லிக்கு கோர்ட் அனுபவம் பல வருஷங்களிருந்தும் அவர் வரும்பொழுதும் போகும்பொழுதும் கொடி வணக்கம் செய்தார். "அராஜகர்கள், அமெரிக்கக் கொடியை அவமதிக்கிறார்கள் என்ற உண்மையை உலகத்தாருக்கு மறைமுகமாக எடுத்துக் காட்டுவது போலிருந்தது அவருடைய செய்கை. ஏற்கெனவே, அவர் மனம் பிரதிவாதிகளுக்கு விரோதமாக இருந்தது உதாரணமாக கோர்ட்டிற்குப் போகும் மார்க்கத்தில் ரயில்வே ஸ்டேஷனில் சந்தித்த அவருடைய பழைய சிநேகிதரிடம், "நான் இன்று ஜுரியாக இருக்கப் போகிறேன். அராஜகர்களை எப்படியாவது தொலைக்க வேண்டும்" என்று அவர் சொல்லிய விவரம் பல மாதங்களுக்குப் பிறகுதான் வெளியாயிற்று.

கொள்ளைக் கூட்டம் போடா, ஓர்சியானோ, கோயாக்ஸி, கொள்ளைக்காரன் வீடு, வீட்டின் பின்பக்கமுள்ள குடிசை, குண்டிஞல் துளைக்கப்பட்ட "பியூக்" கார், கொள்ளைக் காரர் தப்பித்து ஓடிய "ஓவர் லாண்ட்" கார், பிறகு அவர்கள் மான்லி காட்டில் எறிந்துவிட்ட "பியூக்" கார் ஆகியவை பற்றி உதவி அட்டார்னி, சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தார். இவையனைத்தும் பிளிமத் கோர்ட்டில் பிரிஜ்வாட்டர் வழக்கில் கூறப்பட்ட கதைதான்; அது மறுமுறையும் இங்கு படிக்கப்பட்டது. சம்பந்தமற்ற விஷயங்களைக் கூறி, எதிரிகள் பேரில் ஜுரிகளுக்கு துவேஷம் உண்டாகும்படி செய்தார். பிறகு, பிராசிக்யூஷன் தரப்பு சாட்சிகளின் விசாரணை ஆரம்பமாயிற்று.

லூயிவாடி, முக்கியமான சாட்சிகளில் ஒருவன். அவன் செருப்பாலைத் தொழிலாளி. சாக்கோவை ஒரு கொள்ளைக்காரன் என்று முதலில் பிராக்டன் போலீஸ் ஸ்டேஷனில் அடையாளம் காட்டினான். ஆனால், விசாரணையின் போது, சாக்கோ, கொள்ளைக்காரர்களில் ஒருவனென்று நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லையென்று கூறினான். இந்த வாக்கு மூலம் போலீஸார் தலைமீது இடி விழுந்தது போன்றிருந்தது. அவனைப் பலவாறு இகழ்ந்துரைத்து, அவன் பதினேழு வருஷங்களாகச் செருப்பாலையில் பார்த்துவந்த வேலையையும் இழக்கும்படி செய்தார்கள். இதே கதிதான் பிரதிவாதிகள் பக்கம் சாட்சி சொன்ன இரு தொழிலாளிகளுக்கும் கிடைத்தது.

மேரிஸ் பெநெய்ன் இரண்டாவது சாட்சி. செருப்பாலையில் குமாஸ்தா. கொலை நடந்த பிறகு, சாக்கோ, வான்செட்டி இருவரும் காரில் போகும் போது ஆலையின் ஜன்னல் வழியாகப் பார்த்ததாக அவன் வாக்கு மூலம் கொடுத்தான். பூர்வாங்க விசாரணையில் "சாக்கோதான் கொள்ளைக்காரன் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்று கூறினான். ஆனால் டிஸ்டிரிக்ட் அட்டார்னி ஆபீஸ் உத்யோகஸ்தர்கள், மேரிஸை அடிக்கடி ஜெயிலுக்கு அழைத்துக் கொண்டுபோய், அவன்தான் கொள்ளைக்காரன் என்று சொல்லும்படி வற்புறுத்தினார்கள். எனவே, இப்போது அவனை நேரில் பார்த்து, உயரம், கனம், நெற்றியின் அளவு, கருத்த ரோமம், ஒட்டிய கன்னங்கள், வழுக்கச் சிரைக்கப்பட்ட முகம் என்று அங்க அடையாளங்கள் யாவற்றையும் சொன்னான். கொலை சம்பவத்திற்குப் பிறகு கொள்ளைக்காரர்களின் கார் வீதியில் வேகமாய் ஓடிக்கொண்டிருந்த சமயம், மேரிஸ் ஆலையின் இரண்டாவது மாடியில் நின்று ஜன்னல் வழியாக எட்டிப்

பார்த்ததாகச் சொல்லப்படுகிறது. ஜன்னலுக்கும் வீதிக்கும் உள்ள தூரம் 80 அடி. ஒரு மணிக்கு 18 மைல் வேகத்தில் கார் சென்றதாக வைத்துக் கொண்டாலும் கூட ஒன்றிரண்டு விநாடிகளுக்கு மேல் காரில் உள்ளேயிருப்பவர்களைப் பார்க்க முடிந்திருக்காது. கோர சம்பவத்தைக் கேட்டு கதி கலங்கி நின்ற மேரிஸ், ஒன்றிரண்டு விநாடிகளில் எங்ஙனம் சாக்கோவின் அங்க அடையாளங்களை இவ்வளவு நன்ருகத் தெரிந்து அவன்தான் கொள்ளைக்காரன் என்று உறுதியாகச் சொல்ல முடிந்ததென்பது தான் ஆச்சரியம்! "முன்னதாகப் போலீஸ் விசாரணையில் சாக்கோதான் கொள்ளைக்காரன் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாதென்று மூன்று முறை சொன்னதுண்டா?" என்று பிரதிவாதி பக்கம் குறுக்கு விசாரணை செய்த பொழுது, அப்படி ஒருபொழுதும் தான் சொல்லவில்லையென்று மறுத்தான். எழுத்து மூலமான ரிப்போர்ட்டுகள் சுலபமாகப் புறக்கணிக்கத் தக்கதல்ல, என்று எச்சரிக்கப்பட்ட பொழுது, தான் அப்படிச் சொன்னது உண்மைதான் என்றும், பின்னல், தன்னுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டதாகவும் சொன்ஞன். போலீஸ் கேப்டன் பிராக்டரும், பிங்கெர்டன் ஏஜென்ஸி ஹெல்லியரும், 'டானி,' என்ற பிரபல கொள்ளைக்காரனின் படத்தை மேரிஸிடம் காண்பித்த பொழுது, அவன் கொள்ளைக்காரர்களில் ஒருவன் என்று சொன்ஞன். ஆனல் 'டானி' பிரயிண்டிரி சம்பவம் நடப்பதற்கு முன்னலேயே தண்டனை பெற்ற குற்றவாளியாகச் சிறையிலிருந்தான். ஆலைத்தொழிலாளர் இருவர் கொள்ளையடிப்பதற்காகச் சதி செய்து கொண்டிருந்ததாயும், அவர்கள் இன்னின்னரென்றும் சொன்ஞன். ஆனல், ஆலை சூப்பிரண்டெண்டெண்ட், மேரிஸ் சொல்லும் கூற்று ஆதாரமற்றது, அதற்குச் சிறிதும் மதிப்புக் கொடுக்கக் கூடாது,

மேரிஸ் மிகவும் பொறுப்பற்ற தன்மையில் நடந்துகொள்ளுகிறவன் என்று கூறினான். துப்பறியும் உத்தியோகஸ்தரான ஹென்றி ஹெல்லியர், சூப்பிரண்டெண்டெண்ட் சொன்னதை அப்படியே அந்த பிங்கெர்டன் ரிப்போர்ட்டில் எழுதியிருந்தார். ஆனால் என்னபயன்! மேற்படி ரிப்போர்ட்டுகள் எல்லாம் பிரதிவாதி பக்கத்திற்குக் கிடைக்கக்கூடாதவாறு ஐந்துவருஷங்கள் வரை மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

லூயிபெல்சர் மூன்றாவது சாட்சி. ஜன்னல் வழியாகப் பார்த்தபொழுது கொள்ளைக்காரர் நம்பர் தெரிந்ததாகவும், அதை எழுதி வைத்திருந்ததாகவும், கொள்ளைக்காரன் கழுத்துப் பட்டையில் குத்தியிருந்த ஊசி முதல் பூரா விவரங்களையும் குறித்திருந்ததாயும் வாக்குமூலம் கொடுத்தான். இவன் யூதச் சிறுவன். இரு ஊமைகளுக்குப் பிறந்தவன். அரைப் பயித்தியம். அவனுக்குப் போலீஸாரிடம் மிகுந்த நடுக்கம். குறுக்கு விசாரணையில், சிறுவன் பேந்தப் பேந்த விழித்தான். ஒன்றுக்கொன்று உளறிக் கொட்டினான். ஒரு பொய் சொல்லி விட்டு அதை மறைக்க ஒன்பது பொய் சொன்னான். பெல்சருடன் வேலை பார்த்த மூன்று தொழிலாளர் பிரதிவாதி பக்கம் சாட்சியாக விசாரிக்கப் பட்டதில், துப்பாக்கிச் சத்தம் கேட்ட பொழுது, அவன் பெஞ்சுக் கடியில் பதுங்கிக் கொண்டதாகவும், அவன் ஒருவரையும் பார்க்கவில்லை என்றும் தங்களிடம் ஒப்புக் கொண்டதாகவும், மூன்று சாட்சிகளும் வாக்குமூலம் கொடுத்தார்கள். இவனே எதிரிபக்கம் புலன் விசாரணை செய்தவரிடம், ஒரு கொள்ளைக்காரனையும் தான் பார்க்கவில்லையென்றும் ஒப்புக் கொண்டிருந்தான்.

லோலா ஆண்ட்ரூஸ் நான்காவது சாட்சி. இந்த சாட்சியின் பிதற்றல்களுக்கு முன் அவளுடைய பூர்வ

சரித்திரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். லோலாவின் தகப்பன் இத்தாலியன். தாய் அமெரிக்கப் பெண். தாயார் இறந்து போனுள். தந்தையோ போன இடம் தெரியவில்லை. பதினேழு வயதில் அவள் மணம் செய்து கொண்டாள். அவள் கணவன் பிலிப்பைன் தீவிலிருந்து வந்த ஓர் போர் வீரன். குழந்தை பிறந்த பிறகும் லோலா நடனங்களுக்குப் போய்க்கொண்டிருந்ததால் அதிருப்தி கொண்ட அவளது கணவன்,அவளை நீக்கி விட்டான். தெற்குப் பிரயிண்டிரி குற்றம் நடந்த பொழுது படுக்கையிலிருந்த ஒரு வயோதிகனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவன் மரணத் தருவாயில் அவனுடைய சொத்தில் ஒரு பகுதியைத் தனக்குக் கொடுப்பான் என்று அவள் நம்பினுள். ஆனல் அது வெறுங் கனவாக முடிந்தது. பிறகு குற்றேவல் புரிந்து வயிறு வளர்த்துவந்தாள். ஒழுக்கம் முதலிய உயர் குணங்கள் அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டுபோய் வெகு காலமாயிற்று. இவளது வாழ்க்கையைப் பற்றிப் போலீஸாருக்கு நன்ருகத் தெரியும். ஆகவே, அவளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர்கள். குற்றம் நடப்பதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன் அவள் வீதியில் போய்க் கொண்டிருக்கும் போது கொள்ளைக்காரருடன் இரண்டு தடவை பேசிக் கொண்டிருந்ததாயும் காருக்குள்ளிருந்தது சாக்கோதான் என்றும் அவள் கதையளந்தாள். பிரதிவாதிகளின் வக்கீல் அவளுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைக் கேட்க ஆரம்பித்தாரோ இல்லையோ அவள் மயக்கமுற்றதுபோல் பாவனை செய்தாள். உடனே நீதிபதி குறுக்கிட்டு அனுவசியமான கேள்விகள் கேட்கக் கூடாதென்று கண்டித்தார். லோலா செருப்பாலைக்குப் போனபொழுது கூடவந்த மிஸர்ஸ் ஜூலியா கேம்பல் என்ற பெண்ணிடம், தான் போகும் மார்க்கத்தில் மோட்டாரின் பக்கத்திலோ

அல்லது மோட்டாருக்குள்ளேயோ ஒருவரையும் கண்டு பேசவில்லை யென்று சொல்லியிருந்தாள். பிரதிவாதி பக்கம் கேம்பல் மேற்கூறிய பிரகாரம் சாட்சி சொன்னாள். ஒரு போலீஸ்காரனும், ஒரு பத்திரிகை நிருபரும், லோலா, கொள்ளைக்காரர்களைப் பார்க்கவில்லை என்று சொல்லியதையும் பின்னால் பிரதிவாதிகள் பக்கம் சாட்சியமாகக் கூறினார்கள். குயின்ஸியிலுள்ள ஒரு சிறிய கடைக்காரன் ஹாரி கரிலான்கி, தனது கடை வாசலில் லோலாவைச் சந்தித்ததாயும், லோலா தன்னிடம் கீழே குறித்தவாறு கூறினதாயும் சொன்னான். லோலா சொன்னதாவது :—

"கொலை வழக்கில் நான் சாட்சிசொல்ல வேண்டுமென்று சர்க்கார் ஆட்கள் என்னை நிர்ப்பந்தம் செய்கிறார்கள். எனக்குக் கொள்ளைக்காரர்களைப்பற்றி என்ன தெரியும்? நான் அவர்களை ஒருமுறைகூடப் பார்த்ததே கிடையாது. நான் எப்படி அவர்களை அடையாளம் காட்டமுடியும்?" கடைக்காரன் சாட்சியினால் லோலாவின் வாக்குமூலத்திற்கு மதிப்பில்லாமல் போவதையறிந்த நீதிபதி, 'தாயர்' குறுக்கிட்டு "லோலாவைக் கட்டாயப்படுத்திய உத்தியோகஸ்தர் யாரென்று நீர் கேட்கவில்லையா?" என்று கேட்டார். கடைக்காரன்: "அந்தக் கேள்வியைக் கேட்கவேண்டுமென்று எனக்குத் தோன்றாததால், நான் கேட்கவில்லை" என்று பதிலுரைத்தான். நிர்ப்பந்தம் செய்த உத்தியோகஸ்தர், யாரென்றும் அதை வெளிப்படுத்தவேண்டிய கடமையைச் செய்யத் தவறிய அந்தப் பொறுப்பற்றவன் வாக்குமூலம் எவ்வளவுதூரம் நம்பிக்கைக்கு உகந்தது என்றும் பின்னால் ஜூரிகளுக்கு எடுத்துக் காட்டினார். நீதிபதி தாயர் மிக்க தந்திரசாலி. பாரபட்சமின்றி நடுநிலைமை வகிப்பது போல நடித்துக் கொள்வார். ஆனால், அதே சமயத்தில் பிராசிக்யூஷனுக்கு அனுகூலமாகவும் இருப்பார். அவரது

பேச்சுத்தானே மேல்கோர்ட்டுக்கு எட்டும். ஆனால், அவருடைய மனப்போக்கை எழுத்துமூலம் எடுத்துக்காட்ட முடியாதல்லவா? எனவே, அவருடைய வெளிப்பேச்சு மிகவும் நிதானமாயிருக்கும். செய்கையோ முற்றிலும் மாறுபட்டது. குறுகிய எல்கைக்குள் அவருடைய மனம் வேகமாயும், தந்திரமாயும் வேலைசெய்யும். சாட்சியின் வாக்குமூலம் எதிரிகள் பக்கம் அனுகூலம்போல் தோன்றினால், உடனே குறுக்கிட்டு சாட்சி குழப்பமடையும்படி கேள்விகளைப் போட்டுவிடுவார். பிராசிக்யூஷன் தரப்பில் ஏதாவது ஒருவிஷயத்தைத் தெளிவுபடுத்தத் தவறிவிட்டால், உடனே அதைச் சுட்டிக்காட்டுவார். லோலாவின் மகன் புனேப் பெயருடன் மெயினில் வசித்து வந்தான். அவள் பொய்ச் சாட்சிசொன்னதாகதனதுமகன் முன்னிலையில் நம்பத்தக்க பல சாட்சியின் மத்தியில் அவள் பிரமாண வாக்குமூலம் எழுதிக் கொடுத்தாள். பிறகு போலீஸார் பயமுறுத்தவே, பிரதிவாதிபக்கம் அவர்கள் வற்புறுத்தியதற்காக அங்ஙனம் சொன்னதாகவும் கூறினாள். துரதிஷ்டவசமாக லோலா தனதுமகனிடம் கொடுத்த பிரமாண வாக்குமூலம் வழக்கு முடிந்தபிறகுதான் வெளியாகியது.

வாலிபன் கெல்லி ஐந்தாவது சாட்சி. அவன் சாக்கோவினுடைய முதலாளியின் மகன். கொலை நடந்த இடத்தில் காணப்பட்ட குல்லாய் சாக்கோவினுடையதென்று நிரூபிப்பதற்காக அச்சிறுவன் பெட்டியில் ஏறினான். கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டிருந்த குல்லாய் சாக்கோ தரித்துக் கொள்ளக்கூடிய அளவுக்குப் பெரிதாக இல்லாதிருந்த போதிலும், அது சாக்கோவினது குல்லாயை ஒத்திருந்ததென்று அச்சிறுவன் சொல்லும்படியாக நீதிபதி தாயர் முயற்சித்தார். அநேக தொழிலாளிகள் வேலைபார்க்கும் ஓர் ஆலையில் தொழிலாளர்

ஒவ்வொருவரும் அணிந்துகொள்ளும் தொப்பியை எப்படித் தெரிந்திருக்கக் கூடும்? குழப்பமடைந்தாலும் நீதிபதியின் கேள்விக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் "அதுதான் அவனுடைய குல்லாய் என்பதாகஎன்னுல் சொல்வதற்கில்லை," என்று பதில் கூறினன். நீதிபதியோ அவனை விட்டபாடில்லை. "சாட்சியிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்" என்று ஆரம்பித்தவர் நிறுத்திக்கொண்டு உதவி அட்டார்னியைப் பார்த்து "நீங்களே அந்தக்கேள்வியைக் கேளுங்கள்" என்ருர். தனது போக்கைக் கண்டு பிரதிவாதிகளின் வக்கீல்கள் அதிருப்திப் படுகிருர்களென்பதை யறிந்த 'வெப்' உதவி அட்டார்னி வில்லியம் மூலமாகக் கேள்வி வந்தால் நல்லதென்று நினைத்து "நீங்கள் அந்தக் கேள்வியைக் கேட்டீர்களா?" என்ருர். சிறிது மந்தஸ்பாவமுள்ள அந்த வில்லியம் "சாக்கோவின் குல்லாயைப்போல் தோன்றுகிறதா?" என்று சிறுவனிடம் கேட்டார். "நிறத்தில் மாத்திரம்," எனச் சிறுவன் பதிலளித்தான். பதிலோ மிகத் தெளிவாக இருந்தது. எனினும் நீதிபதி விடுவதாயில்லை. "கேள்விக்கு அது பதிலாகாது" என்று நீதிபதி சொன்னுர். தான் விரும்பிய பதில் அதுவல்ல என்று பொருள் படும்படியாக அவர் கூறினர். சாட்சி என்ன சொல்லவேண்டுமென்று நீதிபதி எதிர் பார்த்தாரோ அது, அவர் வாயிலிருந்தே கேள்வி ரூபமாக வெளிவந்தது. "அது பொதுவாக சாக்கோவினுடைய குல்லாய் மாதிரிதானே தோன்றுகிறது?" என்று நீதிபதி கேட்டார். இந்த வார்த்தைகள் பாரபட்சமற்ற ஒரு நீதிபதியிடமிருந்து பிறந்தவை! நீதிபதியின் வார்த்தைகளை மறுப்பது அறிவீனம் எனக் கருதிய வாலிபன் "ஆம்," என்ருன். இந்த முறையில் நீதிபதியே வாக்குமூலம்ஜோடிப்பதைப் பிரதிவாதிபக்கம் ஆட்சேபித்தால் நீதிபதி தனது கேள்வியாகஇருக்க வேண்

டாமென்று நினைத்து, அந்தக் கேள்வியை உதவி அட்டார்னி கேட்கும்படி செய்தார். ஆனால் கோர்ட் ரிப்போர்ட்டில் முட்டாள் தனத்தினாலோ அல்லது குரோதத்தினாலோ நீதிபதி திருத்திச் சொன்னபடி தாக்கல் செய்யாமல், விசாரணையின் முழுச் சம்பாஷணையையும் ஒன்று கூட விடாமல் அப்படியே எழுதிக் கொண்டார். நீதிபதி எவ்வளவு தூரம் நேர்மையாக நடந்து கொண்டார் என்பதற்கு அறிகுறியாக அந்த 'ரிக்கார்டு' இன்றும் இருக்கிறது.

குட்ரிஜ் என்பவர் ஆறுவது சாட்சி. "குற்றம் நடந்த இடத்திற்குச் சமீபத்தில் நான் நான்கு பேர்களுடன் இருந்தேன். துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் வெளியே வந்தேன், அப்போது கொள்ளைக் காரருடைய கார் போனதைப் பார்த்தேன். துப்பாக்கியை எனக்கு நேராக நீட்டினான்," என்று அவன் வாக்குமூலம் கொடுத்தான். இவன் யார்? இவனுடைய அந்தஸ்து என்ன? இவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இவன் ஒரு சிறு கம்பெனி மானேஜர். பிரயிண்டிரி கொலை சம்பவம் நடந்த ஏழு மாதங்களுக்குப் பிறகு நூற்றுக் கணக்கான டாலர்களைத் திருடிக் கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு கோர்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டான். கோர்ட்டில் சாக்கோவைப் பார்த்த குட்ரிஜ், சாக்கோவைத் தனக்குத் தெரியுமென்றும், தான் அடையாளம் காட்டமுடியுமென்றும், உத்தியோகஸ்தரிடம் ஒப்புக் கொண்டான். திருட்டுக் குற்றத்திற்காகப் பல வருடம் சிறை செல்ல வேண்டிய குற்றவாளி, தப்பித்துக் கொள்ளும் பொருட்டு, குற்றமற்ற சாக்கோ படுகொலையாவதற்குத் துணைபுரிந்தான். குட்ரிஜின் எதார்த்தமான பெயர் எராஸ்டஸ் கார்னிங்விட்னி. இதற்குமுன்

அவன் எல்மிராரிபர், மேட்டரி, ஆர்பன், நியூயார்க் ஆகிய இடங்களில் தண்டனை யனுபவித்தவன். பல பெண்களை வெவ்வேறு பெயர்களுடன் கலியாணம் செய்வதும், அப் பெண்களிடம் உள்ள உடைமைகளை யெல்லாம் பறித்துக் கொண்டு அவர்களைத் தெருவில் விடுவதும் அவன் வழக்கம். அவனுடைய நடத்தை சம்பந்தமான கேள்விகளை அனு மதிக்க ஜட்ஜ் மறுத்துவிட்டார். பிரதிவாதி தரப்புவக்கீல் லீசுவன்சன், தீர்ப்பிற்குப்பின் அப்பெண்களைச் சந்தித்துப் பிரமாண வாக்குமூலம் வாங்கினர். காலந்தாமதித்துக் கிடைத்ததால் அது பலனற்றுப் போயிற்று.

சாட்சிகள் விசாரணை முடிந்ததும் போலீஸ் உத்தி யோகஸ்தர் எழுந்து, சாக்கோ, வான்செட்டி ஆகிய இரு வரும் கைது செய்யப்பட்டு பிராக்டன் போலீஸ் ஸ்டேஷ னுக்குக் கொண்டு வரப்பட்டவுடன் சாட்சிகள் எங்ஙனம் அடையாளம் காட்டினர் என்பதை விளக்கிச் சொன்னர். கேசில் சாட்சியாக இல்லாதவர்கள்சிலர் கொள்ளைக்காரர் களைக் குறித்துவேறு அடையாளங்கள் கூறியிருந்தார்கள்.

ராய் கோல்ட் என்பவன் சம்பவம் நடந்த இடத் திலிருந்து பத்து அடிக்கப்பாலிருந்தான். துப்பாக்கிக் குண்டு பட்டதால் அவனுடைய மேலங்கியில் பொத்தல் ஏற்பட்டது. அவன் சாக்கோ கொலையாளியல்ல எனத் திட்டமாகக் கூறியிருந்தான். இவ்வாறே புலன் விசா ரணையில் இனம் காட்டும் சமயத்தில் மிஸிஸ் கெல்லி, மிஸிஸ் கென்னடி, என்ற இரு பெண்களும் வாக்குமூலம் கொடுத்திருந்தார்கள். அவை மறைக்கப்பட்டன. இந்த விவரங்கள் யாவும் பின்னல்தான் வெளியாயின. இவைகள் எல்லாம் பிங்கெர்டன் ரிப்போர்ட்டில் இருந்தன. பிரதிவாதிவக்கீல் ஒருவரின் அசௌகரியத்தால் வழக்கு

ஒரு வாரம் ஒத்திப்போடப்பட்டு அதன் பிறகு ஆரம்ப மாயிற்று.

சாக்கோ சம்பந்தமான சாட்சிகளின் விசாரணை முடிந்தது. வான்செட்டி சம்பந்தமான சாட்சிகள் விசாரணை ஆரம்ப மாயிற்று. வாதி பக்கம் முக்கியமான சாட்சி லெவஞ்சி, இவன் ரெயில்வே கேட் காவலாளி. வயோதிகன். குற்றம் நடந்த சிறிது நேரத்தில் கொள்ளைக் காரர்கள் ரயில்வே கேட்டைத் தாண்டிப்போனதைப் பார்த்ததாக அவன் வாக்குமூலம் கொடுத்தான். "கொள்ளைக்காரர் கார், கேட் பக்கத்தில் வரும்பொழுது ரயில் வரக்கூடிய சமயம். எனவே, கேட் கதவுகளைச் சாத்த ஆரம்பித்தேன். காரிலிருந்த கொள்ளைக்காரர்கள், ரிவால் வரை நீட்டிப் பயமுறுத்தியதால் கார் போகும்படி விட்டுவிட்டேன். வான்செட்டி காரை ஓட்டிச் சென் ருன்," என்று அவன் சொன்னுன். இது எவ்வளவு தூரம் நம்பத் தகுந்தது என்பதைக் கவனிப்போம். பின்னுல் பிரதிவாதி பக்கம் சாட்சியாக எஞ்ஜின் போர்மன் விசாரிக்கப்பட்டான். அவன் ஒரு அராஜகன் அல்ல. ஒரு அயர்லாந்துக்காரன். அவன் கொடுத்த வாக்குமூலமாவது: "குற்றம் நடந்து முக்கால் மணி நேரம் கழித்து நான் லெவஞ்சியைச் சந்தித்தேன். கொள்ளைக்காரர்களைப் பார்க்கவில்லையென்றும் துப்பாக்கியை மட்டும் பார்த்தாயும் பீதியடைந்து குடிசைக்குள் பதுங்கிக்கொண்டதாயும் லெவஞ்சி என்னிடம் சொன்னுன்" என்ருன். பிரதிவாதிபக்கம் விசாரிக்கப்பட்ட வேறு மூன்று சாட்சிகளின் வாக்குமூலங்களும் போர்மேன் சொன்னதை அனுசரித்தே இருந்தன. கொள்ளைக்காரர்களைத் தன்னுல் அடையாளங் காட்ட முடியாதென்று பிரதிவாதி வக்கீலிடம் லெவஞ்சி கூறியிருந்தான். அவன் அவ்வாறு சொன்னதாகத் தனக்கு ஞாபகமில்லையென்று பின்னுல்

மாற்றிக் கொண்டான். பொய்யான வாக்குமூலம் கொடுத்ததைப் பற்றி அவன் சிறிதும் நாணமடையவில்லை. எல்லாம் அவனுக்குத் தமாஷாகவே இருந்தது. லெவஞ்சி விசாரணையை விளையாட்டாக எண்ணினான். ஆனால், லெவஞ்சியின் வாக்குமூலத்தை டிஸ்டிரிக்ட் அட்டார்னி ஜூரிக்கு எடுத்துச் சொல்லி அதை விவாதித்தது பெரிய தமாஷ். வான்செட்டியை டிரைவர் என்று லெவஞ்சி சொன்னது மிஸ்டர் காட்ஸ்மேனுக்கு மிகுந்த திகைப்பை உண்டு பண்ணியது. ஏனெனில், கார் டிரைவர், வாலிபன், குள்ளன், நோயாளி என்பது மற்ற சாட்சிகளின் வாக்கு மூலம். இந்த விஷயத்தில் மட்டும் லெவஞ்சியின் சாட்சி யத்தைப் புறக்கணித்துவிட்டு, மற்ற வாக்குமூலங்களை ஒப்புக்கொள்ளும்படியாக அவர் ஜூரிகளைக் கேட்டுக் கொண்டார். "வான்செட்டி எதார்த்தத்தில் காரின் பின்பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தான். அவன் காரை ஓட்டிச் சென்றதாகத் தவறாக நினைத்துக் கொண்டான்" என்று மழுப்பினார்.

போலீஸாருக்குக் கிடைத்த எதார்த்தமான சாட்சி லெவஞ்சி மட்டிலும்தான். ஆனால் வழக்கின் பலவீனத்தை மறைக்கும்பொருட்டு இன்னும் சில சாட்சிகளையும் விசாரித்தார்கள்.

டால்பியர், "குற்றம் நடைபெறுவதற்கு ஐந்து மணி நேரத்திற்கு முன்னதாக, தெற்கு பிரயிண்டிரியில் அன் னிய நாட்டினர் நிறைந்த ஒரு மோட்டாரில் வான்செட்டி இருந்ததைப் பார்த்தேன். ஒருவன் முன் பக்கம் குனிந்து கொண்டு, மற்றொருவனுடன் பேசிக் கொண்டிருந்தான். எனவே நான் குறிப்பாக அந்த மோட்டாரைக் கவனித் தேன். வான்செட்டியை, அதற்கு முன்னோ பின்னோ தெரியாது," என்று சொன்னான். குறுக்கு விசாரணையில்

நகரத்தின் வழியாகக் கப்பல்கள் நிற்குமிடத்திற்கு எந் நேரமும் தொழிலாளரை ஏற்றிக்கொண்டு மோட்டார்கள் சென்று கொண்டிருந்ததாக அவன் ஒப்புக்கொண்டான். மேலும், அந்தக் காரிலிருந்தவர்களில் வான் செட்டியைத் தவிர வேறு ஒருவரையும் அடையாளம் தெரியாது என்றும் ஒப்புக் கொண்டான்.

குற்றம் நடந்த தினத்தன்று காலை வான்செட்டி பிளிமத்திலிருந்து ஈஸ்ட் பிரயிண்டிரிக்கு ரயிலில் வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததாக மற்ருெரு மனிதன் சாட்சி சொன்ஞன். அன்று பிளிமத்திலிருந்து ஈஸ்ட் பிரயிண்டிரி பிரயாணத்திற்கு டிக்கட் விற்கவில்லை யென்று ஒரு கண்டிராக்டரும், மூன்று டிக்கட் ஏஜெண்டு களும் சொல்லிய சாட்சியத்திஞல் அவனது வாக்கு மூலம் பொய்யென்று நிரூபிக்கப்பட்டது.

வேருெரு "ரயில் கேட்"டில் காவலாளியாயிருந்த ஒருவன், குற்றம் நடந்ததற்கு ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஒரு கார் கடந்து போனதாகவும், காரின் முன் பக்கமிருந்தது வான்செட்டிதான் என்று நினைத்ததாகவும், வாக்குமூலம் கொடுத்தான். இந்த சாட்சியத்தை ஆதார மாகக் கொண்டு தான் வான்செட்டி குற்றவாளி எனத் தீர்மானிக்க வேண்டியிருந்தது.

இருவர் பேரில் கொலைக்குற்றம் சுமத்துவதற்கு எவ்வளவு உண்மையான சாட்சிகள்! எவ்வளவு பொருத்த மான வாக்குமூலங்கள்! சரியாக இனங்காட்டப்படவே யில்லை. ஆஞல் சாட்சியத்தைப்பற்றி ஜட்ஜ் தாயருக்கு என்ன கவலை? மூன்று வருடங்கள் கழித்து, "இந்தத் தீர்ப்பு கண்ஞல் கண்ட சாட்சியத்தை வைத்துக்கொடுக் கப்பட்டதல்ல" என்று தாயரே ஒப்புக்கொண்டார்.

மூன்று வாரங்களாக வழக்கு நடைபெற்று வந்தது. ஜில்லா ஜெயிலிலிருந்து கைதிகள் முப்பது தடவை கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார்கள். ஞாயிற்றுக் கிழமை தவிர மற்ற தினங்களில் காலை 8—45 மணிக்கும், சனி ஞாயிறு நீங்கலாக மற்ற தினங்களில் பிற்பகல் 1—45 மணிக்கும் சிறைச்சாலையிலிருந்து கோர்ட் கட்டிடத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். இரு கைதிகளையும் ஒன்றாய்ச் சேர்த்து விலங்கிட்டிருந்தனர். முன்னாலும் பின்னாலும் சென்ற காவலாளிகளின் சங்கிலிகள் குற்றவாளிகளைப் பிணித்து நின்றன. பத்து அல்லது பன்னிரண்டு போலீஸார் ஆயுதபாணிகளாக முன்னால் போய்க் கொண்டிருந்தார்கள். அதே மாதிரியாகப் பின் பக்கத்திலும் பத்துப் பன்னிரண்டு போலீஸார் சென்றனர். கைதிகள் இவ்வளவு படாடோபத்துடன் போவதும் வருவதுமா யிருந்த காட்சியைச் சிறுவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காக கூடுவதில் என்ன ஆச்சரியம்! விசாரணை நடக்கும்போது இரண்டு கைதிகளும், கூண்டில் உட்கார்ந்து கொண்டு நேராகப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் பார்வையாளரைப் பார்க்க முடியாது. அவர்களுடைய வக்கீல்களைத் தவிர வேறு யாரும் அவர்களுடன் பேசக் கூடாது. சில தினங்கள் கழிந்த பிறகு சாக்கோவின் மனைவிக்கு மட்டும் அனுமதி கிடைத்தது. கோர்ட் ஆரம்பமாகும் வரை அவள் தனது கணவனுடன் பேசிக் கொண்டிருந்தாள். பால் குடிக்கும் தனது பச்சைக் குழந்தையுடன் அவள் பரிதாபகரமான நிலையில் கோர்ட்டிலேயே உட்கார்ந்த வண்ணம் அவளுக்கு நன்கு விளங்காத அன்னிய பாஷையில் நடக்கும் விசாரணையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

சாக்கோவும் விசாரணையைத் தெரிந்துகொள்ள முயற்சித்தான். அவனுக்கு எவ்வளவுக் கெவ்வளவு அதிக

மாக விளங்குகிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஆத்திரமும் அதிகமாயிற்று. பல தடவை, அவனும் அவனுடைய தோழனும் பொங்கி எழுந்தார்கள். நீதி, சட்டம், ஒழுங்கு இவற்றின் பெயரால் பொய், பித்தலாட்டம், அயோக்கி யத்தனம் இவை தாண்டவமாடுவதை சகித்துக்கொண்டு எவ்வளவு நேரந்தான் சும்மா இருப்பது? இருவரையும் கைதுசெய்த பிறகு வான்செட்டி பலமுறை துப்பாக்கியை எடுக்க எத்தனித்ததாகப் போலீஸ்காரன் பிரமாணம் செய்யும்பொழுது "பொய், பொய்" என்று வான்செட்டி கூச்சலிட்டான். இது கோர்ட் ஒழுங்கை மீறியதாகும். காவலாளிகள், அவனைக் கீழே இருத்தி "வாயை மூடு" என்று அதட்டினார்கள். லோலா அடையாளங் காட்டும் பொழுது சாக்கோ எழுந்திருந்து "நானு குற்றவாளி, நன்றாகப் பார்த்துச் சொல்" என்று கத்தினான்.

ரோஸி கோர்ட் மொழிபெயர்ப்பாளன். இவன் ஒரு இத்தாலியன். நீதிபதி தாயரின் சிநேகிதன். ரோஸி தனது குழந்தைக்கு "வெப்ஸ்டர் தாயர் ரோஸி" எனப் பெயரிட்டிருந்தான். பாஸ்டனிலுள்ள யுனிவர்ஸிட்டி கிளப்பிற்கு நீதிபதி தாயர் போகும்பொழுது வழக்கைப் பற்றி அவனுடன் விவாதிக்கத் தவறிவிட்டால் ஒரு அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டதாக வெப் கருதுவது வழக்கம். அவன் ஆங்கில பாஷையை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்னவோ! அல்பன் லோபிரினி சாட்சி சொல்லும்பொழுது, சரியான கட்டத்தில் அவன் இத்தாலிய பாஷையில் சொன்ன விஷயத்தை ஆங் கிலத்தில் வேறுவிதமாகத் திரித்துக் கூறினான். குற்றத் தைத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு வான்செட்டி, அந்தத் தப்பிதத்தைக் கோர்ட்டின் கவனத்திற்குக் கொண்டுவந்தான். காவலாளிகள் அவனைக் கீழேதள்ளி பலாத்காரமாக உட்காரச் செய்தும் அவன் அடங்கவில்லை.

அவனுடைய நண்பர்கள் அவனைச் சிறையில் பார்க்கவந்த பொழுதும் வான்செட்டி, ரோஸி ஒரு மோசக்காரன். என்று அவர்களிடம் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான். அதிகார வர்க்கத்தின்மீது அவனுக்குள்ள குரோதத்தினுல் அவன் அப்படிச் சொல்லுகிறுன் என்று அதை அவர்கள் அலட்சியம் செய்துவிட்டனர். காலதாமதமாகி ருஜுவான விஷயங்களில் இதுவும் ஒன்று ஐந்து வருஷங்கள் முடிவதற்குள்ளாக ரோஸி இரண்டு வருஷ தண்டனை யடைந்தான். ஏன்? நீதிபதிகளுடன் அவனுக்கிருந்த செல்வாக்கைப் பணத்திற்காக அவன் துர்விநியோகம் செய்தான். இத்தகையோரே சாக்கோ, வான்செட்டி ஆகிய இருவர் பேரிலும் பழியைச் சுமத்திய கனவான்கள்! நீதி இலாகாவில் ஷானெஸி என்ற பெயருள்ள ஒருவன் ஏஜெண்டாக இருந்தான். அவன் புரட்சிக்காரர்கள் கூட்டங்களுக்குச் சென்று சாக்கோ, வான்செட்டி ஆகிய இருவர் மீதும் வேண்டியமட்டும் புகார் செய்திருந்தான். இதே பேர்வழி பின்னுல் கொள்ளைக் குற்றத்திற்காகப் பன்னிரண்டு வருடங்கள் தண்டிக்கப் பட்டான். அப்பீல் கோர்ட்டில் நீதி இலாகா ஏஜெண்டுகளின் அயோக்கியத்தனத்தைப் பிரதிவாதி தரப்பில் எடுத்துக் காட்டியபொழுது நீதிபதி 'தாயர்' கோபங் கொண்டு கடுமையாகக் கண்டித்தார்.

சாட்சி விசாரணையைக் கவனிப்போம். இனம் காட்டும் சாட்சிகளுக்குப் பிறகு வாதி பக்கம் முக்கியமான சாட்சி, போலீஸ் தலைவன் கேப்டன் பிராக்டர், மசாச்சுசெட்ஸ் குடியரசில் முப்பத்தாறு வருஷங்களாகப் போலீஸ் சர்வீஸிலிருந்து வந்தவர். வழக்குகள் ஜோடனை செய்வதில் கைதேர்ந்த நிபுணர்.

சாக்கோவும் வான்செட்டியும் கைது செய்யப்பட்ட பொழுது மைக்ஸ்டூவர்ட் வேண்டுகோளின்படி பிராக்டர்

எல்லா சாட்சிகளையும் கண்டுபேசி, பிராது தயார் செய்வதற்கு உதவிபுரிந்தார். ஆனால் கேசின் உண்மை தெரிந்த பிறகு "தவறான மனிதர்களைப் பிடித்திருக்கிறீர்கள்" என்று சொல்லி விலகிக்கொண்டார். எனினும் பலநாள் பழக்கமானபடியால் சகாக்கள் விரும்பியபடி சகாயமளிக்காதிருக்க முடியுமா? ஆகவே, சாட்சியாகத் தோன்றினர். இறந்துபோன காவலாளியின் சரீரத்திலிருந்த "குண்டு" சம்பந்தமாக அடையாளம் கண்டு பிடிக்க அவர் ஒப்புக் கொண்டார். கொலைவழக்கில் குண்டு சம்பந்தமான பிரச்சினைதான் மிகவும் முக்கியத்வம் வாய்ந்தது. அந்தக் குண்டுதான் சாக்கோவையும் வான் செட்டியையும் கொலைவழக்கில் பிணைத்தது. ஏனென்றால் கொலை செய்யப்பட்டவர்களின் சரீரத்திலிருந்து எடுக்கப்பட்ட ஐந்து குண்டுகளும் அளவில் பெரிதாக இருந்ததால் அவை சாக்கோவின் துப்பாக்கியினாலோ அல்லது வான்செட்டியின் துப்பாக்கியினாலோ, சுடப்பட்டிருக்க முடியாது. ஆனால், அந்த ஒரு குண்டுமட்டும் சரியாகப் பொருந்தி யிருந்தது, என்பதே பிராசிக்யூஷன் தரப்பு வாதம். துப்பாக்கிக் கலை நிபுணர் ஒருவர் அதை ஊர்ஜிதம் செய்தார். பிராக்டர் சாட்சியமும் நிபுணர் வாக்குமூலத்தை ஆதரிப்பதற்கே கையாளப்பட்டது.

குண்டு சாட்சியத்தை ஆதாரமாகக் கொண்டு விசாரணை முடிந்தது. பிராக்டர் வாக்குமூலத்தைப் போலீஸார் பிரமாதப் படுத்தினார்கள். பிராக்டர், இருபது வருடங்களாக ஆராய்ச்சி செய்திருந்ததாலும் நூற்றுக் கணக்கான பிரதான வழக்குகளில் சாட்சி சொல்லியிருந்ததாலும் அவர் சரியான சாட்சியாகக் கருதப்பட்டார். "வேண்டுமானால் நீங்கள் எல்லா சாட்சியங்களையும் தள்ளி விடலாம். நிபுணர்களின் சாட்சியத்தை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் தீர்ப்புக் கூறலாம்," என்று காட்ஸ்மேன்

ஜூரிகளிடம் கூறினர். "பெருர் டெல்லினுடைய கொலைக்குக் காரணமாக இருந்தது, சாக்கோவினுடைய துப்பாக்கிக் குண்டுதான். இதை ருஜுப்படுத்துவதற்காக பிராக்டர், வான் ஆம்பர்க் இருவரையும் சாட்சிகளாகச் சர்க்கார் விசாரணை செய்தது" என்று நாசூக்காக நீதிபதி அட்டார்னி கூறியதை ஆதரித்தார். இரண்டு வருஷங் களுக்குப் பிறகு பிராக்டர் மரணாவஸ்தையி லிருக்கும் பொழுது, அவருடைய மனச்சாட்சி அவரை வாட்டியது. ஜூரிகளைத் திருப்தி செய்வதற்காக நடந்த சதியாலோ, சனையில் தானும் ஒரு பங்காளியாக இருந்ததால் மின்சார நாற்காலியில் நின்று கொண்டிருக்கும் நிரபராதிகளின் உருவங்கள் அவர் எதிரில் நின்றன. ஆகவே, உண்மையை பிரமாண வாக்குமூலத்தின் மூலம் உணர்த்தினர்.

"சாக்கோவுக்குச் சொந்தமான அதே துப்பாக்கி யால், அதே குண்டு சுடப்பட்டதாகச் சொல்ல வேண்டு மென்று போலீஸார் அடிக்கடி தொந்தரவு செய்து வந் தார்கள். நான் பலமுறை அளவெடுத்துப் பரிசோதித்துப் பார்த்தும் உண்மை அப்படியல்ல வென்று தெளிவாகத் தெரிந்து கொண்டதால், அவ்வாறு கூற மறுத்தேன்." "மரணக் குண்டு சாக்கோவின் துப்பாக்கியினுல் சுடப் பட்டது தானே?" என்ற கேள்வியைத் தன்னிடம் கேட்டால், இல்லை யென்றே தான் பதில் சொல்ல முடியு மெனக் கூறினேன். விசாரணை காலத்தில் மரணக் குண்டு சம்பந்தமாக சர்க்கார் உதவி வக்கீல் கேள்வி கேட்டார். கேள்வி சாமர்த்தியமான முறையில் கேட்கப்பட்டது. நான் அதற்கு "அந்தத் துப்பாக்கியால் சுடப்பட்டிருக் கலாம்" என்று தான் சொன்னேன். இதே ஜட்ஜு தனது ஜூரிகளிடம் வேண்டுமென்று "அந்தக் குண்டு அதே துப்பாக்கியினுல் தான் சுட்டிருக்க வேண்டும்; உலகத்திலுள்ள வேறெந்தத் துப்பாக்கியினுலும் அந்தக்

குண்டைச் சுட்டிருக்க முடியாது என்று வியாக்யானம் செய்தார்," என்பது தான் அந்த மரண வாக்கு மூலம்.

என்ன அபாண்டமான செயல்! என்ன நியாயமான விசாரணை !!

அத்தியாயம் 9

விசாரணை முடிவு

பிரதிவாதி பக்கம் சாட்சி விசாரணை ஆரம்பமாயிற்று. ஐம்பது வயதுள்ள பர்க் ஒரு சாட்சி. இவன் தெற்கு பிரெயிண்டிரி வீதியில், கொள்ளைக்காரர் ரயில்வே கேட்டைத் தாண்டிய இடத்தில் நின்றுகொண்டிருந்தவன். கார் அவனைக் கடந்து பத்தடி தூரம் செல்வதற்குள், முன் பக்கத்தில் வலதுபுறம் இருந்த கொள்ளைக்காரன் வெளியில் எட்டிப் பார்த்து, அவனை நோக்கிச் சுட்டான். ஆனால், அது வெடிக்க வில்லை. பின்பக்கம் வலது புறத்தில் உட்கார்ந்திருந்தவனை பர்க் நன்றாகப் பார்க்க முடிந்தது. அவனுடைய அங்க அடையாளங்கள் ஞாபகமிருந்தன. தட்டையான பரந்த முகம், அகன்று கனத்த நாடி, இவை சாக்கோவுக்கு எள்ளளவும் பொருத்தமற்றவை. இந்த வாக்குமூலத்தைக் கேட்டதும், சர்க்கார் வக்கீல் குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார்.

"நீ பார்த்த துப்பாக்கி என்ன நிறம்?"

"ஊதா"

"நீ துப்பாக்கியைப் பார்த்திருக்கிறாயல்லவா?"

“ஆம்! என்னுடைய பையன் யுத்தத்திலிருந்து ஒன்று கொண்டு வந்தான்.”

“உன்னுடைய பையன் ஒரு துப்பாக்கியை வீட்டிற்குக் கொண்டு வந்ததைக் குறித்து நான் கேட்டதாக நீ நினைத்தாய் போலும்?”

“இல்லை; ஆனால், தானகச் சுடும் துப்பாக்கியைப் பற்றி நீங்கள் கேட்டீர்கள் அல்லவா? நான் ஒரு துப்பாக்கியைப் பார்த்து இருப்பதாகச் சொன்னேன்.

“நீ மறைக்க நினைத்தாய் அல்லவா!”

“மிஸ்டர் காட்ஸ்மேன்! நான் எதையும் மறைக்க எத்தனிக்க வில்லை.”

“பின், முன் யோசனை யில்லாமல் அப்படிச் சொன்னாயா?”

“ஆம் ஐயா. நான் முயற்சித்துக் கொண்டிருக்கும் போதே” (பர்க் பதில் சொல்லி முடிப்பதற் குள்ளாகவே டிஸ்டிரிக்ட் அட்டர்னி இடை மறித்து அடுத்த கேள்வியைக் கேட்டார்.)

“இது வரை கேட்ட கேள்விகளுக்குக் கொடுத்த பதில் யாவும் இம் மாதிரி முன் யோசனை யில்லாமல் சொல்லப் பட்டதுதானே! உண்மையைச் சொல்.”

இம் மாதிரியாக சர்க்கார் வக்கீல், சாட்சிகளை ஏதாவது கேட்டுக் குழப்பி ஆர்ப்பாட்டம் செய்தார்.

குழிதோண்டிக் கொண்டிருக்கும் போது, கொலை சம்பவத்தைப் பார்த்ததாக ஐந்து தொழிலாளிகள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டார்கள். எல்லோரும் கொள்ளைக்

3304

காரர்களில் சாக்கோவாவது, வான்செட்டியாவது இருக்க வில்லையெனப் பிரமாணம் செய்தார்கள். இவர்களில் சிலர் இத்தாலியர், சிலர் ஸ்பெயின் தேசத்தவர். ஆகையால் மொழிபெயர்ப்பாளர் மூலந்தான் பேசவேண்டியதிருந் தது. வக்கீலுக்கு அவர்களைச் சுலபமாகச் சிக்கவைக்க வசதியிருந்தது. உதாரணமாக ஒருவன் கொலைநடந்த இடத்திற்கும் தான் நின்ற இடத்திற்கும் "நாற்பது அல்லது ஐம்பது அடி தூரம்" என்றான். தூரம் துல்லிதமாக இருக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு காட்ஸ்மேன் சாமர்த்தியமாகக் கேட்டார். "சாக்கோவும் வான்செட்டியும் காரில் இல்லையென்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம், 50 அடிதூரத்தில் இருந்தீர்கள் என்பதும். அப்படித்தானே."

"ஆம்!" என்றான், அப்பாவி சாட்சி. பின்பு காட்ஸ்மேன் படத்தில் அளந்து 95 அடி என்று காட்டவே, அந்த சாட்சியின் வாக்குமூலம் அடிபட்டுப் போயிற்று. காட்ஸ்மேன் முடிவுரையில், அந்தத் தொழிலாளர்கள் எல்லோரும் கோழைகள், "கைகளில் கோடரி வைத்து இருந்தும் கொள்ளைக்காரர்களை எதிர்க்காத இந்த பேடிகளின் வாக்குமூலத்தை எப்படி நம்புவது?" என்று இகழ்ச்சியாகக் கூறினர்.

துப்பாக்கியில் பரிச்சயமுள்ள இரண்டு நிபுணர்கள் பிரதிவாதிபக்கம் சாட்சிகள். ஒருவர் தோட்டாக்கம்பெனியில் தலைமைப்பதவி வகிப்பவர்: கைத்துப்பாக்கி சுடுவதில் சமர்த்தர். மற்றொருவர், 'கோல்ட் ஆட்டோமேட்டிக் பிஸ்டல்' கம்பெனி மேற்பார்வையாளர். இந்தக் கம்பெனிதான் சாக்கோவின் துப்பாக்கியைச் செய்தது. (கேப்டன் ப்ராக்டரைக் காட்டிலும் கம்பெனி மேற்பார்வையாளர் அதிகமாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்

டும்.) இரு மேதாவிகளும் "மரணக்குண்டு" சாக்கோவினுடைய துப்பாக்கியினுல் சுட்டிருக்க முடியாதென்று வாக்குமூலம் கொடுத்தார்கள். மேலும் இவர்கள் தங்கள் (ப்ராக்டரைப் போல)அபிப்பிராயத்தைப் பின்னுல் மாற்றிக் கொள்ளவும் இல்லே.

கொள்ளேக் காரர்களேப் பார்த்ததாக வாதியின் பக்கம் சாட்சி சொல்லிய லெவஞ்சிக்கு விரோதமாக பிரதிவாதிகளின் பக்கம் சாட்சிகள் விடப்பட்டன. கொள்ளேக் காரர்களேப் பார்க்கவில்லே என்பதாக லெவஞ்சியே தங்களிடம் சொன்னதாக அவர்களது வாக்குமூலம். அதே மாதிரி தண்டனேயடைந்த குற்றவாளி குட்ரிஜ் வாதியின் பக்கம் சொல்லிய வாக்கு மூலத்திற்கு நேர் மாருகத் தங்களிடம் சொன்னதாகவும் நான்கு சாட்சிகள் எதிரியின் பக்கம் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

ஆனுல், என்ன பிரயோஜனம்! அவர்கள் அமெரிக்கர்கள் அல்ல! அமெரிக்கரல்லாதவர் வாக்கு மூலத்தை அந்தக் கோர்ட் எப்படி அங்கீகரிக்கும்?

ஜோஸப்ரோஸன். இவன் ஒரு யூதன். வீதிகளில் அலேந்து ஜவுளி விற்பனே செய்யும் சில்லறை வியாபாரி. இவன் வான்செட்டிக்கு ஒரு உடையை மலிவாகவிற்ருன். ஏனெனில் அதில் ஒரு சிறு கிழிசல் இருந்தது. மேலும் அன்றுஜவுளி தினுசுகளேக் காண்பிக்கும் பொருட்டு வான் செட்டியும் ரோஸனுமே மிஸர்ஸ் பிரினியிடம் சென்று அவரிடம் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். மூன்று வாரத்திற்குப் பிறகு வான்செட்டி கொள்ளேக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட செய்தியைப் பத்திரிகை மூலம் தெரிந்தான். அவனுடைய உருவப்படத்தையும் பார்த்தான். சம்பவம் நடந்த அன்றையத்தினக்

தான் வான்செட்டிக்கு ஆடை விற்பனை செய்ததினம் என்பதாக அவனுக்கு ஞாபகம் வந்தது. இந்தசம்பவத்தை ரோஸன் எடுத்துக்கூறினான். காட்ஸ்மேன் நான்குமணி நேரம் குறுக்கு விசாரணை நடத்தினார். ஒரு வருஷத்திற்கு முன் ஒருதினத்தைக் குறிப்பிட்டு அந்தத் தினத்தில் ரோஸன் இருந்த இடத்தைச் சொல்லும்படி கேட்டார். மூன்று வாரத்திற்கு முன் ரோஸன் இருந்த இடத்தை கூறும்படிக்கும் வினவினார். சிறிது அவகாசம் கொடுத்தால் யோசித்துச் சொல்வதாக ரோஸன் பதில் அளித்தான். "என்ன, வக்கீல்களிடம் கேட்டுத்தான் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டுமோ?" என்று அதை திரித்துக் கூறினார் காட்ஸ்மென். ஜூரிகள் மனதில் என்ன அபிப் பிராயம் ஏற்படுமென்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ளலாம்! ரோஸனுடைய வாக்கு மூலத்தின் உண் மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று போலீஸார் மெய்யாகவே விரும்பினால் அவர்கள் வெகு சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். ஏனெனில், வான்செட்டிக்கு ஆடைவிற்ற அதேதினத்தில் போலீஸ் தலைவன் மனைவி உள்பட பிளிமவுத்தில் அநேகருக்கும் அவன் உடைகள் விற்பனை செய்ததாகக் கூறினான். ஆனால், அவர்கள் ஏன் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்? அந்நிய நாட்டினர் சாட்சியத்தினால் யாதொரு பலனுமில்லை. அவர்களின் வாக்குமூலங்கள் எல்லாம் உண்மையாகாதென்றுஜூரிகள் முடிவு செய்திருந்தார்கள். பிரதிவாதியின் பக்கம் எல்லா சாட்சிகளும் ஜோடிக்கப்பட்ட தாகத்தான் அவர்கள் கண் களுக்குத் தோன்றியது. ஆனால் பலமுறை தண்டனை யடைந்த குற்றவாளி, வலிப்பு நோயுள்ளவிபசாரி, அரைப் பைத்தியம், நிலையற்ற விசித்திரப்பேர்வழி, போலீஸாரின் நிர்ப்பந்தத்துக்கு ஆளானவன்—இத்தகை யோர்களின் வாக்குமூலங்களில் நம்பிக்கை ஏற்பட்டது, விந்தையிலும்

விந்தை! இந்த விசித்திர சம்பவத்தை எப்பொழுதும் எங்கும் கேட்டதில்லை. ஆனால் ஜூரிகள் எப்பேர்ப்பட்டவர்கள்? அவர்களது மனோபாவம் என்ன? என்ற முழு விவரங்களும் பிராசிகியூஷனுக்கும் நீதிபதிக்கும் தெரிந்திருந்தபடியால், முக்கியமான உண்மைகளை ஜூரிகள் தெரிந்து கொள்ளாதபடி மறைத்து, பட்டப்பகலை இரவென்று திரித்துக்கூறி, அவர்களை ஏமாற்றுவதற்காக டிஸ்டிரிக்ட் அட்டார்னியும் நீதிபதியும் கங்கணம் கட்டிக்கொண்டார்கள். இருதரப்பு சாட்சிகளின் விசாரணை முடிந்தபின் பிரதிவாதிகளின் விசாரணை ஆரம்பமாயிற்று. வான்செட்டி கூண்டில் நின்று கொண்டிருந்தான். புதிய கருப்பு உடை, சுத்தமான வெள்ளைநிற கழுத்துப்பட்டை, இவற்றை அணிந்து, கம்பீரமாகததோன்றினான். நீண்டகால சிறை வாசத்தினால், அவனுடைய நெற்றிப்பக்கம் வழுக்கை விழுந்து விட்டது; ஆனால், அடர்ந்து தொங்கும் மீசை அப்படியே இருந்தது. சுருக்கு விழுந்த கபடமற்ற அவனுடையமுகம், சதா சிந்தனையில் ஆழ்ந்திருப்பவன் போன்றும், அறிவு பெறப் பாடுபடும் மாணக்கன் போன்றும் தோற்றம் அளித்தது.

வான்செட்டி கூண்டிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டான். வாக்குமூலம் கொடுப்பதற்காக, சாட்சிகள் நிற்குமிடத்தில் அவன் ஏறி நின்றான். அவனுடைய வக்கீல்களின் கேள்விகளுக்குப் பல மணி நேரம் அவன் பதில் சொன்னான். சாந்தமாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டான். சிறையிலிருந்த காலத்தில் ஆங்கிலம் கற்றுக் கொண்டதால், அவன் ஆங்கில பாஷையில் பதில் சொன்னது மிகவும் கம்பீரமாக இருந்தது. அவனுடைய படிப்பைப் பற்றி பத்திரிகைகள் வியாக்கியானம் செய்தன. ஒரு தடவை மட்டும், தன்னுடைய 'ஸ்பிரிங்பீல்டு' ரஸ்தாவின் பக்கம் வேலை செய்து கொண்டிருந்த நண்பர்

களில் சிலர் கூடியிருக்கும் இடத்தை அவன் குறிப்பிட்டான். அப்பொழுது, காட்ஸ்மேன் குத்தலாகச் சொன்ன வார்த்தைகள் வான்செட்டிக்குக் கோபத்தை மூட்டியது ஜூரிகளிடம் தன் வாழ்க்கைச் சரித்திரத்தைச் சொன்னான். இத்தாலியில் இளமைப் பருவம்—சமையல்காரனுக அடிமைப் பதவி—சரீர நலக் குறைவு—தாயின் மரணம்—அமெரிக்கப் பிரயாணம்—நியூயார்க்கில் காப்பிக் கிளப் அலுவல்—செங்கல் சூளை—கல் பாறை—தந்திக் கம்பி—ஆலை—பின்பு கயிறுலைக் கம்பெனி—இங்கெல்லாம் கூலி வேலை பார்த்தது—யுத்தத்தில் நம்பிக்கை யில்லாததால் மெக்ஸிகோ போய் வந்தது—ஆகியவற்றை விரிவாகவும் விளக்கமாகவும் கூறினுன். மேலும் அவன் சொன்னதாவது :

"நான் மீன் விற்று ஜீவிப்பவன். தெற்குப் பிரெயிண்டிரி குற்றம் நடந்த தினத்தன்று, காலை நேரம் பூராவும் பிளிமத் தெருக்கள் பலவற்றில் மீன் விற்றேன். மத்தியானத்திற்குச் சிறிது நேரத்திற்குப் பிறகு ஜவுளி வியாபாரி ரோஸெனைச் சந்தித்தேன். அவன் எனக்குக் கிழிந்த ஆடை தந்தான் (அந்த ஆடையும் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டது) துணியில் நல்ல பரிச்சயமுண்டு என்பதற்காக, ரோஸெனை மிஸர்ஸ் பிரினியிடம் அழைத்துச் சென்றேன். பிற்பகலில் மீன் வண்டியை மெல்வின் கார்ல் முற்றத்தில் நிறுத்தி விட்டுக் கடற்கரைக்குச் சென்றேன். அங்கு 'கார்ல்' படகுக்கு வர்ணம் தீட்டிக் கொண்டிருந்தான். தெற்குப் பிரெயிண்டிரி கொலை நடந்த சமயத்தில் கார்லுடன் வம்பளந்து கொண்டிருந்தேன். நாங்கள் பேசிக் கொண்டிருந்த பொழுது படகுத் துறையின் சொந்தக்காரன் ஜெஸ்கியும், ஹோமஸ் என்ற மற்ருெரு மனிதனும் அங்கு வந்தார்கள். பிறகு நான் மீன் பிடித்

துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினேன். 6 மணிக்குச் சாப்பிட்டு விட்டு இரவு முழுவதும் பிளிமத்திலேயே கழித்தேன்,'' என்று இவ்வாறாக ஏப்ரல் மாதம் 15ம்தேதி முதல் அவன் கைதியானது வரை, தன் செயல்களையெல்லாம் வான்செட்டி ஜூரிகளிடம் சொன்னான். கிழக்குப் பாஸ்டனுக்குப் போன பொழுது நியூயார்க்குக்குப் போய் சால்ஸெடோவையும், எலியாவையும் பார்த்து வரும்படி அவன் நண்பர்கள் அவனைக் கேட்டுக் கொண்டார்கள் என்று வான்செட்டி சொல்லிக் கொண்டு வரும் பொழுது, காட்ஸ்மேனும் நீதிபதியும் இடைமறித்தார்கள். உண்மையில் குற்றமற்றவர்களானால் கைது செய்யப் பட்ட இரவு பிரதிவாதிகள் பீதியடைந்து போலீஸாரிடம் பொய் சொல்லக் காரணம் என்ன? என்பதைக் குறித்து விவாதிக்க வேண்டும் என்பது தான் டிஸ்டிரிக்ட் அட்டர்னியின் கருத்து. 'அவர்கள் எதார்த்தமாகவே குற்றவாளிகள் இல்லையானால் கைது செய்யப்பட்ட பொழுது துப்பாக்கியின் உதவி கொண்டு தப்பித்துக் கொள்ள முயற்சிப்பானேன்? அராஜகர் என்பதற்காக அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள். அவ்வளவு தானே? சர்க்கார் செலவில் அவர்கள் சொந்த நாடாகிய இத்தாலிக்குப் போகலாம். சாக்கோவுக்கு தற்செயலாக இத்தாலிக்குப் போக வேண்டுமென்ற உத்தேசம் இருந்தது. ஆகையால் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய அவசியமே இல்லை. அவர்கள் குற்றவாளிகளானதால்தான் தப்பித்து ஓட முயன்றார்கள். இந்த அபிப்பிராயம் ஜூரிகள் மனதில் நன்றாகப் பதியும்படி சர்க்கார் வக்கீல் பேசினார். சாக்கோவும் வான்செட்டியும் கைதியாவதற்கு 6, 7 மணி நேரத்திற்கு முன்பு தான் அவர்களுடைய நண்பனும் தோழனுமான சால்ஸெடோ சிறையின் கொடுமையைச் சகிக்க முடியாமல் நியூயார்க்கில் உள்ள சிறைக் கூடத்

தின் பதினன்காவது மாடியிலிருந்து கீழே குதித்தோ அல்லது தள்ளப்பட்டோ உயிர் நீத்த சம்பவத்தை ஜூரிகள் தெரிந்திருந்தார்கள். ஆகையால், இவர்கள் சிறை வாசத்தை நினைத்துப் பயப்பட்டதற்கும் ஒரு காரணம் உண்டென்பது தெளிவாகும். ஆனால் இதை ஜூரிகள் தெரியாதிருக்கும்படி சாமர்த்தியமான முறை அனுஷ்டிக்கப்பட்டது.

வான்செட்டியின் வாக்குமூலத்திலுள்ள தவறுகளை எடுத்துக் காட்ட வேண்டுமென்பது மட்டும் சர்க்காரின் நோக்கமன்று. ஜூரிகளுக்கு அவன் மீது வெறுப்பும் குரோதமும் உண்டாகவேண்டும். அவ்விதம் பகைமையும் வெறுப்பும் ஏற்பட்டு விட்டால், ஜூரிகள் வழக்கின் தன்மையைக் குறித்துச் சிந்திக்க மாட்டார்களல்லவா? ராணுவத்தில்சேர்ந்து கொள்ள விரும்பாமல் மெக்ஸிகோவிற்கு ஓடிப்போன பேடி! துரோகி!! என்ற முடிவிற்கு ஜூரிகளைத் திருப்ப வேண்டும். ஆகையால், கொலை விஷயமான கேள்விகளைச் சுருக்கி மெக்ஸிகோவிற்குப் போனதைக் குறித்துத் தாராளமாகக் குறுக்கு விசாரணை நடத்தினர்கள். "மிஸ்டர் வான்செட்டி 1917ம் வருஷம் மேமாதம் ராணுவத்தில் பதிவு செய்து கொள்ள விரும்பாததால் நீர் பிளிமத்திலிருந்து வெளி நாட்டிற்குச் சென்று விட்டீர் அல்லவா?" என்று காட்ஸ்மேன் கேட்டார்.

வான்செட்டி கட்டாய ராணுவ சேவைக்கு உள்பட்டவன் அல்ல என்பதை மிஸ்டர் காட்ஸ்மேன் தெரிந்திருந்த போதிலும், வான்செட்டியை இகழ்ச்சி செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அவ்வாறு கேட்டார். மேலும் "இந்த தேசம் யுத்தத்தில் இறங்கி யிருக்கும் பொழுது நீர் வெளி நாட்டிற்கு ஓடி விட்டீர். நீர் ஒரு போர் வீரனாக யுத்தம் செய்வதை விரும்ப வில்லை

யல்லவா?" என்றும் கேட்டார். தெற்கு பிரெயிண்டிரி சம்பவம் நடந்த சமயம் வான்செட்டி ஸ்தலத்தில் ஆஜராயிருந்தான் என்பதை நிரூபிப்பதில் டிஸ்டிரிக்ட் அட்டர்னி சிரத்தை எடுத்துக் கொள்ள வில்லை. ஆனால் வான்செட்டி போலீஸாரிடம் பொய் சொன்னான் என்பதையும், தேச பக்தி இல்லாதவன் என்பதையும் திரும்பத் திரும்ப வற்புறுத்தினர்.

சாக்கோவின் குறுக்கு விசாரணையின் போது, பத்திரிகை நிருபர்களும், பார்வையாளர்களும், திடுக்கிடும் படியாக, அதிகாரிகள் இடி முழக்கம் செய்தார்கள். சாக்கோ ஆங்கிலம் நன்குதெரியாதவனாதலால் மொழி பெயர்ப்பாளனின் உதவி அவனுக்கு அவசியமா யிருந்தது. பொங்கி எழும் ஆவேசத்தை அடக்கி யாளும் ஆற்றல் இல்லாததால், சில சமயம் அவன் பரிகாசத்திற்கு ஆளானான். டிஸ்டிரிக்ட் அட்டர்னி 1700 கேள்விகள் கேட்டார். அவை பெரும்பாலும் பொது அபிப்பிராயத்தையும் தேச பக்தியையும் குறித்தவையே. கீழ் காணும் விசாரணை இவ் வுண்மையை விளக்கிக் காட்டப் போதுமானது :—

காட்ஸ்மேன்: 1917ம் வருஷம் மே மாதம் நீர் இந்த தேசத்தைவிட்டுச் சென்றீரல்லவா?

சாக்கோ: ஒரு வார்த்தையில் பதில்கூற முடியாது.

காட்: மிஸ்டர் சாக்கோ, தயவுசெய்து என்னுடைய கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டும். 1917-மேமீ முதல் தடவையாகப் பதிவு செய்து கொள்ள வேண்டிய தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னமே இந்த தேசத்திலிருந்து வெளிக்கிளம்பி விட்டீர் அல்லவா?

இம்மாதிரி நீண்ட நேரம் குறுக்கு விசாரணை நடந்தது. நிம்மதியாகக் காட்டில் மேய்ந்து கொண்டிருக்கும் மானின்மீது, ஒரு புலி திடீரென்று பாய்ந்து, அதன் கழுத்தைக்கவ்வி, அதைக் கொல்ல முயற்சிக்கும்போது, தனக்கு நேரிட்ட ஆபத்திலிருந்து தப்பிக்கும்பொருட்டு ஒரே வேகத்தில் குதித்து ஓடும் மானை, புலிவிடாது துரத்திச் செல்லும் காட்சியைப் போன்றிருந்தது அந்த விசாரணை புலிக்குப் பக்கபலமாகச் செந்நாய் ஒன்று சென்றது போன்றிருந்தது நீதிபதி வெப்தாயரின் செய்கை.

காட்ஸ்மேன்: ஒரு சுதந்திர தேசத்தை விரும்புவதாக நேற்று நீர் கூறியது உண்டா?

சாக்கோ: ஆம்.

காட்: 1917 மே மாதம் நீர் இந்த தேசத்தை நேசித்தீரா?

சாக்கோ: நான் இந்த தேசத்தை நேசிக்கவில்லையென்று சொல்ல விரும்பவில்லை. அப்படி நான் சொன்னதுமில்லை.

காட்: 1917ல் அதே மாதத்தில் நீர் இந்த தேசத்தை நேசித்தீரா? இல்லையா?

சாக்: அந்தக் கேள்விக்கு ஒருவார்த்தையில் பதில் சொல்வது சாத்தியமல்ல.

காட்: பதில் சொல்லுவதற்கு இரண்டு வார்த்தைகளா இருக்கின்றன? ஆம் அல்லது இல்லை என்று சொல்ல வேண்டியதுதானே.

சாக்: அப்படியானல், ஆம்!

காட்: நீர் ஓர் போர் வீரனுகச் சேரும்படி கட்டளையிடும் தருணத்தில், ஐக்கிய அமெரிக்காவின் மீது உமக்குள்ள அன்பைக் காட்டும் பொருட்டுத்தான் மெக்ஸிகோவிற்கு ஓடிவிட்டீரோ?

ஜூரிகளின் மனதில் எதிரிகளைக் குறித்துக் கெட்ட எண்ணம் உண்டாக்கவும், கேலிபண்ண வேண்டுமென்ற நோக்கத்துடனும்தான் காட்ஸ்மேன் திரும்பத் திரும்பக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். "அன்பு" என்ற வார்த்தையைப் பதினேரு முறை உபயோகித்துப் பல கேள்விகளைக் கேட்டார். சாக்கோ தன் தேசத்தின் மீதுள்ள அன்பினுல் ஓடிப்போனுனு? அவனுடைய மனைவியின் பேரில் உள்ள அன்பினுல் ஓடிப்போனுனு? என்று விஷமமாகக் கேட்டார். "உம்முடைய மனைவி உம்மை விரும்பிய பொழுது அவளைவிட்டு ஓடியதுதானு, நீர் அவளிடம் காட்டும் அன்பு?" என்று பரிகசித்தார்.

சாக்: நான் அவளை விட்டு ஓடவில்லையே!

சாக்கோவின் வக்கீல்: (இடைமறித்து) நான் ஆட்சேபிக்கிறேன்.

வெப் தாயர்: (தந்திரமாக) அவர் சொல்லட்டும். வாக்குமூலம் எவ்வளவு தூரம் நம்பத்தகுந்தது என்பதை நிரூபிக்கக் கேட்கும் கேள்விகள்தானே!

காட்: (மறுபடியும்)உம்முடைய மனைவி உம்மை வேண்டும்போது நீர் அவளை விட்டு ஓடுவதுதானே, நீர் அவளிடம் காட்டும் அன்பின் அடையாளம்?

சாக்கோவின் வக்கீல்: (இடைமறித்து) என்னை மன்னிக்கவும். இது பொருத்த மற்ற கேள்வி.

(ஜட்ஜும் ஒருவாறு ஒப்புக்கொண்டார். ஆனால், கேள்வியின் போக்கை மாற்றும்படி சர்க்கார் வக்கீலைத்தூண்டும் உத்தேசத்துடன்)

வெப் : அவர் ஓடினதாக ஒப்புக் கொள்ள வில்லையே !

காட் : ஐக்கிய குடியரசின் படை வீரனுகச் சேருவதினின்றும் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு மில்போர்டிலிருந்து நீர் ஓடினீரல்லவா ?

சாக் : நான் ஓடவில்லை.

காட் : எப்படியும், இதை விட்டுப்போய் விட்டீரல்லவா?

சாக் : ஆம் !

காட் : ஓடினீர் என்று நான் சொன்னதை நீர் புரிந்து கொள்ள வில்லை.

சாக் : 'ஓடினேன்' என்பது இழிவானது.

காட் : இழிவானதா ?

சாக் : நீங்கள் சற்றுப் புரியும்படி கேளுங்கள்.

காட் : உம்முடைய சேவை தேசத்திற்கு அவசியமான சமயம் தேசத்தை விட்டுப்போவது கேவலமென்று நீர் நினைக்க வில்லையா ?

சாக் : எனக்கு யுத்தத்தில் நம்பிக்கை இல்லை.

காட் : யுத்தத்தில் உமக்கு நம்பிக்கை இல்லையா ?

சாக் : இல்லை.

காட் : நீர் செய்த காரியம் கோழைத்தனம் என்பதை நீர் கருதவில்லையா ?

சாக்: இல்லை.

காட்: அது வீரத்தனம் என்பது உமது அபிப்பிராயமோ?

சாக்: ஆம்.

காட்: உம்முடைய மனைவியை விட்டுப்போவதும் வீரச் செயல்தானே?

சாக்: ஆம்!

காட்: அதிலும், உமது பாதுகாப்பு தேவையாயிருக்கும் போது?

சாக்: ஆம்!

இவ்விதமாக சாக்கோமீது எவ்வளவு வெறுப்பு உண்டு பண்ணமுடியுமோ அவ்வளவிற்குக் கேள்விகளைக் கேட்டார். மேலும், இத்தாலியர்கள் பணம் திரட்டும் பொருட்டுத்தான் அமெரிக்காவுக்கு வந்தார்கள், என்ற பிரச்னையை எடுத்துக்கொண்டு அவமானப்படுத்தும் நோக்கத்துடன் சர்க்கார் வக்கீல் திரும்பவும் கேள்வி அம்புகளைப் பொழிய ஆரம்பித்துவிட்டார்.

காட்: ஐக்கிய அமெரிக்காவில் ஒருவாரத்தில் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறீரோ, அதற்குத்தகுந்தபடி நீர் இந்த தேசத்தை நேசிக்கிறீரா?

சாக்: மேலான நிலைமை கிடைப்பதை உத்தேசித்து நேசிக்கிறேன்.

காட்: இது பணம் சம்பாதிப்பதற்குச் சிறந்த தேசந் தானே?

சாக்: ஆம்.

காட்: இந்த தேசத்தின் மீதுள்ள உமது அன்பை அளக்கும் கருவி நீர் சம்பாதிக்கும் தொகைதானே?

சாக்: நான் ஒருபோதும் பணத்தை விரும்பியதில்லை.

சம்பந்தமற்ற குறுக்கு விசாரணையை சாக்கோவின் வக்கீல் எவ்வளவோ மறுத்தும் ஜட்ஜ் அதைப் பொருட்படுத்தவில்லை. அதுமட்டுமல்ல. பிராசிக்கியூஷன் தரப்புக்கு அனுசரணையான முறையிலேயே பேசிக்கொண்டிருந்தார். அதற்கு ஒரு சிறு உதாரணம்:—

எதிரியின் பக்கம் கேஸ் என்னவென்றால், கைது செய்யப்பட்ட இரவில் எதிரிகள் போடா, ஓர்சியானோ ஆகிய இருவர்களுடன் சென்று சில அராஜகத்தோழர்களிடமிருந்து அபாயகரமான புரட்சிப் பிரசுரங்களை அப்புறப்படுத்தினார்கள் என்பதே. இதைச் சொல்லும்போதே ஜட்ஜ் குறுக்கிட்டு "இப்பிரசுரங்களை பாதுகாப்பதுதான் அமெரிக்கதேசத்தைப் பாதுகாப்பதா?" என்ற சம்பந்தமற்ற பிரச்னைகளைக் கிளப்பி, ஜூரிகளின் மனத்தில் எதிரிகளின்மீது விரோத மனோபாவத்தை வளர்த்தார்.

மறுதினமும் விசாரணை ஆரம்பமாயிற்று. சர்க்கார் வக்கீல்: "நீர் சுதந்திர தேசத்தை விரும்புவதாகக் கூறினீரே, அதன் அர்த்தம் என்ன?" பதினான்கு மாதங்களாகச் சிறையிலடைக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுக்கிடந்த சாக்கோவின் உள்ளத்தில் ஜீவியகாலச் சிந்தனைகள் பொங்கிக் கிளம்பின. ஆர்வத்துடனும் கம்பீரத்துடனும், எல்லோருடைய கவனத்தையும் கவரச்செய்யும் முறையில், அமெரிக்காவைப்பற்றியும் இத்தாலியைப் பற்றியும், தொழிலாளர் உரிமைகளைப் பற்றியும் சாங்கோபாங்கமாக விளக்கினான். ஆனால், அந்தப் பேச்சுத்தான் அவனது கழுத்துக்கு வந்த சுருக்கு என்பதைத் தெரிந்துகொண்ட சர்க்கார் வக்கீல்

புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். நீதிபதியும் சந்தோஷத்துடன் ஆசனத்தில் சாய்ந்திருந்தார். ஜூரி களுக்கும் தாங்கள் உயர்வாகக் கருதுகின்ற பல கொள் கைகளையும் ஸ்தாபனங்களையும் அவமதிக்கும் ஒரு காலி யைத் தண்டிக்கும் ஒரு மகத்தான பாக்கியம் கிடைத்ததே என்ற எண்ணத்தில் பரம திருப்தியுடன் கேட்டுக் கொண் டிருந்தார்கள்.

சாக்கோவின் வாக்குமூலம்: நான் சிறுவனாக இருக் கும் போதே குடியரசை விரும்பினேன். குடியரசில் தான் மக்களுக்குக் கல்வியும், உயர்வும் ஏற்படுமெனக் கருதினேன். அந்த அபிப்பிராயத்தோடேயே அமெரிக் கக் குடியரசை நாடி வந்தேன். ஆனால், இங்கு வந்த பிறகு ஏமாற்றம் அடைந்தேன். இங்கோ புத்தம் புதிய காய்கறிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆனால், யாருக்கு அவை பிரயோஜனம்? பணம் படைத்தவர் களைத் தவிர ஏழைத் தொழிலாளிகள் அவற்றை எவ்வாறு அனுபவிக்க முடியும்? பதின்மூன்று வருஷம் கடுமையா கப் பாடுபட்டும், குடும்பத்தை நல்ல நிலையில் வைத்துக் கொள்ளவோ, பாங்கியில் ஒரு காசு போடவோ, குழந்தை களுக்குக் கல்வி கற்பிக்கவோ முடியவில்லை. போகட்டும் விரும்பியதைப் படிக்கவோ, பேசவோ, எழுதவோ, ஒருவித சுதந்திரமாவது கிடைக்குமென்று எதிர் பார்த் தேன். அதுவுமில்லை. ஆனால், இந்தச் சுதந்திரத்திற்காக நூற்றுக் கணக்கான மேதாவிகளும், அறிவாளிகளும், பல வருடங்கள் சிறைப்பட்டு மாண்டு மடிவதைக் காண் கிறேன்.

“சமதர்மி” என்பதற்காக ‘டெப்ஸ்’ என்ற பெரியார் இன்றைக்கும் சிறையில் வாடுகிறார். பாட்டாளி மக்கள் சுகமாக வாழ வேண்டும், கல்வி பெற வேண்டும், முன்

னேற வேண்டுமென்று அவர் விரும்பினர். ஆனல், முதலாளி வர்க்கமோ, தொழிலாளிகளின் வளர்ச்சியை விரும்பவில்லே. தொழிலாளிகள் எப்பொழுதும் தங்கள் காலடியிலேயே கிடக்க வேண்டும் என்று முதலாளிகள் விரும்புகிருர்கள். தொழிலாளர் குழந்தைகள் உயர்தரக் கல்லூரிகளில் படிப்பதை எப்படி அவர்களது மனம் ஒப்பும்? ஆனல், ராக்பெல்லர் போன்றவர்கள் லட்சக் கணக்கான டாலர்களே ஹார்வர்டு சர்வகலாசாலேக்குக் கொடுக்கிருர்களே என்று கேட்கலாம். ராக்பெல்லர் பெரிய மனிதர் என்ற பல்லவி ஓயாது நம் காதில் விழவில்லேயா? அதற்காகத்தான். அவர் கொடுத்திருக்கிற பணத்திஞல் ஏழைகளுக்கு என்னலாபம்? ஹார்வர்டு சர்வகலாசாலேயில் யாருடைய பிள்ளேகள் படிக்கிருர்கள். வாரம் 20, 30 டாலர்கள் சம்பளம் வாங்கும் தொழிலாளிகளின் குழந்தைகள் அக் கலாசாலேயில் எவ்விதம் சேர முடியும்? அவர்கள் வாழ்நாளேக் கழிப்பதே பெரும் பாடாக இருக்கிறது. ஆகவே, நான் விரும்புவது இயற்கை அளிக்கும் சகல பொருள்களேயும் எல்லோரும் அடைய வேண்டும் என்பதே. எல்லோருடைய நிலேயும் உயர்வதற்காகப் பாடுபடும் தொழலாளிகளே நான் விரும்புகிறேன். சகல பொருள்களேயும் நாசமாக்கும் யுத்தத்தை நான் வெறுக்கிறேன். யுத்தம்! ஆப்பிரஹாம் லிங்கனும் ஜெவர்சனும், மக்கள் விடுதலேக்காகப் போராடினர்களே, அத்தகைய யுத்தமா? இல்லே. முதலாளி வர்க்கத்தின் யுத்தம். வியாபாரத்திற்காக யுத்தம். நான், ஜெர்மனி, பிரான்சு, அயர்லாந்து முதலிய தேசங்களிலுள்ள தோழர்களுடனும் சேர்ந்து உழைத்திருக்கிறேன். எனது மனேவியையும், எனது தேச மக்களேயும் விரும்புவது போன்று அவர்களேயும் நான் விரும்புகிறேன். நான், அவர்களேக் கொல்லும்படியாக அவர்கள் என்ன

கொடுமை செய்து விட்டார்கள்? ஒன்றுமில்லை. எனவே' யுத்தத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. நல் வாழ்வும், கல்வியும் குடியிருப்பு வசதியும், மக்களுக்குக் கிடைப்பதற்குப் பாடு படுகிற கூட்டத்தை நான் நேசிக்கிறேன். அக் கூட்டந்தான் சோஷலிஸ்ட்கள்."

இந்த வாக்குமூலம் அமெரிக்க தேசத்தையும் அமெரிக்க நாகரிகத்தையும், பிரபல ஹார்வர்டு சர்வகலா சாலையையும், அவமதித்ததாகப் பிறருக்குத் தோன்றும்படி, சர்க்கார் வக்கீல் திரும்பத் திரும்பக் குறுக்கு விசாரணை செய்தார்.

இவ்விடத்தில் ஜட்ஜ் தாயரின் பாரபட்சத்தைக் காட்டக் கூடிய சம்பவம் ஒன்று குறிப்பிடத்தக்கது. விசாரணை மிகவும் நியாயமான முறையில் நடைபெறுவதாகப் பத்திரிகைகளில் எழுதும்படி நிருபர்களிடம் அடிக்கடி சொன்னார். சாக்கோவின் வாக்குமூலத்தை வேண்டுமென்று திரித்து ஜூரிகள் மனதில் தவறான அபிப்பிராயம் உண்டாகும்படி ஒரு கேள்வி கேட்டார். அக் கேள்வி மறுநாள் பத்திரிகைகளில் வெளியாயிற்று.

பத்திரிகை நிருபரைக் கூப்பிட்டு டைப் நகல் ஒன்றைக் காட்டி 'ரிகார்டில்' இல்லாததை எப்படிப் பிரசுரிக்கலாமென்று மிகவும் கோபத்துடன் கண்டித்தார். நிருபரும் 'ரிகார்டைத்' திரும்பத் திரும்பப் பார்த்துவிட்டு பிரசுரித்தது தவறென்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். பின்னல் 'கோர்ட்' அசலைப் பார்த்ததில் அந்தக் கேள்வி காணப்பட்டது. ஆகவே, பொய்யான 'ரிகார்ட்' ஜோடித்து நிருபரை ஏமாற்ற முயன்ற நீதிபதியிடம் இவ்விருவர்கள் கதி என்னவாகும் என்று சந்தேகிக்க இடமில்லை.

சம்பவம் நடந்த சமயம் சாக்கோவும் வான் செட்டியும் அந்த இடத்தில் இல்லை என்பதற்குப் போது மான சாட்சிய மிருந்தது. டெண்டா மோர் பேங்க் மானேஜர், பல சரக்கு வியாபாரி, பாஸ் போர்ட் ஆபீஸ் கிளார்க் ஆகிய இம் மூவரும் அன்று சாக்கோவை வேறி டத்தில் சந்தித்ததாகச் சாட்சியம் சொன்னார்கள். அதே போன்று வான்செட்டியின் பக்கம் அல்வான் சினு மரினி ரோஸென் முதலியவர்கள் சாட்சி சொன்னார்கள்.

இந்த சாட்சிகள் நீங்கலாக, சாக்கோ, வான்செட்டி ஆகிய இவர்களுடைய வாழ்க்கையைப்பற்றியும் உயர்ந்த நடத்தையைப்பற்றியும், சாட்சிகள் கூறமுடியாதபடி ஒரு சூழ்ச்சி செய்யப்பட்டது. சட்டப்படி குற்றவாளிக ளது முந்தின தண்டனையைப் பற்றி ஜூரிகளுக்குத் தெரியப் படுத்தக் கூடாது. ஏனெனில், ஒருவன் முன்ன மேயே பெருங் குற்றம் செய்ததாகத் தெரிந்தால் சாதார ணமாக அவன் இந்தக் குற்றமும் செய்திருப்பான் என்று நினைக்க இடம் ஏற்படும். ஆகவே, சாக்கோ, வான்செட்டி பிளிமத் கேஸில் ஏற்கனவே தண்டனை யடைந்ததை மறைக்க வேண்டியதிருந்தது. அப்படியானல், அதற்குப் பதிலாகக் குற்றவாளிகள் தங்கள் நடத்தை சம்பந்தமாக வும் சாக்ஷியம் விடக்கூடாது என்று இருதரப்பினரும் ஒத்துக் கொள்ளும்படி நேரிட்டது. ஆகவே, இவ்விரு வரது மாசற்ற வாழ்க்கையையும், உயர்ந்த குணத்தையும் குறித்து சாட்சி கூற முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேலும், வான்செட்டியைப் பொருத்த வரையில் சற்று நல்ல கேசு. ஆகையால் இரண்டையும் தனித் தனி யாக விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டும், வீண் பணச் செலவு என்று அது நிராகரிக்கப்பட்டது.

எதிரி பக்கம் சாட்சிகள் முடிவடைந்ததும் திரும்ப வும் வாதி பக்கத்தில் ஹென்றி எல்லயர் என்பவர் எதிரி

சாட்சியத்தில் ஒன்றைப் பொய் என்று ருசுப்படுத்த விசாரிக்கப்பட்டார். அவர் இந்த சம்பவங்கள் விஷயமாக முழு விசாரணையும் நடத்தியவராகையால் அவர் கையிலிருந்த ரிகார்டுகளில் அவர் செய்த விசாரணை பூராவும் குறிப்பிட்டிருந்த பிங்கெர்டன் ரிபோர்ட்டும் இருந்தது. அதை எதிரி வக்கீல்கள் கவனித்திருப்பார்களேயானால் இந்தக் கேசு தவிடு பொடியாயிருக்கும். ஆனால், அவர்களுக்கு அந்த விவரம் தெரியாது போயிற்று. இரு உயிர்களும் பலியான பிற்பாடு தான், இந்த ரிப்போர்ட்டின் உண்மை வெளியாயிற்று.

ஆகவே, ஏழு வாரம் நடைபெற்ற விசாரணை ஒருவாறு முடிவுக்கு வந்தது. சாட்சியம் பூராவும் 3500 பக்கங்களில் டைப் அடிக்கப்பட்டிருந்தது. பத்து லட்சம் வார்த்தைகளுக்குக் குறைவில்லை. இவற்றை எல்லாம் நன்கு வாசித்தறிந்து சட்டங்களின் நுட்பங்களைத் தெரிந்தும் எவ்விதம் ஜூரிகள் உண்மை கண்டுபிடிக்க முடியும்? அவர்களோ சாதாரண மக்கள்! மனசைக் குழப்பி அவர்களைத் தன் வசப்படுத்த சர்க்கார் வக்கீல் காட்ஸ்மேன் மிகவும் சாமர்த்தியமாகத் தனது கடைசி 'ஆர்கியூமெண்டை' நாலு மணி நேரம் நடத்தினார். சர்க்கார் வக்கீல் நியாயமாக வழக்கை நடத்துவதாகப் பொது அபிப்பிராயம் இருந்து வந்தது. ஆனால், அவருடைய செய்கையோ அதற்கு மாறானது. முன்னமே நாம் குறிப்பிட்ட லோலா ஆண்டுரூசின் கேவலமான சாட்சியத்தைக் குறித்து, வக்கீல் தொழிலில் தனக்குள்ள பதினேரு வருஷ அனுபவத்தில், இவ்வளவு பொருத்தமானதும், நம்பிக்கைக்கு உகந்ததுமான சாட்சியத்தைக் கண்டதே இல்லை என்று, ஆர்வத்தோடு ஜூரிகளிடத்தில் சமர்ப்பித்துக் கொண்டார். பெல்னர் என்பவரின் சாட்சியத்தில் முன் ஒன்று சொல்லிவிட்டு, பின் அதை மாற்றிச்

சொன்னதைக் குறித்து "ஆஹா எவ்வளவு மனிதத் தன்மையுடன் தன்னுடைய தவறை உணர்ந்து உண்மையைச் சொன்னார்!" என்று பாராட்டினார். ரிவால்வரிலிருந்து வெளி வந்த தோட்டாக்கள் சம்பந்தமாக, நிபுணர்களின் சாட்சியத்தை மிகவும் பிரலாபித்து, "இந்தக் கேசில் மற்ற எல்லாச் சாட்சியங்களையும் நீங்கள் தள்ளிவிடலாம். இது ஒன்றே போதுமானது," என்று வாதாடினார். வான்செட்டி அந்தக் காரில் இல்லை என்று சொன்ன, கெல்லி, கென்னடி, என்ற இரு சாட்சிகளையும் மறைத்து விட்டார். இது ஐந்து வருடங்கள் கழித்துத் தான் வெளி ஆயிற்று. இவ்வாறு நாலு மணி நேரம் பேசி, முடிவில் தங்கள் கடமையை நியாயமாகச் செய்யும்படி ஜூரிகளை வற்புறுத்தி ஆசனத்தில் அமர்ந்தார், காட்ஸ்மேன்.

மறு தினம் ஜட்ஜ் தாயரது முடிவுரை ஆரம்பமாயிற்று. புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆசனத்திலமர்ந்து இரண்டு மணி நேரம் ஜூரிகளுடன் பேசினார். கேசில் கரடுமுரடான பாகங்களையும் சட்ட நுட்பங்களையும் நீதிபதி ஜூரிகளுக்கு நன்கு விளக்க வேண்டும். ஆனல், ஜட்ஜ் தாயர் கடவுள், தேசம், அரசாங்கம், அமெரிக்கப் பிரஜா உரிமை, இவைகளைப் பற்றியும், பிரஞ்சு யுத்தத்தில் மாண்ட சிப்பாய்களின் வீரத்தைக் குறித்தும், நீண்ட நேரம் பிரசங்கம் செய்தார்., கேசில் முக்கிய பகுதி வரும் போது, அதை இரண்டொரு வார்த்தைகளில் குறிப்பிட்டு விட்டு மேல் சென்றார். குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடிக்கக் கூடிய அடையாளங்களைக் குறித்தும், குற்றம் நடை பெற்ற தினத்தில் இருவரும் வேறிடங்களில் இருந்ததாகச் சொல்லிய சாட்சியங்களைக் குறித்தும், மேல் எழுந்த வாரியாகக் குறிப்பிட்டு விட்டு, எதிரிகளின் நோக்கம், மனப்பான்மை, இவற்றைத் திரித்து சவிஸ்தாரமாகவும், சாங்கோ பாங்க

மாகவும் மிகுந்த தெளிவுடனும்,ஜூரிகளுக்கு எடுத்துக் காட்டினர். கைது செய்யப் போன போது, எதிரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய எத்தனித்ததைக் குறித்து, 'பன்னிப் பன்னி'ப் பேசினர். சாட்சியத்தை வேண்டு மென்று திரித்து சாக்கோவின் துப்பாக்கியிலிருந்து தான் கொலைக்குக் காரணமான குண்டு சுடப்பட்டது, என்று அபாண்டமாகப் பொய் உரைத்தார். குற்றவாளிகள் என்று சொல்வதற்குக் காரணம் தேடிக் கொண் டிருக்கும் குருடர்களாகிய ஜூரிகளுக்கு வேறு என்ன வேண்டும்! இவருடைய பேச்சைக் கேட்ட வண்ண மாகவே தங்கள் முடிவைப்பற்றி ஆலோசிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

பிற்பகல் பூராவும் கலந்து ஆலோசனை செய்தபின், இரவு எட்டு மணிக்கு நீதிசபை மீண்டும் கூடியது. ஒரே அமைதி. வான்செட்டி பரபரப்புடன் புருவங்களை நெறித்தான். சாக்கோ வெளுத்துப்போய் அசைவற்று நின்றுன். தலையைத் தொங்கவிட்ட வண்ணம் ஒருவர் பின் ஒருவராக ஜூரிகள் ஆசனத்தில் அமர்ந்தார்கள். ஜட்ஜ் (ஜூரிகளை நோக்கி) "கனவான்களே! நீங்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டீர்களா?" முதல் ஜூரி "ஆம்." ஜட்ஜ் "எதிரிகள், குற்றவாளிகளா, இல்லையா?" ஜூரி 'குற்றவாளிகள்தான்!' சாக்கோ, வான்செட்டி இருவரும் ஒருவர் பின் ஒருவராகத் தங்கள் வலது கையை நீட்டி எழுந்து நின்றூர்கள். ஜூரிகளின் தலைவன் "இது முதல்தரமான கொலைக் குற்றம்" என்று சொல்லி உட் கார்ந்தான். ஒரே நிசப்தம். காய்ந்து கொண்டிருக்கும் பாலைவனத்தோற்றம். ஜூரிகள் வெளுத்துச் சவம்போல் காணப்பட்டார்கள்.

வான்செட்டியோ தனக்கு இவ்விதம் ஏற்பட்டது வாஸ்தவம்தானு, என்ற எண்ணத்தால் கையை நீட்டிய

படியே, கற்சிலைபோல் அசைவற்று நின்றான். உலகமே ஒரு சுடுகாடாகத் தோன்றியது, இவ் வீர புருஷனுக்கு. ஜூரிகள் வெளிக்கிளம்ப ஆரம்பித்தார்கள். அப்போது தான் சாக்கோவிற்கு நிலைமை புலனாயிற்று. "இரு நிரபராதிகளைக் கொலை செய்கிறீர்கள்" என்று கத்தினான். இந்தக் குரல் கேட்டதோ இல்லையோ, அவனது மனைவி, ஒரே குதியில் தாவி அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டாள். "ஐயோ, எனது நாயகனைக் கொலை செய்கிறீர்கள்" என்று கதறினாள். அவள் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற தோற்றம் எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தது. அது பார்க்கச் சகிக்காத காட்சி! அளக்க முடியாத கொடுமை !! நினைக்க முடியாத அநியாயம் !!! அங்கு கூடியிருந்த பெண்கள் மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தார்கள். ஆனால், வான்செட்டியோ கற்சிலைபோல் நின்று கொண்டிருந்தான். ஒரு வார்த்தை—ஏதாவது சப்தம்—ஒரு மூச்சு—எதுவும் கிடையாது. வக்கீல்களும் நண்பர்களும் எவ்வளவோ சொல்லியும் சாக்கோவின் மனைவி விட்ட பாடில்லை. "எனது நாயகனைக் கொல்கிறார்கள். நான் என்ன செய்யப் போகிறேன்." என்று அலறினாள்—புலம்பினாள். ஒன்றிரண்டு நிமிஷந்தான். இருதயமற்ற போலீஸார் அவளைத் தள்ளி விட்டு சாக்கோவின் கரங்களில் விலங்கை மாட்டினார்கள். விலங்கு—ஆம், மானிட சேவை புரிந்த கரங்களுக்கு இரும்பு விலங்கு! இருபத்தைந்து போலீஸார் காவல் செய்ய, அவர்கள் வெளியே கொண்டு போகப்பட்டார்கள்.

அத்தியாயம் 10

அப்பீல் மனுக்களும் வீரர்கள் சிறைவாசமும்

சாக்கோ, டிடேம் ஜெயிலுக்கும், வான்செட்டி, சார்லஸ் டவுன் மத்திய ஜெயிலுக்கும், கொண்டு போகப் பட்டார்கள். அப்பீல்வரை சாக்கோ விசாரணைக் கைதி யாகையால் யாதொரு வேலையுமின்றி பொழுது போக்குக்கு வசதியுமின்றி அவன் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனல் வான்செட்டி முந்தின 'பிரிட்ஜ்வாட்டர்' குற்றத்திற்காக 15 வருஷம் தண்டிக்கப்பட்டிருந்ததால், மத்திய சிறையில் கார்களுக்கு நம்பர் "பிளேட்" அடிக்கும் வேலையைச் செய்து வந்தான்.

அப்பொழுது ஐரோப்பா முழுவதும் பெரிய நெருக்கடி. ரஷ்யாவில் கொடிய பஞ்சம். இத்தாலியிலும் மற்ற தேசங்களிலும் பெருங் கொள்ளைகளும், புரட்சிகளும், கடுமையான அடக்கு முறைகளும் நடந்தன. சாக்கோவும் வான்செட்டியும் இவை சம்பந்தமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

வான்செட்டியின் ஆங்கிலப் பயிற்சி நன்கு அபிவிருத்தி யடைந்தது. தனது நண்பர்களுக்கும், வக்கீல்களுக்கும் அராஜகத் தோழர்களுக்கும் அவன் கடிதம்

எழுதின வண்ணமாகவே இருந்தான். ஹார்வர்டு சர்வ கலாசாலைப் பட்டதாரியும் நாணும்படி ஆங்கிலம் எழுதக் கற்றுக் கொண்டான்.

முன்னே வக்கீலாக இருந்த லீசுவன்சனுக்குப் பதிலாக பிரட்மூர் என்ற அயர்லந்திய வக்கீலை அப்பீலுக்கு அமர்த்தினர்கள். இவர் மிகவும் நுட்ப புத்தி யுடையவர். ஒடுக்கப்பட்டவர்களின் வழக்குகளுக்காக வாதாடுவதால் சமூகத்தில் மிகுதியான சங்கடங்களை அனுபவித்தவர்.

அப்பீல் விசாரணைக்கு முன்னதாகவே, மறு விசாரணைக்குப் பல மனுக்கள் செய்யப்பட்டன. ஜூரிகளின் தலைவனுக இருந்த ரிப்ளி என்பவன், சாக்கோவிடம் கண்டெடுக்கப்பட்ட தோட்டா மாதிரி தன்னிடமிருந்ததாகவும், அதைக் கொண்டு போய் மற்ற ஜூரிகளிடம் காண்பித்து ஒத்துப் பார்த்ததாகவும் பிரதிவாதி வக்கீலிடத்தில் அஜாக்கிரதையாக உளறி விட்டான். இந்தச் செய்தி வெளி வந்ததும் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. ஆனல் துரதிர்ஷ்டவசமாக ரிப்ளியை விசாரிப்பதற்கு முன்னதாகவே அவன் இறந்து போய் விட்டான். அது சம்பந்தமாக அவன் மனைவியும் மற்றும் சில ஜூரிகளும் ஒப்புக் கொண்டு சாட்சியம் கொடுத்தார்கள் மேலும் ரிப்ளிதன் நண்பனை டாலி என்பவனிடம் "கேசு விசாரணை நடக்கும் போதே எதிரிகள் எப்படியும் தூக்கில் இடப்படுவார்கள்" என்று சொன்னதும் வெளியாகி விட்டது. அதற்காகவும் மறு விசாரணை செய்ய மனுச் செய்யப் பட்டது.

மற்ெருரு முக்கிய சாட்சியமும் வெளியாயிற்று. கொலை நடந்த தினத்தன்று, கொலைஞர்கள் சுட்டதினல் மேலங்கி துளைக்கப்பட்ட பேர்வழி கோல்ட் என்பவர் தான் என்று எதிரிகளின் வக்கீலுக்குத் தகவல் கிடைத்தது. அவர் சாக்கோவைச் சிறையில் சந்தித்த பிறகு

"இவரை நான் இதுவரை பார்த்ததேயில்லை. சுட்டவர் இவர் இல்லை யென்று அவிடவிட் தாக்கல் செய்தார். ஆனால் ஜட்ஜ் தாயர், அபாண்டமான காரணங்களைக் காட்டி அவற்றை எல்லாம் நிராகரித்து விட்டார்.

இம் மாதிரி இன்னும் பல புதிய விஷயங்கள் வெளியாயின. சர்க்கார்தரப்பில் சாட்சியம் சொன்ன பெல்ஸர், லோலா என்பவர்கள் தங்கள் சாட்சியம் உண்மை இல்லை எனவும், தாங்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்களின் நிர்ப்பந்தத்தினாலே தான் அவர்கள் சொல்லிக் கொடுத்தபடி சாட்சி சொல்ல வேண்டியதிருந்தது எனவும், உறுதி மொழிப் பத்திரங்கள் மூலம் மனுக்கள் தாக்கல் செய்தார்கள். மற்றொரு சாட்சி குட்ரிஜ் என்பவன் ஒரு கருப்புக் குல்லாய். அவன் பல ஸ்திரீகளை மணந்திருந்தான். இந்தக் குற்றங்களெல்லாம் ஜூரிகள் முன்பு மறைக்கப்பட்டன. பின்னால் எதிரிகளின் வக்கீல் மூர் என்பவர், இவ்விபரங்களை எல்லாம் அம்பலத்திற்குக் கொண்டு வந்தார். இக் காரணங்களுக்காக மறு விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டும் பலனில்லாது போயிற்று.

இம் மாதிரி மறு விசாரணை மனுக்களில் மாதங்கள் பல கழிந்து கொண்டிருக்கும் போது, சிறையிலே வான்செட்டி கார்களுக்கு நம்பர் பிளேட் அடிக்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். ஓய்வு நேரங்களில் படிப்பதிலும், எழுதுவதிலும், படித்தவற்றைச் சிந்திப்பதிலும் நண்பர்களுக்குத் தனது அபிப்பிராயத்தை எழுதுவதிலும் மிகவும் முனைந்து நின்றான். ஆங்கிலத்திலும், இத்தாலியிலும், பிளிமத் கேஸ் சம்பந்தமாகவும், தனது சொந்த வாழ்க்கை சம்பந்தமாகவும் பல புத்தகங்கள் எழுதி வந்தான்.

வேறு சில புது சாட்சியங்களும் வெளியாயின. கொலைக்குக் காரணமான தோட்டா, சாக்கோ துப்பாக்கியிலிருந்து சுட்டிருக்க முடியாது என்பதற்கு, நிபுணர்கள் மூலம் சாட்சியம் கொடுக்கப்பட்டது. ஆனால் போலீஸார் வேறு நிபுணர்களை அதற்கு மாருகச் சாட்சி சொல்லும்படி தயார் செய்தார்கள்.

மற்ருெரு சம்பவம். எதிரிகளின் வக்கீல் தாம்ஸனுக்கும், போலீஸ் உத்தியோகஸ்தக் காப்டன் பிரக்டருக்கும் சிநேகிதம். எனவே, தாம்ஸன் கேஸின் உண்மையைச் சொல்லும்படி பிரக்டரைத் தூண்டியதால் பிரக்டரும் ஒப்புக் கொண்டார். கேசு எப்படி ஜோடிக்கப்பட்டது என்றும், அதில்தான் எடுத்துக் கொண்ட பங்கு எது வென்றும் சொன்னர். ஜட்ஜ் தன்னிடம் கேட்டால், தான் உண்மையைச் சொல்லுவதாகவும் சம்மதித்தார். உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம், நியாயாதிபதிக்கு இருந்தால்தானே அவர் பிரக்டரைக் கூப்பிடுவார்? "வேண்டுமானல் அவிடவிட் தாக்கல் செய்யட்டும். பார்த்துக் கொள்வோம்" என்று ஜட்ஜ் கூறிவிட்டார்.

மனுக்கள் விசாரணையிலேயே மூன்று வருஷங்கள் கழிந்தன. சாக்கோவின் நிலைமை மிகவும் கவலைக்கு இடமாயிருந்தது. பயனில்லா விசாரணையினுலும் அனுவசியமான தாமதத்தினுலும், மனச்சோர்வும் வேதனையும் ஏற்பட்டன. தன்னை வெறுக்கின்ற நீதிபதியிடமிருந்து நியாயம் கிடைக்குமென்று தன் தோழர்கள் எதிர்பார்ப்பதை, அவனல் புரிந்துகொள்ள முடியவில்லை. தனது மனதில் ஏற்கனவே முடிவு செய்திருப்பதை உடனே முடிக்காமல் வருடக்கணக்காய் ஜட்ஜ் தாமதம் செய்வதையும் அவனல் புரிந்துகொள்ள முடியவில்லை. அராஜகக்

கட்சியின் பணம் இம்மாதிரி அனுவசியமாகத் தனது விசாரணையில் விரயமாவதை அவன் விரும்பவில்லை. இவற்றை மாறி மாறி நினைத்து, அவனுக்கு மனக் கசப்பும் புத்திமாற்றமும் ஏற்பட்டுவிட்டது. தினம் 24 மணி நேரமும் ஜெயில் அறையில் ஒருவன் எப்படி அடைபட்டுக் கிடக்கமுடியும்? எவரையும் பார்ப்பதில்லை. எவரிடத்திலும் பேசுவதில்லை. இந்த நிலைமை 33 தினம் உண்ணு விரதத்திற்குக்கொண்டு சென்றது. டாக்டர்கள் பரீட்சித்து, அவனுக்கு 'பைத்தியம்' என்று கூறியதால், பைத்தியக்காரச் சிறைக்கு அவன் கொண்டு போகப்பட்டான். அங்கு பலாத்காரமாக ஆகாரம் கொடுக்கப்பட்டது. பலாத்காரத்தினுல் ஏற்படும் சங்கடத்தைப் பொறுக்க முடியாமல் உணவு அருந்தினுன். பின்னுல் சற்று சௌகரியமடைந்து பழைய ஜெயிலுக்குக் கொண்டு வரப்பட்டான். அங்கு வேலை கொடுக்கப்பட்டதால் சற்று மனச்சாந்தி ஏற்பட்டது.

வக்கீல் மூர் வழக்கை மேற்கொண்டு நடத்துவதில் பாதுகாப்புக் கமிட்டியில் சில அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுவிட்டன. தனது போக்கில் பிறர் தலையிடுவதை அவர் விரும்பவில்லை. எனவே, பாதுகாப்புக் கமிட்டிக்கும் அவருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. சாக்கோவுக்கும் அவர்மீது அதிருப்தி ஏற்பட்டது. ஆகவே, மூர் விலகிக் கொண்டார்.

பிரபல வக்கீல் வில்லியம் தாம்ஸன் என்பவரைப் பாதுகாப்புக் கமிட்டி அமர்த்தியது. அவருக்கு பீஸ் 25,000 டாலர்கள். எதிர்பாராத விதத்தில் 20,000 டாலர்கள் கிடைத்தன.

வில்லியம் தாம்ஸன் மிக சமர்த்தர். நேர்மை வாய்ந்தவர். கோர்ட்டில் விசாரணை நடைபெறும்போது

பிரசாரத்தின் மூலம் குற்றவாளிகளை விடுதலை செய்வதை அவர் விரும்பவில்லை. இதனால் அவருக்கும் கமிட்டி யாருக்கும் அடிக்கடி அபிப்பிராய பேதம்ஏற்பட்டது. பிரசாரந்தான் பலன் அளிக்கும் என்று கமிட்டியார் கருதினார்கள். எப்பொழுதும் 10 லட்சம் மக்களை சகா யத்திற்குத் திரட்டினாலன்றி, அழிவு நிச்சயம் என்று வான்செட்டி கூறுவான். ஆனால் தாம்ஸன் ஒரே பிடி வாதமாக நிற்கவே, மாபெரும் கண்டனங்களுக்காக நடைபெற்ற ஏற்பாடுகளைக் கமிட்டியார் நிறுத்திக்கொண் டார்கள்.

மறு விசாரணைக்குப் போடப்பட்ட மனுக்கள் ஜட்ஜ தாயரால் நிராகரிக்கப்படவே, சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்யப்பட்டது. 1926-ஜனவரி மாதத்தில் அப்பீல் எடுத்துக்கொள்ளப்பட்டது. வக்கீல் தாம்ஸன் வெகு சாதுரியமாக வாதாடியும் பிரயோஜனமில்லாமற் போயிற்று. முதாளித்துவ சமுதாயச் சேற்றில் ஊறிய கிழ ஜட்ஜ் கூட்டம், இரு அராஜகப் புரட்சிக்காரர்களுக் காகத் தங்கள் சகபாடியான நீதிபதியின் தீர்ப்புக்கு விரோதமாக நியாம் வழங்க எவ்விதம் முற்படும்! அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

வக்கீல் தாம்ஸன் சலிக்கவில்லை. மீண்டும் மனுக்கள் செய்வதில் முனைந்து நின்றார். வீட்டுச் சன்னல் வழியாகக் கொள்ளைக்காரரைக் கவனித்த, கெல்லி, கென்னடி, என்ற இரு பெண்கள், குற்றம் செய்தவன் சாக்கோ அல்ல என்று சர்க்கார் வக்கீலிடம் "ஸ்டேட்மெண்ட்" கொடுத் திருந்தார்கள். ஆனால் ஐந்து வருஷம் வரை அதை வெளி வராதபடி, சர்க்கார் வக்கீல் காட்ஸ்மேன் மறைத்துவிட் டார். இவ்விபரத்தை, தாம்ஸன் துலக்கி, அவர்களிடம் உறுதிமொழிப் பத்திரங்கள் வாங்கி கோர்ட்டில் தாக்கல் செய்தார். இம் முயற்சியும் பயன் இல்லாது போயிற்று.

அதன்பின் மற்ருெரு முக்கிய சம்பவம் நடைபெற்றது. தெற்குப் பிரெயிண்டிரி கொலையில் உண்மையில் சம்பந்தப்பட்ட மடைரு என்பவன், சாக்கோவின் உத்தம மனைவியும், இளங்குழந்தையும் ஜெயிலுக்கு வந்து போவதைக் கருணையுடன் நோக்கினன். மனம் இரங்கினன். தானே குற்றவாளி என்று ஒப்புக்கொண்டான். சாக்கோ, வான்செட்டி நிரபராதிகள் என்று பகிரங்கமாகக் கூறினன். வக்கீலிடம் ஸ்டேட்மெண்டும் கொடுத்தான். வக்கீல் தாம்ஸன் "அவிடவிட்" தயாரித்துக் கோர்ட்டில் தாக்கல் செய்தார். 1926-ம் வருஷம் மே மாதம் மனுச் செய்யப்பட்டது. செப்டம்பர் மாதத்தில் மனு விசாரணைக்கு வந்தது. அக்டோபரில் அது தள்ளுபடியாயிற்று. அப்பீல் விசாரணை 1927 பிப்ரவரியில் எடுக்கப்பட்டு, ஏப்ரல் மாதம் நிராகரிக்கப்பட்டது. ஆகவே, ஒரு வருடம் காலதாமதம் ஆனதைத் தவிர வேறு எவ்வித பலனும் இல்லாமற் போயிற்று.

மற்ருெரு முக்கிய சம்பவமும் நிகழ்ந்தது. லெதர்மான், வெயாண்ட் ஆகிய இருவரும் சட்ட இலாகா ஏஜண்டுகள். மனச்சாட்சி இடம் கொடாததால் இவர்கள் உண்மையை வெளிப்படுத்தினர்கள். இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு சாக்கோ, வான்செட்டி நிரபராதிகள் என்பது தெரியும் என்றும், ஆனல் அவர்கள் பயங்கரமான புரட்சிக்காரர்கள் ஆனதால், எப்படியாவது அவர்களை ஒழித்துவிட முடிவு செய்யப்பட்டது என்றும் அவர்கள் உண்மையை ஒளிக்காமல் சொன்னர்கள். உடனே வக்கீல் தாம்ஸன், இலாகா தஸ்தாவேஜுகளை ஆஜர் செய்யும்படி எவ்வளவோ கேட்டும், தஸ்தாவேஜுகள் கோர்ட்டிற்கு வந்தபாடில்லை. இந்த அநீதி வக்கீல் தாம்ஸனைத் திடுக்கிடச் செய்தது. அவர் மிகவும் உருக்கமாகவும் தெளிவாகவும், உணர்ச்சியுடனும் வாதாடினர்.

சாக்கோவும், வான்செட்டியும் கொல்லப்படுவது பிராதில் சொல்லப்படும் குற்றங்களுக்காக அல்ல; அவர்கள் கொள்கைக்காகவே என்பதை அவர் விளக்கிக்காட்டினார். நிரபராதிகள் என்று தெரிந்தும் சாட்சியம் தயாரித்ததின் முறைகளை விரிவாக எடுத்துரைத்தார். தஸ்தாவேஜுகளைக் கொண்டுவர மறுப்பவர்கள், சர்க்கார் இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஆயினும், அது அநீதி என்பதை ஜட்ஜு தாயருக்குப் பதியும்படி சொன்னார். ரகசிய தஸ்தாவேஜுகள் என்று சொல்லி, எதார்த்தத்தை மறைக்க முயல்வது நியாயமல்லவென்றும், இலாகாவின் ரகசியங்களைத் தங்கள் பிரஜைகளின் உயிரைவிடப் பெரிதாக மதிப்பது கொடிய ஆட்சி முறை என்றும் உணர்ச்சி ததும்ப எடுத்துப் பேசினார். இவற்றை எல்லாம் படுவாவி தாயர் மிகவும் நடுக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். முகம் சுண்டியது. கைகள் நடுங்கின. ஆகவே சீக்கிரம் தீர்ப்புக் கூறவேண்டும் என்று முடிவு செய்தார். உலகம் திகைத்து நிற்கும் விதத்தில் இதுவரை கேட்டிராத அக்கிரம முறையைக் கையாண்டு, சாட்சியத்தில் இல்லாத சில வசனங்களை உற்பத்தி செய்து அவை சாட்சியத்தில் இருப்பதாகத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

சாக்கோவுக்கும் சர்க்கார் வக்கீல் காட்ஸ்மேனுக்கும் நடந்ததாக ஜட்ஜ் குறிப்பிட்டிருக்கும் கற்பனைப் பேச்சு இதுதான்:—

சாக்கோ, தன்னை தேசப்பிரஷ்டம் செய்து விடுவார்களென்றும், தான் இத்தாலிக்குப் போக விரும்பவில்லை என்றும் அந்தப் பயத்தினால்தான் சர்க்கார் வக்கீல் காட்ஸ்மேனிடம் பொய் சொன்னதாகவும், "அப்படியானால் நீ பொய் சொன்னதும், அக் காரியங்களைச் செய்ததும் பயத்தினால்தானா?" என்று கேட்டதற்கு 'ஆம்' என்று ஒப்புக்

கொண்டதாகவும், " நீ குடும்பத்தோடு பாஸ்போர்ட்டு வாங்கிய பிறகுதானே இப்பெரும் பொய் சொன்னது?" என்ற மறு கேள்விக்கும் 'ஆம்' என்று ஒப்புக் கொண்டதாகவும், ஜோடனை செய்யப்பட்டது. ஆனால், கோர்ட் ரிகார்டுகளிலோ, இவ்விதமாக ஒரு வார்த்தை கூடக் கிடையாது.

வழக்கின் விவரம் உலகின் பல பாகங்களிலும் பிரசுரிக்கப்பட்டு, எல்லா இடங்களிலும் பிரசாரம் நடைபெற்றது. எங்கேயோ ஒரு மூலையில் மறைந்து கிடந்த வான்செட்டியின் புகழ் உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்தது. வெறியனாகவும், பயங்கரவாதியாகவும் சித்தரித்துக் கூறப்பட்ட வான்செட்டி அரும்பெரும் மாணுக்கனாகவும் அறிவாளியாகவும் பிரகாசித்தான். ஜெயில் உத்தியோகஸ்தர்கள் கூட அவனுடைய பெருந்தன்மையை உத்தேசித்து, அவனைக் கண்ணியமாக நடத்த ஆரம்பித்தார்கள். சதா எழுதுவதும் படிப்பதுமே அவனது வேலை. நண்பர்களுக்கு எழுதும் கடிதங்களில் அவனது உள்ளக் கிடக்கையை நன்கு காணலாம். உதாரணமாக ஒரு நண்பனுக்கு எழுதியதாவது:

"இத்தாலிய பாஷை உலகில் அழகு வாய்ந்தது என்று சொல்லப்படுகிறது. வாஸ்தவம். நானும் அவ்வாறே கருதுகிறேன். எனது 'தாயின் பேச்சு எனக்குத் தேவ பாஷையாகும். ஆனாலும், அழகையும், உண்மையையும் குறிக்கும்போது எல்லாப் பாஷைகளுமே, அழகு வாய்ந்த தாகின்றன. தங்களது இனிய ஆறுதல் மொழிகளை நட்பின் ஒலி எனக் கருதுகிறேன். அவை எனக்கு சங்கீதம்—எனது உயிர் நாடி."

ஆனால், அபாக்கியனான வான்செட்டிக்கு இவ் வார்த்தைகளும், உணர்ச்சியும் என்ன ஆறுதல் கொடுக்க

3304

முடியும்? அவனே, தான் ஆர்வத்துடன் காதலித்த இயற்கை அன்னையின் மடியில் விளையாட விரும்பினன்.

"பனிமத் சமுத்திரமே! நீலக் கம்பளத்தில் முத்துக்கள் பதித்தாற் போன்ற நட்சத்திரக் கூட்டம் ஒளி வீசும் இரவே! தட்டுத் தடையின்றி வீசும் காற்றே! உங்களை மீண்டும் எப்பொழுதாவது பார்ப்பேனு? உங்களோடு எப்பொழுதாவது ஐக்கியத்துடன் இருக்க முடியுமா?" என்று எழுதும்போது வான்செட்டியின் உள்ளத்தை ஊடுருவிப்பாயும் கொடியதுன்பத்தை நாம் காண்கிறோம்.

இவ்விதம் துக்க சாகரத்தில் ஏழு வருஷங்கள் சாக்கோவும், வான்செட்டியும், தங்கள் சிறைவாசத்தைக் கழித்து வந்தார்கள். சகல மனுக்களும் அப்பீல்களும் நிராகரிக்கப்பட்டு விட்டன. கடைசி முறையாக, அவர்கள் ஜட்ஜ் தாயர் முன்பு கொண்டு வரப்பட்டார்கள்.

கோர்ட் குமாஸ்தா, சாக்கோவை நோக்கி "எழுந்து நில், உனக்கு ஏன் மரண தண்டனை விதிக்கக் கூடாது? ஏதாவது சொல்ல வேண்டுமானல்சொல்" என்று கேட்ட பின், சாக்கோவின் உள்ளத்தில் பல எண்ணங்கள் எழுந்தன; உணர்ச்சி பொங்கித் ததும்பியது. ஆனல், அவனுக்குச் சரியாக ஆங்கிலம் பேச முடியாததாலும், வான்செட்டி தான் பேச வேண்டுமென்று நண்பர்கள் வற்புறுத்தி இருந்ததினலும் சுருக்கமாக மனதில் குமுறிக் கொண்டிருந்த தன் கருத்துக்களைக் கொட்டினன்.

"ஆம், நான் சொல்ல விரும்புகிறேன். நான் பெரிய பிரசங்கியல்ல. எனக்குச் சரியாக ஆங்கிலம் பேச முடியாது எனவே, தோழர் வான்செட்டி விரிவாகப் பேசுவார். நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

"இந்த நீதிஸ்தலத்தைப் போன்று கொடிய தொன்றை, நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஏழு வருட விசாரணைக்குப் பிறகு எங்களைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்புச் செய்து விட்டீர்கள்.

"இந்தத் தீர்ப்பு, வர்க்க மனப் பான்மையால் முதலாளிகள், தொழிலாளிகள் ஆகிய இரு கூட்டங்களுக்கு இடையே ஓயாது நிலவும் வர்க்கப் போராட்டத்தின் எதிரொலி, என்பது எனக்கு நன்ருகத் தெரியும். நாங்கள் பொது மக்களிடையே புத்தகங்களையும், பத்திரிகைகளையும் பரப்பி, அறிவை வளர்க்க விரும்புகிருேம். நீங்களோ அவர்களுக்குத் தீங்கு இழைக்கிறீர்கள்; கொடுமை புரிகிறீர்கள்; அவர்களைக் கொலை செய்கிறீர்கள். நாங்கள் எப்போதும் ஜனங்களிடையே கல்வியைப் பரப்ப விரும்புகிருேம். ஆனல், நீங்களோ மனக் கசப்பை வளர்க்கிறீர்கள். ஆகவே, நசுக்கப்படுகின்ற கூட்டத்தைச் சேர்ந்தவன் என்ற நிலைமையில்தான் நான் இப்பொழுது இந்தக் கூண்டில் நிற்கிறேன். நீங்கள் கொடுமை புரியும் கூட்டத்தார். ஜட்ஜ் தாயரே! இந்த உண்மையை நீர் நன்ருக அறிவீர்! ஏழு வருடங்களாக என்னையும் எனது கதியற்ற மனைவியையும் படாத பாடு படுத்திய பிறகு இன்று மரண தண்டனை விதிக்கிறீர்கள். எனது சரித்திரம் பூராவும் சொல்ல விரும்புகிறேன். ஆனல் என்ன பயன்?" என்று சொல்லித் திடீரென்று உட்கார்ந்துவிட்டான்.

அதே கேள்வி வான்செட்டியிடமும் கேட்கப்பட்டது. மெலிந்து களைத்துக் கவலையால் வழுக்கை விழுந்த வான்செட்டி அடர்ந்து தொங்கிக் கொண்டிருந்த தனது மீசையுடனும், அழகிய கருப்பு ஆடையுடனும் கம்பீரமாகத் தோற்றமளித்தான். ஏழு வருடம் கொடுமை புரிந்த ஜட்ஜ் தாயர் முன்னல் அசைவற்று நின்ருன். சுற்றிலும் பத்திரிகை நிருபர்கள் வீற்றிருந்தார்கள். உலகின்

நாலா பக்கங்களிலும், தான் சொல்லப் போவது பறை சாற்றப்படும் என்பதை உணர்ந்த வான்செட்டி, சாந்தியுடனும், உறுதியுடனும், வரப் போகும் புதிய உலகம் கேட்கும் வண்ணம் என்றும் அழியாப் புகழ் கொண்ட எண்ணங்களை வாக்கியங்களாக அன்று வாரி இறைத்தான். இடிமுழக்கம் பான்றே வஅுன் வாக்கியங்கள் :—

"நான் நிரபராதி. தெற்குப் பிரெயிண்டிரி குற்றத்தையோ, பிரிட்ஜ்வாட்டர் குற்றத்தையோ, வேறு எந்தக் குற்றத்தையோ நான் எனது வாழ்க்கையில் செய்யவில்லை. திருடவோ, ரத்தம் சிந்தவோ, அல்லது கொலை செய்யவோ நான் எக்காலத்தும் எண்ணியதில்லை. எனது அறிவு முதிர்ச்சி அடைந்த காலம் முதல், உலகத்திலிருந்து குற்றம், கொடுமை இவற்றைக் குறைக்கவே, நான் பாடுபட்டு வந்திருக்கிறேன்.

"இந்த இரண்டு கைகளின் வல்லமையை, வலிமையைத் தெரிந்த எவரும், நான் தெருக்களில் அலையவோ, கொலை செய்யவோ, பணம் அபகரிக்கவோ, வேண்டிய அவசியமில்லை என்பதை நன்கு அறிவார்கள். எனது புஜ பலத்தினுல் நான் வாழ முடியும்: அது மாத்திரமல்ல. இக்கைகளைக் கொண்டே எனது சொந்த நலனுக்கு அன்றி, பிறர் நன்மையை நாடி உழைப்பதிலேயே நான் ஜீவித்திருக்க முடியும். உலகத்தார் பொதுவாக உயர்ந்த வாழ்வு எனக் கருதுவது போல் நான் பாடு படாமலே எனது ஜீவியத்தைக் கழிக்க அநேக சந்தர்ப்பங்கள் இருந்தன. எனது தகப்பனுர் இத்தாலியில் நல்ல ஸ்திதியில் இருக்கிருர். நான் இத்தாலிக்குத் திரும்பும் விஷயத்தில் என்னை அன்புடன் ஆதரிக்கவோ தொழில் வசதி செய்து தரவோ, ஏற்பாடு செய்வார். ஆனுல், இக் கெளரவ வாழ்க்கையையோ வாழ்வின் செளகரியங்களையோ நான் விரும்ப

வில்லை. ஏனெனில், மனிதனை மனிதன் சுரண்டி வாழ்வதை நான் வெறுக்கிறேன்.

"ஆகவே நான் எனது வாழ்நாளில் எந்தவிதமான குற்றங்களையும் செய்யவில்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். சில தவறுகள் இருக்கலாம். ஆனால், அரசாங்கச் சட்டத்திற்கும் உயர்ந்த பொது நீதிக்கும் ஒவ்வாத எந்தக் குற்றத்தையும் நான் செய்யவில்லை. அது மட்டுமா? அரசாங்கச் சட்டத்தையும், உலக சம்பிரதாயப்படி பொது நீதி எனக்கருதி வளர்த்து வருகிறோமே! மனிதனை மனிதன் சுரண்டல், மனிதனை மனிதன் அடக்கிக் கொடுமை செய்தல், ஆகிய கொடுங் குற்றங்களை நான் செய்ததில்லை. அக் குற்றங்களையும், கொடுமைகளையும் நீக்குவதற்குப் பாடுபடும் ஒரே காரணத்தினால்தான் நான் உங்கள் முன் குற்றவாளியாக நிற்கிறேன். இன்னும் சில நிமிஷங்களில் உங்கள் கைகளிலிருந்து மரண தண்டனை பெறப் போகிறேன். அதற்கு இதைத் தவிர வேறு காரணம் எதுவும் கிடையாது.

"ஜட்ஜ் தாயரே! உம்மைவிட ஓரவஞ்சனை பாரபட்சமுள்ளவரும் கொடியவருமான ஜட்ஜ் வேறு எவரும் உலகத்தில் இருக்க முடியாது என்பதை, உலகிற்குக் காட்டி விட்டோம். ஆம்! நன்கு நிரூபித்தாயிற்று. இருந்த போதிலும் இவ்வரசாங்கத்தில் எங்களுக்கு மறு விசாரணை இல்லை. ஆரம்ப காலத்திலிருந்தே, ஏன்? எங்களைப் பார்ப்பதற்கு முன்பே, எங்களுக்கு விரோதியாக இருந்தீர் என்பது எங்களுக்குத் தெரியும். எங்களைக் காணும் முன்னரே நாங்கள் தீவிரப் புரட்சிக்காரர்கள், அடிமை நாய்கள், நீங்கள் போற்றும் பல ஸ்தாபனங்களின் விரோதிகள் என்பது உமக்குத் தெரியும்.

“நீர் எங்களுக்கு விரோதமாகவும் எங்களைக் கேவலப் படுத்தியும், ரயில்களிலும், கிளப்புகளிலும், விளையாடு மிடங்களிலும் தாராளமாகப் பேசியிருக்கிறீர் என்பதும், எங்களுக்குத் தெரியும். இவற்றை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களுக்குச் சற்று தைரியம் இருக்கு மானல், “ஜட்ஜ் தாயரே! நீங்கள் அல்லவா இந்தக் கூண்டில் நிற்க வேண்டும்” என்று மக்கள் கூறி இருப்பார்கள். நீர் வயது முதிர்ந்தவர். எனக்கு உம்மைப் போன்ற தகப்பனர் இருக்கிருர். ஆகையால், இவ் வார்த்தைகளைச் சொல்லும்போது, நான் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

“யுத்தம் கொடுமையானது; யுத்தத்திற்கு நாங்கள் விரோதிகள், என்பதை முன்னைவிட இப்போது பன் முறை வற்புறுத்த விரும்புகிறேன். பொது மக்களே! முதலாளிகள் உங்களிடத்தில் சொன்னவை எல்லாம் உங்களிடத்தில் வாக்குறுதி கொடுத்தவை எல்லாம் பொய்! ஏமாற்றம்! படுமோசம்! பெரும் பாதகம்!! அவர்கள் உங்களுக்கு சுதந்திரம் அளிப்பதாகச் சொன்னர்கள். எங்கே சுதந்திரம்? சுகவாழ்வு வாக்களித்தார்கள். எங்கே, அந்தச் சுகவாழ்வு? உங்களை உயர்த்துவதாகச் சொன்னர்கள். உயர்வு எங்கே? நான் சார்லஸ் டவுனுக்கு வந்தபின் சங்கடங்களும் கொடுமைகளும் முன்னிருந்ததைவிட இருமடங்கு அதிகரித்துவிட்டன. யுத்தத்தினல் எவ்விதம் மனித வாழ்வு புனிதம் அடைந்திருக்கிறது, உயிருக்கு ஆபத்து நீங்கி மனிதர்களின் தேவை எவ்விதத்தில் பூர்தியாக்கப் படுகிறது? எங்கே மனித ஜாதிக்கு மரியாதை? மனித வர்க்கத்தின் உயர்ந்த கொள்கைகளுக்கும் செம்மைக் குணங்களுக்கும் உரிய மரியாதை ஏற்பட்டு விட்டதா? யுத்தத்திற்குமுன் இதுபோன்ற

கொடுமைகளும் தவறுகளும் கேவல ஸ்திதிகளும் ஒரு, போதும் இருந்ததில்லை.

"எந்த ஒரு நாயோ - பாம்போ - இல்லை - கேவலம், ஒரு உயிர்ப்பிராணியும் துன்பப்பட நான் விரும்பவில்லை. நான் தீவிரப் புரட்சிக்காரன் என்பதற்காக இந்தத் தீங்கு இழைக்கப்படுகிறது, என்பது எனக்குத் தெரியும். அதற்காக நான் தீவிரவாதியல்ல, என்று மறுக்கப்போவ தில்லை. நான் தீவிரவாதிதான்.

"நான் இத்தாலியன் என்பதற்காக இந்தத் துன்பம். வாஸ்தவம், நான் இத்தாலியன்தான். நான் எனது குடும் பத்திற்காகவும் என்னை நேசிக்கின்றவர்களுக்காகவும், அதிகமாகத் துன்பம் அனுபவித்திருக்கிறேன். என்னைப் பற்றிய நினைப்பே எனக்குக் கிடையாது. அத்துடன் நான் கொண்ட கொள்கை எதுவோ அதுவே உண்மை என நான் உறுதியாக நம்புகிறேன். ஆகையால், நீங்கள் என்னை ஒரு முறை கொலை செய்வதற்குப் பதில், இரு முறை தூக்கிலிட முடிந்தாலும்சரி, அம் மரணங்களுக்குப் பின் திரும்ப உயிர்பெற்று எழுவேனாகில், நான் தற்சமயம் வாழ்ந்து வருவதைப் போன்று வாழ்வதற்கும், நான் செய்து வருபவைகளையே திரும்பத் திரும்பச் செய்வ தற்கும் நான் தயங்கமாட்டேன். இது சத்தியம்! இவ் வளவுதான். வந்தனம்!"

இந்த உருக்கமான வார்த்தைகள், ஆணித்தரமான பேச்சு, உணர்ச்சியற்ற ஜட்ஜ் தாயரையும் குலுங்க வைத்தது. தற்பெருமையும் திமிரும்கொண்ட தாயர் அடங்கி யொடுங்கித் தழதழத்த குரலில் முனக ஆரம்பித் தார். "இவர்களைக் குற்றவாளிகள் எனக் கூறுவதற்கு நான் ஜவாப்தாரி அல்ல. ஜூரிகள் தீர்ப்பின்படியே நான் நடக்கக் கடமைப்பட்டவன். ஆகையால் சாக்கோ

1927 ஜுலை 10ம் தேதி ஆரம்பிக்கும் அந்த வாரத்திற்குள் மின்சார சக்தியினால் கொல்லப்பட வேண்டும்,'' என்று ஜட்ஜ் தீர்ப்புக் கூறினார். வான்செட்டி சம்மந்தமான குற்றச்சாட்டில் ஜட்ஜ் தீர்ப்புச் சொல்ல ஆரம்பித்த வுடன் வான்செட்டி ஜட்ஜை நோக்கி "தயவு செய்து ஒரு நிமிஷம் பொறுங்கள் என் வக்கீலிடம் கொஞ்சம் பேசவேண்டும்,'' என்று சொன்னான். ஆனால், ஜட்ஜ் தான் தீர்ப்பைச் சொல்லி முடிக்க வேண்டும் என்று முனகினார். "நான் நிரபராதி என்பது உமக்குத் தெரியும். இதே வார்த்தைகளை ஆறு வருடங்களுக்கு முன்பும் சொன்னேன். இரு நிரபராதிகளை நீங்கள் கொலை செய்கிறீர்களென்று, இப்போதும் சொல்லு கிறேன்'' என்று வான்செட்டி உரக்கக் கத்தினான். ஆனால், ஜட்ஜ் தாயரோ ஒன்றையும் காதில்வாங்காமல் தனது தீர்ப் பைச் சொல்லி முடித்தார். வான்செட்டிக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. வழக்கமாகக் கடைசியில் சொல்லும் "கடவுள் உங்களுக்கு ஆதரவு அளித்து அருள் புரிவாராக''என்ற வாக்கியத்தைக்கூட ஆத்திரத் தினால் மறந்து விட்டார்.

அத்தியாயம் 11

தீர்ப்பிற்குப் பின்

சாக்கோ, வான்செட்டி ஆகிய இரு வீரர்களையும் காப்பாற்றுவதற்கு வேறு வழி எதுவுமில்லை. மாகாண கவர்னருக்கு மனுச் செய்து அவர் ஒப்புக் கொண்டால், மரண தண்டனையைத் தீவாந்திர சிட்சையாக மாற்றலாம். பாதுகாப்புக் கமிட்டியார் கவர்னருக்கு மனுச் செய்வதில் முனைந்து நின்றனர்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் ஒரே பரபரப்பு ஏற்பட்டிருந்தது. அநேக பத்திரிகைகள் தலையங்கம் எழுதின. அமோகமான மனுக்களும் தந்திகளும் கவர்னரிடம் குவிந்தன. இங்கிலாந்தின் தொழிற்கட்சியிலுள்ள பார்லிமெண்ட் மெம்பர்கள் பன்னிரண்டு பேர் கையெழுத்திட்டு கவர்னருக்குக் கருணை மனு அனுப்பினார்கள்.

வக்கீல் தாம்சன் சாக்கோ, வான்செட்டிக்காகக் கருணை காட்டும்படி கவர்னரிடம் மனு சமர்ப்பித்தார். சாக்கோ அதில் கையெழுத்திட மறுத்து விட்டான். வான்செட்டி மட்டும் கையெழுத்துச் செய்தான். மனு ஒரு விசித்திரமான தஸ்தாவேஜு. வான்செட்டி தனது கருத்துக்களையும் கொள்கைகளையும் உலகத்திற்குத் தெரிவிக்க அது ஒரு தகுந்த சந்தர்ப்பமெனக் கருதினான்.

மனுவின் விவரம்: "எங்களது கருத்துக்கள் புதியன வல்ல. சென்ற 2000 வருஷங்களாக மேற்கு உலகத்தின் அறிவு வளர்ச்சியையும் சரித்திரத்தையும் இக் கருத்துக்களின் சிற் சில அம்சங்கள் உருவகப் படுத்தி வந்திருக்கின்றன. காட்வினி, ஷெல்லி, பிரௌதான், கிரோபாட்கின், பக்குனின், ஒரு விதத்தில் டால்ஸ்டாய் ஆகியோர் இந்தக் கொள்கையைப் பரப்பும் தற்கால மேதாவிகள். சிறந்த தத்துவ ஞானியான, எர்னஸ்ட்ரினன், என்பவர் கிறிஸ்து ஒரு பெரிய அரசியல் புரட்சிக்காரர் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

"நாங்கள் குறிப்பிடும் இவ் விஷயங்கள் எங்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடியதாக இருக்கும் என்று எங்கள் வக்கீல் எங்களை எச்சரித்தார். ஆனால், நாங்கள் பாதுகாத்துப் போற்றிக் கொள்வதற்கு எதுதான் மீதி இருக்கிறது? மனிதன் மனிதனிடத்திலிருந்து பறிக்கக்கூடியதெல்லாம் எங்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. எஞ்சி நிற்பது

எங்களது நம்பிக்கையும் கௌரவமுந்தான். அவற்றை யாவது நாங்கள் பாதுகாக்க வேண்டாமா?'' என்ன உயர்ந்த லக்ஷியம்!

ஆனால், இம் மனுவைக் கவனிக்கவேண்டிய கவர்னர், எத்தகையவர்? கவர்னர் புல்லர், சிறு வயதில் சைக்கிள் ஓட்டுவதில் மிகத் திறமைசாலி. பந்தயங்கள் பலவற்றில் பரிசு பெற்றவர். இவர் ஆரம்பத்தில் சைக்கிள்ஷாப் வைத் திருந்தார். பின்னர் கார் ஏஜண்டு. இதன் மூலம் பணம் திரட்டினர். ஆகவே, சைக்கிள் பந்தயக்காரரான புல்லர், இன்று புது இங்கிலாந்தில் பெரிய கோடீஸ்வரராகி விட்டார்! வருடம் 20 லட்சம் வருமானம்!!

கவர்னர் புல்லர் அசையாப் பொருள். குத்துக்கல் எனலாம். சுயநல வாதி. இரக்கம் என்னும் ஒரு பொருள் இல்லாதவர். இது வரை எந்த ஆப்த நண்பனுக்கும் அடக்க விலைக்குக் கொடுத்து அறியாத தாராளப் பிரபு. அரசியலில் கல் மனம் படைத்தவர். தண்டனையைத் தவிர எவரையும் விடுதலை செய்து அறியார். அந்தக் காலத்தில் அடிமைகளைச் சவுக்கால் நையப் புடைத்து துன்புறுத்து கிற மாதிரி, பேனா முனையினால் எல்லாக் காரியங்களையும் சாதிக்க வல்லவர். மனிதனை மனிதன் சுரண்டி வாழ்வதை வெறுக்கும் வான்செட்டிக்கு இந்தத் தீர்ப்பு, வர்க்கப் போராட்டத்தினால் ஏற்பட்டது. “முதலாளி வர்க்கத் திற்கும் ஒடுக்கப்பட்ட தொழிலாளி வர்க்கத்திற்கும் எப்போதும் குரோதமும் விரோதமும் தான்'' எனக் குறிப்பிட்ட சாக்கோ, எப்படி கவர்னர் புல்லரிடமிருந்து தயை எதிர் பார்க்க முடியும்?

இரு தரப்பு சாட்சியங்களையும் திரும்பவும் விசாரணை செய்யத் தயாராக இருப்பதாகக் கவர்னர் புல்லர் அறிவித்தார். எனவே, விசாரணை திரும்பவும் ஆரம்பமாயிற்று.

எவ்வாறு ஆயிரக் கணக்கான பக்கங்களை வாசித்துக் கேஸின் நுட்பத்தைத் தெரிந்து கொள்ள முடியும்? அப்படித் தெரிந்து கொள்ளத்தான் அவருக்கு என்ன ஆத்திரம்? அவரது காரியதரிசியும், உத்தியோகஸ்தர்களும், முதலாளி வர்க்கத் தலைவர்களும் கூறுவது தான் அவரது ஞாபகத்தில் இருக்குமே அன்றி, நியாயத்தை எவ்வாறு அவர் கண்டுகொள்ள முடியும்?

இதற்குச் சற்று முன்னதாக, பிங்கெர்டனின் ரிப்போர்ட், பாதுகாப்புக் கமிட்டிக்குக் கிடைத்தது. தெற்கு பிரெயிண்டிரி சம்பவத்தின் உண்மையைத் துலக்கப் பாடு பட்ட துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் செய்த விசாரணை யின் ரிப்போர்ட் அது தான். அதில் மிக விசித்திரமா னதும் எதிரிகளுக்கு மிக அனுகூலமானதும் ஆகிய விஷ யங்கள் கண்டிருந்தன.

இந்தக் கேஸின் முக்கிய சாட்சியான மேரி ஸ்பெலேன் என்பவளை, சம்பவம் நடந்த சமயத்திலே கண்டு விசாரித்த விவரம் அந்த ரிப்போர்ட்டில் துலங்குகிறது. டோனிதான் குற்றம் செய்தவன்என்று அவனது போட்டோவை இவள் பொறுக்கி எடுத்தாள். இவள்தான் பின்னல், போலீஸார் நிர்ப்பந்தத்தின் பேரில் தான் ஜன்னலிலிருந்து பார்த்த தாகவும் குற்றவாளி சாக்கோ என்பதில் சந்தேகமில்லை என்றும் பொய் சொன்னாள். பிங்கெர்டன் ரிப்போர்ட்டில் கண்டிருந்த விவரத்தை வெளிவராதவாறு சர்க்கார் வக்கீல் மறைத்துவிட்டார். இந்த விவரங்களை எல்லாம் கவர்னர் புல்லர் தெரிந்துகொள்ள முடியவில்லை.

குற்றவாளிகளின் சார்பாகக் கவர்னரைக் கண்டு பேசிய அநேகர், "புல்லர், பிரிட்ஜ் வாட்டர் குற்றத்தையே சிந்தித்த வண்ணமாக இருக்கிறார்" என்று சொன்னார்கள்.

எனவே, அந்தக் கேஸில் சர்க்காரின் சாட்சியத்தை எப்படித் தப்பிதமென்று ருசுப்படுத்துவது என்பதில் வக்கீல் தாம்ஸன் முனைந்திருந்தார். செருப்பாலே வழக்கில் துப்புத் துலக்குவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களான H. H, J. J. H, ஆகிய இருவர்களின் ரிப்போர்ட்டுகளையும் தாம்ஸன் கைப்பற்றினர். அந்தக் கேஸில் சாட்சி சொன்ன நால்வரும் சம்பவம் நடந்த அன்றே காரைக் குறித்து முற்றிலும் மாருன விவரம் கொடுத்திருப்பது அதன் மூலம் தெரிய வந்தது. முக்கிய சாட்சியான ஸ்கிப் சாட்சியமாவது "குற்றவாளியின் முகத்தைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. ஏதோ போலந்து தேசத்தவன் போன்று தெரிந்தது" என்ருன். ஆனல், "குற்றவாளி வான்செட்டிதான். நான் நன்ருகப் பார்த்தேன்" என்று அவனே கோர்ட்டில் துணிந்து சொன்னன். இதே மாதிரி பிங்கெர்டன் ரிப்போர்ட்டில் 'ஹட்சன்' கார் என்று கண்டிருப்பது கோர்ட் விசாரணையில் 'பியூக்' என்று மாறி விட்டது. மேலும் பவுல்ஸ் என்பவன் "துப்பாக்கி வைத்திருந்த கொள்ளைக் காரனுக்கு ஒடுங்கிய முகமும், சிவந்த கன்னங்களும், ஒட்ட வெட்டிய மீசையும் இருந்தன," என்று சொன்னதாக பிங்கெர்டன் ரிப்போர்ட்டில் கண்டிருந்தது. இவ்வாறே எல்லா சாட்சிகளும் முன் துப்பறியும் உத்தியோகஸ்தர்களிடம் சொன்னதிற்கு மாருகக் கோர்ட்டில் வாக்குமூலம் கொடுத்தார்கள். இவற்றையெல்லாம் குறிப்பிட்டு விவரமாக எழுதி வக்கீல் தாம்ஸன் கவர்னரிடம் மனு சமர்ப்பித்தார். ஆனல் என்ன பயன்? சில நாட்கள் கழித்து வழக்கு சம்பந்தமாக ஒருவர் பேட்டி காணச் சென்ருர். அப்போது கவர்னர் அலட்சியமாக "பிங்கெர்டன் ரிப்போர்ட்டா அது என்ன?" என்று கேட்டார். பக்கத்திலிருந்த காரியதரிசி "அதுதான் ஒட்டவெட்டிய மீசையைப் பற்றிச் சொல்லி இருக்கிறதல்லவா?" என்று அலட்சிய

மாகக் குறிப்பிட்டார். அத்துடன் விஷயம் முடிவுபெற்றது. 'கேசின் அடிப்படையை உடைத்து எறிய வல்லதும், சர்க்கார் தரப்பு சாட்சியங்களை எல்லாம் பொய் என்று ருசுப்படுத்த வல்லதுமான பிங்கெர்டன் ரிப்போர்ட்டைப் பற்றியே இவ்வளவு உதாசீனமாக, கவர்னர் இருந்தால் வழக்கில் எங்ஙனம் நியாயம் கிடைக்க முடியும் என்பதை நேயர்களே ஊகித்துக் கொள்ளலாம்!"

மற்றொரு சம்பவம்—பிரசித்தி பெற்ற பாஸ்டனிலுள்ள பத்திரிகாசிரியர் கவர்னரை இந்தக் 'கேசு' சம்பந்தமாகப் பேட்டிகண்டார். தெற்குப் பிரெயிண்டிரி 'கேசில்' ரயில்வே 'கேட்கீப்ப'ரின் சாட்சியம் சம்பந்தமான பேச்சு எழுந்தது. "குற்றவாளிகள் கேட் பக்கமாக வரும்போது ரயில் வந்ததாகச் சொல்வது தவறு. ரயில்வே கால அட்டவணைப்படி அப்போது வரவேண்டிய ரயில் எதுவும் இல்லை" என்ற விவரத்தை பத்திரிகாசிரியர் எடுத்துக்காட்டினார். ஆனால், ஜட்ஜ் வெடுவெடுப்பாக 'ரயில் அன்று சற்று தாமதமாக வந்திருக்கலாகாதா?' என்றார். "அப்படியானாலும் எந்த ரயில் எந்தெந்த சமயங்களில் போனதென்று காட்டக்கூடிய குறிப்புகள் ரயில்வே அதிகாரிகளிடமிருக்கின்றன. அவற்றைப் பார்த்தால் தெரியும் என்று சொல்லி, பின்னால் அக்குறிப்புகளும் கவர்னருக்கு அனுப்பப்பட்டன. ஆனால் கவர்னரோ தனக்குத் தெரியாததைச் சொல்லி அவமானப் படுத்த விரும்புவதாக வீண் கோபம் கொண்டார். இவர் எப்படி உண்மை கண்டு நியாயம் வழங்குவார்.

வழக்கு சகாயக்கமிட்டி அங்கத்தினர்கள் மாறுபட்ட அபிப்பிராயத்துடன் இருந்தனர். தீவிரமான பிரசாரந்தான், உதவி அளிக்க முடியுமென முற்போக்கு வாதிகள் கருதினர். கூட்டங்களும், ஊர்வலங்களும் இடைவிடாது

நடத்தி ஆர்ப்பாட்டம் செய்தால் சர்க்கார் ஒரு வேளை இணங்கிவருமென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால், வக்கீல் தாம்சனே அதற்கு இடம் கொடுக்க வில்லை. பிரசாரம் நடை பெறுவதாக இருந்தால், தான் வழக்கிலிருந்து விலகிக் கொள்வதாகப் பயமுறுத்தினர். ஆகையால், அவர்கள் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க வேண்டியதாயிற்று.

இன்னும் சிலர், ஜட்ஜ் தாயர் யாரிடமெல்லாம் கோர்ட்டிற்கு வெளியே, வழக்கு சம்பந்தமாகப் பேசினரோ அவர்களிடமிருந்து ஸ்டேட்மெண்டுகள் வாங்கிப் பத்திரிகைகளில் பிரசுரிக்க ஆரம்பித்தார்கள். இதற்கும் வக்கீல் தாம்ஸன் முதலில் ஆட்சேபம் செய்தார். ஆனல் நியாயம் பெறமுடியும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லாத தால் அவரும் ஒப்புக் கொண்டார். விசாரணை நடக்கின்ற காலத்திலேயே ஜட்ஜ் தாயர், சாக்கோ, வான்செட்டி ஆகிய இருவரையும் அராஜக வேசி மக்கள், நாய் மக்கள் என்று இழிவு படுத்திக் கூறியதாகப் பெரியகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும், பத்திரிகை நிருபர்களும், ஆசிரியர்களும், அவிடவிட்கள் கொடுத்தனர். அவை கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றால் ஒரு பலனும் கிட்டவில்லை.

அத்தியாயம் 12

கவர்னரிடம் அப்பீல்

முதலில் கவர்னர் ஒரு விசாரணைக் கமிட்டியை நிய மிக்க மறுத்தபோதிலும், பின்னல் அதற்குச் சம்மதித்து லோவல் கமிஷனை நியமித்தார். தலைவர் லோவல் ஒரு கோடீஸ்வரர். அமெரிக்காவில் தலை சிறந்து விளங்கும்

ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு கல்லூரித் தலைவரும் ஆவர். செல்வத்திலும், ஆடம்பரத்திலும், கர்வத்திலும் மூழ்கிக் கிடந்தவர். தனக்குத் தெரியாத விஷயமே இல்லை என்று நினைக்கும் சுபாவம் உள்ளவர். உலகத்தில் கொடுமை ஏது? என்று கேட்கும் மனோபாவம் உடையவர். செல்வந்தரிடம் வசீகரப் புன்சிரிப்பும், ஏழைகளிடம். கடுகடுப்பும் காட்டக் கூடியவர்.

கமிஷனைச் சேர்ந்த மற்றொருவர் கிராண்ட் என்பவர் இவர் இத்தாலியர்களின் பரம விரோதி. தனது புத்தகம் ஒன்றில் இத்தாலியரை ஒரு திருட்டு ஜாதியினர் என்று குறிப்பிட்டிருக்கிறார். சாக்கோவையும் வான்செட்டியையும் தொலைக்க வேண்டியதே தன் கடமை எனப் பலர் முன்னிலையில் வாய்விட்டுச் சொல்லி இருக்கிறார். ஆனால், இவ்விவரங்கள் எல்லாம் காரியம் முடிவு அடைந்த பின்தான் உலகத்திற்குத் தெரியவந்தன.

மற்றொருவர் பிரசிடெண்ட் ஸ்டிராட்டன் என்பவர். கமிஷனிலுள்ளவர்களில் குறைந்த வயது உடையவர். வயதோ 68. அவர் ஒரு விஞ்ஞானி. அத்துடன் செல்வந்தர்களையும் அவர்களது தேவைகளையும் நன்கு உணர்ந்து அதற்கு ஏற்ப நடிப்பவர். இவர்களைக்கொண்ட கமிஷன் திரும்பவும் சாட்சிகளை விசாரித்தது. விசாரணை ஜூன் மீ கடைசியில் ஆரம்பமாயிற்று. பத்திரிகைநிருபர்களாவது பார்வையாளர்களாவது அனுமதிக்கப்படவில்லை. ஆகவே பிரசாரத்திற்கு எந்த வழியும் இல்லாததோடு அவர்கள் இட்டதே சட்டம் என முடிந்தது. சாட்சிகளை எப்படி விசாரிப்பது என்பதெல்லாம் கமிஷன் பொறுப்பிலேயே விடப்பட்டது. நியாயமாக நீதி ஸ்தலங்களில் கையாளப் படும் முறை இங்கு அனுஷ்டிக்கப் படவே இல்லை.

கமிஷன், ஜட்ஜ் தாயரை விசாரித்தது. கமிஷனில் உள்ள மூவரும் ஒரே கிளப்பில் கூடிக் குடித்துக் கூத்தாடுபவர்கள். விசாரணை நடைபெறும் போது கமி ஷனிலுள்ளோர் தவிர ஏனையோர் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே, ஜட்ஜ் தாயர் சாட்சியத்தை எப்படிக் கூட்டிக் குறைத்து எழுதினர்—சாட்சியத்தில் இல்லாததை சிருஷ்டி செய்து எப்படித் தனது 'ஜட்ஜ்மெண்டி'ல் குறிப்பிட்டார், என்ற விவரங்கள் தாயரிடம் கேட்கப் பட்டனவோ, என்னவே, ஒருவருக்கும் தெரியாது. சாக்கோவையும் வான்செட்டியையும் வேசை மக்கள் எனவும், நாய் மக்கள் எனவும் திட்டியதை ஒப்புக் கொண்டாரா, இல்லையா; என்பதும் தெரிய வில்லை. கமிஷன் ரிகார்டு களில் இது விவரம் எதுவும் காணப்படவே இல்லை.

பின்னல் சர்க்கார் வக்கீல் காட்ஸ்மேன் விசாரிக்கப் பட்டார். வக்கீல் தாம்ஸன் தனது குறுக்கு விசாரணையில் சர்க்கார் வக்கீல் தனது பொறுப்பை எவ்வளவு தவருக இந்தக் கேசில் பிரயோகித்து இருக்கிருர் என்று காட்டு வதற்காகக் கேட்ட கேள்விகளுக்கு, கமிஷன் குறுக்கிட்டு குழப்பிவிட்டது. சங்கடமான கேள்விகளுக்கு 'ஞாபகம் இல்லை, ஞாபக மில்லை' என்று சொல்லி காட்ஸ்மேன் தப்பித்துக் கொண்டார்.

'டுட்சிடேலஸ்' என்ற பெண்மணியும் சர்க்கார் தரப் பில் விசாரிக்கப் பட்டாள். அவள் அரைப் பைத்தியம். நடத்தையோ மகா கேவலம். பணத்திற்காக சர்க்கார் தரப்பிலும், எதிரிகள் தரப்பிலுமாக மாறிமாறிச் சென்று கொண்டிருந்தாள். இறுதியாக சர்க்கார் தரப்பில் சாட்சி சொன்னுள். அவளுடைய வாக்குமூலம்: " நானும் சாக் கோவும் செருப்பாலையில் ஒன்ருக வேலைபார்த்து வந்தோம். 1908ம் வருஷத்திலிருந்தே நான் சாக்கோவை அறிவேன். சம்பவம் நடந்ததற்குச் சற்றுமுன் சாக்கோவைக்

கொள்ளைக்காரன் பக்கம் பார்த்தேன்." 1908ல் சாக்கோ செருப்பு ஆலையில் வேலைபார்க்கவேயில்லை. இதைத் தெளிவு படுத்தும் பொருட்டு வக்கீல் தாம்சன் குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார். உடனே அவள் 'ஓ' என்று கத்தி வலிப்பு நோயினால் பாதிக்கப் பட்டிருப்பதாகப் பாசாங்கு செய்தாள். "என்னுடைய நடத்தையைப் பற்றிக் கேள்விகள் கேட்டு என்னை அவமானப்படுத்த முயல்கிறீர்கள்" என்று கூக்குரலிட்டாள். இது, வெளியில் நின்ற பத்திரிகை நிருபர் காதில் விழுந்தது. சர்க்கார் உதவி வக்கீலும் வெளியே வந்து 'இவள் கேசை' பாழ் படுத்தி விட்டாள், என்று முனகினார். இவ் விவரங்கள் மறுநாள் பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று. சாக்கோவும், வான்செட்டியும் இக் குற்றத்தில் சம்பந்தப் படவில்லை என்று தான் நம்புவதாக ரூட்ஸி என்பவள் "போஸ்ட்" பத்திரிகை நிருபரிடம் சொன்னாள். இந்த விவரமும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவே எதிரி பக்கம் அந்தப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. எனினும், இவளது வாக்கு மூலமும் சாக்கோ, வான்செட்டியை மின்சார நாற்காலிக்கு (அமெரிக்க மரண தண்டனை முறை) தக்க சான்றாகக் கருதப்பட்டதைக் கண்டு எப்படி நாம் ஆச்சரியப்படாமல் இருக்க முடியும்?" இந்தப் பெண் விபரீத குணமும் தவறான போக்கும் உடையவளாக இருந்தாலும், இந்தக்கேசில் இவளது வாக்குமூலம் நன்றாகக் கவனிக்கப் படத் தகுந்தது என்று கமிட்டி நம்புகிறது," என்று குறிப்பிட்டிருப்பது விந்தையிலும் விந்தை!

கமிஷனிலுள்ள கிழடுகள் மூன்றும் தமது சுயநலத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்தார்கள். வழக்கில் எதிரிகள் பொய்ச் சாட்சிகளை விலைக்கு வாங்கினார்கள் என்று நிரூபிப்பதிலும், சாக்கோ தெற்குப் பிரெயிண்டிரி சம்பவத்தன்று பாஸ்டனிலிருந்தான் என்ற உண்மையை மாற்றி

அமைப்பதிலுமே அவர்கள் வெகு சிரத்தை எடுத்துக் கொண்டனர். எனவே, அவர்கள் ஜட்ஜ், சர்க்கார் வக்கீல், ஜூரிகள், இவர்களைத் தவிர வேறு சாட்சிகளை விசாரிக்கப் போவதில்லை என்று சொன்னதை மாற்றி, திடீரென்று எதிரி வக்கீலுக்கு முன் தகவல் தெரிவிக்காது "குற்றம் நடைபெற்ற தினத்தன்று சாக்கோ தங்களுடன் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான்'' என்று வாக்கு மூலம் கொடுத்த பாஸ்கோ, குதாக்னி என்ற இரு இத்தாலியரையும் வருவித்து விசாரித்தார்கள்.

'குதாக்னி, நொட்டிஜியர் என்ற ஒரு இத்தாலிய தினசரிப் பத்திரிகாசிரியர்.' விருந்து நடந்த தேதி எப்படி ஞாபகத்தில் இருந்தது என்று கேட்டதற்கு, அவர் "எப்ரல் 15ம் தேதியன்று 'டிகான்ஸ்கிரிட்' ஆசிரியரான உல்லியம் மாஸ்காவுக்கு ஒரு விருந்து அளிக்கப்பட்டதால் தேதி ஞாபகத்தில் இருக்கிறது'' என்றூர். ஆனுல், கமிஷனி லுள்ள லேவல் சில பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்ததில் மே மாதம் 13ம் தேதி என்று ஒரு விருந்து இருந்ததாகத் தோன்றியது. ஆகையால் இந்த வாக்கு மூலத்தில் நம்பிக்கை இல்லாது கடுகடுத்துப் பேசினர். ஆயினும் குதாக்னி உண்மையை உரைக்கப் பின் தங்காது, "இரு விருந்துகள் நடைபெற்றிருக்கக் கூடாதா? எப்ரல் 15ம் தேதி கண்டிப்பாக விருந்து இருந்தது'' என்று வற்புறுத்திப் பேசினர். அதை நிரூபிக்க மறு நாள் வரை அவகாசம் கொடுக்கப்பட்டது. தனது பழைய பத்திரிகைகளைத் தேடிக் கண்டு பிடித்து அவற்றைக் கொண்டு வந்து காட்டி நிரூபித்தார். கமிஷனர்களும் தங்கள் அவநம்பிக்கைக்காக வருத்தத்தை தெரிவித்து அவரிடம் மன்னிப்பு வாங்கிக்கொண்டனர். ஆனுல், இந்தச் சம்பவம் வெளியே தெரியக் கூடாது என்ற கமிஷன் சம்பிரதாயத்தை மீண்டும் சாட்சிகளிடம் அழுத்தமாகச் சொல்லி அவர்களை

அனுப்பி விட்டார்கள். குற்றம் நடந்த சமயம் சாக்கோ மற்ருெரு இடத்தில் இருந்ததாக நிரூபிக்கப் பட்டதென்று' தாம்சன் சந்தோஷம் அடைந்தார். ஆனுல், இதைப் பற்றி அவர்கள் ரிப்போர்ட்டில் விசேஷமாகக் குறிப்பிடவே இல்லை.

இதே சமயம், கவர்னர் புல்லரும் கேசு சம்பந்தமாக சாக்ஷிகளை விசாரிப்பதிலும், பேச விரும்புகிறவர்களுக்குப் பேட்டி அளிப்பதிலும், ஈடுபட்டிருந்தார். ஆனுல், அவர் மனமோ ஏற்கனவே ஒரு முடிவு செய்து விட்டது. உலக ஒப்பனைக்காகவே இந்தக் கபட நாடகத்தை அவர் நடித் தார். இதைக் காட்டக் கூடிய சில சம்பவங்களை இங்குக் குறிக்க வேண்டியது அவசியம்.

ஜட்ஜ் தாயர், விசாரணை காலத்தில் எதிரிகளைக் கேவல மாகக் குறிப்பிட்டதை நியூயார்க்கிலுள்ள 'லைப்' பத்திரிகா சிரியர் கவர்னரிடம் சொன்ஞர். "ரிகார்டுகளிலிருந்து ஆதாரம் காட்டமுடியுமா?" என்று கவர்னர் கேட்டார். 'என்னிடம் ரிகார்டுகள் கிடையாது; வேண்டுமாஞல் கவனித்துச் சொல்லுகிறேன்' என்று ஆசிரியர் கூறிஞர். பின்ஞல் ரிகார்டுகளைப் பார்வையிட்டு ஜட்ஜ் முறை தவறி நடந்து கொண்ட பல விஷயங்களைப் பொறுக்கி எடுத்து கவர்மெண்டுக்கு அனுப்பிஞர். அதற்குப் பதில் ஒன்றுமே கிடையாது.

கவர்னர் தாஞகவே திடீரென்று ரிச்சேர்ட்ஸ் என்ற பிரபல வக்கீலுக்குத் தந்தி அடித்து வரவழைத்து விசா ரித்தார். அவர்தான் 'மொரிலி' புரட்சிக் கூட்டத்திஞரைப் பிடித்தவர். "தங்களுக்கு சாக்கோ, வான்செட்டி வழக்கு சம்பந்தமாகஎன்ன தெரியும்?" என்று கவர்னர் அவரைக் கேட்டார். "எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று அவர் பதில் கூறிஞர். நாஞம் அப்படித்தான் நினைத்தேன்.

மடைஞ என்றவன் குற்றம் செய்ததை ஒப்புக் கொண்டதாகச் சொன்னது கட்டுச் கதை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார். "மடைஞ விஷயத்திலும் இந்தக் கேசிலும் நீர் ஏன் சம்பந்தப் பட்டீர்? ஆறு வருஷம் கழித்து சாட்சி சொல்வதற்கு என்ன அவசியம் உமக்கு ஏற்பட்டது?" என்று கவர்னர் அனுவசியமாகக் கேள்வி கேட்டார். கவர்னர், சாட்சியத்தைக் கவனித்து 'நியாய மான தீர்ப்புச்சொல்ல எண்ணி இருப்பது போலத் தெரிய வில்லை' என்று வக்கீலிடம் கூறி விட்டு, அவர் ஊருக்குச் சென்ருர். இவை கவர்னர் புல்லரின் மனப்பான்மையை நன்ருகக் காட்டக் கூடியவை.

இரு குற்றவாளிகளையும் நேரில் கண்டு அவர்களின் குணங்களைப் பரிசீலனை செய்து முடிவு செய்யும்படி கலிபோர்னியாவில்உள்ள பேராசிரியர் ஒருவர் கவர்னரைக் கேட்டுக் கொண்டார். கவர்னரும் அவ்வாறே செய்யத் தீர்மானித்து ஒரு நாள் திடீரென்று ஒருவருக்கும் தெரியாமல் சார்லஸ் டவுன் சிறைக்கு வந்து வான்செட்டியைச் சந்தித்து, ஒரு மணிநேரம் பேசிக்கொண்டிருந்தார். அப்போது சாக்கோவும், வான்செட்டியும் உண்ணு விரதம் இருந்து வந்தார்கள். வான்செட்டியிடம் கவர்னர் கேசின் தன்மையைக்கேட்டார். தனது வாழ்க்கையையும், கொள்கையையும் விளக்கி வான்செட்டி விரிவாக எடுத்துரைத்தான். அவசரமாக ஒரு விருந்துக்குப் போக வேண்டியதிருந்ததால் பேச்சின் மத்தியில் கவர்னர் போய் விட்டார். மற்ருெரு நாள் மீண்டும் சந்தித்தார். பலமுறை வான்செட்டியுடன் கை குலுக்கினர், சிரித்துப் பேசினர். உண்ணுவிரதத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டார். தனக்கு விடுதலை கிடைக்கும் என்று வான்செட்டி நம்பினன். வக்கீல்களும் பிறரும் அவ்விதமே எதிர்

பார்த்தார்கள். சிரித்துக் கழுத்தறுக்கும் மர்மத்தை சாதுவான்செட்டி எவ்விதம் அறிவான்?

கவர்னர், சாக்கோவையும் கண்டு பேசினர். ஆனல், சாக்கோ இலகுவில் ஏமாறுகிறவன் அல்ல. அவனுக்கு ஒரே புத்தி. நேர்மையான பாதை தவிர வேறு எதுவும் தெரியாது. கீழ்க்கண்ட சம்பாஷணை அதற்கு உதாரணம்

கவர்னர்: சாக்கோ நான் உன்னிடம் பேச விரும்புகிறேன்.

சாக்கோ: என்னுடன் பேச ஒன்றுமில்லையே.

கவர்னர்: கேசு சம்பந்தமாக உன்னுடைய அபிப்பிராயத்தை அறிய வேண்டும்.

சாக்கோ: நான் மன்னிப்புப் பெறுவதற்காக மனுச் செய்யவில்லையே.

கவர்னர்: இருந்த போதிலும் உன் கதையைக் கேட்க விரும்புகிறேன்.

சாக்கோ: என் கதையைக் கேட்பதில் யாது பயன்? தங்கள் போக்கு முற்றிலும் வேருனது. எங்கள் போக்கைத் தாங்கள் தெரிந்து கொள்ள முடியாது.

கவர்னர்: என்ன அப்படிச் சொல்லுகிருய்?

சாக்கோ: தாங்கள் கோடீஸ்வரர். நான் ஏழை. இருவருக்கும் இடையே பொதுவானது எதுவும் இல்லை

கவர்னர்: ஆனல், நானும் ஒரு காலத்தில் ஏழையாக இருந்தேன். ரப்பர் கடையில் வாரம் 75 டாலர் சம்பளத்திற்கு வேலை பார்த்திருக்கிறேன்.

சாக்கோ: "வாஸ்தவம். ஆனல், தற்போது கோடீஸ்வரர். இப்போது உமக்கு உயிர் உமது செல்வந்தான்.

3304

யோசனை செய்து பாரும். நான் சொல்ல வேண்டு வது எதுவும் இல்லை" என்று மெதுவாகச் சொல்லி அனுப்பி விட்டான்.

இருந்தபோதிலும், கவர்னரிடம் மரியாதையாக நடந்திருக் கலாம், என்று அவன் பின்னல் வருந்தினன்.

தானே குற்றவாளி என்று ஒப்புக் கொண்ட மடைனஸ் என்பவனையும் கவர்னர் கண்டு பேசினர். அவர் களிடையே நடந்த சம்பாஷணையையும் குறிப்பிடுகிறேன்.

கவர்னர்: மடைனஸ்! சர்க்கார் உன்னைச் சரியான முறையில் நடத்தவில்லை என்று நீ வருத்தப்படுவதாக நான் அறிந்தேன். அப்படித்தானு?

மடைனஸ்: ஆம்!

கவர்: சர்க்கார் வக்கீல் உன்னை ஏமாற்றி விட்டாரோ?

மடை: ஆம்!

கவர்: அப்படியானல், நான் உனக்காக ஏதாவது செய்ய முடியும். ஆனல், தெற்குப் பிரெயிண்டிரி வழக்கு விஷயமாக நீ சொன்னது ஒன்றும் சரி இல்லையே.

மடைனஸ்: அது சம்பந்தமாக நான் உண்மையைத்தான் சொன்னேன்.

கவர்னர்: ஓ! அப்படியானல் நான் எதுவும் செய்ய முடியாது. நீ இரண்டு கொலை செய்த குற்றவாளி ஆகிருய்.

இவ்வளவு நியாய மனப்பான்மை கொண்ட கவர் னரிடம் என்னதான் எதிர்பார்கக முடியும்?

ஜூலை மாதம்—25ம் தேதியன்று 'ஆர்குயுமெண்ட்' ஆரம்பம் ஆயிற்று. வக்கீல் தாம்ஸன் அழகாகவும் விவர

மாகவும், 5 மணி நேரம் எல்லா விஷயங்களையும் எடுத்துக் கூறி கமிஷனுக்குத் தெளிவாக்கினர். ஆனால், அந்த மூன்று கிழடுகளின் உள்ளத்திலும் ஒரு மாறுதலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. தாம்ஸனை நோக்கி "நீர் மிகச் சமர்த்தர்தான். ஆனால், எங்களுக்குப் புத்தி புகட்ட வேண்டிய அவசியம் இல்லை" என்று சொல்வது போன்றிருந்தது, அவர்களின் முகத் தோற்றம். வழக்கில் பற்பல புது ருசுக்கள் கிடைத்தன. பிராசிகியூஷன் சாட்சியங்கள் அநேகம் மிகத்தவறானவை என்று கண்டுபிடிக்கப்பட்டது. உதாரணமாக சாக்கோவின் குல்லாய் சம்பந்தமாகவும் புதிய துப்புத்துலங்கிற்று. சாக்கோவின் குல்லாய், சம்பவம் நடந்த இடத்தில் அகப்பட்டதாகவும், அதில் காணப்பட்ட பொத்தல் ஒரு ஆணியில் தூக்கி இருந்ததால் ஏற்பட்டது என்றும் சொல்லப் பட்டிருந்தது. ஆறு வருடங்களுக்குப் பிறகு, போலீஸ் தலைவன் கல்லிவன் கூறியதாவது: "நான் செருப்பு ஆலைக்குச் சென்றிருந்தேன். சாக்கோவினுடைய குல்லாய் என்னிடம் கொடுக்கப்பட்டது. குல்லாவைத் திருப்பித் திருப்பிப் பரிசோதித்தேன். தற்செயலாக எனது கைபட்டே அந்தப் பொத்தல் உண்டாய் விட்டது. அது பல நாட்களாக எனது காரின் இருப்பிடத்திற்குக் கீழே கிடந்தது. பின்னால் ஸ்கார்ட் என்ற போலீஸ் உத்தியோகஸ்தரிடம் அது சிக்கியது." குல்லாவின் சாட்சியத்தினால் சாக்கோ குற்றவாளி என்ற ஆர்ப்பாட்டம் ஒரு விநாடியில் தகர்த்து எறியப் பட்டது. போலீஸ் தலைவன் கல்லிவன் நேர்மையானவர். ஆகையால் வேணுமென்றே அவரை சாட்சி போடாமலேயே சர்க்கார் வக்கீல் முன் ஏற்பாடு செய்து விட்டார்.

மற்றொரு முக்கியமான விஷயத்திலும் பிராசிக்யூஷன் சாட்சியம் முற்றிலும் மாறுபாடாகக் காணப்பட்டது. வான்செட்டியிடம் இருந்ததாகச் சொல்லப்பட்ட

ரிவால்வர், ஆலேயின் கம்பள் விநியோக அதிகாரி பிரார் டலிக்குச் சொந்தம் எனவும் அதை பிரார்டலி கீழே தவற விட்டதை சாக்கோ எடுத்து வான்செட்டியிடம் கொடுத்ததாகவும், பிராசிக்கியூஷன் கட்டுக் கதை. இதை ருசுப்படுத்த வாட்ஸ்வொர்த் என்ற ஒரு நிபுணர் சாட்சியம் கூறினுர். வான்செட்டியிடமிருந்த ரிவால்வரும் ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்று ஜூரிகள் எண்ணும்படி வாக்குமூலம் கொடுக்கப்பட்டது. ஆனல், வாட்ஸ்வொர்த் கமிஷன் முன் தோன்றித்தனது வாக்குமூலத்திற்குத் தவருக அர்த்தம் கொடுக்கபட்டிருக் கிறது என்றும், இரண்டு ரிவால்வர்களும் ஒரே வித மானது என்று தான் கருதிய படியால் இரண்டும் ஒன் ருகவும் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஆனல் ஒன்ருக இருப்பதைவிட வெவ்வேருக இருப் பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன என்றும் தெளி வாகச் சொல்லி விட்டார். ஆகவே ரிவால்வர் விஷயத் திலும் பிராசிகியூஷன் சாட்சியம் குலேந்து போயிற்று.

மற்றும் பிராசிகியூஷன் தரப்பில் முக்கிய சாட்சிகள் எனக் கருதப்பட்டவர்களின் வாக்கு மூலங்களும் நம்பு வதற்கு இடம் இல்லாதவை என்று வெளியாயிற்று. இஸ் பெலயின் துப்பறியும் உத்தியோகஸ்தரிடம் குற்றம் செய் தவர்கள் முகத்தைப் பார்க்க வில்லே என்று சொன்னது வெளியாகவே, அவனது வாக்குமூலமும் நிராகரிக்கப்பட வேண்டியதாயிற்று. குட்ரிஜ், தான் குதிரை திருடிய குற்றத்திற்காகச் சிறை செல்லாது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, இந்த வழக்கில் பொய் சாட்சியம் சொல்ல முன் வந்தான், என்பதும் வெளியாயிற்று. பெல்சர், லோலா என்ற இருவரும் அநேகரிடம், தாங்கள் குற்றவாளிகளேச் சரியாகப் பார்க்கவில்லே என்று தங்கள் வாக்குமூலத்தை மாற்றிச் சொன்னதால் அவர்களே நம்ப

இட மில்லாது போயிற்று. ஆகவே, சாக்கோவையும் வான்செட்டியையும் குற்றவாளிகள் எனச் சொல்வதற்கு ஒரு துளி சாட்சியம் கூட இல்லை.

ஆனாலும், கமிஷனிலுள்ள அக் கிழடுகள் தங்கள் அபிப்பிராயத்தை ஒரு சிறிதும் மாற்றுவதாக இல்லை. நியாயம் கூற வேண்டும் என்ற அபிப்பிராயம் இருந்தால் அல்லவோ தவறுகள் தென்பட்டவுடன் மாற்றப் போகிறார்கள். சாட்சியத்திற்கும் தீர்ப்பிற்கும் சம்பந்தம் கிடையாது. மேலும், அவர்கள் எப்படிக் கேசில் ஆயிரக் கணக்கான பக்கங்களையும் 10 லட்சம் வார்த்தைகளையும் படித்தறியப் போகிறார்கள். வக்கீல் தாம்ஸன் ஒழுங்காகவும், அழகாகவும் விஷயங்களைச் சொல்லி வரும் போது முன்னுக்குப் பின் முரணான அர்த்த மற்ற கேள்விகளைக் கேட்டு வந்தார்கள். தாம்ஸனோ, கேசின் தன்மை எவர் மனதிலும் பசு மரத்தாணி போல் பதியும் வண்ணம் விளக்கினார். மேலும், 1920 ஏப்ரல் 15ம் தேதி நடைபெற்ற சம்பவத்தில் சொன்ன பிராசிக்கியூஷன் தரப்பு சாட்சியத்தின் அலங் கோலத்தை உருவகப் படுத்தி, கோவையாக எடுத்துக் காட்டினார். அவர்களில் ஒருவன் சாக்கோ 11½ மணிக்கு ஒரு கருப்பு உடை அணிந்து காருக்கு அடியில் படுத்துக் கொண்டு லோலா ஆண்ட்ரு ஸோடு பேசிக் கொண்டிருந்ததாகக் கூறினான். மற்றொருவன் அவனைக் கௌரவமான உடையுடன் ஒரு மருந்துக் கடை முன் கண்டதாகச் சொன்னான். இன்னொருவன் சாதாரண கருப்பு அங்கியுடன் தொப்பிக் கடையில் சிகரெட் பிடித்துக் கொண்டு நின்றதாகச் சொன்னான். மேலும் பிராட்லியைச் சுடும் போது சாக்கோ பச்சைக் கால்சட்டையும் காக்கிசர்ட்டும் தரித்திருந்ததாக பெல்சர் கூறினான். மேரிஸ்பெலேன் சாம்பல் கம்பளி சர்ட் போட்டிருந்ததாகவும் தலையில் தொப்பி இல்லை என்றும் கூறினான்.

கருப்புச் சட்டையில் தோன்றினன் என்று குட்ரிஜ் சாட்சி சொன்னன்.

என்ன ஒழுங்கான சாட்சியம் பாருங்கள்? இந்த சாட்சியங்களைச் சீர் தூக்கிப் பார்ப்பதற்காக லோவல் கமிஷன் கூடியது. அதேசமயம் வழக்கு சம்பந்தமாகப் பேச விரும்புகிறவர்களுக்கு கவர்னர் பேட்டி அளித்தார். தினம் 30 பேர்வரை வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஆனல், பாதுகாப்புக் கமிட்டியாருக்கோ என்ன செய்வ தென்று தெரியவில்லை. வான்செட்டி வசித்து வந்த வீட்டுக்காரன் பிரினிக்கு ஒரு புது யோசனை தோன்றியது. கேசு சம்பந்தமான உண்மையை அவன் கவர்னரிடம் சொன்னன். ஆனல், அவனுடைய வாக்குமூலமோ நம்பப்படவில்லை. தான் சொன்னது பொய் என்று கருதப் பட்டால், பொய்ச் சாட்சிக் குற்றத்திற்காகத் தன்னைக் கைதுசெய்ய வேண்டும் என்று அவனே கவர்னருக்கு மனுச்செய்தான். இதேமாதிரி 14 சாட்சிகளும் கையெழுத் திட்டுத் தாங்கள் சிறைசெல்லத் தயாராயிருப்பதாகக் கவர்னருக்குச் செய்தி அனுப்பினர்கள். பாஸ்கோ, குவாக்னி ஆகிய இருபத்திரிகை ஆசிரியர்கள் கூடஅதில் கையெழுத்திட்டிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் சாட்சியமும் நம்பப்படவில்லை. ஆனல், அவர்களில் எவரும் கைது செய்யப்படவுமில்லை.

சாக்கோ, வான்செட்டியின் பாது காப்புக் கமிட்டியார் அபரிமிதமான பணம் திரட்டி சாட்சி களுக்கும் பத்திரிகாசிரியர் களுக்கும் லஞ்சம் கொடுத்ததாக ஒரு பெரும் வதந்தி பரவியது. அது ஒருவேளை கவர்னர் மனதிலும் பதிந்து எதிரிகளுக்கு ஏதாவது கெடுதிசெய்து விடக் கூடாதே என்பதற்காகப் பாது காப்புக் கமிட்டியார் தங்கள் கணக்குகள் பூராவையும் கவர்னரிடம் காட்டச்

சம்மதித்தார்கள். 7 வருஷமாக வசூலான தொகை 32,500 டாலர்கள். செலவுக்கு ஒழுங்கான ரசீதுகள் இருந்தன. கேஸ் நடத்துவதில் பங்கெடுத்துக் கொண்ட முக்கியஸ்தர்களான கார்டனருக்கும், மேரி டோனுவனுக்கும், வசூல் தொகையில் பாதியாவது கொடுக்கப் பட்டிருக்கு மென்பது கவர்னரின் அபிப் பிராயம். ஆனல் அவர்கள் இருவரும் எவ்வித ஊதியமும் இல்லாமல் இரண்டு வருஷங்கள் உழைத்தார்கள் என் பதைத் தெரிந்த கவர்னர் ஆச்சரியம் அடைந்தார்.

கேசு சம்பந்தமாக எங்கு பார்த்தாலும் மிகுதியான பீதி ஏற்பட்டிருந்தது. ஒற்றர்கள் நாலா பக்கங்களிலும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். பாதுகாப்புக் கமிட்டியி லேயே அங்கத்தினராகப் பலர் சேர்ந்தனர். ஜட்ஜ் வீட்டி லும், போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வீடுகளிலும் பந்தோ பஸ்து வைக்கப்பட்டது. சாக்கோ, வான்செட்டிக்கு விரோதமாகச் சாட்சி சொன்ன கான்ஸன் வீட்டின் ஒரு பகுதி வெடிகுண்டால் சின்ன பின்னம் ஆகியது.

சாக்கோ, வான் செட்டியின் நண்பர்கள் தான் அந்த அழிவுச் செயலைச் செய்திருக்க வேண்டும் என்ற வதந்தி கிளம்பியது. சாக்கோ, வான்செட்டி ஆகிய இருவர் பேரில் விரோத மனப்பான்மையை அதிகரிக்கும் பொருட்டு போலீஸார் அவ்வதந்தியைக் கிளப்பினர். ஆனல், உண்மை யாதெனில், கள்ள மார்க்கெட் தகராறிலேயே அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. சில சிறு வர்கள் சர்க்கார் தரப்பு சாட்சி ஒருவரைப் பயமுறுத்தி எழுதிய கடிதம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்டது.

சாக்கோ, வான் செட்டிக்கு ஏற்பட்டிருந்த ஆபத்து இதனல் அதிகரித்ததேயன்றி, குறைந்த பாடில்லை.

வான்செட்டி பிரிட்ஜ் வாட்டர் குற்றத்தைச் செய்த வனைகையால், இதையும் அவனே செய்திருப்பான் என்ற தவமுன அபிப்பிராயம் கவர்னருக்கு இருந்து வந்தது. இதை எப்படி நீக்குவது என்று எதிரிகளின் வக்கீல்கள் மிகச் சிரமப் பட்டார்கள். அந்தச் சம்பவம் நடந்த அதே சமயம் வான்செட்டி வேறு இடத்தில் இருந்ததாக வாக்கு மூலம் கொடுத்த 18 சாட்சிகளும், வான்செட்டி சம்பவம் நடந்த சமயம் மீன் விற்றுக் கொண்டிருந்தான் என்று சொன்னார்கள். 1919 டிசம்பர் 20ம் தேதி போட்ட ரசீது ஒன்று, அவர்களுடைய வாக்கு மூலத்திற்கு ஆதாரமாகக் கிடைத்தது. இது மிக முக்கியமான ரசீது. ஏனென்றால் ரசீது டிசம்பர் 20ம் தேதி சனிக்கிழமை போட்டது. அது வான்செட்டி கைக்கு செவ்வாய்க்கிழமை வந்து சேர்ந் திருக்கும். புதன்கிழமை வியாபாரம் செய்திருப்பான். அன்று தான் பிரிட்ஜ் வாட்டர் சம்பவம் நடை பெற்றது. ஆகவே, இந்த முக்கியமான ரசீதை முக மலர்ச்சியுடன் கவர்னரிடம் சமர்ப்பித்தார்கள். வான்செட்டிக்குக் கிடைத்ததற்கு என்ன அத்தாட்சி இருக்கிறதென்று கவர்னர் கேட்டார். இக்கேள்வியால் அவர்கள் மனம் உடைந்தனர். இரு உயிர்களைப் பலி கொள்வதை மாற்றும் உத்தேசமே தனக்குக் கிடையாது, என்ற மனோ பாவத்தைப் பிரதி பலிப்பது போன்றிருந்தது அவரது செய்கை.

அத்தியாயம் 13

இரு உயிர்களின் ஊசலாட்டம்

ஆகஸ்ட் 3-ம் தேதி. இன்று தான் தீர்ப்பு நாள். எங்கும் ஒரே பரபரப்பு. விநாடிப் பொழுதிலே உலகமெங்கும் சமாசாரத்தைப் பரப்புவதற்காகப் பத்திரிகை நிருபர்கள் காத்துக் கொண்டிருந்தனர். ஜனங்கள் திரள் திரளாக நின்றார்கள். சாக்கோ, வான்செட்டி வழக்கு உலகப் பிரசித்தி பெற்று விட்டது. உலகத் தொழிலாளர் அதைத் தங்களுடைய சொந்த வழக்காகக் கருதினர். பல தேசங்களிலும் ஆர்ப்பாட்டங்களும், மாபெருங் கூட்டங்களும் நடந்தன. முதலில் வழக்குக்குச் சிறிது இடம் அளித்த பத்திரிகைகள் இப்போது அதைப் பற்றி பக்கம் பக்கமாகப் பிரசுரித்தன. எனவே உலகம் பூராவும் தீர்ப்பை எதிர் நோக்கி இருந்தது.

கவர்னரோ அன்று காரியாலயத்திற்கு வரவே இல்லை. ஜனங்களும் நிருபர்களும் எதிர்பார்த்திருந்து சலித்துப் போயினர். இரவு 11-20 மணிக்குக் கவர்னர் காரியதரிசி தோன்றி ஒரு கவரை நிருபர்களிடம் கொடுத்தார். பரபரப்புடன் கவரைக் கிழித்துப் பார்த்தார்கள். மரணம்! மின்சார நாற்காலியில் சாவு! சாக்கோ, வான்செட்டிக்கு மரண தண்டனை! இவ்வார்த்தைகள் உலகம் முழுவதும் விநாடிப் பொழுதில் பறந்து சென்றன.

"ஜட்ஜ் தாயர் நியாயமாகவும் நேர்மை யாகவும் நடந்திருக்கிருர். ஜூரிகள் யாவரும் மனச்சாட்சியின் படி நடக்கும் ஒழுக்க முள்ளவர்கள். சர்க்கார் சாட்சிகள் தெளிவும் தைரியமும் உடையவர்கள். விசாரணை மிகவும் நியாயமாகவே நடந்திருக்கிறது. இருவரும் குற்றவாளிகள் என்பதில் சந்தேகம் இல்லை. வான்செட்டி பிரிட்ஜ் வாட்டர் சம்பவத்திலும் சம்பந்தபட்டவன் தான். உண்மையைத் தைரியமாகச் சொன்ன சாட்சிகளுடனும் தங்கள் கடமையை சரிவர நடத்திய ஜூரிகளுடனும், சிறந்த பொதுஜன சேவையில் தானும் பங்கெடுத்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததற்காக சந்தோஷப்படு கிறேன்" என்று தீர்ப்பில் சொல்லி முடித்தார், கவர்னர் புல்லர்.

கவர்னரின் தீர்ப்பு சாக்கோ, வான்செட்டிக்கு எட்டியது. இருவரும் மரண தண்டனையை எதிர்பார்த்துத் தான் இருந்தார்கள். தகவல் கேட்டதும் சாக்கோவின் கண்களிலிருந்து ஒன்றிரண்டு துளிகள் விழுந்தன. ஆனல் வார்த்தைகளின் கம்பீரம் தளரவில்லை. சில நிமிஷங்கள் ஜெயிலருடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான். வான்செட்டி கம்பீரமாகவும் அறிவு முதிர்ச்சியுடனும் தோன்றினன். அனைத்தையும் தியாகம் செய்த சன்னியாசி போல் தோன்றினன். தீர்ப்பைக் குறித்து வான் செட்டி சொன்ன வார்த்தைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தக்கவை. "இந்தச் சம்பவம்நடக்காவிட்டால் தெரு மூலைகளில் அலட்சியமாகக் கேட்டுச் செல்லும் ஜனங்களுக்கு உபதேசம் செய்யும் சாதாரணப் பிரசாரகர் களாக இறந்திருப்போம், அனுமதேயப் பேர்வழிகளாக மாண்டிருப்போம். எங்களது வாழ்வு உபயோகமற்றதாய் முடிந்திருக்கும். எங்களைக் கொல்வதால் ஒரு நல்ல செருப்பு வேலை நிபுணனும், ஒரு ஏழை மீன் விற்பவனின் உயிருமே

போகிறது. அவ்வளவே. ஆனால், இந்தக் கடைசி சந்தர்ப்பமே எங்களுடைய லக்ஷியம். கொடுந்துன்பமே எங்களது வெற்றி !

சாக்கோவையும் வான்செட்டியையும் காப்பதற்கு முயற்சிகள் நடந்தன. கவர்னரது அறிக்கையை வாசித்த எவர்க்கும் மரண தண்டனை நியாயமற்றதென்று வெளிப்படையாகத் தோன்றும். ஆகையால், அதற்கு அனுசரணையாக லோவல் கமிஷன் விரிவான காரணங்கள் காட்டி மூன்று நாட்கள் கழித்து ஒரு பெரிய அறிக்கை விடுத்தது.

எதிரிகளது வக்கீல் தாம்ஸன் விலகிக் கொண்டார். பிரபல வக்கீலான ஹில் ஆகஸ்ட் 6ம் தேதி வழக்கை மேல் நடத்த ஒப்புக் கொண்டார். 10ம் தேதி புதனன்று தூக்கு தினம். மறு விசாரணை செய்ய வேண்டுமென்ற மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. புதுவிசாரணைக்கு உத்தரவிடத் தங்களுக்கு அதிகாரமில்லை யென்று சொல்லி விட்டார்கள் சுப்ரீம் கோர்ட்டார். ஆகவே, வக்கீல் ஹில் திரும்பவும் மனு சமர்ப்பித்தார்.

கம்யூனிஸ்டுகளும், சோஷியலிஸ்டுகளும், தொழிலாளர்களும் சட்ட நடவடிக்கைகள் மூலம் ஒன்றும் சிந்திக்காமல் போகவே, வெறுப்புக் கொண்டு கூட்டங்களும் ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்த ஆரம்பித்தனர். எங்கு பார்த்தாலும் தொண்டர்கள் சுலோகங்களைச் சொல்லி பிரசார போர்டுகளைத் தாங்கிச் சுற்றித் திரிந்தார்கள். பலர் கைது செய்யப்பட்டார்கள். கூட்டங்களும் தடுக்கப்பட்டன.

செவ்வாயன்று மாலை கவர்னர் வீட்டிற்குமுன் 30 'பாரேட்'கள் நடைபெற்றன. 2200 சிப்பாய்கள் ஊரைச்

சுற்றிக் காவல் செய்து நின்றனர். சிறைச் சாலையைச் சுற்றிலும் டஜன் கணக்கில் மிஷின் பீரங்கிகள் வைக்கப் பட்டிருந்தன. 800 போலீஸார் துப்பாக்கி சகிதம் நின்றனர். 100 குதிரை வீரர்கள் சுற்றிக் கொண்டிருந் தார்கள் சிறைக்கு அரைமைல் வட்டாரத்திற்குள் எவரும் அனுமதிக்கப் படவில்லை. கூட்டத்தைக் கலைப்பதற்குத் தயாராய்த் தண்ணீர்க் குழாய்களுடன் போலீஸார் காணப்பட்டனர்.

மரணக் கொட்டடியில் மூவர் மரணத்தை எதிர்பார்த் திருந்தனர். சாக்கோ, வான்செட்டி, மடைரு இவர்களே அம்மூவர். சாக்கோவும் வான்செட்டியும் நான்குவாரம் உண்ணாவிரதமிருந்ததால் மெலிந்திருந்தார்கள். சில மனுக் களில் கையெழுத்துச் செய்யும்படி சாக்கோவின் மனைவி அவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள். "ஏழுவருட மாகச் சிலுவையில் அடித்தது போதாதா? இன்னுமா அதில் துடித்துக் கொண்டிருக்க வேண்டும்?" என்று சொல்லி ஒரேபிடிவாதமாக மறுத்து விட்டான். அவனது மனைவி துக்கம் பொருக்க மாட்டாமல் மூர்ச்சையாகி விட்டாள். வான்செட்டி உலக மக்களுக்கு ஒரு செய்தி தயாரித்துக் கொண்டிருந்தான்.

ஆகஸ்ட் மாதம் 10ம் தேதி மின்சார நாற்காலி தயா ராகக் காத்துக்கொண்டிருந்தது. 2000 வோல்ட் சக்தி யுள்ள மின்சாரத்தைச் செலுத்தி அது நல்ல நிலையில் இருக் கிறதா என்று சரிபார்த்தாய் விட்டது. சாக்கோவும் வான் செட்டியும் மரண அங்கியும், அரைக்கைச்சட்டையும், கால்சட்டையும் அணிந்து மரணத்தை நோக்கி நின்றனர். மரணதண்டனை நிறைவேற்றப் படுவது இன்றல்லவென்று இரவு 10-20 மணிக்கு சர்க்கார் உத்தரவு பிறந்தது. இந்த சந்தோஷச் செய்தி உலகின் நாலா பக்கங்களுக்கும்

பறந்தது. ஆனால் 5 நிமிடங்கள் கழித்து நடு நிசியில் நிறைவேற்றப்படும் என்று மற்றொரு உத்தரவு வந்தது. மூன்றும் முறையாக 11-27 க்கு வார்டன் வந்து, 12 நாட்களுக்கு ஒத்திப் போட்டிருப்பதாகக் கூறினான். உலகின் நாலா பக்கங்களிலும் மீண்டும் செய்திகள் பறந்தன. ஆர்வத்தோடு காத்திருந்த அன்பர்கள் சந்தோஷத்தால் ஆரவாரம் செய்தார்கள்.

அத்தியாயம் 14

சாக்கோவின் உயில்

சாக்கோவும் வான்செட்டியும் மரணக் கொட்டடியிலிருந்து திரும்பவும் சாதாரணச் சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டார்கள். பின் இரண்டுநாள் கழித்து மீண்டும் மரணக் கொட்டடிக்குக் கொண்டுவரப் பட்டனர். சாக்கோ உண்ணாவிரதத்தினால் மிகப் பலவீன மாயிருந்தான். எனினும் ஒருவர் உதவியு மில்லாமல் தானாகவே எல்லாக் காரியங்களையும் செய்ய விரும்பினான். இருவர்களையும் இருட்டறையில் அடைத்தார்கள். கம்பிகளுக்குப் பின்னால் அடைக்கப்பட்டிருந்த பலகையில் ஒரு ஓட்டை மாத்திரந்தான் இருந்தது, இருவருக்கும் அரைப் பைத்தியம் பிடித்தது போலாயிற்று. புலப்பம் அதிகமாயிற்று. ஆனாலும் வான்செட்டி எழுதுவதை நிறுத்தவில்லை. கொடிய மரணக் கொட்டடியில் சாவை எதிர்நோக்கிக் கொண்டிருந்த வான்செட்டி, தனது அபாரத் துன்பங்களுக்கிடையே, இத்தாலிய பாஷையில்

நைட்டிங்கேல் பறவையைக் குறித்துப் பாட்டு எழுதிக் கொண்டிருந்தான் என்றால், அவனுடைய மனோதிடத்தை என்னென்று சொல்வது !

எதிரிகளுக்குப் பன்னிரெண்டு நாள் உயிர்ப்பிச்சை யளிக்கப்பட்டது. அந்த 12 நாட்களும் உலகம் முற்றிலும் பிரசாரம் செய்வதற்கு வசதியாக இருந்தது. அமெரிக் காவிலும் ஏனைய தேசங்களிலும், பிரம்மாண்டமான கூட்டங்களும், ஊர்வலங்களும் நடந்தன. சர்க்காரும் ஜாக்கிரதையாகத் தனது அமுலை நடத்தி வந்தது. பொது வேலை நிறுத்தம் ஏற்படாதவாறு கவனித்துக் கொண்டது.

ஆகஸ்ட் 11-ம் தேதியன்று சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் சாண்டர்ஸன் புது சாட்சியம் கிடைத்தால் எந்த சமயத் திலும் மறு விசாரணைக்கு மனுச் செய்யலாம் என்ற சட்டத்தை, ஒரு கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பினர். ஆகவே, எல்லோருக்கும் சற்று நம்பிக்கை ஏற்பட்டது. சட்டத்தைப் பரிசீலனை செய்வதற்காக, ஸ்பெஷல் கோர்ட் 16-ம் தேதி செவ்வாய்க்கிழமை கூடுவதென்று தீர்மானிக் கப்பட்டிருந்தது. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக கோர்ட்டு, கூடுவதற்கு 6 மணி நேரத்திற்கு முன் ஒரு சம்பவம் நடைபெற்றுவிட்டது. வெடிகுண்டு விபத்தால் ஒரு ஜூரியின் வீடு இடிந்துபோயிற்று. சர்க்காரும் முதலாளி களும் சாக்கோ, வான்செட்டி இவ்விருவர்களின் நண் பர்கள்தான் இதைச் செய்திருக்க வேண்டுமென்று அதி காரிகளும் முதலாளிகளும் ஓலமிட்டார்கள். இதனால், வழக்குக்கு எவ்வளவு பாதகம் என்பதை எவரும் தெரிந்து கொள்ளாதிருக்க முடியாது.

அந்த வெடிகுண்டின் எதிரொலி தங்கள் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்க, பழுத்து நரைத்த கிழடுகள். அடங்கிய கமிட்டி விசாரணையை ஆரம்பித்தது. ஜட்ஜ்

பிருலிக்கு வயது 77. பீசுர்ஸ்க்கு வயது 75. கிரோல்ஸ்க்கு வயது 71. வெயிட்க்கு வயது 67. வக்கீல் ஹில்லேத் தாராளமாகப் பேசும்படி அனுமதித்தார்கள். ஹில் நேர்த்தியாகவும் ஆர்வத்துடனும், விவாதித்தார். புது சாக்ஷியம் கிடைக்குமானல் குற்றவாளி எந்த சமயத்திலும் மறு விசாரணை பெறவேண்டும். அதுதான் நீதி அதுதான் முறை என்று வாதாடினர்.

ஆனல் யாது பயன்? ஜட்ஜ் பிருலி, மரணதண்டனை விதித்தபின் மறு விசாரணை செய்யும்படி சொல்வதற்கு அதிகாரமில்லை என்று கூறிவிட்டார்.

தீர்ப்பின் விவரம் உடனே சாக்கோவுக்கும் வான் செட்டிக்கும் தெரிவிக்கப்பட்டது. சாக்கோ 31 நாள் உண்ணுவிரதம் இருந்து அபாயகரமான நிலைமையிலிருந்தான். டாக்டர்கள் பலாத்காரமாக உணவைச் செலுத்தினுர்கள். இந் நிலையில் வக்கீல் சாக்கோவைச் சந்தித்துக் கூறியதாவது:—

"சாக்கோ நீ தைரியசாலி அல்லவா?"

சாக்கோ: ஆம், அப்படித்தான்.

வக்கீல்: சரி, கோர்ட் நமது அப்பீலை நிராகரித்து விட்டது.

சாக்கோ: எதிர் பார்த்ததுதான்.

எவ்வித பதட்டமும் இல்லாமல், கோப்பைகளைத் தள்ளிவைத்துவிட்டு மேலும் சொன்னன்: "நாம் அவர்கள் கையில் இருக்கிறோம். அவர்கள் கொலை செய்வார்கள். நாம் ஆண்மக்கள் போல இறப்போம். குழந்தை டாண்டேக்கு ஒரு கடிதம் தருகிறேன். அதை நாளை வந்து வாங்கிக்கொண்டு போங்கள். குழந்தை பெரியவன்

ஆனபின் அதிலுள்ள விஷயங்களை நினைத்துப் பார்க்கட்டும்.''

அதன் பிறகு வக்கீல் வான்செட்டியைப் பார்த்து விஷயத்தைத் தெரிவித்தார். கேட்டதும் வான்செட்டி கண்களைப் பரக்க விழித்து முன்னால் பார்த்த வண்ணமாக அப்படியே இருந்தான். பிறகு தனது அறையில் அங்கும் இங்கும் விரைவாக நடந்துகொண்டு, "இந்த உலகில் எங்களைவிட நிரபராதிகள் எவர்களிருக்கிறார்கள்" என்று சொன்னான். சிறிது நேரம் கழித்து "10 லக்ஷம் மக்கள் வேண்டும்! 10 லக்ஷம் மக்கள்" என்று கத்தினான். தன்னுடைய பேச்சை உலகிற்கு ஒலிபரப்ப மின்சாரக் கருவி ஒன்று கொண்டுவரும்படி வக்கீலிடம் கேட்டான். ஆனால், அது சாத்தியமானதல்ல. எனவே, வக்கீல் ஒன்றும் பதில் கூறாமல் திரும்பிவிட்டார்.

கவர்னரிடம் இன்னும் அநேக மேதாவிகள், ஆசிரியர்கள், பெரியார்கள், சீமான்கள் சென்று மன்னிப் பளிக்கும்படி மன்றாடிக் கொண்டிருந்தார்கள். அத்துடன் ஐக்கிய அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் தாக்கல் செய்யவும் ஏற்பாடாகிக் கொண்டிருந்தது.

இருபது வருடங்களாகச் சந்தியாதிருந்த வான் செட்டியின் சகோதரி லுயிஜா இத்தாலியிலிருந்து தனது சகோதரனைப் பார்க்க வந்தாள். மெலிந்த உருவம், கவலையின் சின்னங்களுடன், கையில் ஜெபமாலையோடு, கடும் சிறைக் கொட்டடியில் எமன் வாயில் ஒரு காலை வைத்திருக்கும் வான்செட்டியை லுயிஜா கண்டாள். ஓவென்றலறி விழுந்தாள். சோகத்தால் மூர்ச்சித்தாள். புலம்பலும் பேச்சுமாக ஒரு மணி நேரம் கழிந்தது.

வான்செட்டியின் சகோதரி சாதாரண கிராமத்திலிருந்து வந்தவளாகையால், அமெரிக்கா தேசத்தில்கூடிய

கூட்டங்களையும் பத்திரிகை நிருபர்களையும் கண்டதும் அவள் ஆச்சரியம் அடைந்தாள். ஜெயில் சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்பட்டவனை அறையை விட்டு வெளியே கொண்டுவருவதே கிடையாது. பேச விருப்புகிறவர்கள் ஆறு அடிக்கு அப்புறமிருந்தே பேசவேண்டும். பாஸ்டனிலுள்ள பிரபல ஸ்திரீகள் பலரும் சேர்ந்து கெஞ்சிக் கூத்தாடி ஆர்ப்பாட்டம் செய்து, சகோதரனும் சகோதரியும் தாராளமாக நெருங்கிப் பேச ஜெயில் அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றுவிட்டார்கள்.

சாக்கோவின் மனைவியும் 12 வயதுப் பையன் டாண்டியும் வந்து சாக்கோவைப் பார்த்தார்கள். தனது தகப்பன் உயிரைக் கவரப்போகும் மின்சார நாற்காலி அங்கு நின்றது. இரும்புக் கம்பிகளின் இடையே முனகிக் கொண்டிருக்கும் தகப்பனது வார்த்தைகள் புதல்வனின் காதுகளில் விழுந்தன. பாலகனின் உள்ளம் எப்படிப் பரிதவித்திருக்கும்! சந்திப்பு முடிந்ததும் தாயும் பிள்ளையும் ஓவென்று அலறிக்கொண்டு வெளியேறினார்கள். ரோசினுவால் நடக்கக்கூட முடியவில்லை. சாக்கோ தனது மகனுக்கு இறுதிக் கடிதம் தயார்செய்து கொண்டிருந்தான். இதே சமயந்தான் அமெரிக்கா தேசத்தில் கோடீஸ்வரனான கேரி என்பவன் இறந்தான். லட்சம் கோடி டாலர்களுக்கு அதிபதியான அவன், தனது உயிலில் குறிப்பிட்டிருந்ததாவது:— "நான் எனது மனைவியையும், மக்களையும் பின் சந்ததியையும் வேண்டிக் கொள்வதாவது:— நீங்கள் யாருக்கும் கூட்டுக் கையெழுத்துப் போடவோ, ஜாமீன் நிற்கவோ, தகுந்த சொத்துக்கள் ஆதாரவுகள் இல்லாது கடன் கொடுக்கவோ, சந்தேகமான விஷயங்களில் தலையிடவோ கூடாது" என்பதேயாகும்.

இந்த உயிலை புரட்சிக்காரனான சாக்கோ தனது மகன் டாண்டிக்கு எழுதிவைத்துப் போன உயிலோடு ஒப்பிட்டுப் பாருங்கள்!

சாக்கோவின் உயில்:

"சிறையிலுள்ள மூவர் இருதயங்கள் துன்பத்தின் மத்தியில் புகைக்கப்பட்டுக் கிடக்கின்றன. இந்தமரணக் கொட்டடியிலிருக்கும் போது கூட, சந்தோஷமாகப் பிள்ளைகளுடன் கூடி விளையாடுகின்ற உன் களிப்பும், சுதந்திரமும் எப்போதும் என் கண்முன் நடமாடிக்கொண்டிருக்கிறது. என் கண்மணி, டாண்டி! முதலாளி வர்க்கம் எங்கள் சரீரத்தை இப்போது செய்து வருவதுபோல் சிலுவையில் அடிக்கலாம். ஆனால், வருங்காலத்து வாலிபர்களை ஆட்டுவிக்கப் போகிற எங்களது உயர்ந்த லக்ஷியங்களை அவர்களால் அழிக்க முடியாது...........

"குழந்தாய்! உனது தாயார் உன்னைப்பற்றி எவ்வளவு புகழ்ந்த பிறகும், நான் உன்னைக் குறித்து இரவும் பகலும் கனவுகண்ட பிறகும், உன்னை இப்போது சந்தித்தது என்ன பரமானந்தம்! அந்தக் காலங்களில் பேசினமாதிரி இப்போது கொஞ்ச நேரமாவது பேசிக்கொண்டிருந்தோம். அன்றும் உன்னிடம் சொன்னேன். இன்றும் சொல்லுகிறேன். நீ சதா இதே மாதிரி அருமைக் குழந்தையாக இருந்து உன்னை நேசிக்கும் அன்னைக்கு எப்போதும் விசுவாசமுள்ளவனாயிருப்பாய் என்று

நம்புகிறேன். இதைப் பற்றி அதிகமாகச் சொல்லி உன்னை நான் வருத்தப்படுத்த விரும்ப வில்லை. ஏனெனில், நீ இன்றே போல என்றும் நடப்பா யென்பதில் எனக்குச் சிறிதும் ஐய மில்லை. நான் இப்போது சொல்லப் போவது உனது உள்ளத்தைப் பெருந் துன்பத்தில் ஆழ்த்தலாம். ஆனல், மகனே டாண்டி! அதற்காக நீ அழவேண்டாம். அழுவதால் என்ன பயன்? ஏழு வருடங்கள் ஆயிரக்கணக்கான தினங்கள் உன் அன்பிற்கு உகந்த அன்னை அழுது அழுது என்ன பலன் கிட்டியது? ஒன்றும் இல்லை. எனவே, வருந்துவதற்குப் பதில் தைரியமாக இரு. அது உன் அன்னைக்கும் மிகுந்த ஆறுதலளிக்கும். அவள் மிகவும் கவலைப் பட்டால், நான் என்ன செய்வேன் என்பதை உனக்குச் சொல்லுகிறேன் கேள். ஊருக்கு வெளியே நெடுந்தூரம் அழைத்துச் செல்வேன். காட்டுப் புஷ்பங்களைப் பறித்துக் கொடுப்பேன். இயற்கை அன்னையின் வளத்தில் அவளது துன் பத்தை மடியச் செய்வேன். அவளுக்கு இது எப்போதும் விருப்பம்! நீயும் இம்மாதிரி செய்வது நன்மை யளிக்கும். ஆனல், என் அருமை டாண்டி! இன்பத்தைப் பெற நடத்தும் உலக விளையாட்டில் நீ உன்னை மாத்திரம் நினைத்து மற்றவர்களைக் கைவிட்டு விடாதே. உன்னைச் சுற்றி இருப்பவர்களை அதிலும் முக்கியமாக உன்னைவிடக் கீழ்ப்படியி லிருப் பவர்களைச் சற்று கைதூக்கிவிடு. உதவி எவ ருக்குத் தேவையோ, எவர்கள் துன்பப்படுகிருர் களோ, எவர்கள் பலவீனர்களோ, அவர் களுக்கு உதவிசெய். ஏனென்ருல், அவர்கள் தான்

உனக்கு உற்ற துணைவர்களாக நிற்பார்கள். ஏழைத் தொழிலாளரே சுதந்திரத்திற்காகவும் நல்வாழ்விற்காகவும் போராடி உயிர் துறப் பார்கள். இந்த உயிர்ப் போராட்டத்தில் என் மகனே! நீ அதிகமான அன்பைக் காணலாம். நீ அதிகமாக நேசிக்கப்படுவாய்.''

எவனோ ஒரு சிறுவன், டாண்டியைக் கொலைகாரன் மகன் என்று கேலி செய்ததைக் கேட்ட வான்செட்டி தூக்கிற்கு முன்தினம் ஒரு கடிதம் எழுதினான் :

"உனது பிதாவை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் குற்றவாளியல்ல; சிறந்த தீரர். சுதந்திரத்தின் பேரிலும் நீதியின் பேரிலும் உள்ள நம்பிக்கையினால் உலகத்தில் மனித இருதயத்திற்கும் ஆத்மாவிற்கும் அருமை யானது, பரிசுத்தமானது என்று கருதப்படு கின்ற யாவற்றையும் தியாகம் செய்த மூர்த்தி, என்பதை நீ தெரிந்துகொள். அத்துடன் நீ அவரைப் போல் தீரனானால் கொடிய ஆட்சிக்கும் சுதந்திரத்திற்கும் ஏற்படும் போராட்டத்தில் நீயும் பெரும்பங்கெடுத்துச் சாக்கோவின் பெயரையும் புகழையும் நிலைநாட்டு! குழந்தாய் டாண்டீ! உன் தகப்பனும் நானும் கோழைக ளாக ஏமாற்றுக்காரர்களாக சுயநலத்தின் பொருட்டுக் கொள்கைகளை விட்டுக்கொடுக்கும் கயவர்களாக இருந்திருந்தால், நாங்கள் மரண தண்டனைக்குள்ளாக வேண்டியதில்லை என்பதை நீ நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். எங்கள் விஷயத்தில் கொடுக்கப்பட்ட கேவல மான சாக்ஷியத்தின் ஆதாரத்தைக் கொண்டு

ஒரு குஷ்டம்பிடித்த நாயைக்கூடக் கொல்ல முடியாது. தாயைக் கொன்ற மகா பாதக னுக்குக்கூட, குற்றமே தொழிலாகக்கொண்ட கொடியவனுக்குக்கூட, புதிய சாட்சியம் கிடைக்குமானல் மறு விசாரணைக்குச் சந் தர்ப்பம் கொடுக்கப்படும்.

"நாங்கள் கேவலம் குற்றமனப்பான்மை கொண்டவர்களல்ல. எங்களுக்கு விரோதமாகக் கேசு ஜோடித்தார்கள். புது விசாரணையை மறுத்தார்கள். சொல்லொண்ணுக் கொடுங் கஷ் டங்களையும், துன்பங்களையும் ஏழு வருடம் மூன்று மாதம் பதினேழு நாட்கள் அநுபவித்த பிறகும் அவர்கள் எங்களைக் கொலைசெய்வார் களேயானல், அது நான் முன்னே குறிப்பிட்ட காரணங்களுக்காக என்று தெரிந்துகொள். அதாவது மனிதனை மனிதன் ஏமாற்றி மனிதனை மனிதன் அடக்கி வாழ்வதை நாங்கள் எதிர்த் தோம், என்ற காரணந்தான் என்பதை மறந்து விடாதே."

சிறைக்கு வந்தபின் பிறந்த 6 வயதுள்ள தனது பெண் குழந்தை இனஜ்க்கு சாக்கோ எழுதிய கடிதம் :—

"உன்னுடனும் உனது சகோதரனுடனும் உனது அன்னையுடனும் கூடி வாழ்ந்து இன்புற்றேன். உனது மழலைச் சொற்களைக் கேட்டு அக மகிழ்ந்தேன். உனது அருங் குணங்களைக் கண்டு, மனம் பூரித்தேன். கோடையில் ஒருமரத்தடி யிலிருந்து உனக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தேன். நீ ஓடுவதையும் சிரிப்பதையும்

அழுவதையும் பாடுவதையும் அன்று மலர்ந்த புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு உனது அன்னையின் மடியில் ஓடிக் குதித்து விழு வதையும் கண்டு களித்தேன். இவைகளே எனது பெரும் சம்பத்து—எனது பெரும் மகிழ்ச்சி. நான் கனவு கண்ட இச் சுகவாழ்வே எல்லா ஏழைக் குழந்தைகளுக்குங் கிட்ட வேண்டு மென்று விரும்பினேன். ஆனால், இவ் வாழ்வில் அது எனக்குக் கொடுத்து வைக்க வில்லை. மடிந்து கொண்டிருக்கும் இப்பாழும் பழைய சமுதாயம் உங்களிடமிருந்து என்னைப் பலாத்கார மாகப் பறித்துச் செல்லுகிறது. ஆனால், என் அன்பைப் பிரிக்க முடியுமா? அது உங்களுடன் எப்போதும் மீந்திருக்கும்.''

வெளிக்குத் தெரியாதிருந்த மீன் விற்கும் வான் செட்டியும் செருப்புத் தொழிலாளி சாக்கோவும் உலக மெங்கும் பிரபல்யமாகி விட்டார்கள். அவர்களை மின்சார நாற்காலியில் அமர்த்தி உயிரைப் போக்கும் தினம் திங்கட் கிழமை. முந்தின சனிக்கிழமை யன்றே உலகத்தின் பல பாகங்களிலும் பெருங் கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. பியூனஸ் அயரில், பொது வேலை நிறுத்தம். பெர்லின் தொழிற் சங்கங்களில் மாபெருங் கூட்டம். லண்டனிலுள்ள அமெரிக்க ஆபீஸ் முன்பு பதினாயிரக் கணக்கான ஜனங் களின் ஆர்ப்பாட்டம். ஜினிவாவில் அமெரிக்க சாமான் களைப்பகிஷ்கரிக்க வேண்டுகோள். ருஷியாவில் முக்கிய நகரங்களில் கண்டனக் கூட்டங்கள். பாரிஸில் லக்ஷம்பேர் கொண்ட பிரம்மாண்டமான ஊர்வலம். உலகம் பூராவும் தொழிலாளரின் கொந்தளிப்பு.

ஆனால், சம்பவம் நடைபெற இருக்கும் மசெச்சு செட்டிலோ, அனுதாபத்துக்கு மாருக அதிகார வர்க்க

ஆர்ப்பாட்டம். கொடிய அடக்குமுறை. எங்கு பார்த்தாலும் போர் வீரர்கள் அணிவகுப்பு. 24மணி நேரமும் போலீஸ் லாரிகள் ஊரைச் சுற்றி வந்தன. சர்க்கார் சாக்ஷிகள், ஜூரிகள், உத்தியோகஸ்தர்கள், இவர்களது இருப்பிடங்களுக்குப் போலீஸ் பந்தோபஸ்து.

கமிஷன் தலைவராக இருந்த லோவலுடைய வீட்டின் பின்புறம் ஒருவன் காரிலிருந்து பெரியதொரு கருப்புப் பையை எடுத்துக் கொண்டு கீழ் இறங்கினான். அவன் உடனே கைது செய்யப்பட்டான். வீட்டிற்கு அலுமினியப் பாத்திரங்கள் கொண்டு வந்தவனுக்கு இந்த ஆபத்து!

ஒரு பாதிரி கவர்னர் ஆபீஸ் எங்கே இருக்கிறதென்று விசாரித்தார். அவ்வளவுதான். உடனே போலீஸ் பந்தோஸ்பத்தில் வைக்கப்பட்டார். இந்த அட்டகாசத்தால், பாஸ்டன் நகரம் அடங்கி ஒடுங்கிக் கிடந்தது. கிளர்ச்சி செய்த ஒரு சிலரை ஜரூராகக் கைது செய்து சிறைக்குள் வைத்து விட்டார்கள்.

வக்கீல் ஹில் இன்னும் ஜட்ஜுகளையும் கவர்னரையும் விட்டபாடில்லை. ஒவ்வொரு நீதிபதியிடமும் மனுக்கள் சமர்ப்பித்த வண்ணமாகவே இருந்தார். அகில ஐக்ய அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டிடம் அப்பீல் செய்திருப்பதால் மரண தண்டனையை நிறுத்தி வைக்குமாறு கவர்னரிடம் மனுச் செய்தார். முயற்சியைக் கைவிடாது நாலா பக்கங்களிலும் சுற்றித்திரிந்தார்.

இதற்குள்ளாக மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டிய 1927 ஆகஸ்ட் 22-ம் தேதி வந்தது. தொழிலாளர் சரித்திரத்தில் மறக்க முடியாத முக்கிய தினம். சாக்கோ தனது மனைவியைக் கடைசி முறையாகச்

சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தான். அக்காட்சி எஃகு போன்ற கடின இருதயத்தையும் உருக்கிவிடும். பிருலியும் முன் சிறைக் கொட்டடிக் கதவுக் கம்பிகளினூடே கைகளைச் செலுத்தி, ஆர்வத்துடன் கைகுலுக்கி முடியவும், உள்ளம் உடைந்து ஓவென்று அலறி விழுந்தார்.

சாக்கோவின் மனைவியும் வான்செட்டியின் சகோதரியும் கவர்னரின் கடின மனத்தை மற்ருெரு முறை சோதிக்க விரும்பினர்கள். சிறையிலிருந்து நேரே கவர்னர் மண்டபத்திற்கு வந்தனர். எங்கும் சிப்பாய்களின் அணி வகுப்பு எனினும் தைரியமாக கவர்னர் அறையை அடைந்தார்கள். இருபக்கங்களிலும் பத்திரிகை நிருபர்கள் இருந்தனர். இத்தாலியப் பெண்களாகையால், மொழிபெயர்ப்புக்காக வக்கீல் முஸ்மன்னேவும் கூடச் சென்ருர். பதிவிரதை ரோசினு, ஆங்கிலத்திலேயே கல்லுங்கசியும் கனிவுடன், தனது கணவன் பரிசுத்தவான்—நிரபராதி என்பதில், தனக்குப் பரிபூரண நம்பிக்கை யிருப்பதாகக் கூறினள். சர்க்கார் சாக்ஷிகளான, லோலா, பிரக்டர், குட்ரிஜ், ஸ்பெலி இவர்களது வாக்குமூலங்களின் ஆபாசங்களேயும், முரண்பாடுகளேயும் எடுத்துக்காட்டி, அவை எவ்விதத்திலும் நம்பத் தகுந்ததில்லேயென்றும், ஆர்வத்துடன் வாதித்தாள். பிங்கெர்டன் அறிக்கைகளில் வெளியான உண்மைகளே எடுத்துக்காட்டினள். பாரபட்ச ஜட்ஜ் தாயரின் தகுதியற்ற செயல்களேச் சொல்லிவிட்டு, நியாயமாகவும், சட்டப்படிக்கும் சரியான விசாரணே நடைபெறவில்லே யாகையால், மன்னிப்புச் செய்யவேண்டும். உயிர்ப்பிச்சை யளிக்க வேண்டுமெனத் திரும்பத் திரும்ப மன்ருடினள். “கவர்னர்பிரபுவே! தாங்களும் பிள்ளே குட்டிகள் படைத்த ஒரு தகப்பன்! தகப்பனே இழந்து இரு பச்சிளங்குழந்தைகளேத்

திக்கற்றுத் தவிக்குமாறு தண்டிப்பது நியாயமா?" என்று நெஞ்சுருகக் கெஞ்சினுள், ரோசிஞ.

கவர்னர் மிகமரியாதையுடன் செவி சாய்த்து வந்தார். வான்செட்டியின் சகோதரியும் இத்தாலியப் பாஷையில் மெலிந்த குரலில் இனிமையாகப்பேசினுள். ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லப்பட்டது. தன் சகோதரனிடம் இப்போதுதான் விடை பெற்று நேராக அங்கு வருவதாகவும், அவனது சத்திய வாசகங்கள் தனது காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருப்பதாகவும் கூறினுள். சில வாரங்களுக்கு முன் கவர்னர் வான்செட்டியோடு அன்புடன் கைகுலுக்கிப் பேசிய போது தனது உண்மையையும் குற்றமற்ற தன்மையையும் கவர்னருக்கு நிரூபித்து விட்டதாகத்தான் கருதியதாகவும், அப்படி இருக்க மரணதண்டனையைக் கவர்னர் மாற்ருதது ஆச்சரியம் என்றும், கவர்னருடன் பேச மற்ருெரு சந்தர்ப்பம் அளித்தால், மரணதண்டனையை நிறைவேற்ற அவசியம் இராது என்றும், கவர்னரிடம் சொல்லு மாறு வான் செட்டி சொன்னதை அப்படியே எடுத்துரைத்தாள். கவர்னர் ஒருமணி நேரம் கவனமாகக் கேட்டுவிட்டு, நாற்காலியில் சற்று முன்வந்து குனிந்து பக்குவமாகப் பதில் உரைத்தார். "உங்கள் மனவேதனையை நான் நன்ருக அறிவேன். அதற்காக மிகவருந்துகிறேன். ஆனல், சட்டத்தைச் சரிவர நடத்த நான் பிரதிக்ஞை எடுத்திருக்கும் நிலைமையில் நீதிபதிகளின் தீர்ப்பை நிறைவேற்றுமாறு எனது மனச்சாட்சி சொல்லுகிறது." வக்கீல்வ தோ சொல்ல ஆரம்பித்ததற்குக் கூட, "தாங்கள் சொன்னவை மிகமுக்கியந்தான். ஆனல், இவ்விரு பெண் மணிகளின் பரிதாப நிலைமையைவிட, அவை அதிகமாக எதைச் சாதிக்கக் கூடும்?" என்று அலங்காரமாகப்

பதிலளித்தார். ஒன்றும் சாத்தியமில்லை என்று தெரியவே எல்லோரும் எழுந்து வெளியே வந்து விட்டார்கள்.

வான்செட்டியைக் கவனிப்போம். அவனது உள் ளத்தில் குமுறிக் கொண்டிருந்த அபிப்பிராயங்களும் எண்ணங்களும் அவனைக் கண்டு பேசியவர்கள் மூலம் வெளியாயிற்று. உண்மையில் குற்றவாளியாயிருந்தால் கடைசி வேளையில் ஆப்த நண்பர்களிடமாவது ஒப்புக் கொள்ளுவான் என்று எதிர்பார்த்த அநேகரிடம் வான் செட்டி கூறியதாவது:— "கடவுளிருந்தால் அவர்முன் சொல்வதற்கு ஒப்பச் சொல்கிறேன். நான் நிரபராதி, முற்றிலும் நிரபராதி, பிரிட்ஜ் வாட்டர் கொள்ளையிலாவது தெற்குப் பிரெயிண்டிரி கொலையிலாவது எனக்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது. எக்காலத்தும் உலக முழுவதும் நீங்கள் தைரியமாகப் பறை சாற்றலாம். நான் மாத்திர மல்ல சாக்கோவும் நிரபராதி. அவற்றில் எங்களுக்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது.

"நான் எவரையும் கொன்றதில்லை எவர் உயிருக்கும் ஆபத்து நேரிடும்படி எக்காரியமும் செய்ததில்லை. கொலைக்குக் காரணமான கொடிய இயந்திரங்கள் உலகத் திலிருந்து அழிந்து போகும் தினத்திற்காக, மனிதனை மனிதன் கொலை செய்ய முடியாத நிலைமை ஏற்படும் தினத்திற்காக, நான் முழுமனதுடன் பாடுபட்டு வந்திருக் கிறேன். இது உண்மை, ஏனென்றால் வர்க்கப் பிரிவினை களும் தொழில் சுரண்டலும் தான் என்னைப் புரட்சிக்கார னாக்கியது. அரசாங்கம் சுரண்டும் வர்க்கத்தின் உபயோ கத்திற்காக ஏற்பட்ட ஆயுதம். நியாயத்தை நிலை நாட்ட அது ஏற்படவில்லை. உலகத்தில் அடிமைகளை உண்டு பண்ணவும் எங்களைப் போன்ற சுதந்திரவாதிகளை நசுக் கவும் அது ஏற்பட்டது."

பொது வாழ்வில் பலாத்காரத்தை உபயோகிப்பது சம்பந்தமாக வான்செட்டியின் அபிப்பிராயம் கவனிக்கத் தகுந்தது. எனக்குப் பலாத்காரத்தில் விருப்பம் கிடை யாது. எவருடைய சரீரத்திற்காவது, ஆத்மாவுக்காவது, துன்பம் ஏற்பட்டால், அது எனக்குப் பொறுக்க முடியாத சங்கடம். ஆனால், உலக சரித்திரத்தைப் படிக் கும்போது, அடிமைகள் தங்கள் எஜமானர்களின் கருணை யால் எப்போதாவது சுதந்திரம் பெற்றதை நான் காண முடியவில்லை. போராட்டத்தினாலே, உரிமைகளுக்காகச் சண்டையிடுவதினாலே தான் தங்கள் காரியத்தைச் சாதித் திருக்கிறார்கள். அப்படி யிருக்க கொடிய முதலாளி வர்க்கம் போராட்டமின்றி இணங்கி விடுமா?

இந்த நிமிஷம் நம்மைச் சுற்றிஎன்ன நடைபெறுகிற தென்பதைக் கவனிப்போம். முதலாளி வர்க்கம் பல்லா யிரக்கணக்கான மிஷின் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் குண்டுகளையும் செய்வதோடு தினம் புதிது புதிதாகப் பல கொடிய இயந்திரங்களையும் கண்டு பிடிக்கிறது. இவை யெல்லாம் வெறும் விளையாட்டிற்கா? உபயோகத்திற் கல்லவா? தொழிலாளி மக்களே! நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களுக்காகக் கடைசித் தியாகிகள் சாக்கோ, வான்செட்டி உயிர் துறந்தாயிற்று. மேற் கொண்டும் தியாகிகள் தேவையில்லை என்று நான் எப்படிச் சொல்ல முடியும். இதற்கு மாறாக இன்னும் ஆயிரக்கணக்கான, ஏன்! லக்ஷக்கணக்கான நபர்களின் தியாகத்திற்குத் தயாராக வேண்டும். முதலாளி வர்க்கம் தகர்ந்து தொழிலாளிகள் சகல உடைமைகளையும் பெறு வதற்கு முன் பயங்கரமான ரத்த களரிக்குத் தயாராக வேண்டும். இந்த உண்மையைச் சொல்லத் தயங்குவே னானால் நான் தொழிலாளி மக்களுக்குத் துரோகம்

செய்தவனுவேன். அவர்களுக்கு வழி காட்டியாக மாட்டேன். கடைசி நேரத்தில் வான்செட்டி தளர்ச்சி யடைந்தான். முதலாளிவர்க்கம் சிறைவாசத்தாலும் அவனது உறுதியைக் குலேத்து விட்டது, என்று எங்களே எவரும் சொல்லும்படி நான் ஒரு காலமும் இடங் கொடேன். நாங்கள் புரட்சி வீரர்களாக மாண்டோம் என்ற வீரச்சொற்கள் மறக்கக் கூடியவையல்ல.

இதைக் கேட்டவர்கள் நீ பழி வாங்க விரும்புகிருயா? என்று கேட்டதற்கு வான்செட்டி அளித்த பதில் அவனது பெருந்தன்மையைக் காட்டவல்லது. "பழிக்குப் பழி வாங்குவது எங்கள் விருப்பமல்ல. நாங்கள் அவ்வளவு பெரிய தலேவர்களுமல்ல. சாதாரணத் தொழிலாளர்களே, நீங்கள் விரும்புவதெல்லாம் 'தொழிலாளி மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும், எல்லோருக்கும் விடுதலே வேண்டும்' என்பதேயாகும். ஆகையால் அதற்காக எல் லோரும் பாடுபட நாங்கள் விரும்புகிருேமேயன்றி எங் களுக்காகப் பழிக்குப்பழி வாங்க நாங்கள் விரும்பவில்லே. பழிக்குப்பழி வாங்குவது தவறு. ஆகையால், எங்களே எவர் உண்மையாக நேசிக்கிருர்களோ அவர்கள் எங்கள் மரணத்திற்காக வருத்தப் படுவதை விட்டு, தொழிலாளர் விடுதலேக்காகப் பாடுபட வேண்டும்" என்று அவர் களிடம் வினயமாகக் கேட்டுக் கொண்டான். மேலும் கூறியதாவது :—"நாங்களாகவே, இம் மரணத்தைத் தேடிக் கொண்டோம். எங்களுக்கு இக்கதிதான் என்பது வெகு நாட்களுக்கு முன்பே தெரியும். புரட்சி வாதியே! உனக்கு தூக்கு நிச்சயம். முதலாளி வர்க்கத்தால் நீ மடியப் போகிருய்! இதை உணர்ந்தே இவ் வாழ்க்கையை நாங்கள் தெரிந் தெடுத்திருக்கிருேம். மனிதன் எவனுக்கும் மரணம் நிச்சயம். இதில் விசேஷம் எதுவும் இல்லே. இது வாழ்க்கையில் தினசரி நடைபெறும் சாதாரண சம்பவம்.

ஏழையும் மன்னனும் மாண்டு மடிய வேண்டியதுதான். ஆகவே வாழ்க்கையில் பெருங் காரியத்தைச் சாதிக்க எவனுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ, அவனே பாக்கியசாலி. உலகம் பூராவும் எத்தனை பேருக்குக் கொடுத்து வைத்திருக்கிறது? அது எங்களுக்குக் கிட்டியிருக்கிறது. ஆகையால், எங்கள் வாழ்வு சிறப்புற்றது. எங்கள் வாழ்வே பெரும் வெற்றி. இப்புகழ் வரும் என்று கனவில் கூட நான் சிந்தித்ததில்லையே!''

'இப்புகழ்ச்சி வீரன் யார்? உயிரை மகிழ்ச்சியுடன் பலி கொடுக்கத் தூண்டிய கொள்கை யாது? நியாயம் என்பது என்ன? நமக்குச் சுதந்திரம் இருக்கிறதா?' என்று கோடிக் கணக்கான மக்களின் எண்ணத்தைத் தட்டி எழுப்புவதற்குக் காரணமான சிறிய சம்பத்தைக் கவர்னர் புல்லர் எங்களுக்கு அளித்திருக்கிறார். ஆனால், "இக் கிரீடத்தை! எங்கள் வெற்றியை! பாவம், அவரால் திரும்ப எடுத்துக்கொள்ள முடியுமா? முடியாது. அவர்கள் எங்களைக் கொலை செய்யலாம். ஆனால், எங்கள் ஆத்மாவோ அழிவற்று ஒளி வீசிக்கொண்டு இருக்கும். உலகத் தொழிலாள ரிடையே அதற்குள்ளாகவே புரட்சி மனப் பான்மை, ஒளி வீச ஆரம்பித்து விட்டது. இதற்குச் சிறிது காரணமாக எங்கள் வாழ்விருந்ததே போதுமானது. இனி ஒன்றுதான் பாக்கி. நாங்கள் வீரர்களாகச் சாக வேண்டும். மின்சார நாற்காலியைப் புன் சிரிப்புடன் ஆலிங்கனம் செய்து இறுதிவரை உண்மையைக் கடைப் பிடிக்கவேண்டும் இதுவே நாங்கள் விரும்புவது. ஆகையால் அருமைத் தோழர்களே! இம் மரணத்தால் துன்பம் இல்லை எங்களுக்குப் பரம இன்பமே. நாங்கள் தோற்று விடவில்லை. இதுவே எங்களது பெரும் வெற்றி!''

அத்தியாயம் 15

நீதியின் பெயரால் பலி

அமெரிக்கா தேசத்தில் மரண தண்டனை விதிக்கப் பட்டவர்களை நம் நாட்டில் செய்வதுபோல் தூக்கிலிடுவ தில்லை. குற்றவாளிகளை மின்சார நாற்காலியில் அமர்த்தி அதிக சக்திவாய்ந்த மின்சாரத்தைச் செலுத்துவதன் மூலம் அவர்களின் உயிரை வாங்கும் முறைதான் அங்கு கையாளப்படுவது.

சாக்கோவும் வான்செட்டியும் கத்தோலிக் கிறிஸ்தவர்களாகையால் அவர்கள் இறப்பதற்கு முன் பாவ சங்கீர்த்தனம் செய்ய சாமியார் வந்து சேர்ந்தார். இருவர்களுக்கும் அதில் நம்பிக்கை யில்லாததால் மறுத்து விட்டார்கள். ஏதாவது முக்கிய சமாசாரம் கிட்டாதா, என்று பத்திரிகை நிருபர்கள் எதிர்பார்த்த வண்ணம் கூடியிருந்தார்கள். பல டெலிபோன்கள் அமைக்கப் பட்டிருந்தன. தந்தி ஆப்ரேட்டர்கள் பதினெண்மர் உலகம் பூராவும் செய்தியை பரப்பத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார்கள். உலகின் ஐம்பெருங் கண்டங்களுக் கும் நேரடியான தந்திக்கம்பித் தொடர்பு இருந்தது. அசோஸியேட் நிருபருக்கு மாத்திரம் எலக்டிரிக் அறையில் நடக்கப்போகும் சம்பவங்களை நேரிலே

பார்த்து மற்றப் பத்திரிகைகளின் நிருபர்களுக்குச் சொல்ல அனுமதியளிக்கப்பட்டது. எலக்டிரிக் அறையில் அதாவது தூக்கு மண்டபத்தில் சட்டப்படி பிரசன்னமாயிருக்க வேண்டிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தயாராக இருந்தார்கள். ஜெயில் அதிகாரி வார்டன் அவர்களை அறைக்குள் அழைத்துச் சென்ருர். எலக்டிரிக் நாற்காலிக்கு எதிர்ப்பக்கம் சுவரையொட்டி வரிசையாக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. உருண்ட முகமும் பருத்த தொந்தியுமுள்ள வார்டன், பிரபல டாக்டர் ஒருவர், ஜெயில் டாக்டர், தேசீய பாதுகாப்பு சர்ஜன் ஜெனரல், அப்பிரதேச வைத்தியத்தலைவர், ஷெரிப் ஆகியோர் வீற்றிருந்தார்கள்.

மற்ருெரு சுவரில் டெலிபோன் மாட்டப்பட்டிருந்தது. அ. பி. நிருபர் அதன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். அவ்வறையில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவமும் —யார், யார், உள்ளே வருகிருர்கள். எந்த விநாடியில் மின்சாரம் செலுத்தப் படுகிறது—எப்போது உயிர் நீங்கிற்று— என்ற செய்திகளை அ. பி. நிருபர் வெளியே வந்து மற்ற ரிபோர்ட்டர்கள் கூட்டத்தில் சொல்லவேண்டியது. மின்சார நாற்காலிக்கு இடது புறம் ஒரு மூலையில் ஒரு திரை போடப்பட்டிருந்தது. பொறுப்பான உத்தியோகஸ்தர் ஒருவர் மணியைப் பார்த்த வண்ணமாக இருந்தார். குற்றவாளிகள் இருக்கும் சிறைக்கொட்டடிக்கும் இந்த அறைக்கும் மத்தியில் ஒரு தாழ்வாரம். குற்றவாளிகளை அழைத்துவரும் வாசலில் ஆயுதம் தாங்கிய இரு காவலாளிகள் காவல் செய்து நின்று கொண்டிருந்தார்கள். வார்டன் ‘ தயார் ’ என்று சமிக்ஞை காட்டவே, இரு காவலாளிகளும் சிறையின் அறைக்கதவைத் திறந்தார்கள். மடைஞ, கவலையின்றி நித்திரை செய்துகொண்டிருந்தான். அந்திய காலத்தைக் குறித்து அக்கரை

இல்லை! அவனை எழுப்பி பாதித்தூக்கத்துடன் மின்சார அறைக்குள் கொண்டு வந்தார்கள். உள்ளே வரவும் கதவு மூடப்பட்டது.

மடைனு சாம்பல்நிற டிராயரும், ஊதா அரைக்கைச் சட்டையும் அணிந்திருந்தான். வழக்கமாக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அணியும் சட்டை இதுதான். மடைனு நாற்காலியில் அமரவும் கால்களையும் கைகளையும் நாற்காலியுடன் சேர்த்து அசைக்க முடியாதபடி பிணைத்துவிட்டார்கள். மின்சார சக்தியைச் செலுத்துவதற்கு அவசியமான வோல்டை இருகால்களிலும் தலையிலும் வைக்கப்பட்டன. பின் அவனது கண்களைக் கட்டிவிட்டு எல்லோரும் விலகிக்கொண்டார்கள்.

எல்லாம் தயார் என வார்டன் சமிக்ஞை கொடுக்கவும் 250 டாலர் பிரயாணச் செலவுக்கு பெற்று வந்திருக்கும் முக்கிய உத்தியோகஸ்தர் மின்சார விசையைத் தட்டினார். 'விர்' என்ற சப்தத்துடன் மின்சாரச் சக்தி பாய்ந்தது. மடைனு சரீரம் திடீரென்று சற்று குலுங்கியது. சரீரம் கம்பிபோல் விரைத்தது. மின்சார பிரயோகம் நிறுத்தப் பட்டதும் சரீரம் பழையபடி விரைப்பு நீங்கித் தளர்ந்தது. வார்டன் குறிப்பின்படி வைத்திய நிபுணர்கள் சென்று பரிசோதித்தார்கள். இரவு 12 மணி 9 நிமிஷம் 35 செக் கண்டிற்கு மடைனு இறந்ததாக அறிவிக்கப்பட்டது. மடைனு வாழ்வு முடிந்தது.

சிறைக் கதவு மறுமுறை திறந்தது. எதிர்பார்த்துக் கொண்டிருந்த சாக்கோ வெளியேறினன். முகம் வெளுத்துத் தோன்றியது. உள்ளம் உருக அங்கு இருந்தவர்களைப் பார்த்துவிட்டுத் தானாகவே நாற்காலியில்

உட்கார்ந்தான். 'கச்சை'களால் அவனைக் கட்ட ஆரம்பிக்கவே, அவன் நாற்காலியில் இருந்து எழுந்து, 'புரட்சி ஓங்குக'! என்று உரக்கக்கத்தினன். அவனுடைய கால்களைக் கட்டிவிட்டு எல்லோரும் அப்பால் சென்றதும், "என் ஆருயிர்க் காதலியே! அருமை மக்களே! அன்புடைய நேயர்களே! உங்கள் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொள்கிறேன்" என்று கதறினன். பிறகு தன்னைச்சுற்றி இருப்பவர்களை நோக்கி, "கனவான்களே! வந்தனம். தாயே நமஸ்காரம்" என்று சொல்லி முடித்தான். உடனே சமிக்ஞை கொடுக்கப்பட்டது. 2100 வோல்ட் மின்சார சக்தி பிரயோகிக்கப்பட்டது. இரவு 12 மணி 19 நிமிஷம் 12 செக்கண்டிற்கு சாக்கோ மாண்டதாக உத்யோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மூன்ருவது முறையாகக் கதவு திறக்கப்பட்டு வான் செட்டி வெளியே கொண்டு வரப்பட்டான். தனது கைகளைப் பிடித்துக் கொண்டு வந்த காவலாளிகளை மின் சார அறையினுள் வந்ததும் உற்று நோக்கினன். பாவம்! ஏழைகள், தங்கள் மனைவி மக்களுக்காக, வயிற்றுப் பிழைப்பிற்காக, இத் தொழிலில் ஈடுபட்டவர்களை வீண் குற்றம் சுமத்து வானேன் என்று நினைத்து 'வந்தனம்' கூறி அன்புடன் கை குலுக்கினன். பின் உதவி வார்டனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, "நீங்கள் காட்டிய மரியாதைக்கு மிகவும் வந்தனம்" என்று சொல்லி விட்டு வார்டனை நோக்கி 'ஐயா' உங்கள் அன்பிற்காக வந்தனம், என்று சொல்லிக் கை குலுக்கினன். வான்செட்டி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "நான் நிரபராதி எனது வாழ்நாளில் எக் குற்றமும் செய்ததில்லை. ஏதோ சில தவறுகள் செய்திருக்கலாம். நீங்கள் எல்லோரும் செய்த நன்மைக்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்து

விட்டு, மற்ெருரு முறையாக என் மீது தற்போது சுமத் தப்பட்ட குற்றம் மட்டும் அல்ல. வேறு எக் குற்றமும் நான் செய்து அறியேன். நான் நிரபராதி என்று சொல்ல விரும்புகிறேன்.'' இவ்வார்த்தைகளைப் பொருட் படுத்தா மலே காவலாளிகள் கால்களையும் கைகளையும் கட்டி ஞர்கள். அவன் திரும்பவும் வாயைத் திறந்து "எனது உயிரை நீக்கும் இவ்வேலையில் ஈடுபட்டவர்களை மன்னிக்க வும் விரும்புகிறேன்'' என்றுசொல்லி முடித்தான். வரிசைக் கிரமமாகச் சடங்குகள் நடைபெற்றன. 1950 வோல்ட் மின்சாரசக்தி செலுத்தப்பட்டது. அறிவாளி, தியாகி, வீரன் வான்செட்டியின் ஜீவிய காலம் முடிவடைந்தது. அவனது இனிய பேச்சிற்கும் ஆர்வம் படைத்த எழுத் திற்கும் இனி இடமில்லை. 12-27 மணிக்கு வான்செட்டி இறந்தான் என்ற செய்தி கிடைத்தது. எல்லோரும் அவசர அவசரமாகத் தங்கள் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு வெளியேறிஞர்கள். "ஹா ஏசுவே! வான் செட்டியின் மொழியைக் கேட்டீர்களா? என்னை மன்னித்து விட்டான்! இதை என்ன வென்று சொல்வது'' என்று ஆச்சரியத்துடன் உதவி வார்டன் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான்.

அ. பி. நிருபர் அவசரமாகச் சென்று மற்ற நிருபர் களிடம் விவரம் கூறிஞன். வார்டனுக்கோ ஒன்றும் புரிய வில்லை. உதவி வார்டனை அழைத்துச் சென்று குடிக்க ஆரம்பித்தான். உதவி வார்டனே தன்னை மன்னித் ததைக் குறித்து புலம்பிக் கொண்டிருந்தான். மன்னிப்பு விவரம் உலகம் பூராவும் பறந்து சென்றது.

பல தேசங்களின் தலை நகரங்களில் கண்டன ஆர்ப் பாட்டங்கள் நடைபெற்றன. பாரிஸில் பொது வேலை நிறுத்தம். தெற்கு ஆபிரிக்காவில் அமெரிக்க கொடி

தீயிலிடப்பட்டது. ஆஸ்திரேலியாவில் பொது வேலை நிறுத்தம். இவ்விதமாக உலகம் பூராவும் கொந்தளிப்பும் குழப்பமுமாக இருந்தன.

சாக்கோ, வான்செட்டி இறந்த பிறகும் அமெரிக்க சர்க்காரின் கோபம் தணிந்த பாடில்லை. பிரேதங்களைப் பந்துக்களிடம் ஒப்புக் கொடாததால் அதிகப் பரபரப்பு ஏற்பட்டது. அவை வைத்திய சோதனைக்காக அனுப்பப் படப் போகிறது என்ற வதந்தி பரவியது. வெகுதாமதத் திற்குப் பிறகுதான் பந்துக்களிடம் ஒப்படைத்தார்கள். நாள் பூராவும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து பிரேதங்களைப் பார்த்துச் சென்றனர். ஞாயிறன்று பிரேத ஊர்வலம் என்று திட்டம் செய்யப் பட்டிருந்தது. ஊர் வலத்திற்கு போலீஸார் முதலில் ஆக்ஷேபித்தார்கள். பின்னல் நேரடியாகக் கல்லறைக்கே எடுத்துச் செல்ல வேண்டுமென்றும், முக்கியமான தெருக்கள் வழியாகச் செல்லக் கூடாதென்றும், பல நிபந்தனைகளுடன் அனுமதி கொடுத்தார்கள். பிரம்மாண்டமான ஊர்வலத்தின் மத்தி யில் போலீஸாரும் சிப்பாய்களும் நின்று கூட்டம் அதிகமா காதபடி சிதறவடித்துக் கொண்டிருந்தார்கள். பாது காப்புக் கமிட்டி மெம்பர்களும், அநுதாபிகளும், கையைச் சுற்றிச் சிகப்புப் பட்டை அணிந்திருந்தார்கள். "நியாய தேவதை சிலுவையில் அடிக்கப்பட்டிருப்பதை மறவாதீர்கள். ஆகஸ்ட் 22, 1927" என்று அவற்றில் எழுதி யிருந்தது. இச்சிகப்புப் பட்டை போட்டவர்களைக் குறிவைத்து போலீஸார் தாக்கினார்கள்.

முதலில் கூட்டத்தில் 5000 பேர்தான் இருந்தார்கள். வரவரப் பெருகி, கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சம் ஆகிவிட்டது. ஒரு காரில் சாக் கோவின் மனைவி ரோஸினவும் குழந்தைகளும் வான் செட்டியின் சகோதரியும் உட்கார்ந்திருந்தார்கள்.

வழக்கில் ஈடுபட்ட முக்கியஸ்தர்கள் தங்கள் கார்களில் போய்க் கொண்டிருந்தார்கள். ஊர்வலம் 'காடுமலை' கடந்து கல்லறைக்கு வந்து சேர்ந்தது. பாதுகாப்புக் கமிட்டியின் அங்கத்தினர்களில் ஒருவரான மேரி டோனுவள் என்ற அயர்லாந்து தேசத்துப் பெண்மணி பேசினர். அவர் கூறியதாவது:—

" சாக்கோ! வான்செட்டி!! நீங்களிருவரும் சுதந்திரத்தை நாடி அமெரிக்கா வந்தீர்கள். இத் தேசத்தில் எல்லோரும், முன்னேறுவதற்குச் சம சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நினைத்து உங்கள் வாலிப ஆர்வத்தில் இங்கு வந்தீர்கள். அதிலும் அமெரிக்க லக்ஷ்யத்திற்கே உறைவிடமான மசெச்சுசெட்ஸ் பிரதேசத்திற்கே வந்தீர்கள். ஆனல், அந்த அமெரிக்கா நீங்கள் புரட்சி வாதிகள் என்ற காரணத்திற்காக உங்கள் உயிரைக் கவர்ந்து விட்டது.

"235 வருடங்களுக்கு முன் இங்கு சில பெண்களைப் பேய் பிடித்தவர்கள் என்று மூடத்தனமாக நினைத்துத் தூக்கிலிட்டார்கள். அம் மிலேச்சத்தனத்திஞல் ஏற்பட்ட அகௌரவம் ஒரு போதும் நீங்காது. ஆனல், அந்த மிலேச்சத்தனமான செய்கையும், உங்கள் கொலையின் முன் நிற்கமுடியாது. அன்று அவர்கள் மதவெறியால் செய்தார்கள். மூட நம்பிக்கையால் தங்கள் பார்வையை இழந்திருந்தார்கள். ஆனல், கொலை செய்தவர்கள் குருட்டுத்தனத்தால் செய்ய வில்லை. வேணுமென்றே, சகலமும் அறிந்தே கொலை செய்தார்கள். உங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் உண்மையைத் தெரிவதற்கு 7 வருட அவகாசம் இருந்தது. ஆனல், கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தைக் கவரும் சக்தி வாய்ந்த உங்களது சீரிய குணங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள

ஒரு முயற்சியும் நடைபெறவில்லை. கண்களிருந்தும் காண மறுத்து விட்டார்கள். வர்க்கதுரோகம், அதிகாரத் திமிர், கொடியசுயநலம் அவர்கள் கண்களை மூடிவிட்டன. தங்களது செல்வத்தையும், சௌகரியங்களையும், ஸ்தா பனங்களையும், கருதினார்களே ஒழிய, சத்தியத்தை நினைத்தார்கள் இல்லை. சாக்கோ! வான்செட்டி!! நீங்கள் இருவரும் முதலாளி வர்க்கத்தின் பலிப் பொருள்கள். பண்டைய ரோமாபுரியில் நடந்த கொடுமைக்குப் பிறகு இவ்விதக் கொடுமை இதுவரை நடந்ததேயில்லை. உங்களது நீண்டகால சங்கடமும், சகிக்க முடியாத இறுதிக் காலக் கொடுந்துன்பமும் எங்களுக்கு எப்போதும் வழிகாட்டி யாக இருக்கும். நீங்கள் எதற்காக உயிர்த் தியாகம் செய்தீர்களோ, அந்த உயர்ந்த லக்ஷியத்திற்கு உண்மைச் சகோதரத்வம் நிலவும் உலகை உண்டாக்குவதற்கு—நாங் களும் பாடுபடுவோம். எங்கள் சந்ததிகளும் பாடுபடும். நீதியும் நியாயமும் ஆகஸ்ட் 22உ யாகிய இன்று சிலுவை யில் அடிக்கப்பட்டன. இக்கொடுமையை தொழிலாளர் உலகம் ஒரு நாளும் மறவாது.''

சாக்கோவும், வான்செட்டியும் மண்ணோடு மண்ணாக, மறைந்தார்கள். நீதியின் பெயரால் சட்டத்தின் பெயரால் இருவர் பலியிடப்பட்டார்கள். முதலாளி வர்க்க உலகம் தனது விரோதிகள் இருவரை நசுக்கி விட்டதாக ஆர்ப் பரித்தது. ஆனால், உண்மையென்ன? கொஞ்சங் கொஞ்ச மாக அவர்களது தியாகம் மக்கள் இருதயங்களில் வேலை செய்ய ஆரம்பித்தது. கோடிக்கணக்கான பாட்டாளி மக்கள், தங்களுக்காக இரு தோழர்கள் உயிர் துறந் தார்கள், என்ற உண்மையை உணர்ந்து கொண்டார்கள்.

"நீதிக்கும் சுதந்திரத்திற்கும் சின்னமாக விளங்கு கிறேன்'' என்று வான்செட்டி அடிக்கடி சொல்லி வந்ததை நிரூபித்துக் காட்டிவிட்டே சென்றிருக்கிறான்.

கோடிக்கணக்கான மக்களுக்கு சாக்கோ வான்செட்டி யின் பெயர்கள் எப்போதும் தங்கள் உயர்ந்த லக்ஷியத்தை அறிவுறுத்துவதாக இருக்கும்.'' சொத்து, உற்பத்தியாள ரைத்தான் சார்ந்தது. 'உழைப்பின் பலன் பூராவும் உழைப்பாளிகளுக்கே,' என்ற புதுநாகரீகத்தை அவர்கள் நாமங்கள் சதா அறிவுறுத்துகிறது. சாக்கோ, வான் செட்டி மாண்டார்கள். ஆனால், அவர்கள் புகழ் அழிய வில்லை. அவர்களுடைய சக்தியும் லக்ஷியமும் சிறந்தோங்கி வளர்ச்சி யடைகிறது.

இரு வீரர் மரணத்திற்குப் பின் சில ருசிகரமான விவரங்கள் வெளியாயின. அவை உலகத்தையே திடுக் கிடச் செய்தன. எவ்வளவு அநியாயமாக, சாக்கோவும், வான்செட்டியும் கொல்லப்பட்டார்கள் என்பது சந்தேக மின்றி எல்லோருக்கும் தெளிவாயிற்று பிரிட்ஜ்வாட்டர், கொள்ளையில் சம்பந்தப்பட்ட கொள்ளைக்காரன், 'பிராங்சில்வா' என்பவன் குற்றத்தை ஒப்புக்கொண் டதன் மூலம் வெளியான உண்மைகளாவன :—

1. கட்டைத் துப்பாக்கி வைத்திருந்தவன் வான் செட்டியல்ல. பிரபல கொள்ளைக்காரனான 'நாய்பிரனே' என்பவனே. அவனுக்கு ஒட்டவெட்டிய மீசைதான் இருந்தது.

2. இந்த பிராங்சில்வாவைத் தேடித் தான் வக்கீல் பிரட்மூர் சென்று அவனைக் கடைசியில் அட்லாண்டா ஜெயிலில் வேறொரு குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித் துக் கொண்டிருக்கும் போது பார்த்து, சில்வாவை பிரிட்ஜ்வாட்டர் குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லி எவ்வளவோ மன்றாடியும் அவன் அப்போது மறுத்து விட்டான்.

3. பிரிட்ஜ்வாட்டர் கொள்ளைக்கூட்டத்தின் தலைவன் ஜிம்மிமெடி என்பவனோடு கலந்துதான் ஏற்பாடு ஆன தென்ற உண்மையைத் தெரிந்துதான் வக்கீல் மூர், மெடியைச் சிறையில் சந்தித்தார். மெடி அப்போது பரோலில் வெளியே போகவேண்டும் என்று மனுச் செய்திருந்ததால், குற்றத்தை ஒப்புக்கொள்வதால் இடையூறு உண்டாகும் என்று நினைத்து மறுத்து விட்டான். வான்செட்டியின் வக்கீல் வாஹியின் சகோதரன் ஒருவனும் அந்தக் கேசில் மொழிபெயர்ப்பாளனாகவும், ஜட்ஜ் தாயரிடத்தில் மோட்டார் டிரைவராகவும் இருந்த ரோசி என்பவனும், வந்து மெடியைச் சந்தித்து சாக்கோ, வான்செட்டி கேசு சம்பந்தமாக எதுவும் சொல்ல வேண்டாம் என்று அவனை எச்சரித்தார்கள்.

4. ஆனால் சாக்கோ, வான்செட்டியைக் கொல்லப் போகிறார்கள் என்று தெரிந்ததும் மெடியின் மனச்சாக்ஷி இடங் கொடுக்கவில்லை. அவன் உடனே கவர்னர் புல்லரிடம் உண்மையை விரிவாக எடுத்துரைத்தான். கவர்னர் ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தரை அவனிடம் அனுப்பி அவனைப் பயமுறுத்தினார். எனவே மெடி ஓடிப்போய் விட்டான். இருந்தபோதிலும் இரு நிரபராதிகள் அநியாயமாக மாண்டு மடிவதற்கு அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. இரு இத்தாலிய வக்கீல்களை அழைத்துக் கொண்டு போலீஸ் தலைவர் காப்டன் பிளை என்பவரிடம் வாக்குமூலம் கொடுக்க ஏற்பாடு செய்தான். ஆனால் காப்டனோ, தற்சமயம் இது பல தகராறுகளைப் புதிதாகக் கிளப்பும் என்று சொல்லி மறுத்துவிட்டார்.

இந்த விவரங்கள் எவ்வளவு தூரம் உண்மை என்று பார்ப்பதற்காக ' அவுட்லுக் ' என்ற பத்திரிகை நிருபர்கள் முயற்சித்தார்கள். போலீஸ் அதிகாரிகள் உதவி செய்ய மறுத்தனர். மேலும், அவர்களைப் பயமுறுத்தினர்.

சாக்கோ, வான்செட்டி எவ்வளவோ உண்மை வாதிகள், நிரபராதிகள், அவர்களை வேணுமென்றே முதலாளித்துவ அதிகாரவர்க்கம், கொலைசெய்ததென்பதை ஒரு சிறிதும் சந்தேகத்திற்கு இடமின்றி உலகிற்கு எடுத்துக் காட்டியாயிற்று. இது ஜட்ஜ் தாயரும், அட்டார்னி காட்ஸ்மானும், கவர்னர் புல்லரும், மற்றும் அதிகாரிகளும் நடத்திய பெருஞ் சதியே யாகும். நீதியின் பெயரால், சட்டத்தின் பெயரால், சாக்கோவும், வான் செட்டியும் பலியிடப்பட்டார்கள். ஆனால், இவர்களைப் போன்ற வீரர்களின் தியாகத்தினால் உலகப் புரட்சியும் தொழிலாளர் முன்னேற்றமும் வலுப்பெற்று ஓங்கிவளர ஆரம்பித்தது.

சாக்கோ, வான்செட்டி நாமம் வாழ்க!

புரட்சி ஓங்குக!

பிழை திருத்தம்

பக்கம்	பிழை	திருத்தம்
6	முலல்	முதல்
10	அநாகரின்	அநாகரிகன்
11	பூர்ஷாவாக்கள்	பூர்ஷுவாக்கள்
20	நின்	நின்று
24	விலகிக்கெவள்ள	விலகிக்கொள்ள
29	இத்த	இந்த
37	ஆரும்	ஆளும்
	தொழிலாள	தொழிலாளி
64	காட்ஜ்மான்	காட்ஸ்மேன்
68	மிஸர்ஸ்	மிஸிஸ்
85	என்றும்	என்று
102	துல்லிதமாக	துல்லியமாக
120	ட்டு	பிட்டு
124	பவ	பல
126	உத்தியோகஸ்தக்	உத்தியோகஸ்தர்
128	திரட்டினலனறி	திரட்டினலன்றி
130	வேஜுகள்	வேஜுகள்
	படுவாவி	படுபாவி
134	பான்றே	போன்ற
	வஅன்	அவன்
146	என்னவே	என்னவோ
152	மடைஞஸ்	மடைஞ
161	சிந்திக்காமல்	சித்திக்காமல்
166	மெலிந்த	மெலிந்து
	உருவம்	வாடி

168	புரட்சிக்காரனை	புரட்சிவீரன்
	புகைக்கப்பட்டு	புதைக்கப்பட்டு
171	இன்புற்றேன்,	இன்புற்று,
	மகிழ்ந்தேன்,	மகிழ்ந்து,
	பூரித்தேன்,	பூரித்து,
	கொடுத்தேன்.	கொடுத்திருக்கலாம்.
172	களித்தேன்	களித்திருக்கலாம்.
	விற்கும்	வியாபாரி
177	நபர்களின்	நபர்கள்
178	நீங்கள்	நாங்கள்
	நடைபெரும்	நடைபெறும்
179	சிந்தித்ததில்லையே	சிந்தித்ததில்லை.
180	பாவசங்கீர்த்தனம்செய்ய	பாபமன்னிப்புக்காக
182	வரவும்	வந்ததும்
183	பாவம்	பாபம்
184	கூறினன்	கூறினர்
185	தாமத்திற்குப்	தாமதத்திற்குப்
188	வீரர்	வீரரின்

3304

3304

விரைவில் வெளிவரும்

கவிஞன் ஷெல்லி எழுதிய சிறந்த
சோக நாடகம்

"செஞ்சி"

தமிழில் தருபவர்:
வெ. சு. அருணன்

★

"சிறுகதை இலக்கியம்"

அரிய ஆராய்ச்சி:
S. சுப்பிரமணியம்

STAR PUBLICATIONS
PALAKARAI — TRICHINOPOLY